பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.



ஆண்டாள் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

சூடிக்கொடுத்த நாச்சியார் அருளிச்செய்த

# திருப்பாவை

காஞ்சீபுரம் மஹாவித்வான் ஜகதாசார்யஸிம்ஹாஸநாதிபதி ப்ரதிவாதிபயங்கரம்

## அண்ணங்கராசாரியர்

எழுதிய ஆழ்பொருள் விளக்கு என்னுமுரையுடன்

சென்னை ரத்தினம் (கிளை) அச்சகத்தில்
பதிப்பிக்கப்பட்டது

This book is Published
IN COMMEMORATION OF SHASHTYABDAPOORTHI OF
SRIMAN NATHALLA SAMPATH CHETTYAR,
MADRAS.

விலை ரூ. 2

கிடைக்குமிடம் :—
P. B. ANNANGARACHARYA,
L. KANCHEEPURAM.

சுபக்ருத்௵ மார்கழி௴ உத்தராடம்

28—12—1962

229
1-63

MADRAS RECORD OFFICE
MADRAS

Q22:417x1,13:g
N62
58784

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளேசரணம்.



ஆண்டாள் எம்பெருமானர் ஜீயர் திருவடிகளேசரணம்.

சூடிக்கொடுத்த நாச்சியார் அருளிச்செய்த

# திருப்பாவை

காஞ்சீபுரம் மஹாவித்வான் ஜகதாசார்யஸிம்ஹாஸநாதிபதி பிரதிவாதிபயங்கரம்

## அண்ணங்கராசாரியர்

எழுதிய ஆழ்பொருள் விளக்கு என்னுமுரையுடன்


சென்னை ரத்தினம் (கிளை) அச்சகத்தில்
பதிப்பிக்கப்பட்டது


This book is Published
IN COMMEMORATION OF SHASHTYABDAPOORTHI OF
**SRIMAN NATHALLA SAMPATH CHETTYAR,**
**MADRAS.**


விலை ரூ. 2

கிடைக்குமிடம் :—
**P. B. ANNANGARACHARYA,**
**L. KANCHEEPURAM.**

சுபக்ருத்ஸூ மார்கழிமீ உத்தராடம்

28—12—1962

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்



ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஆண்டாள் திருவடிகளே சரணம்

---

# திருப்பாவை ஆழ்பொருள் விளக்கு

(ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் எழுதியது)

---

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்

---

"அஞ்சுகுடிக்கொரு சந்ததியாய்*, ஆழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சிநிற்குந் தன்மையளாய் *—பிஞ்சாய்ப்
பழுத்தாளையாண்டாளைப் பத்தியுடன்நாளும் *
வழுத்தாய் மனமே மகிழ்ந்து"

---

## முன்னுரை

ஆண்டாளருளிச் செய்த திருப்பாவையின் மருமமறிந்த முன்னோர்கள் "வேதமனைத்துக்கும் வித்தாகுங் கோதை தமிழ் ஐயைந்துமைந்து மறியாத மானிடரை வையஞ் சுமப்பதும் வம்பு" என்று பணித்தார்கள். திருப்பாவையானது வேதமனைத்துக்கும் வித்து என்றவிது அதிசயோக்தியன்று. உண்மையுரை. ஆனது பற்றியே சதுச்சாஸ்த்ர வித்வத் ஸார்வபௌமரான ஸ்வாமியெம்பெருமானார் இத்திருப்பாவையிலேயே மிகவும் ஊன்றியிருந்து 'திருப்பாவை ஜீயர்' என்றே நிரூபகம் பெற்றார். திருப்பாவைக்கு மார்கழி மாதத்தில் மாத்திரமேயன்று ஏற்றம். ஸன்னிதிகளிலும் திருமாளிகைகளிலும் நாடோறும் நடைபெறும் திருவாராதனம் திருப்பாவை ஸேவையையும் திருப்பாவை சாத்துமுறையையுமே தலையாகக் கொண்டு எங்கும் ஸமரீதியாக விளங்குகின்றது. ஆழ்வாராசாரியர்களின் திருநக்ஷத்திரக் கொண்டாட்டங்களிலும் திருப்பாவை சாத்துமுறையே முதன்மைபெற்று விளங்காநின்றது. இது ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞையடியாகவன்றோ அந்நாள் தொடங்கி இந்நாள்வரை எங்கும் அவ்யாஹதமாய் நடந்துவருகின்றது. இந்நாள்வரை என்று என்ன? ஸூரிய சந்திரர்களுள்ளவரையில் இந்நடை மாறாது.

திருப்பாவைக்கு இப்படிப்பட்ட பெருமை வாய்ந்ததானது ஸகலார்த்தங்களும் இதுதன்னில் நிரம்பியுள்ளது பற்றியேயாம். இதற்கு ஆயிரப்படி ஈராயிரப்படி மூவாயிரப்படி நாலாயிரப்படி ஐயாயிரப்படி ஆறாயிரப்படி என்றிப்படி பல வியாக்கி

யானங்களை யருளிச்செய்த பேராசிரியர்களும் வாச்யார்த்தங்களை ரஸகனமாக வெளியிட்டருளினார்களே யல்லது, உள்ளுறை பொருள் என்றும் வ்யங்க்யார்த்தமென்றும் த்வந்யர்த்தமென்றும் குலாவப்படுகிற ஸ்வாபதேசார்த்தங்களை விசேஷமாக வெளியிட்டருளவில்லை. அவை உபதேசகம்யங்கள் என்றும், அவரவர்களது புத்தி சமத்காரத்திற்கேற்ப நாநாப்ரகாரமாகவும் உந்நயிக்கத் தக்கவை யென்றும் திருவுள்ளம் பற்றியே யென்க. மிக முக்கியமான விடங்களில் வெளியிட்டு முள்ளார்கள்.

சிலர், ஸ்வாபதேசார்த்தமென்று ஒன்று சொல்லுவது ஆண்டாள் திருவுள்ளத்திற்கு இணங்காத தென்றும், பாசுரங்களில் ஸ்பஷ்டமாகக் கிடைக்கிற பொருளுக்கு மேலே வேறு சில பொருள்களை வ்யங்க்யார்த்தமென்று உரைப்பது தவறென்றும், அது வீண்பணியென்றும் சொல்லுகிறார்கள். ஆண்டாள் மேலெழுந்த பொருளில் முழு நோக்கின்றிக்கே உள்ளுறை பொருளிலேயே உள்ளத்தை ஊன்றவைத்தவள் என்னுமிடத்தை ப்ராமாணிகர்கள் இசையும்படி மூதலிக்கிறோம் காண்மின். திருப்பாவை முதற்பாட்டில் "நீராடப்போதுவீர் போதுமினோ" என்று நீராட வருகிறவர்களெல்லீரும் வாருங்களென்று அழைத்து, நாலாம் பாட்டில் மேகத்தையும் விளித்து "நாங்களும் மார்கழி நீராட வுலகினில் பெய்திடாய்" என்று மழை பெய்ய நியமித்திருக்கிறாள். இவற்றைப் பார்க்கும்போது நீராடுவதற்கே ஆண்டாள் [அல்லது ஆய்ச்சிகள்] புறப்படுவதாகவும் நீராடுவதற்கே தோழிகளையும் அழைப்பதாகவும் நீராடுவதற்கு வேண்டிய தீர்த்தஸம்ருத்தி யுண்டாவதற்காகவே மழைபெய்ய மேகதேவதையை நியமிப்பதாகவும் தெரிய வருகிறது. இதுவே உண்மைப்பொருளாகில் இவர்களெல்லாருங்கூடி ஒரு பொய்கைக்கரைக்குச் சென்றிருக்க வேண்டும். நீராடுமிடம் பொய்கையன்றோ. இவர்கள் ஒரு பொய்கைக்கரையில் சென்று சேர்ந்ததாகத் திருப்பாவையில் ஒரு பாட்டிலுமில்லை. ஸ்ரீநந்தகோபருடைய திருமாளிகைக்குச் சென்று அங்கு * நப்பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர்மார்பனை யுணர்த்தி நப்பின்னைப் பிராட்டியை யுணர்த்தி அவர்களைத் தோத்திரஞ் செய்து, சிற்றஞ் சிறுகாலை யெழுந்து இங்கு நாம் வந்தது எதற்காக வென்னில், *உன்றன்னோடுற்றோமே யாவோம் உனக்கே நாமாட்செய்வோமென்று விண்ணப்பம் செய்வதற்காகவே யென்று தலைக்கட்டியிருக்கிறார்கள். இப்படி திவ்ய தம்பதிகளிடம் சென்று ஸேவிப்பது தான் இவர்கள் தாம் கொண்ட மார்கழி நீராட்டமென்று நன்கு விளங்கிற்றாயிற்று. ஆகவே, * நீராடப்போதுவீர் * நாங்களும்மார்கழி நீராட * குள்ளக்குளிரக்குடைந்து நீராடாதே * உக்கமுந் தட்டொளியும் தந்துன் மணாளனை இப்போதே யெம்மை நீராட்டு * மாலேமணி வண்ணா மார்கழி நீராடுவான் * என்கிற பாசுரங்களில் ப்ரஸ்தாவிக்கப்பட்ட நீராட்டமானது தண்ணீரில் தோய்வதன்று என்றும், பகவத் ஸம்ச்லேஷத்தையும் பாகவதஸம்ச்லேஷத்தையும் ஆசார்ய குல அவகாஹனத்தையுமே நீராட்டமாகச் சொல்லிற்றென்றும் நிஷ்கர்ஷிக்கப் போதுமான ஔசித்யமுள்ளது.

இதை மூவாயிரப்படியில் பெரியவாச்சான்பிள்ளையும், ஆறாயிரப்படியில் அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரும் ஸ்பஷ்டமாக விளக்கியேயுள்ளார்கள். 'நீராடப் போதுவீர்' என்ற விடத்துப் பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்தி வருமாறு—"[நீராட] இத்தால் இவர்கள் நினைக்கிறது க்ருஷ்ண ஸம்ச்லேஷம். தமிழரும் கலவியைச் சுனையாட லென்றார்கள். *ஏஷ ப்ரஹ்ம ப்ரவிஷ்டோஸ்மி க்ரீஷ்மே சீதமிவ ஹ்ரதம்* என்று பகவத்ஸம்ச்லேஷத்துக்கு க்ரீஷ்மகாலத்தில் குளிர்ந்த மடுவில் படிவதை த்ருஷ்டாந்தமாகச் சொல்லிற்றிறே" என்று.

ஆறாயிரப்படி ஸ்ரீ ஸூக்திவருமாறு—"[நீராட.] இவர்கள் தங்களுக்கு நீராடவென்று நோயாசையிறே. யமுநாஜலம் ஒருத்தியுடைய விரஹாக்நியாலே சுவறுமே. தமிழர் கலவியைச் சுனையாடலென்றாய்த்துச் சொல்லுவது. க்ருஷ்ணஸம்ச்லேஷத்தையாய்த்து இவர்கள் நீராடவென்கிறது. *ஏஷ ப்ரஹ்ம ப்ரவிஷ்டோஸ்மி க்ரீஷ்மே

சீதமிவ ஹ்ரதம்* என்னுமாபோலே." என்று. ஆகவிவற்ருல், உள்ளே கொண்ட பொருள் வேறென்றும், வெளியே யிடுஞ்சொல் வேறென்றும் நிர்ணயிக்கப் படுகிறது.

நீராட என்கிற ஒரு சொல் விஷயத்தில் மாத்திரமன்று இது. பெரும்பாலும் எல்லாச்சொற்களும் அந்தரங்கமான வேறொரு பொருளைக் கொண்டே பிரயோகிக்கப் பட்டன வென்று தேறலாம் அலங்கார சாஸ்த்ரத்தில் ரூபகாதிசயோக்தி யென்று ஒரலங்கார முண்டு. "பச்ய நீலோத்பலத்வந்த்வாத் நிஸ்ஸரந்தி சிதாச் சரா:" என்று அதற்கு உதாஹரணம் காட்டப்படுகிறது. 'இரண்டு கருநெய்தற் பூக்களினின்று கூரிய அம்புகள் கிளம்புகின்றன காண்' என்று இதிற் சொல்லப்படுகிறது. இங்கு கருநெய்தற்பூவும் விவக்ஷிதமன்று, அம்புகளும் விவக்ஷிதமன்று. நாயகியின் கண்களி னின்று வெளிவருகின்ற கடாக்ஷபாதங்களைச் சொல்ல நினைத்தே இங்ஙனம் சொல்லப் பட்டது. இதனைத் தமிழர் உருவகவுயர்வு நவிற்சியணி யென்பர்கள். திருப்பாவை முழுவதும் இவ்வலங்கார வகையில் அமைந்ததென்று அடியேனுடைய அபிப்பிராயம்.

இது தவிர வேறு மூன்று அலங்காரங்களும் அலங்காரசாஸ்த்ரத்தில் உண்டு. அவை, அப்ரஸ்துத ப்ரசம்ஸா, ப்ரஸ்துதாங்குரம், ஸமாஸோக்தி என்பனவாம். "அப்ரஸ்துத ப்ரசம்ஸா ஸ்யாத் ஸா யத்ர ப்ரஸ்துதாச்ரயா." என்பது அப்ரஸ்துத ப்ரசம்ஸாலங்காரத்தின் லக்ஷணம். ப்ரக்ருதமான வொரு விஷயம் ஏற்படுவதற்காக அப்ரக்ருதமான விஷயமொன்றைச் சொல்லுவதானது அப்ரஸ்துத ப்ரசம்ஸா எனப் படும்—என்றபடி. இவ்வலங்கார ரீதியிலும் சில பாசுரங்கள் அமைந்துள்ளன வென்னலாம். ஆனல் இது முக்கியமன்று.

"ப்ரஸ்துதேந ப்ரஸ்துதஸ்ய த்யோதநே ப்ரஸ்துதாங்குர:" என்பது ப்ரஸ்து தாங்குராலங்காரத்தின் லக்ஷணம். ஸ்பஷ்டமாய்ச் சொல்லப்படுகிற அர்த்தமும் ப்ரக்ருதமாய், வ்யங்க்யமாய் ஏற்படுகிற அர்த்தமும் ப்ரக்ருதமாயிருந்தால் அங்கு ப்ரஸ் துதாங்குராலங்கார மென்றபடி. இவ்வலங்கார ரீதியிலேயே திருப்பாவை அமைந்த தென்று கொள்ளுவது மிகச் சிறக்கும். வாச்யார்த்தமும் வ்யங்க்யார்த்தமுமாகிற இரண்டும் ப்ரக்ருதமே யென்று கொள்ளத்தகும். உண்மையில், திருப்பாவையில் இங்ஙனமேயாம்.

"ஸமாஸோக்தி: பரிஸ்பூர்த்தி: ப்ரஸ்துதே அப்ரஸ்துதஸ்ய சேத்" என்பது ஸமாஸோக்தி யலங்காரத்தின் லக்ஷணம். ப்ரஸ்துதமான வொரு விஷயம் வருணிக்கப்படுமிடத்து அப்ரஸ்துதமான சில அர்த்தங்கள் தோன்றுமாகில் அங்கு ஸமாஸோக்தியலங்காரம் என்றபடி. திருப்பாவையில் இவ்வலங்காரத்தை நினைப்பதற்கு ப்ரஸக்தியே கிடையாது. ஏனென்ருல் இதில் ஸ்வாபதேசார்த்தந்தான் முக்கியமான தென்று நமது கொள்கையாதலால் இவ்வலங்காரம் இடம் பெருது. சிலருடைய அபிப்ராயத்தால் இவ்வலங்காரமும் இதில் நினைக்கத்தகும். எவ்விதத்திலும், வாச்யார்த் தத்திற்குமேற்பட வ்யங்க்யார்த்தம் இதில் விசேஷமாகவுண்டு என்பதே தேறிநிற்கும்.

இதில் ஏழாவது பாட்டில் "கலந்து பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப் பெண்ணே" என்று சொல்லப்படுகிறது. 'பேசினபேச்சு கேட்டிலையோ' என்ருல் போதும். 'நான் சொல்லுகிற வார்த்தையைக் கேள்' என்றும், 'நான் சொல்லுகிற வார்த்தை உன் காதில் விழ வில்லையா' என்றும் இப்படித்தானே உலக வழக் குள்ளது. இந்த ரீதியில் 'பேசினபேச்சு கேட்டிலையோ' என்ன ப்ராப்தமாயிருக்க 'பேச்சு அரவம் கேட்டிலையோ' என்றது விசேஷமான கருத்தை யுடையது. பேச்சுக் கேட்பதில் ரஸமில்லை; பேச்சிலிருந்து தோன்றுகிற [அரவம்] த்வனிப் பொருளைக் கேட்டுணர்வதுதான் சுவை மிக்கது என்று ஆண்டாளே காட்டி யிருக்கின்ருள். இப்படிப்பட்ட இன்சுவைப் பொருளைச் சிறிது காட்ட விழைகின்றேன். .... *

அவதாரிகை முற்றிற்று.

# ஆண்டாளருளிச்செய்த திருப்பாவை

1. மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால் *
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர் *
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள் *
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன் *
ஏரார்ந்த கண்ணி அசோதை யிளஞ்சிங்கம் *
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம்போல் முகத்தான் *
நாராயணனே நமக்கே பறை தருவான் *
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.

திருப்பாவையின் முதற்சொல் மார்கழி என்பது. இது மார்க்க சீர்ஷ மென்ற வடசொல்லின் விகாரம். மிருக சீர்ஷ நக்ஷத்திரத்தோடு கூடிய பௌர்ணமாஸி யுள்ள மாதம் மார்க்கசீர்ஷமாஸம் என்றபடி. மாஸப் பெயர்கள் ஸௌரமாநரீதியிலும் சாந்த்ரமாநரீதியிலும் வழங்கப்படுகின்றன. மேஷம் விருஷபம் மிதுநம் இத்யாதி வ்யபதேசங்கள் ஸௌரமாநரீதி. சைத்ரம் வைசாகம் ஜ்யேஷ்டம் இத்யாதி வ்யபதேசங்கள் சாந்த்ரமாநரீதி. சித்திரை வைகாசி இத்யாதிகளான தமிழ் வழக்குக்களும் சாந்த்ரமாநரீதியையே அநுஸரித்தவை; சித்ரா நக்ஷத்ரமும் பௌர்ணமாஸியும் ஒன்று கூடினல் சைத்ரம்; விசாகா நக்ஷத்ரமும் பௌர்ணமியும் ஒன்று கூடினல் வைசாகம். மேல் ஒவ்வொன்றையும் இப்படியே பார்த்துக் கொள்வது. இவ்வகையில், மிருகசீர்ஷ நக்ஷத்ரமும் பௌர்ணமியும் ஒன்று கூடினல் மார்க்கசீர்ஷமெனப்படுகிறது. நக்ஷத்ரங்களின் வ்ருத்தி ஹ்ராஸங்களுக்கு ஏற்ப [நாழிகை யேறுதல் குறைதல்களுக்குத் தகுதியாக] முன் நக்ஷத்ரமோ பின் நக்ஷத்ரமோ (பௌர்ணமியோடு) கூடுதலுமுண்டு. அதைப்பற்றிச் சிந்தை வேண்டா.

மார்க்கசீர்ஷமென்ற வட சொல்லின் பொருளிலேயே மார்கழி யென்ற தமிழ்ச் சொல் போந்ததென்று நிரூபிக்கப்பட்டதாயிற்று. இப்பொருள் தவிர மற்றொரு பொருளும் மார்க்கசீர்ஷ மென்னுஞ் சொல்லுக்கு ஸம்பாவிதமே. அதாவது, (மார்க்க-சீர்ஷ) என்று இரண்டு சொல் வடிவங்களாகக் கொண்டு மார்க்கங்களில் தலையானது என்று கொள்வது. சீர்ஷமென்று தலைக்குப் பெயர். மார்க்கமென்றது உபாய மென்றபடி; உபாயங்களில் தலையானது என்றதாயிற்று. கர்ம ஜ்ஞான பக்தி ப்ரபத்திகளுக்கும்மேலே ஆசார்யாபிமானம் என்பது தலையான உபாயமாயிருக்கும். அதுதான் மார்க்க சீர்ஷமென்கிறது. மார்கழி யென்பது மதுவே.

ஆண்டாள் நாச்சியார் திருமொழியில் உபாயங்களில் தலையானதை இரண்டு பாசுரங்களினால் நன்கு காட்டியுள்ளாள்:-* கொல்லை யரக்கியை மூக்கரிந்திட்ட குமரனார் சொல்லும் பொய்யானால், நானும் பிறந்தமை பொய்யன்றே* என்பது ஒரு பாசுரம். *நல்லவென் தோழி! நாகணைமிசை நம்பரர், செல்வர் பெரியர் சிறுமானிடவர் நாம் செய்வதென்? வில்லிபுதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை, வல்லபரிசு வருவிப்பரேல் அது காண்டுமே * என்பது மற்றொரு பாசுரம். இவ்விரண்டு பாசுரங்களினாலும் ஆண்டாள் தனக்கு ஆசாரியன் வழியாகவே பேறு என்னுமிடத்தை அறுதியிட்டிருக்கின்றாள். கொல்லையரக்கியை மூக்கரிந்திட்ட குமரனார்—சக்ரவர்த்தி திருமகனார்; அவருடைய சொல்லாவது * நத்யஜேயம் கதஞ்சந * இத்யாதிகள்; அவை பொய்யானாலுங் கூட, [நானும் பிறந்தமை பொய்யன்றே] நான் பெரியாழ்வார் வயிற்றிற் பிறந்தது பொய்யன்றே, எனக்குண்டான ஆசார்யஸம்பந்தம் பழுதாய் விடுமோ? ஒருகாலுமாகாது என்றபடி. இனி, "வில்லிபுதுவைவிட்டுசித்தர் தங்கள்

தேவ்ரை வல்ல பரிசு வருவிப்பரேல் அது காண்டுமே" என்ற பாசுரம் ஸ்ரீவசநபூஷணத்தின் முடிவில் ஆசார்யநிஷ்டைக்குச் சார்பாக உதாஹரிக்கப் பட்டுள்ளது. அங்கு மணவாள மாமுனிகளின் வியாக்கியானம் ஸேவிப்பது. ஆகவிப்படி ஆண்டாள் கடைப்பிடித்த சரமோபாயத்தையே திருப்பாவையில் உயிர்நிலையான பொருளாக வைத்துப் பேசுகிறாள். அதற்கு ஸூசகம் மார்கழி என்னும் முதற்சொல்.

வாஸுதேவ சப்தத்திற்கு தத்தித வ்ருத்தியாலே வஸுதேவாத்மஜனென்னும் பொருள் தேறியிருக்கவும் பட்டர் வாஸு:, தேவ: என்கிற பதங்களுக்கு ஸமாஸமாகவுங் கொண்டு பாஷ்யமிட்டதுபோல, இங்கும், மார்க்க—சீர்ஷ என்கிற பதங்களுக்கு ஸமாஸமாகக் கொள்வதில் குறையொன்றுமில்லை யென்க.

**திங்கள் மதி நிறைந்த**—திங்கள் என்று சந்திரனைச் சொல்லிற்றாகி சந்திரன் போல் ஸௌம்யமான—குளிர்ச்சியான, மதி—புத்தியானது, நிறைந்த—நிறைவதற்குக் காரணமான நல்லநாள் இது. குளிர்ச்சியான, புத்தியும், வெப்பமான புத்தியுமாக இரண்டுண்டு. பகவத் விஷயாநுபவத்திற்கு உரிய புத்தி குளிர்ந்திருக்கும். ப்ரதிபக்ஷி நிரஸனத்திற் குறுப்பான புத்தி வெப்பமாயிருக்கும்; ஸ்ரீ பாஷ்யாதி க்ரந்தங்களை யதிகரித்தால் வெப்பமான புத்தியுண்டாகும். ஆழ்வாராண்டாளருளிச் செயல்களை யதிகரித்தால் தண்ணளியே வடிவெடுத்த [ஸௌம்யமான] புத்தியுண்டாகும்; ஆசாரிய நிஷ்டையைப் பிரதிபாதிக்குமதான இத்திருப்பாவையை அதிகரிப்பதனுல் குளிர்ந்த புத்தி நிறையும்; அப்படிப்பட்ட நல்ல நாளாயிற்று இது. நிறையப் போகிறது என்று சொல்லவேண்டு மிடத்து நிறைந்த என்று இறந்த காலத்தை யிட்டுச் சொன்னது காலவழுவமைதி. இவ்விருள்தருமா ஞாலவாழ்க்கையில் இப்படிப் பட்ட நல்ல புத்தியை நிறைத்துக்கொள்ள வேணுமென்று நினைக்கிற நாள் எந்நாளோ அந்நாளே நன்னுள் என்க. ஆல் - ஆதலால்.

**நீராட**—இதைப்பற்றி அவதாரிகையிலேயே விவரித்திருக்கிறோம். இங்கும் சிறிது சொல்லுவோம். பட்டர் ஸ்ரீ ரங்கராஜஸ்தவத்தில் ஐம்பதறுபது ச்லோகங்களினுல் திருக்காவேரியையும் திருச்சோலைகளையும் திருமதிள்களையும் திருவீதிகளையும் திருமண்டபங்களையும் சந்த்ரபுஷ்கரிணி திருப்புன்னை முதலானவைகளையுமநுபவித்து கர்ப்பக்ருஹத்தினுட்புகுந்து திருக்கணையத்தையும் திருமணத்தூணையும் அநுபவித்து, ஸ்ரீ ரங்கநாதனை யநுபவிக்கும்படியைச் சொல்லவேண்டுமிடத்து "பிப நபந! புரஸ்தே ரங்கதுர்யாபிதாநம் ஸ்திதமிவ பரிபுல்லத் புண்டரீகம் தடாகம்" என்றும், "உத்புல்ல பங்கஜ தடாக மிவோபயாநி ஸ்ரீ ரங்கராஜமிஹ" என்றும் ஒரு தாமரைத் தடாகத்திலே படிவதாகப் பணித்தாரேயன்றி பகவானை ஸேவிக்கிறேனென்று பணித்திலர். நம்மாழ்வார் திருவாய்மொழியில் "கண்கைகால் தூயசெய்ய மலர்களா சோதிச் செவ்வாய் முகிழதா. சாயல் சாமத்திருமேனி தண்பாசடையா தாமரைநீள் வாசத்தடம் போல் வருவானே!" என்றதும் காண்க. **வாசத்தடம்**—பரிமளம் மிக்க தடாகம். முகுந்தமாலையிலும் "கரசரணஸரோஜே காந்திமந்நேத்ர மீநே ச்ரமமுஷி புஜவீசிவ்யாகுலே அகாதமார்க்கே, ஹரிஸரஸி விகாஹ்ய" என்றது காண்க. ஆகவே நீராட என்றது பகவதவகாஹனம் பண்ண என்றபடி. இன்னும் சிறிது உட்புகுந்தால் இச் சொல்லுக்கே 'ஆசார்ய குலத்தில் அவகாஹிக்க' என்கிற பொருளும் கிடைக்கும். திருவிருத்தத்தில் நம்மாழ்வார் (92) *காலை நன்ஞானத்துறை படிந்தாடி * என்றார். இங்கு ஞானத்துறை படிந்தாடுவது ஆசார்ய குலாவகாஹனமேயன்றோ. ஆக இவ்விடத்தில் காலை நன்ஞானத்துறை படிந்தாட அழைக்கிறபடி.

**போதுவீர் போதுமின்**—வருகிறவர்களெல்லீரும் வாருங்கள் என்றபடி. 'ஸத்யம் வத' என்கிற வைதிக விதிக்கு எப்படி அதிகாரி நியமமின்றிக்கே எல்லாருமதிகாரிகளோ அப்படியே பகவானையடைவதற்கும் ஆசார்யனையடைவதற்கும் எல்லாருமதிகாரிகள் என்றதாயிற்று.

நேரிழையீர்!—இழையாவது ஆபரணம். நேர்த்தியான ஆபரணங்களை யணிந்துள்ளவர்களே! என்று சப்தார்த்தம். ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு சமதமாதி குணங்களையே ஆபரணமாகச் சொல்லுகிறது. கங்கணகுண்டலாதி பூஷணங்கள் தேஹாலங்காரம்; சமதமாதி குணங்கள் ஆத்மாலங்காரம். ஸ்ரீ வசநபூஷணத்தில் "ஆத்ம குணங்களில் ப்ரதாநம் சமமும் தமமும்; இவை யிரண்டு முண்டானால் ஆசார்யன் கைபுகுரும்; ஆசார்யன் கைபுகுந்தவாறே திருமந்த்ரம் கைபுகுரும்; திருமந்த்ரம் கைபுகுந்தவாறே ஈச்வரன் கைபுகுரும்; ஈச்வரன் கைபுகுந்தவாறே *வைகுந்தமாநகர் மற்றது கையதுவே என்கிறபடியே ப்ராப்யபூமி கைபுகுரும்" என்றருளிச் செய்யப் படுகிறது. ஆத்மகுணமுண்டானால்தான் ஆசார்யன் கைபுகுருமென்கையாலே, நீங்கள் நேரிழையீராயிருந்து கொண்டு நீராடப்போதுமின் எனப்பட்டது. ஆசார்யனையடிபணிந்தால் நேரிழையீராவீர்கள் என்ற படியுமாம். சீர்மல்குமாய்ப்பாடி செல்வச் சிறுமீர்காள்!—இது, சிஷ்யவ்ருத்தி செய்யத்தகுதியுடையாரை விளிப்பதாம். பசுக்களும் பசுபாலர்களும் வர்த்திக்குமிடம் ஆய்ப்பாடி. *ந்ருபசு:* என்று ஆளவந்தாரும், *வ்ருத்த்யா பசுர் நரவபு:* என்று மணவாள மாமுனிகளுமருளிச் செய்தபடியே ஜ்ஞானஹீனர்களாய் பசுப்ராயர்களான நாம் வர்த்திக்கு மிருள்தருமாஞாலமே ஆய்ப்பாடி. அதற்குச் சீர்மல்கும் என்று அடைமொழி கொடுத்ததனால், கேவலம் பத்தஸம்ஸாரிகளாயொழியாமல் முமுக்ஷுக்களாய்ச் சீர்மை பெற்றவர்கள் வர்த்திக்கும் திவ்யஸ்தலமென்றவாறு. இதிலுள்ள செல்வச் சிறுமீர்காள்!–பகவத்பாகவதாசார்ய பக்தியைச் செல்வமென்கிறது. [க்ரஹணதாரண போஷணபடு: பால:] ஆகையாலே ஸத்விஷயங்களை க்ரஹிக்கவும் தரிக்கவும் அபிவிருத்திசெய்து கொள்ளவும் வல்லமையுடையாரைச் சிறுவரென்கிறது. சிறுமியர் என்று பெண்பால் விகுதியிட்டுச் சொன்னது—*ந ஸ்த்ரீ ஸ்வாதந்த்ர்ய மர்ஹதி* என்கிறபடியே பாரதந்திரியமே வடிவெடுத்த ஸ்த்ரீகளைப் போலே ஸ்வாதந்திரிய நாற்றமின்றிக்கே யிருக்கவேண்டுந் தன்மையைப்பற்ற.

இதற்குமேல் நாராயணனே நமக்கே பறை தருவான் என்ற ஏழாமடி யோஜிக்கத் தக்கது. அந்த நாராயணன் எப்படிப்பட்டவனென்ன, கூர்வேல் கொடுந்தொழிலனென்று தொடங்கி மூன்றடிகளால் விசேஷிக்கிறது. நாராயணனென்றது—*ஸாக்ஷாந் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும், மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ர பாணிநா* என்ற ப்ரமாணப்படியே நாராயணவதாரமான ஆசார்யனைச் சொன்னபடி. "சேமம் குருகையோ செய்ய திருப்பாற் கடலோ, நாமம் பராங்குசமோ நாரணமோ - தாமம், துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கு முளவோ பெருமானுனக்கு." என்று நம்மாழ்வாரை நோக்கி ஒரு பரம பக்தர் பாடிய பாசுரம் இங்கே அநுஸந்தேயம். பறைதருவானென்றது—உத்தேச்யமான பொருளைத் தந்தருள்வனென்றபடி. நாராயணனே என்ற ஏகாரத்தாலும் நமக்கே என்ற ஏகாரத்தாலும் 'ஸதாசார்யனே தந்தருளவல்லவன், ஸச்சிஷ்யனே பெறத் தகுந்தவன்' என்பது பெறப்படும். இந்த ஸதாசார்யன் எப்படிப்பட்டவனென்னில்;

(கூர்வேல் கொடுந்தொழிலன்) மேலே *அன்றிவ்வுலகமளந்தாய்* என்ற பாசுரத்தில் *நின் கையில் வேல் போற்றி* என்று திருவாழியாழ்வானையே வேலாகச் சொல்லுகை உள்ளுறை பொருளாகையாலே இங்கும் திருவாழி யாழ்வானையே கொள்க. *ஸ்புரத்ஸஹஸ்ரார சிகாதி தீவ்ரனை ஸுதர்சநாழ்வானைச் சொன்னது ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானுக்கு முபலக்ஷணம். திருவாழி திருச்சங்குகளின் திருவிலச்சினையினால் ஆசார்யன் கொடுந்தொழில் புரிவன். இரும்பைப் பொன்னுக்கு மாபோலே, பரம நீசனாயிருந்தவனை உத்தமாதிகாரியாக ஆக்கிவிடுவது ஆசார்யவ்யதிரிக்தர்களுக்கு துஷ்கரமான கார்யமாகையாலே அதைக் கொடுந்தொழிலென்னத் தட்டில்லை. பஞ்ச ஸம்ஸ்கார ப்ரதானம் பண்ணித் தீமனங் கெடுத்து ஆட்கொள்ளுமாசாரியன் என்கை.

(நந்தகோபன்) * எடுத்த பேராளன் நந்தகோபன் * என்கிறார் நம்மாழ்வார்; கண்ணபிரானை ப்ரயத்நலேசமுமின்றிக்கே நிதி பெறுமாபோலே பெற்றவனுய் நிர்ஹேதுக பரகத ஸ்வீகார விஷயபூதன் நந்தகோபன். அப்படியே * யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய: * என்னும்படி பரகதஸ்வீகார பாத்ரபூதனுகும் பெருமையை யுடையவன் ஆசார்யன் என்கிறது.

(குமரன்) ஸ்வாபதேசார்த்தத்தில் 'நந்தகோபனுடைய குமரன்' என்று கொள்ளாமல், நந்த கோபனுயும் குமரனுயு மிருப்பவன் என்று கொள்ளக்கடவது. இப்படி பலவிடங்களிலுங் கண்டுகொள்க. குமரன் என்றது பாலன் என்றபடி. * பாண்டித்யம் நிர்வித்ய பால்யேந திஷ்டாஸேத் * என்று உபநிஷத்து ஓதின பால்யமுடையவன் ஆசார்யன். க்ரஹணதாரண போஷண படுர் பால:—ஆகையாலே அப்பொருளும் கொள்ளத் தக்கதேயாம்.

(ஏரார்ந்தகண்ணி) கண்ணழகுடையவன் என்கிறது. ஞானக் கண்ணென்றும் ஊனக்கண்ணென்றும் இரண்டுகண்களுண்டே; * என்றேனும் கட்கண்ணால் காணுத வவ்வுருவை நெஞ்சென்னு முட்கண்ணேல் காணு முணர்ந்து * (பெரியதிருவந்தாதி). என்றூரே நம்மாழ்வார். அப்படிப்பட்ட ஜ்ஞாநத்ருஷ்டியை யுடையவர் என்றவாறு. **கண்ணி** யென்று மாலைக்குப் பெயராதலால் *யே கண்டலக்ந துலஸீ நலிநாக்ஷமாலா:* என்றும் *பைங்கமலத் தண் தெரியல் பட்டர்பிரான் * என்றும் * அம்போஜபீஜ மாலாபி: அபிஜாதபுஜாந்தரம் * என்றும் சொல்லுகிறபடியே ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணமான துலஸீ நளிநாக்ஷ மாலைகளை யணிந்து விளங்குமவர் என்றதாகவுமாம்.

(அசோதை) * எல்லாம் தெய்வ நங்கை யசோதை பெற்றாளே * (பெருமாள் திருமொழி 7-5.) என்கிறபடியே பகவதநுபவங்களை யெல்லாம் வழுவாமே பெற்ற யசோதைப் பிராட்டிபோலே போகத்தில் வழுவாத [பரிபூர்ண பகவதநுபவசாலியான] ஆசார்யனைச் சொல்லும்.

(இளஞ்சிங்கம்) துர்வாதிகளுக்கு அணுகவொண்ணாமலும் அபிபவிக்க வொண்ணாமலு மிருக்குந் தன்மைக்குச் சிங்கமே ஒப்பாகும். (கார்மேனி) ஆசார்யன் ஸ்வர்ணச் சாயையான திருமேனியையுடையனு யிருந்தாலும் "கொண்டல்வண்ணன்... ஒருவனடியேனுள்ளானே" என்கிறபடியே காளமேக வண்ணனை பெருமானை உள்ளே யுடையனுகையாலே அப்பெருமானுடையதான எழில்நீலமேனியின் நிழலீட்டாலே தானும் கார்மேனியனுகவே காட்சி தருவன். இங்கே, "அபி பணிபதிபாவாத் சுப்ரம், அந்தச் சயாளோர் மரதக ஸுகுமாரை: ரங்கபர்த்துர் மயூகை:, ஸகல ஜலதிபாநச்யாமஜீமூதஜைத்ரம் புலகயதி விமாநம் பாவநம் லோசநே ந:" என்கிற ஸ்ரீரங்கராஜஸ்தவ திவ்விய ஸூக்தி அநுஸந்தேயம். ஸ்ரீரங்க விமானமானது ஆதிசேஷனே யாகையாலே வெளுத்திருந்தாலும் உள்ளுறையும் பச்சைமாமலைபோல் மேனியனுடைய திருமேனி நிழலீட்டாலே கழுத்தேகட்டளையாக நீரைப்பருகின கார் முகில் போல் காட்சி தருகின்றதென்பது இந்த ச்லோகத்தின் கருத்து.

"க்ஷீராம்போதேர் ஜடரம் அபிதோ தேஹபாஸாம் ப்ரரோஹை:
காலோந்மீலத் குவலய தளாத்வைதம் ஆபாதயந்தம்"—
என்ற சம்பூராமாயண ச்லோகமும் நினைக்கத் தகும்.

(செங்கண்) செம்மை பொருந்திய கண்ணையுடையவர். செம்மையாவது ஆர்ஜவம்—கோணலில்லாமை. ருஜுவான ஞானமுடையவர் என்றபடி. "யதி: பூஜ்யோ ந ஸம்சய:" என்றால், 'யதியானவர் பூஜிக்கத்தகுந்தவரே; இதில் ஸந்தேஹமில்லை' என்று பொருள் கொள்வார் ருஜுஜ்ஞானிகள். குடிலஜ்ஞானிகளோ வென்னில், யதி: பூஜ்யோ ந—யதியானவர் பூஜிக்கத் தகுந்தவரல்லர்; ஸம்சய:—அவருடைய நடத்தையில் ஸந்தேஹிக்கவேண்டி யிருக்கிறது—என்று பொருள்

கொள்வர். அன்னவர்களுடைய ஞானம் வ்யதிகரண மெனப்படும். அங்ஙனன்றிக்கே ஸமாநாதிகரணஜ்ஞானமுடையவரே ஆசார்யரென்கிறது செங்கண்என்பதனல்.

(கதிர்மதியம் போல் முகத்தான்) கதிரவன் போலவும் சந்திரன் போலவும் விளங்குகின்ற ஸ்ரீஸூக்திகளையுடையவர். ஸ்ரீ பாஷ்ய வேதார்த்த ஸங்க்ரஹாதி ப்ரவசந ஸமயத்தில் ஸூர்யன்போல் ஜ்வலிப்பர். பகவத்விஷய ஸ்ரீ வசநபூஷணதி ப்ரவசந காலத்தில் ஸௌம்ய முகராய் ஆஹ்லாத சீதநேத்ராம்புவாயிருப்பர் என்றவாறு. (நாராயணனே நமக்கே பறைதருவான்) இது முன்னமே விவரிக்கப்பட்டது. ஆக, இப்படிப்பட்ட ஸதாசார்யரிடத்தே நாம் படிந்தால் பாரோர் புகழ்வர்; "வாழ்வர் வாழ்வெய்தி ஞாலம் புகழவே." என்னும்படியாவர். .... ... .... 1

2. வையத்து வாழ்வீர்காள் நாமும் நம்பாவைக்கு *
செய்யுங் கிரிசைகள் கேளீரோ * பாற்கடலுள்
பையத்துயின்ற பரமனடிபாடி *
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி *
மையிட்டெழுதோம் மலரிட்டு நாமுடியோம் *
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம் *
ஐயமும் பிச்சையு மாந்தனையும் கைகாட்டி *
உய்யுமாறெண்ணி யுகந்தேலோ ரெம்பாவாய்.

கீழ் முதற் பாட்டில் *நீராடப் போதுவீர் போதுமினோ * என்று பகவதநுபவம் செய்ய விருப்பமுடையீரெல்லீரும் வாருங்கள் என்றழைக்கப்பட்டது, அதனல் இவ்வநுபவத்திற்கு அதிகாரி நியமமில்லை யென்றும் ருசியுடையார் யாவருமே அதிகாரிகளென்றும் காட்டப்பட்டது. உபநிஷத்தில் "ஸத்யம் வத, தர்மம் சர" என்று இரண்டு விதி வாக்யங்களுள்ளன. இவற்றுள் தர்மம் சர என்றதை விவரிக்குமிடத்தில் ஜாதிபேதத்தாலும் ஆச்ரம பேதத்தாலும் பேதித்திருக்கின்ற தருமங்கள் தேறுமாதலால் எல்லாத் தருமங்களுக்குமே எல்லாருமே அதிகாரிகளாக முடியாது. ஸத்யம் வத என்கிற விதிக்கோ வென்னில் இன்னரினையாரென்கிற வாசியின்றிக்கே உலகிற்பிறந்த அனைவரும் துல்யமாகவே அதிகாரிகளாகத் தேறுவர்கள். அதுபோலவே, பகவதாச்ரயணம் பாகவதாச்ரயணம் ஆசார்யாச்ரயணமென்னு மிவ்விஷயங்களுக்கு அதிகாரி நியதியின்றிக்கே எல்லாருமே அதிகாரிகள் என்பது வாஸ்தவமானலும் இதையும் சிறிது சிக்ஷிக்கவேண்டியிருக்கிறது; அந்த சிக்ஷணர்த்தமாகவே இப்பாட்டு (2) அவதரிக்கின்றது. அதாவது சாஸ்த்ரவச்யத்வம் முக்கியமான அதிகாரஸம்பத்து என்று தெரிவிக்கின்றதிப்பாட்டு. பகவத்கீதையில் பதினறுவது அத்யாயத்தில் முடிவான 23, 24 ஆம் ச்லோகங்களில் கீதாசார்யன் கூறியுள்ளது குறிக் கொள்ளத் தக்கது. "யச் சாஸ்த்ர விதிமுத்ஸ்ருஜ்ய வர்த்ததே காமகாரத:, ந ஸ ஸித்திமவாப்நோதி ந ஸுகம் ந பராம் கதிம்" என்பது 23-ம்ஆம் ச்லோகம். எவன் சாஸ்த்ர விதியைக் கடந்து மனம்போனபடியே நடந்து கொள்ளுகிறனே அவன் ஆமுஷ்மிக ஸித்தி யொன்றும் அடையமாட்டான், ஸுகமேதுவும் அவனுக்குக் கிடைக்காது; பரகதி ப்ராப்திக்கு ப்ரஸக்தியே கிடையாது—என்பது இந்த ச்லோகத்தின் கருத்து. இதற்கடுத்த ச்லோகம் "தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்யவ்யவஸ்திதௌ." இத்யாதி. இன்னது செய்யத்தக்கது, இன்னது விடத்தக்கது என்னும் வ்யவஸ்தையில் சாஸ்த்ரமே பரமப்ரமாணம் என்பது இதன் பொருள். ஆக இப்படிப்பட்ட சாஸ்த்ரவச்யத்வம் உள்ளவர்களே இதற்கு [இப்பாவைக்கு] அதிகாரிகளென்றும் அஃதில்லாதார் அநதிகாரிகளே யென்றும் காட்ட வேண்டியது அவச்யமாதலால் அது காட்டுகிறதிப்பாட்டு.

சாஸ்த்ரம் விதிநிஷேதாத்மகமாயிருக்கும். சாஸ்த்ரமாவது ஸ்ம்ருதீதிஹாஸ புராணாதிகளோடு கூடின வேதம். அதில் விதிகளுமுண்டு, நிஷேதங்களுமுண்டு. *மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ, ஆசார்ய தேவோ பவ, அதிதி தேவோ பவ, ஸத்யம் வத, தர்மம் சர.... * இத்யாதிகள் விதிபரங்கள். "நாப்ஸு மூத்ரபுரீஷம் குர்யாத். ந நிஷ்டீவேத். ந விவஸந: ஸ்நாயாத். நாந்ருதம்வதேத்"* இத்யாதிகள் நிஷேத பரங்கள். செய்யவேண்டிய நற்காரியத்தைச் செய்யும்படி கட்டளையிடும் நூற்பகுதி விதிபரமென்றும், விடவேண்டிய தீயகாரியங்களை விடும்படி விலக்குகின்ற நூற்பகுதி நிஷேதபரமென்றும்தேறிற்று. இவ்விரண்டையும் பரிபாலிக்குமதுதான் சாஸ்த்ர வச்யத்வமென்பது. *போதுவீர் போதுமினோ * என்றழைக்கப்பட்டவர்கள் இப்படிப் பட்ட சாஸ்த்ர வச்யத்வ பூர்த்தியை யுடையரா யிருக்கவேண்டுவது அவசியம் என்று காட்டுவதே இப்பாட்டின் ஸ்வாபதேசார்த்த ஸர்வஸ்வம்.

[வையத்து வாழ்வீர்காள்!] கீழ்ப்பாட்டில், 'சீர்மல்குமாய்ப்பாடிச் செல்வச்சிறுமீர் காள் !' என்று திருவாய்ப்பாடியிலுள்ளாரை மாத்திரம் அழைப்பதாகக் காட்டிவிட்டு, இப்பாட்டில் பூமண்டலத்திலுள்ளவர்களை யெல்லாம் அழைப்பதாக வைத்து * வையத்து வாழ்வீர்காளென்கிறவிது பொருந்துமோவென்று சங்கிக்க வேண்டா. [ஸ்வாபதேசார்த்தங்களை மறவாமல் நெஞ்சிற் கொள்ளவேணும்.] கீழ்ப்பாட்டில் ஆய்ப்பாடி யென்றது வடமதுரையின் ஸமீபத்திலுள்ள கோகுலமென்கிற குறிப்பிட்ட வோரிடத்தை மாத்திரமன்றே. பசுப்ராயர்களாய் அறிவிலிகளான நாமெல்லாரும் வர்த்திக்குமிடமே ஆய்ப்பாடி யெனப்பட்டதாதலால் * வையத்து வாழ்வீர்காளென் கிற விதுவும் அதற்கே விவரணமாகும். வாழ்ச்சி யென்பது இந்நிலத்திலேயல்லது பரமபதத்திலன்று என்றும் காட்டுகிறபடி. ஆண்டாள் நாச்சியார் திருமொழியில் * கொம்மை முலைகளிடர்தீரக் கோவிந்தற்கோர் குற்றேவல், இம்மைப் பிறவி செய் யாதே இனிப் போய்ச் செய்யுந் தவந்தானென் ? * என்று அருளிச்செய்தவளாகை யாலும், * இச்சுவை தவிர யான் போயிந்திரலோக மாளுமச்சுவை பெறினும் வேண்டேன் * என்றும், * அண்டர்கோனணி யரங்க னென்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணவே * என்றும் சொல்லுகிற வகுப்பிலே சேர்ந்த வர்கள் வையத்தில்தான் வாழ்ச்சியுள்ள தென்றிருப்பர்களாயிற்று. த்வீபாந்தரங் களிற் பிறவாமல், புண்யபலா நுபவத்திற்கும் புண்யகர்மார்ஜனத்திற்கும் பாங்கான ஜம்பூத்வீபத்தில் பாரதவர்ஷத்தில் பரதகண்டத்தில் பிறப்பது, அதிலும் அறிவுக்கு அடைவில்லாத பசுபக்ஷி யோனிகளிற் பிறவாதே மநுஷ்ய யோனியிற் பிறப்பது, அதிலும் கருவிலேயே மாண்டொழிவதும், பாலாரிஷ்டங்களாலே மாண்டு போவது மின்றிக்கே வாழ்நாள் மிக்கிருக்கப் பெறுவது, அதிலும் வேத வேதாந்த வேதாங்கங் களைப் பயில்வதற்கு உரிமையற்ற ஜாதிகளிலே பிறவாமல் * இருமுப் பொழுதேத்தி எல்லையில்லாத் தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்டரானார் குலத்திலே ஜனிக்கப் பெறுவது, இளம்பிராயத்தைப் பாழ்படுத்திவிட்டுத் தண்டுகாலாவூன்றி யூன்றித் தள்ளிநடக்கும் பருவத்திலே ஊக்கமுண்டாகி ச்ரமப்படுகை யன்றிக்கே கிளரொளி யிளமை கெடாமலிருக்கப் பெறுவது, இளம்பிராயமிருந்தும் இதில் ஊற்றமில்லா திருக்கை யன்றிக்கே * யானுமென்னெஞ்சுமிசைந் தொழிந்தோம் * என்னும்படி யான இசைவுடன் கூடியிருப்பது *ச்ரேயாம்ஸி பஹுவிக்நாநி பவந்தி மஹதாமபி* என்னும்படியான இடையூறுகள் தோன்றப் பெறுமலிருப்பது—ஆகிய இத்தனை ஸௌகரியங்களும் வாய்த்து, பிணி பசி மூப்புத் துன்பங்களாலே தளராமல், நின்றவா நில்லா நெஞ்சையும் வென்று நல்ல வித்யைகளை யதிகரிக்கக் கூடிய பொருத்த முடையவர்களை 'வையத்து வாழ்வீர்காள்!' என்று அழைக்கிறபடி.

வையத்து வாழ்வீர்காள் ! என்று இடையில் உம்மை தொக்கியிருப்பதாகவுங் கொண்டு உரைக்கலாம். *பாவியேனைப் பல நீ காட்டிப் படுப்பாயோ * என்றும் * ஓ ஓ உலகினதியல்வே !* என்றும் வயிறு பிடிக்க வேண்டும்படியாய் மஹாஜ்ஞானிகளையும்

அஜ்ஞானத்துக்கு உள்ளாக்குமதான இவ்விருள் தருமாஞாலத்தில் வாழ்வதென்பது அரிது; இதிலும் வாழவேணு மென்கிற ருசி உங்களுக்கு உண்டாயிற்றே! இஃது என்ன பாக்யம்! என்று கொண்டாடிச் சொல்லுகிற படியுமாம். வாழ்வீர்! என்னுமளவே போதுமாயிருக்க வாழ்வீர்காள்! என்று விகுதிமேல் விகுதியிட்டுக் கூறினது— 'வாழாட்பட்டுநின்றீருள்ளீரேல்' என்று தேடவேண்டாமே 'பொலிக பொலிக—கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்' என்னும்படியாக எம்பெருமானார் காலத்தில் விளைந்த ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தியைக் காட்டும். "ஏகாந்திநாம் த்வாதசபிஸ்ஸஹஸ்ரைஸ் ஸம்ஸேவிதஸ் ஸம்யமி ஸப்தசத்யா." என்று வடுகநம்பி பணித்தபடியே பன்னீராயிரம் ஸ்ரீ வைஷ்ணவர்களும் எழுநூறு ஜீயர்களும் இவ்வுலகில் வாழப்பெற்ற நல்லடிக்காலம் வரப்போகிற தென்பதை ஞானக்கண்ணாலே யறிந்த ஆண்டாள் "வையத்து வாழ்வீர்காள்!" என்றருளிச் செய்கிறாளாயிற்று.

[நாமும்] இந்த உம்மையினால் தங்களுடைய வைலக்ஷண்யாதிசயம் தோற்றுவிக்கப்படுகிறது. நாஸ்திகர்களாய் சாஸ்த்ர தூஷகர்களாய்ப் பிறவாமல் ஆஸ்திக நாஸ்திகர்களுமாக இராமல் ஆஸ்திகர்களாயும்* ச்ருதிஸ் ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ் தாமுல்லங்க்ய வர்த்ததே, ஆஜ்ஞாச் சேதீ மம த்ரோஹீ மத்பக்தோபி ந வைஷ்ணவ:* இத்யாதிகளிலே பரிபூர்ண விச்வாஸமுடையவர்களாயுமிருக்கிற பெருமையைக் காட்டிக் கொண்டபடி.

[நம் பாவைக்கு] பாவையாவது விரதம்; 'நம்' என்பதற்கு ஸ்வாபதேசத்தில் சிஷ்யர்கள் பொருளாதலால் சிஷ்யர்களின் விரதம் எதுவென்று பார்க்கவேணும். நம்மாழ்வார் பக்கலில் மதுரகவிகளும், எம்பெருமானார் திறத்தில் திருவரங்கத்தமுதனாரும் காட்டியிருக்கிற நிஷ்டையே சிஷ்யர்களின் விரதமாகும். "தேவு மற்றறியேன் குருகூர்நம்பி பாவினின்னிசை பாடித் திரிவனே" என்பது மதுரகவிகள் காட்டினநிஷ்டை;"கையிற்கனியென்னக் கண்ணனைக் காட்டித்தரினும்,உன்றன்மெய்யில் பிறங்கிய சீரன்றி வேண்டிலன் யான்" என்பது அமுதனார் காட்டின நிஷ்டை. ஆசார்யனையே பரதேவதையாகக் கொண்டிருப்பது தான் இது. இப்படியானால் ஆசார்யநிஷ்டர்கள் எம்பெருமானைக் கண்ணெடுத்துப் பார்க்க வேண்டியதில்லையோ? என்கிற கேள்வி பிறக்கும். கேண்மின். மதுரகவிகள் *தேவுமற்றறியேன்* என்றபின் அடுத்த பாசுரத்தில் *திரிதந்தாகிலும் தேவபிரானுடைக் கரியகோலத் திருவுருக் காண்பன் நான்* என்று, எம்பெருமானையும் ஸேவிப்பேனென்றார். இதனால், தனக்கு நேரே உத்தேச்யனாக எம்பெருமானைக் கொள்ளலாகாதென்றும், 'ஆசார்யனுக்கு உத்தேச்யனாகையாலே அவ்வழியாலே நமக்கும் உத்தேச்யன்' என்று கொள்ளலா மென்றும் காட்டப்பட்டது. 'ஆசார்யனுடைய முகோல்லாஸத்திற்காக பகவத்பக்தியும் ப்ராப்தம்' என்கிற ப்ரதிபத்திதான் ஸ்வரூபாநுரூபம். அமுதனாரும் எம்பெருமானுடைய ஸம்பந்தத்தை அறுத்துக் கொண்டாரல்லர்; தமக்கு எம்பெருமானார் செய்தருளின உபகாரங்களைப் பேசுமிடத்து *அரங்கன் செய்ய தாளிணையோடார்த்தான்* என்று பேசியுள்ளாரன்றோ. ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகளோடே தம்மைச் சேர்த்துப் பிணைத்துவிட்டதாகவன்றோ பேசியிருக்கிறார். ஆகவே ஆசார்ய நிஷ்டர்களான அதிகாரிகளுக்கு எம்பெருமான் த்யாஜ்யன் என்று விபரீத க்ரஹணம் பண்ணலாகாது. ஸ்ரீவசநபூஷணத்தில் சரம நிஷ்டா ப்ரகரணத்தில் "உபகார்யவஸ்து கௌரவத்தாலே ஆசார்யனிற் காட்டில் மிகவுமுபகாரகன் ஈச்வரன்" என்ற சூர்ணையை மனனம் பண்ணினால் இதில் நற்றெளிவு பிறக்கும். இனி மேலே செல்லுவோம்.

நம் பாவைக்குச் செய்யுங் கிரிசைகள் கேளீரோ வென்று ஸப்ரஹ்மசாரிகளுக்குச் சொல்லுகிறபடி. 'செய்யுங் கிரிசைகள்' என்றதில்—செய்யப்படுபவை, விடப்படுபவை ஆகிய இரண்டு வகையான காரியங்களும் அடங்கும். ஆய்ச்சிகள் கைப்பற்றின மார்கழி நோன்புக்காகச் சிலவற்றைச் செய்வதாகவும் சிலவற்றை விடுவதாகவும்

இங்குச் சொல்லுவதானது அந்த நோன்பு முடியும் வரையில். மேலே * கூடாரை வெல்லுஞ்சீர் *(27) என்கிற பாசுரத்தில் எல்லாவற்றையும் பரிக்ரஹிக்கப் போகிறார் கள். ஸ்வாபதேசார்த்தத்தில் ஆசார்ய நிஷ்டையாகிற விரதத்திற்கு ஒருநாளும் பரிஸமாப்தி கிடையாதாதலால் இங்குச் சொல்லப்படுகிற த்யாஜ்யோபாதேயங்கள் நித்யமானவை யென்றுணர்க.

பாற்கடலுள் பையத்துயின்ற பரமனடி பாடுகை, நாட்காலே நீராடுகை, ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டுகை, உய்யுமாறெண்ணுகை ஆகிய இவை கர்த்தவ்யங்கள்; நெய்யுண்கை, பாலுண்கை, மையிட்டெழுதுகை, மலரிட்டு முடிகை, செய்யாதன செய்கை, தீக்குறளை சென்றோதுகை ஆகிய இவை த்யாஜ்யங்கள். (இங்கே ஒரு சிறிய சங்கை தோன்றும்.) செய்யாதன செய்யாமையும் தீக்குறளை சென்றோதாமையும் ஆய்ச்சிகளுக்கும்கூட யாவஜ்ஜீவம் அவசியம் வேண்டியவை தானே. அப்படியே, பரமனடி பாடுகையும் நாட்காலே நீராடுகையும் ஐயமும்பிச்சையு மாந்தனையும் கைகாட்டுகையுமாகிற இவையுங்கூட யாவஜ்ஜீவம் கர்த்தவ்யந்தானே. அப்படியிருக்க, இந்நோன்புக்கு அங்கமாக இவற்றை ஸங்கல்பித்துக் கொள்வதாகச் சொல்லுகிறவிது கூடுமோ? நோன்பு தலைக்கட்டினவுடனே பரமனடி பாடுகை, ஐயமும் பிச்சையுமாந்தனையும் கைகாட்டுகை முதலானவற்றை விட்டுவிடவும், செய்யாதன செய்கை தீக்குறளை சென்றோதுகை முதலானவற்றைப் பரிக்ரஹிக்கவும் நேருமே; இதற்கு என்ன ஸமாதான மென்னில் கேண்மின். வேதத்தில், ஒரு யாகத்தில் தீக்ஷிதனானவன் அந்த யாகம் முடியும் வரையில் இருக்கவேண்டிய நியதி யைச் சொல்லுமிடத்து "தஸ்ய ஏதத் வ்ரதம், நாந்ருதம் வதேத், ந மாம்ஸமச்நீயாத்" என்று ஓதப்படுகிறது. அதாவது பொய் சொல்லாமையும் புலாலுண்ணாமையும் அவனுக்கு விரதம் என்றது. இதனால் அந்த வேள்வி முடிந்த வுடனே பொய் சொல்லலாம்; மாம்ஸமுண்ணலாம் என்றதாகத் தேறுது. பின்னை என்ன தேறு மென்னில் ஸாமான்ய காலங்களில் அவை செய்தால் ஸாமான்யமான பாபமே; தீக்ஷா கால விசேஷங்களில் அவை செய்தால் இரட்டிப்பான பாபமுண்டு என்பதே சாஸ்த்ர தாத்பர்யமாகத் தேறியுள்ளது. அதுபோலவே இங்கும் காண்க.

ஸ்வாபதேசத்தில், பாற்கடலுள் பையத்துயின்ற பரமனடிபாடுகையாவது என்னென்னில்; * உனது பாலே போல் சீரில் பழுத்தொழிந்தேன் * (பெரிய திருவந்தாதி) என்கிறபடியே பால் என்று எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங் களைச் சொல்லுகிறது. அவை அபரிச்சேத்யமாயிருக்கையாலே கடல் போன்றதாம். பகவத்குண ஸாகரத்தில் பரமானந்தாநுபவம் செய்து கொண்டிருக்கும் பரமன்—ஆசார்யன். அவனுடைய அடி பாடுகை—ஸாக்ஷாத் அவருடைய திருவடிகளையே பாடுகையும், திருவடிப்ராயரான அந்தரங்க சிஷ்யர்களைப் பாடுகையுமாம். நம்மாழ் வார்க்குத் திருவடி இராமானுசன்; இராமானுசனுக்குத் திருவடி முதலியாண்டான் என்று அந்தரங்க சிஷ்யர்களைத் திருவடியாகச் சொல்லிப் போருவதுண்டே.

நெய்யுண்ணோம் பாலுண்ணோம்—தேஹத்தைப் போஷிப்பதற்காக வன்றோ நெய் பாலுண்கை; முமுக்ஷுக்களாய் ஆத்மோஜ்ஜீவனத்திலேயே ஊன்றினவர்களா யிருப்பார்க்கு *கணை நாணி லோவாத் தொழில் சார்ங்கன் தொல்சீரை நன்னெஞ்சே ஓவாத வூணகவுண் * (பெரிய திருவந்தாதி) என்கிறபடியே பகவத்குணங்களே இடை யறாது உண்ணத் தக்கவையென்று காட்டுகிறபடி. * உண்ணுஞ்சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன் * என்று நம்போல்வாரால் இருக்கமுடி யாதாகிலும் அப்படியிருக்க ஆசைப்படலாமன்றோ.

நாட்காலே நீராடுகையைச் சொன்னது நித்யநைமித்திகங்களான ஸகல கருமங்களையும் சொன்னபடி. *குளித்து மூன்றனலை யோம்புங் குறிகொளந்தணமை தன்னை யொளித்திடாமல் * இருமுப்பொழுதேத்தி யெல்லையில்லாத் தொன்னெறிக்

கண் நிலைநின்ற தொண்டரான அறந்திகழுமனத்தவர் * (பெருமாள் திருமொழி 1-7.) என்று ஸ்ரீகுலசேகரப் பெருமாளருளிச் செய்தபடியே பஞ்சகால பராயணர்களா யிருக்க வேண்டும்படியைச் சொன்னவாறு.

மையிட்டெழுதோம் மலரிட்டு நாமுடியோம்—மையிட்டுக் கொள்ளுதலும் பூச் சூடிக்கொள்ளுதலும் தேஹாலங்காரத்தில் சேர்ந்தவை. *அரங்கனுர்க்கு ஆட் செய்யாதே புறஞ் சுவர் கோலஞ்செய்து புள் கவ்வக் கிடக்கின்றீரே *(திருமாலை-6.) என்கிறபடியே புறஞ்சுவர் கோலஞ் செய்கையாகிற தேஹாலங்காரத்தளவிலே நில்லாமல் ஆத்மாலங்காரமான சமதமாதி ஆத்மகுணங்களை ஸம்பாதித்துக் கொள் வதிலேயே கண்ணுங்கருத்துமா யிருப்போமென்றபடி.

செய்யாதன செய்யோம்—உபதேசரத்தினமாலையில் * ஆசாரியர்கள் அனைவரும் முன்னுசரித்த, ஆசாரந்தன்னையறியாதார், பேசுகின்றவார்த்தைகளைக் கேட்டு மருளா தே, பூருவர்கள் சீர்த்த நிலைதன்னை நெஞ்சே சேர்*என்றருளிச் செய்தபடியே, சாஸ்த்ர விஹிதங்களே யாகிலும் ஸாராஸாரவிவேக குசலர்களான நம்முன்னோர்கள் அனுஷ்டியாத கருமங்களை நாம் அநுஷ்டிக்கக் கடவோமல்லோம் என்கை. ஏகாதசீ ச்ராத்தம், அஸக்ருத்ப்ரணமம், அஷ்டகாங்வஷ்டகா ச்ராத்தம், மஹாலய தர்ப்பணம், அத்ருஷ்டார்த்தம் செய்து கொள்ளுதல் முதலானவற்றை 'செய்யாதன செய் யோம்' என்பதில் அடக்குவது. உபநிஷத்தும், "அத யதி தே..........அலூக்ஷா தர்ம காமாஸ் ஸ்யு:, யதா தே தத்ர வர்த்தேரந் ததா தத்ர வர்த்தேதா:" என்று ஓதிற்று. பகவத்கீதையிலும் * யத் யதாசரதி ச்ரேஷ்டஸ் தத் ததே வேதரோ ஜந:, ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ் ததநுவர்த்ததே * என்று சொல்லி வைத்தது. "தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம்" என்றார் ஆபஸ்தம்பரும். சாஸ்த்ர விஹிதங்களைச் செய்வதிற்காட்டிலும் மேலையார் செய்யாதவற்றைச் செய்யாமை முக்கியம் என்ப தைக் காட்டவே 'செய்யாதன செய்யோம்' என்று விசேஷித்துச் சொல்லிற்று. * மறந்தும் புறந்தொழாமாந்தர் * என்றதுபோல.

தீக்குறளை சென்றோதோம்—"தீக்குறளைச் சென்றோதோம்' என்று பலர் வாயிலும் வருகிற பாடம் தவிர்க்கத் தக்கது. இங்குக் குறள் என்று சொல்வடிவ மன்று, குறளை யென்றே சொல்வடிவம். சந்தியில் இரட்டிப்பு வராது, இயல்பேயாம். கோட்சொல், நிந்தை, வம்புப்பேச்சு, பொய்யுரை இவற்றுக்குத் தீக்குறளை யென்று பெயர். தன்னிடத்தில் தீயகுணங்கள் நிரம்பியிருக்கச் செய்தேயும் தன்னை மஹா குணசாலியாகப் புகழ்ந்து கொள்ளுதல், பிறரிடம் பல நற்குணங்களிருக்கச் செய் தேயும் அவற்றை விட்டுச் சில தோஷங்களையே விரித்துரைத்தல், நற்றங்களையும் குற்றமாக்கிப் பேசுதல், உண்மையும் பூதஹிதமுமல்லாத பேச்சுகளைப் பேசுதல், ப்ராப்த விஷயத்தைத் துதிக்க அமைந்த நாவைக்கொண்டு அப்ராப்த விஷயங்களைத் துதித்தல், நிஷ்காரணமாகப் பெரியோர்களைப் பழித்தல் முதலிய நாவகாரியங்களைத் தவிர வேணுமென்று சிக்ஷிக்கிறபடி.

ஐயமும் பிச்சையு மாந்தனையும் கைகாட்டி—நம்மாழ்வார் திருவாய்மொழியில் * ஞானக் கை தா காலக் கழிவு செய்யேலே * என்றருளிச் செய்திருக்கையாலே ஞானோபதேசம் பண்ணுகைதான் கைகாட்டுகையாவது. ஐயமாவது ஸந்தேஹம்; ஸந்தேஹமுள்ளவரையில் (அது தீருமாறு) ஞானோபதேசம் செய்வர் சிலர். பிச்சை யாவது வாய்திறந்து கேட்கை. சிஷ்யர்கள் வாய்திறந்து கேட்டால் விஷயங்களைச் சொல்லுவர் சிலர். ஆகவே ஐயமாந்தனையும் கைகாட்டுகை, பிச்சை யாந்தனையும் கைகாட்டுகை என்று இருவகை. சிஷ்யர்களின் ஸந்தேஹங்களைத் தாமே தெரிந்து கொண்டு பரிஹரிக்கும் ஆசாரியர்களுமுண்டு; சிஷ்யர்கள் தங்களுக்குண்டான ஸந் தேஹங்களைத் தாமே வாய்விட்டுச் சொல்லிக் கேட்ட பின்பு பரிஹரிக்குமாசார்யர்களு முண்டு; இருவகுப்பினரையும் இங்குத் தெரிவித்தபடி. அப்படிப்பட்ட ஆசார்யர்கள்

ளிக்காட்டி உய்யுமாறு—ஞானோபதேசம் பண்ணி உஜ்ஜீவிப்பிக்கும்படியை, எண்ணி யுகந்து—சிந்தித்து மகிழ்வது சிஷ்யக்ருத்யம் என்றபடி, 'உய்விக்குமாறு' என்னும் பொருளில் 'உய்யுமாறு' என்றது பிறவினையில் வந்த தன்வினை.

**உய்யும் ஆறு எண்ணி**—ஆறு என்றது ஆறென்னும் லக்கத்தையே சொன்னதாகி, எம்பெருமானார்க்காகத் திருக்கச்சிநம்பிகள் தேவப்பெருமாள் பக்கலில் பெற்று வெளியிட்டருளின ஆறு வார்த்தைகளை நாம் சிந்தித்து உகப்பதும் ஸூசிதமாகிறது. இங்ஙனே பொருள் காட்டுமிடங்களில் முத்ராலங்காரம் நினைக்கத் தக்கது. *"ஸூச்யார்த்தஸூசனம் முத்ரா ப்ரக்ருதார்த்தபரை: பதை:" என்பது அவ்வலங்காரத்தின் லக்ஷணம். திருக்கச்சி நம்பியாறு வார்த்தைகளாவன—1. ஸ்ரீமந் நாராயணனே பரதத்துவம். 2. ஜீவாத்ம பரமாத்ம பேதம். 3. ப்ரபத்தியே பரிக்ராஹ்யம். 4. பெரியநம்பிகளிடம் ஆச்ரயிப்பது. 5. தேஹாவஸானத்தில் முக்தி. 6. அந்திமஸ்மிருதியின் அவசியமில்லாமை—என்பன. இவற்றைக் காட்டும் ப்ராசீந ச்லோகம் வருமாறு:—*அஹமேவ பரம் தத்வம் தர்சநம் பேத ஏவ ச, மோக்ஷோபாயः ப்ரபத்திஸ் ஸ்யாத் பூர்ணாசார்யஸமாச்ரயः; தேஹாவஸாநே முத்திஸ் ஸ்யாத் அந்திமஸ்ம்ருதிவர்ஜநம்* என்பதாம். ... ... .... ... 2

3. **ஓங்கியுலகளந்த வுத்தமன் பேர்பாடி *
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால் *
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து *
ஓங்கு பெருஞ்செந்நெலூடு கயலுகள *
பூங்குவளைப் போதில் பொருவண்டு கண்படுப்ப *
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்க * குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள் *
நீங்காத செல்வம் நிறைந்தேலோரெம்பாவாய்.**

முதற்பாட்டில், ஆசார்ய குணாநுபவத்திற்கு வருகிறவர்களெல்லீரும் வாருங்களென்றழைத்து, அவர்கள் சாஸ்த்ரவச்யர்களா யிருக்க வேண்டியது முக்கியமான யோக்யதை யென்று கீழ் இரண்டாம் பாட்டில் தெரிவித்து, இனி இப்பாட்டில்—ஆசார்ய குலத்திலே நாம் அவகாஹிக்கப் பெற்றால் ப்ரபந்ந ஸந்தானத்தில் முமுக்ஷுக்களுக் கெல்லாம் மஹத்தான ச்ரேயஸ்ஸுகள் விளையுமென்று தெரிவிக்கப்படுகிறது. ஓங்கி யுலகளந்த வுத்தமன்—ஆசார்ய ச்ரேஷ்டன். எங்ஙனே யென்னில் ஓங்கி—எம்பெருமானைக் காட்டிலும் மேம்பட்டு. உலகளந்த—உலகங்களை யெல்லாம் ஸ்வாதீனப் படுத்திக்கொண்ட, உத்தமன்—சிறந்தவன் என்று பதப்பொருள். ஆசாரியன் எம்பெருமானைக் காட்டிலும் மேம்பட்டவனென்பது இராமாநுச நூற்றந்தாதியில், பல பாசுரங்களினால் காட்டப் பட்டுள்ளது. அவற்றுள் (41) *மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து* என்ற பாசுரம் திலகமாய் அமைந்தது. எம்பெருமான் பல பல யோனிகளில் பலவகைப் பிறவிகள் பிறந்து கண்காண வந்து நின்று உபதேசாதிகளாலே ஸ்வஸ்வரூபத்தைக் காட்டிக்கொடுத்த விடத்திலும் யாரும் அவனைப் பொருள் படுத்தவில்லை; * அவஜாநந்தி மாம் மூடா:* (கீதை. 9-11.) "மூடர்கள் என்னை அவமானப் படுத்துகிறார்கள்" என்று தானே சொல்லிக் கண்ணீர் விட்டழுது வருந்த வேண்டியதாயிற்று. ஆகவே பகவானுடைய அவதாரம் பயன் பட்டிலது. ஆசார்ய ஸார்வபௌமனுடைய அவதாரமோ வென்னில் மிக்க பயன் பெற்றது. ஆசாரியன் பகவானைப்போல 'என்னை வணங்கு, என்னையே தொழு' என்று சொல்லித் தன் பெருமையைப் பேசாதே * திருநாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்துய்ம்மினோ * என்றும் * அஃதே உய்யப்புகுமாறு * என்றும் அவன் பெருமையைப் பேசி அவன் திருவடிகளையே தஞ்சமாகக் காட்டிக் கொடுத்தபடியால்

ஆசார்யனுடைய உபதேசம் விரைவில் செவ்வனே பலித்ததாயிற்று. ஆகவே எம்பெருமானைவிட ஆசார்யன் உயர்ந்தவன். எம்பெருமான் தான் ராமக்ருஷ்ணாதி ரூபேண அவதரித்த காலங்களில் வஸிஷ்ட ஸாந்தீபநி ப்ரப்ருதிகளைத் தானும் ஆசாரியர்களாக வரித்திருந்தபடியாலே இக்காரணத்தாலும் ஆசாரியன் ஓங்கினபடி. கீதாசார்யன் *தத் வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா, உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்வதர்சிந:* (கீதை. 4·34) என்று தானே ஆசார்யன் பெருமையைச் சிறக்க எடுத்துரைத்திருப்பதனாலும் ஆசார்யனே ஓங்கினவனவன். அன்றியும், *நமந்தி ஸந்தஸ் த்ரைலோக்யாதபி லப்தும் ஸமூந்நதிம்* என்கிறபடியே வணங்கிவணங்கி ஓங்கினவர்கள் ஆசார்யர்கள்.

உலகளந்த—எம்பெருமான் தன்னுடைய பெருமையை மறைத்துக் கொண்டு சிறிய வடிவை யேற்றுக்கொண்டு அஸுரனிடத்திலே வந்து மூவடி நிலம் இரந்தது போல, ஆசார்யனும் தன்னுடைய பெருமையை யெல்லாம் இல்லைசெய்துகொண்டு மநுஷ்ய ஸஜாதீயனாகி, மநுஷ்யர்களைப் போல் அன்னபாநாதிகளையே தாரகமாகக் கொண்டவன் போலக் காட்டிச் சிறுகப் பிறந்து ஆஸுரப்ரக்ருதிகளான ஸம்ஸாரிகளிடத்தே வந்து 'ரஹஸ்யத்ரயம் கேளுங்கள், ஷட்கத்ரயம் (கீதை) கேளுங்கள், தத்வஹித புருஷார்த்தங்கள் கேளுங்கள், சிதசிதீச்வர தத்வத்ரயம் கேளுங்கள்' என்றிப்படி மூன்றைப் பற்றியே இரப்பாளனா யிருப்பன்; எம்பெருமான் கொள்பவன், ஆசார்யன் கொடுப்பவன் என்பது வாசி. இன்னமும், திரிவிக்கிரமன் *குறை கொண்டு நான்முகன் குண்டிகை நீர்ப் பெய்து, மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்திக் கறை கொண்ட கண்டத்தான் சென்னி மேலேறக் கழுவினான். அண்டத்தான் சேவடியை யாங்கு* என்றும், *கங்கை போதரக் கால் நிமிர்த்தருளிய கண்ணன்* என்றும் சொல்லுகிறபடியே ஸ்ரீபாத தீர்த்தமளித்து உலகத்தை உய்வித்தது போல ஆசார்யனும் *ததஸ் ஸ்வசரணாம்போஜ ஸ்பர்ச ஸம்பந்ந ஸௌரபை:, பாவநைரர்த்திநஸ்தீர்த்தை: பாவயந்தம் பஜாமி தம்* என்று ஸ்ரீ வரவரமுநி திநசர்யையிற் கூறினபடியே ஸ்ரீபாத தீர்த்தம் ப்ரஸாதித்து சிஷ்யோஜ் ஜீவனம் செய்து போருகிறபடி.

உத்தமன்—கர்மகாண்டமான வேதபாகங்களைப் போதித்து மத்யமாசார்யராகாமல், ச்ருங்கார ரஸப்ரதானமான காவ்ய நாடகங்களைப் போதித்து அதம குருவாகாமல், *புலையறமாகி நின்ற புத்தொடு சமணமெல்லாம் கலையறக் கற்ற மாந்தர் காண்பரோ கேட்பரோ தான்* என்று திருமாலையில் இழித்துரைக்கப்பட்ட ஜைந பௌத்தாதி க்ரந்தங்களைப் போதித்து அதமாதம குருவுமாகாமல், அத்யாத்ம ஸம்ப்ரதாய சாஸ்திரங்களைப் போதித்து உத்தம குருஸ்தானம் பெறுமவர். அநுவ்ருத்தி நிர்ப்பந்தங்கள் காரணமாக வருந்தி யுபதேசிக்கும் மத்யம குருவாகாமல், எவ்வளவு அநுவர்த்தித்தாலும் ஒன்றும் உபதேசியாத அதம குருவுமாகாமல், தாமாகவோ அநுவ்ருத்தி ப்ரஸந்நர்களாகவோ உபதேசிக்குமிடத்து உயர்கதிக் குறுப்பான அர்த்தங்களை உபதேசியாதே விப்ரலிப்ஸை முதலிய காரணங்களினால் அதோகதிக் குறுப்பான அர்த்தங்களைச் சொல்லிக் கொடுக்கும் அதமாதம குருவுமாகாமல், சிஷ்யர்களின் அனர்த்தங்கண்டு அவர்களுடைய அநுவ்ருத்தி நிர்ப்பந்தங்களில்லாமலே *பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் செயல் நன்றாகத் திருத்திப் பணிகொள்வான்* என்றாப்போலே தம்முடைய பரமக்ருபை யடியாகவே ஸாத்விக மஹார்த்தங்களை யுபதேசித்து உத்தமாசார்ய ஸ்தானம் வஹிப்பவர் என்றுமாம். ஞானமின்றி அனுட்டானம் மாத்திரமுடைய மத்யம குருவன்றிக்கே, அனுட்டானம் சிறிதுமின்றி ஞானம் மாத்திரமுடைய அதமகுருவு மன்றிக்கே, ஞான மனுட்டான மிரண்டு மின்றியொழிந்த அதமாதம குருவுமாகாமல் ஞானமனுட்டான மிவை நன்றாகவே யுடையராய் உத்தம குருவாமவர் என்றுமாம்.

உத்தமன் பேர்பாடி—இப்படிப்பட்ட உத்தமாசார்யருடைய திருநாம ஸங்கீர்த்தனமே போது போக்காக விருந்து என்றபடி. முமுக்ஷுக்களுக்கு குருபரம்பரா

நுஸந்தானமே யன்றே முக்கியமாகச் செய்ய வேண்டுமது. *குரோர் நாம ஸதா ஜபேத்* என்னக் கடவதிறே. ஆளவந்தார் ஆழ்வான் பட்டர்முதலான ஆசார்யர்கள் எம்பெருமானை ஸ்துதிக்க இழிந்தும் ஆசார்யர்களை யன்றே முந்துற முன்னம் உபச்லோகித்தது. திவ்யப்ரந்தங்கள் ஸேவிக்கத் தொடங்கினலும் ஆசாரியர்களின் தனியன்களை யன்றே முன்னம் பாடுகிறேம்.

[நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினல்.] நாங்கள்—பகவத்வைபவத்திற் காட்டிலும் சிறந்ததான பாகவத வைபவத்தையும் நன்கறிந்து அவர்களையே தஞ்சமாகக் கொண்டிருக்கிற நாங்கள் என்றபடி.... நம் பாவைக்குச் சாற்றி—பாவையாவது விரதம். இப்படிப்பட்ட அதிகாரிகளின் விரதம் எது வென்னில், சத்ருக்நாழ்வானும் மதுர கவிகளும் திருவரங்கத் தமுதனரும் போல்வார் கொண்ட விரதமேயாம். ஸ்ரீராம பக்தர்களில் தலைவனை பரதாழ்வானை யல்லதறியான் சத்ருக்நாழ்வான். நம்மாழ்வாரை யல்லதறியார் மதுரகவிகள். எம்பெருமானரையும் கூரத்தாழ்வானையுமல்ல தறியார் அமுதனர். இப்படிப் பட்ட விலக்ஷணமான விரதமே 'நம் பாவை' என்பதனல் உத்தேசிக்கப் படுகிறது. இப்பாவைக்கு அங்கமாக, நீராடினல்—நல்ல துறையிலே அவகாஹித்தால் என்றபடி. *காலைநன் ஞானத் துறைபடிந்தாடி *(93) என்ற திருவிருத்தப் பாசுரத்தின் படியே, ஸத்வோத்தரமான காலத்திலே ஸாத்விகஜ்ஞான ராசிகளாயிருக்கும் தீர்த்தங்களிலே அவகாஹிக்கப்பெற்றல்.

[தீங்கின்றி நாடெல்லாமித்யாதி.] இது முதலாக ஆறு அடிகளாலே (பாசுரம் முழுவதும்) நாட்டுக்கு விளையும் செல்வச் சிறப்பு விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. தேசக்ஷேமத்திற்கு வேண்டிய ஸம்ருத்திகள் அந்யாபதேசத்திற் காண்பது; ஆத்ம க்ஷேமத்திற்கு வேண்டிய ஸம்ருத்தி ஸ்வாபதேசத்தில். அதனை அடைவே விவரிப் போம். [நாடெல்லாம் தீங்கு இன்றி] *அதிவ்ருஷ்டி ரநாவ்ருஷ்டி:* என்று தொடங்கி *ஷடேதா ஈதயஸ் ஸ்ம்ருதா:* என்று ஈதிபாதைகளென்று ஆறுகஷ்டங்கள் தேஹ க்ஷேம விரோதிகளாக சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன. அவ்வண்ணமாகவே ஆத்ம க்ஷேமவிரோதிகளும் ஆறு உண்டு; அவை பட்டருளிச் செய்த அஷ்டச்லோகியில் (4) *தேஹாஸக்தாத்ம புத்திர் யதி பவதி* இத்யாதி ச்லோகத்தில் பரிஹாரமுறையோடுங் கூடக் காட்டப்பட்டிருக்கின்றன. தேஹமே ஆத்மா வென்று ப்ரமித்தல், தேஹத்திற் காட்டில் ஆத்மா வேறுபட்டவனே யென்று அறியப் பெற்றும் அவ்வாத்மாவை ஸ்வதந்திரனக ப்ரமித்தல், எம் பெருமானுக் கடிமைப் பட்டிருத்தலே ஆத்ம ஸ்வரூப மென்றறிந்து வைத்தும் அவனுக்குப் போலவே பிறர்க்கும் அடிமைப் பட்டிருக்கலாமென்று ப்ரமித்தல், தன்னை ரக்ஷித்துக்கொள்வதில் தானே முயற்சி செய்யத் தனக்கு உரிமையுண்டென்று ப்ரமித்தல், *கொண்ட பெண்டிர் மக்களுற்றர் சுற்றத்தவர் பிறருமான ஆபாஸ பந்துக்களிடத்தே வியாமோஹங் கொள்ளுதல், பகவதநுபவத்தில் தன்னை போக்தாவாக மருளுதல்-என்றிப்படிப் பட்ட தீங்குகள் காலை நன்ஞானத்துறை படியாதார்க்கு உண்டாகுமே; அத்தீங்குகளெல்லாம் அடைவே தொலைந்து போம். *"யத்ராஷ்டாக்ஷர ஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே, ந தத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதி துர்ப்பிக்ஷதஸ்கரா:*" என்கிற ச்லோகத்திற் சொன்னபடியே தீங்குகள் தொலையும் என்றுங் கொள்ளலாம். *கொன்றுயிருண்ணும் விசாதி பகை பசி தீயனவெல்லாம் நின்றிவ்வுலகில் கடிவான் நேமிப்பிரான் தமர் போந்தார்* என்ற திருவாய் மொழிப் பாசுரத்தோடும் இது இணங்கும்.

திங்கள் மும்மாரி பெய்து—*வேத மோதிய வேதியர்க் கோர் மழை, நீதி நன்னெறி மன்னவர்க் கோர் மழை, மாதர் மங்கையர் கற்பினுக் கோர் மழை, மாத மூன்று மழையெனப் பெய்யுமே* என்றபடி மூன்று நன்மைகளுக்காக மாதம் மூன்று மழை பெய்யுமென்று நூற்கொள்கை. உள்ளுறை பொருளில், மழை பெய்கையாவது ஆசார்யர்களின் ஸ்ரீ ஸூக்தி வர்ஷமேயாம். இதனல் வைதிகர்கள் ஸ்வாத்யாய ப்ரவசனங்

களைக் குறையற நடத்தி வரவும், மன்னவர்கள் செங்கோன்மை கெடாமல் அரசு செலுத்தும்படியும், மாதர்களின் கற்புநிலை ஓங்கும்படியும் நன்மைகள் நேருமென்று தெரிவித்தபடியாம். நம் ஆசார்யர்கள் உபந்யஸித்தருளும் அர்த்த விசேஷங்களில் இவையும் அடங்கியவை யாதலால். அன்றியும், மும்மாரி பெய்கை—மூன்றுவிதமான மழை பெய்கை. முதலிலே செவியில் திருமந்திரத்தை உபதேசிக்கை; பிறகு க்ரந்த காலக்ஷேபம் ஸாதிக்கை; அதன் பிறகு சிந்தனை செய்விக்கை என இம்மூன்றும் மும்மாரி பெய்கையாம். ரஹஸ்யத்ரயம், தத்வத்ரயம், ஆகாரத்ரயம், ஷட்கத்ரயம், தத்வஹித புருஷார்த்த மென்னும் த்ரயம், ப்ரஸ்தான த்ரயம் என்றிப்படி அறிய வேண்டிய விஷயங்களும் மூன்று மூன்ருயிருப்பதால் இவற்றை யுபதேசிப்பதுபற்றி யும் மும்மாரி பெய்கையென்னலாம்.

திங்கள் மும்மாரி—சந்திரன் போன்று மிகக் குளிர்ந்த அர்த்தங்களைத் தருகை சொன்னபடி. *"நவோ நவோ பவதி ஜாயமாந:" என்ற வேதத்தின்படி சந்திரன் நவம் நவமாகத் தோன்றுமவனுதலால் அதுபோல, எப்பொழுதும் நாள் திங்களாண்டுழி யூழி தொறும் அப்பொழுதைக்கப் பொழுது ஆராவமுதமான அர்த்த விசேஷங்களை வர்ஷிக்கையைச் சொன்னபடியுமாம். ஸம்ஸ்க்ருத வேதாந்தப் பொருள்கள், த்ராவிட வேதாந்தப் பொருள்கள், மற்றும் இதிஹாஸ புராணுதி உபப்ரும்ஹண க்ரந்தங்களிலுள்ள பொருள்கள் ஆக மூவகைப் பொருள்களையும் வர்ஷிக்கையை மும்மாரி பெய்கையென்றதாகவும் கொள்ளலாம்.

[ஓங்கு பெருஞ் செந்நெலூடு கயலுகள] உமியோடும் தவிடோடுங் கூடிய அரிசி நெல்லென்று சொல்லப்படும். ஸ்தூல தேஹத்தோடும் ஸூக்ஷ்ம தேஹத்தோடுங் கூடிய ஜீவாத்மாவைச் சொன்னபடி. ஸ்தூல தேஹத்தின் ஸ்தானத்திலே உமியும், ஸூக்ஷ்ம தேஹத்தின் ஸ்தானத்திலே தவிடும், ஸாரபூதனுன ஆத்மாவின் ஸ்தானத்திலே அரிசியும் தேறும். திருநாட்டிலே சென்றவாறே "அஹமந்ந மஹமந்ந மஹமந்நம்" என்று சொல்லுகிறவன் இவ்வாத்மா. இவன் ஸ்தூல தேஹத்தை இங்கே கழித்து ஸூக்ஷ்ம தேஹத்தை விரஜையாற்றிலே கழித்து அப்ராக்ருத திவ்விய தேஹவிசிஷ்டனுய்க்கொண்டு எம்பெருமானுக்கு அன்னமாகிருன். இந்த விபூதியில் இருக்கும் வரையில் ப்ராக்ருத தேஹவிசிஷ்டனுகவே யிருப்பதால் நெல்லாகச் சொல்லப்படுவது பொருந்தும். ஞானத்தினுலும் மற்றும் பல குணங்களினுலும் ஓங்கிப் பெருமையடைய வேண்டியது பற்றி ஓங்கு பெருஞ் செந்நெல் எனப்பட்டது. * வரம்புற்ற கதிர்ச்செந்நெல் தாள் சாய்த்துத் தலை வணக்கும் தண்ணரங்கமே * (4—9—8) என்ற பெரியாழ்வார் திருமொழியின் சுவைப் பொருள்கள் இங்கே காணத் தக்கன. செந்நெற் பயிர் முற்றினவாறே நெறித்திருக்க முடியாமல் தலைவணங்குவது போல பாகவதர்களும் *"நமந்தி ஸந்தஸ் த்ரைலோக்யாதபி லப்தும் ஸமுந்நதிம்"* என்று கீழே தெரிவித்தபடியே தலைவணங்கி நிற்பர்கள்; ஸோஹம் என்ற நிலை குலைந்து தாஸோஹம் என்றிருப்பர்கள்; இதுதான் ஓங்கிப் பெருமை பெற்றிருக்கை.

செந்நெலூடு கயல் உகளுகையாவது, கயல்—மத்ஸ்யம்; கண்ணை மத்ஸ்யமாகக் கூறுவது கவிமரபாதலால், தேஹ விசிஷ்டனுன ஆத்மாவினிடத்திலே கண் செலுத்துகையைச் சொன்னபடி. இங்கிருக்கும் வரையில் நாம் தேஹத்தையும் நோக்க வேணும்; ஆத்மாவையும் நோக்கவேணும். தேஹத்தை நோக்குகையாவது என்னென்னில், வர்ணுச்ரமங்கள் தேஹத்தளவிலே, நிற்பவையாதலால் *"வர்ணுச்ரமாசார வதா புருஷேண பர: புமாந், விஷ்ணுராராத்யதே பந்தா நாந்யஸ் தத்தோஷகாரக:* என்கிற ப்ரமாணத்தில் ச்ரத்தையாலே வர்ணுச்ரம தர்மாநுஷ்டானங்களிலே வழுவற வர்த்திக்கையாம். ஆத்மாவை நோக்குகையாவது—சேஷத்வ பாரதந்த்ர்யங்கள் வளரும்படி செய்து போருகை. திங்கள் மும்மாரி பெய்வதன் பலனன்றே இவை.

[பூங் குவளைப் போதில் பொருவண்டு கண்படுப்ப] புருஷர்களின் கண்களைத் தாமரையாகவும் பெண்களின் கண்களைக் குவலயமாகவும் வருணிப்பார்கள். ஸ்திரீகளைத் தாமரைக் கண்ணிகளாகச் சொல்லுவதும் சிலவிடங்களிற் காணப்பட்டாலும் குவளையங் கண்ணியரென்பதே அவர்கட்குப் பெரும்பான்மையான வழக்கு. ஆகவே இங்குப் பூங்குவளைப் போதென்று லக்ஷ்மீகடாக்ஷத்தைச் சொல்லுகிறது. *பங்கயத் தாள் திருவருளுங் கொண்டு* என்கிற ஆழ்வார் பாசுரத்தையும், *"ச்ரேயோ ந ஹ்யரவிந்த லோசந மந: காந்தா ப்ரஸாதாத் ருதே ஸம்ஸ்ருத் யக்ஷரவைஷ்ணவாத்வஸு ந்ருணாம் ஸம்பாவ்யதே கர்ஹிசித்"* என்ற ஆளவந்தார் ஸூக்தியையும் இங்கே அநுஸந்திப்பது. பொறிவண்டு, பொருவண்டு என்பன பாடபேதங்கள். முறையே, அழகிய வண்டென்றும், சண்டையிடுகிற வண்டென்றும் பொருள்படும். *உளங்கனிந்திருக்குமடியவர் தங்களுள்ளத்துளூறிய தேன் * என்கிற திருமங்கையாழ்வாரருளிச் செயலின்படி தேனாகிய எம்பெருமானை யநுபவித்துக் களிக்கும் பாகவதர்களே வண்டுகளாவர். (பொருவண்டு) என்ற பாடத்தில் இந்த வண்டுகள் சண்டையிடுவதாவது என்னென்னில், * பிணங்கி யமரர் பிதற்றுங் குணம் * என்று நம்மாழ்வாரருளிச் செய்தபடியே, ஒரு திருக்குணத்தின் உயர்த்தியை ஒருவர் சொல்ல அதைக் கண்டித்து மற்றொரு திருக்குணத்தின் உயர்த்தியை மற்றொருவர் சொல்ல; இப்படியாக விவாதம் வளர்ந்து செல்லுகை. பகவத் பக்தர்களுக்கு இத்தகைய வாத விவாத கேளியும் ஒரு சிறப்பாகு மன்றோ. * பிணங்கியமரர் பிதற்றும் * என்ற பாட்டில் பரமபதத்திலும் இங்ஙனே விவாதமுள்ளதாகவன்றோ நம்மாழ்வாரருளிச் செய்கிறார். தேசிகனும் கோதாஸ்துதியில் *" வாசாலயந்தி வஸுதே ரஸிகாஸ் த்ரிலோகீம் ந்யூநாதிகத்வ ஸமதா விஷயைர் விவாதை:"* என்கிறார். [கண்படுப்ப] கண்படுத்தலாவது உறங்குதல்; நிர்விசாரமாய்க் கிடக்க என்றபடி. புருஷகாரபூதையான பிராட்டியின் கடாக்ஷத்தைப் பெற்று நிர்விசாரமாய் மார்பிலே கைவைத் துறங்கும்படியைச் சொல்லிற்று. கண்படுத்தல்—நித்திரைசெய்தல்; இது விசாரமற்றவனுக்கே உற்றதாகும்.

இனி, வள்ளல் பெரும் பசுக்கள் நீங்காத செல்வம் நிறையும்படி சொல்லுகிறது. கைம்மாறு கருதாமல் மஹார்த்தங்களை யருளிச் செய்கையாலே மஹோதாரர்களாயிருப்பவர்கள் வள்ளல் எனப்படுவர்கள். * கவாம் அங்கேஷு திஷ்டந்தி புவநாநி சதுர்தச * என்கிறபடியே பதினான்கு லோகங்களையும் தம்முட் கொண்டிருக்கும் பசுக்களைப் போலே பதினான்கு வித்யைகளையும் தம்முள் தரித்திருப்பவர்களாய், பஞ்சகவ்யம் போன்ற அர்த்த பஞ்சகத்தினால் ஸகலாத்மாக்களையும் புனிதராக்குமவர்களான மஹாசார்யர்கள் இங்கு விவக்ஷிதர்கள். இவர்களாலே, நீங்காத செல்வம் நிறைந்து—அத்யாத்ம வித்யையும் அதன் பலனான பக்தியும் ஒருநாளும் குறையாமே மேன்மேலும் பெருகிச் செல்லு மென்கிறபடி. நிறைந்து என்றது நிறைந்திடும் என்றவாறு. உலகத்தார் செல்வமென்று நினைக்குமது உபாதி விசேஷங்களாலே நீங்குமது; மேற்சொன்ன செல்வமே நீங்காததாகும்.

இந்த வள்ளல் பெரும் பசுக்கள் எப்படிப்பட்டவை யென்றால், தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி வாங்கக் குடம் நிறைக்குமவை. தேங்குதல் தயங்குதல் தியங்குதல் இவை பர்யாய மொழிகள். ஆசார்யன் திருமாளிகையில் தயங்காமல் புக்கிருக்க வேண்டும். வருஷக் கணக்காக வாஸஞ் செய்வதிலும் * தத் வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா * என்று கீதாசார்யன் விதித்த கட்டளைகளை நிறைவேற்றுவதிலும் தயங்காமல் குருகுலவாஸம் செய்யவேணும். [சீர்த்த முலைபற்றி வாங்க] பசுக்கள் நான்கு முலைக் கண்களாலும் பால் சுரக்கும்; அதுபோல ஆசாரியர்கள் நான்கு ஹேதுக்களாலே சீரிய பொருள்களைச் சுரப்பார்கள். (1) எம்பெருமான் இவர்களை இந்நிலத்திற்கனுப்பியது சிஷ்யோஜ்ஜீவனத்திற்கேயாதலால் பகவதாஜ்ஞா பரிபாலனமென்னும் நினைவு. (2) சிஷ்யர்கள் வருந்தி வேண்டிக் கொள்ளுதல்,

(3) அவர்கள் வேண்டிக் கொள்ளாவிடினும் அவர்களது துர்க்கதி கண்டு ஸஹிக்க மாட்டாமை. (4) தாங்கள் வாய்விட்டுச் சொல்லாதொழியில் தரிக்கமாட்டாமை—ஆக இப்படிப்பட்ட நான்கு ஹேதுக்களாலும் ப்ரவசனம் செய்யவேண்டியவர்களாதலால் இவை சீர்த்த முலைகளாம். [பற்றி வாங்கக் குடம் நிறைக்கும்] அர்ஜுனன் *"சிஷ்யஸ் தேஹம் சாதிமாம் த்வாம் ப்ரபந்நம்"* என்று ஒரு சொல் சொல்லி ப்ரார்த்தித்தவாறே அத்யாயமத்யாயமாகக் கறந்த கீதாசார்யனைப் போலவும், *"நாரதம் பரிபப்ரச்ச வால்மீகிர் முநிபுங்கவம்"* என்கிறபடியே வான்மீகமுனிவர் கேட்டவாறே ஸ்ரீ ராமாயணம்ருதத்தைக் கறந்த நாரத மஹர்ஷி போலவும், *"மைத்ரேய: பரிபப்ரச்ச ப்ரணிபத்யாபிவாத்ய ச"* என்கிறபடியே மைத்ரேயர் கேட்டவாறே *சிதசிதீச்வர தத்ஸ்வபாவ போகாபவர்க்கததுபாயகதிகளைக் கறந்த பராசர பகவான் போலவும், 'ஹிதமருளிச் செய்யவேணும்' என்று பிரார்த்தித்தவாறே *கடல் வாய்ச் சென்று மேகங் கவிழ்ந்திறங்கிக் கதுவாய்பட நீர் முகந்தேறி யெங்கும் குடவாய்ப்பட நின்று மழை பொழியும்* என்னுப்போலே தாரை தாரையாக வர்ஷித்துக் குடங்குடமாக நிறைப்பர்களாம் மஹாசார்யர்கள். குடம் என்றது பாத்ரமென்றபடியாய் ஆசார்ய தயாபாத்ர பூதர்களான ஸச் சிஷ்யர்களைச் சொன்னபடி. இவர்களை நிறைக்கை யாவது-தம்மோடொக்க ஞானபூர்த்தியுடையவர்களாகச் செய்கை. இப்படிச் செய்ய வல்ல வள்ளல் பெரும் பசுக்களாலே [-மஹாசார்யர்களாலே] நீங்காத செல்வம் நிறைந்திடும்—என்றதாயிற்று. ... .... ... .... (3)

4. **ஆழிமழைக் கண்ணா! ஒன்று நீ கைகரவேல் ***
**ஆழியுட்புக்கு முகந்து கொடு ஆர்த்தேறி ***
**ஊழி முதல்வனுருவம் போல் மெய் கறுத்து ***
**பாழியந்தோளுடைப் பற்பநாபன் கையில் ***
**ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து ***
**தாழாதே சார்ங்கமுதைத்த சரமழைபோல் ***
**வாழ வுலகினிற் பெய்திடாய்* நாங்களும்**
**மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.**

மார்கழி நீராட்ட நோன்பு நோற்கப்புகுந்த ஆய்ச்சிகள் மழைத் தெய்வத்தை நோக்கி மழைபெய்யக் கட்டளையிடுவதாக அமைக்கப்பட்டது இப்பாசுரம். இது மேலெழுந்த நோக்கிற் காணும் பொருள். ஏனென்னில், முதற்பாட்டில் * நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்!* என்று அழைத்தவர்களுக்கு மெய்யாக நீராடப் போவதே உத்தேசியமானல் இவர்களெல்லாருங்கூடி ஒரு பொய்கைக்கரைக்குச் சென்றிருக்கவேண்டுமல்லவா ? அப்படி ஒரு நீர்நிலைக்குச் சென்றதாகக் காணவில்லை. *சிற்றஞ்சிறுகாலே வந்துன்னைச் சேவித்து உன் பொற்றாமரையடியே போற்றும் பொருள் கேளாய்* என்று நேராக எம்பெருமானிடம் சென்று சேர்ந்து குற்றவேல் கொள்ள வேண்டினதாகவே யன்றோ காண்கிறது. ஆகவே இங்கு மழைத் தெய்வத்தை நோக்கி "நாங்களும் மார்கழி நீராட வுலகினில் பெய்திடாய்" என்று கூறுவதானது வேறோர் உட்பொருளைக் கொண்டதாகவேயிருக்க வேண்டுமென்பது வெளிப்படை. சேதநனை எம்பெருமான் பக்கலிலே கொண்டுசேர்க்கும் ஆசார்யன் பலபல ஹேதுக்களாலே மேகமென்னத் தகுதியுடையனாதலால் ஆசார்யனே இங்கு மேகமாக மறைத்துச் சொல்லப்படுவதாகக் கொள்ளவேணும். ஆசார்ய ஹ்ருதயத்தில் (3-6.) "பூண்டநாள் சீர்க்கடலையுட்கொண்டு" என்று தொடங்கும் சூர்ணையில் "பரஸம்ருத்தியே பேறான அன்புகூரு மடியவர் உறையிலிடாதவர் புயற்கையருள் மாரி குணந்திகழ் கொண்டல் போல்வாரை மேக மென்னும்" என்று, முதலாழ்வார்

கள் திருமழிசைப்பிரான் திருமங்கை மன்னன் எம்பெருமானுர் போல்வார் மேகமாகச் சொல்லப்படுவர்களென்று அருளிச் செய்திருப்பது காண்க.

ஆசாரியர்க்கும் மேகத்திற்கும் பல வகைகளாலே ஸாம்யமுண்டு. ஒரு பத்து வகைகளாலே ஸாம்யத்தை இங்கு நிரூபிப்போம்.

1. மேகமானது உப்புக்கடலிலுள்ள க்ஷாரமான ஜலத்தையும் தான் முகந்து மிக் மதுரமாக்கிப் பெய்கின்றது. அதுபோல் ஆசாரியர், நால்வேதக் கடலிலுள் ளனவாய் மந்தமதிகளுக்கு துரவகாஹங்களாய் அபோக்யங்களான அர்த்தங் களைத் தங்களுடைய திருநாவீறு கொண்டு பரமபோக்யமாக்கி உபகரிப்பர்.
2. மேகமானது "உயிரளிப்பான் மாகங்களெல்லாந் திரிந்து" (திருவிருத்தம் 32). என்றருளிச் செய்தபடியே லோகரக்ஷணார்த்தமாகப் பெய்யவேண்டு மிடங் களிற் சென்று பெய்வது போல, ஆசாரியர் "எண்டிசையும் பேர்த்தகர நான்குடையான் பேரோதிப் பேதைகாள்! தீர்த்தகரராமின் திரிந்து" என்கிற பூதத் தாழ்வாருடைய நியமனப்படியே "ஸ்ரீரங்கம் கரிசைலமஞ்ஜந கிரிம் ..................ஸாலக்ராமகிரிம் நிஷேவ்ய ரமதே ராமாநுஜோயம் முநி:" என் னும்படியாக ஸகல திவ்ய தேசங்களிலும் ஸகல க்ஷேத்ரங்களிலு மெழுந் தருளி ஆத்மோஜ்ஜீவனார்த்தமாக அர்த்த விசேஷங்களைப் பொழிவர்.
3. மேகமானது மழைபெய்து பள்ளமான விடங்களையும் நிரப்புவது போல ஆசாரி யரும் ஸதுபதேச வ்ருஷ்டிகளைச் செய்து நீசர்களை உத்துங்கர்களாக்குவர்.
4. மேகமானது எப்போதும் வர்ஷியாது; காலவிசேஷங்களிலேயே வர்ஷிக்கும்; இங்ஙனே ஆசாரியரும் சில ஸமயவிசேஷங்களைக் குறிக்கொண்டு ஸதுபதேச வர்ஷங்களைச் செய்வர்.
5. மேகமானது ப்ராப்த காலங்களில் பெய்யாவிடில் உலகில் பலவகைப் பீடைகள் உண்டாகின்றன. அதுபோல் ஆசாரியரும் ஸமயங்களில் ஸதுபதேசங்களைச் செய்தருளாவிடில், தேஹாத்ம ப்ரமம் ஸ்வஸ்வாதந்த்ர்ய ப்ரமம் அந்ய சேஷத்வ ப்ரமம் ஸ்வரக்ஷணே ஸ்வாந்வய யோக்யதாப்ரமம் பாந்தவாபாஸ லோலத்வம், விஷயப்ராவண்யம் முதலான பல பீடைகள் தோன்றும்.
6. மேகம் எவ்வளவு வர்ஷித்தாலும் த்ருப்தியடைவது மில்லை, கைம்மாறு கருது வது மில்லை. அதுபோலவே ஆசாரியரும் கைம்மாறு கருதாமல் எவ்வளவு உபதேசித்தும் த்ருப்தியடையாமலே மேன்மேலு முபதேசித்துக்கொண்டே யிருப்பர்.
7. மேகம் சில காலங்களில் சில நீர்த்துளிகளைப் பெய்து ஓய்கிறது; மற்றொருகால், போதும்போது மென்னும்படியாக அபரிமிதமாய் வர்ஷிக்கிறது. இங்ஙனமே ஆசாரியரும் சில ஸமயம் மந்த்ரோபதேசமென்று சிஷ்யர் செவியிலே சில அக்ஷரங்களைச் சொல்லி நிற்பர்; மற்றொருகால் [காலக்ஷேபக்ரந்த ப்ரவசனம் செய்யுமிடத்து] ச்ருதி ஸ்ம்ருதிதிஹாஸபுராண உபய வேதாந்த ரஹஸ்ய ஸாரார்த்தங்களை அபரிமிதமாக வர்ஷித்து 'இது என்ன அதிவ்ருஷ்டி!' என்று வியப்புறச் செய்வர்.
8. மேகம் வீதிகளிலே வர்ஷித்து ஜலத்தை நிஷ்ப்பலமாக்குகிறது; சிப்பிகளிற் பெய்து முத்துக்களை யுண்டாக்கி ரத்ன பூஷணங்களுக்கு உதவுகிறது. இப் படியே ஆசாரியரால் சில வ்யக்திகளிடத்தில் உபதேசிக்கப்படும் அர்த்தங்கள் அநவதானத்தினாலும் விஸ்மரணத்தினாலும் அப்ரயோஜனமாகின்றன. சில மேதாவிகள் பக்கலிலோ வென்னில் விசேஷமான புஷ்டியை யடைந்து ஸ்ரீவசந பூஷணம், உபதேச ரத்தினமாலை என்னும் பெயர்களால் ஆத்மா லங்கார ஹேதுக்களாகின்றன.

9. மேகம் பெய்த நீரானது நதிகளிலும் தடாகங்களிலும் கிணறுகளிலும் சென்று சேர்ந்து ஸர்வோபஜீவ்யமாகின்றது; வேறிடங்களிற் சேர்ந்து ஒருவர்க்கும் கொள்ளத்தகாததாக ஆகின்றது. அதுபோலவே ஆசார்யர் ஸத்பாத்ரங்களில் வர்ஷிக்கும் அர்த்த விசேஷங்கள் ஆசார்ய பரம்பரையாய் க்ரஹித்து அநுபவிக்கத் தக்கதாயும், அபாத்ரங்களில் தந்த அர்த்தங்கள் பழுக்கக் காய்ச்சின இரும்பிலே விட்ட தண்ணீர்போல் அஸத் கல்பங்களாயும் ஆகின்றன.

10. மேகமானது "எத்தனையும் வான் மறந்த காலத்தும் பைங்கூழ்கள், மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்" (பெருமாள் திருமொழி) என்கிறபடியே, பயிர், சாதகபக்ஷி முதலிய அநந்ய கதிகளால் எதிர்பார்க்கப்பட்டிருந்து அவற்றுக்கு உபகாரகமாயும், "நீர்காலத்து எருக்கிலம்பழவிலைபோல் வீழ்வேனை" (நாச்சியார் திருமொழி) என்கிறபடியே எருக்கஞ் செடிகளிற் பெய்து நஷ்டத்தை விளைப்பதாயும் ஆகிறது. அதுபோல, ஆசார்யதிவ்ய ஸூக்திகளும் அநந்யகதிகளால் குதூஹலத்தோடு எதிர்பார்க்கப்பட்டு உபயோகங்கொள்ளப் படுவனவாய், பிறரிடத்திலே பெருகி "சாறுவாகமத நீறுசெய்து சமணச் செடிக்கனல் கொளுத்தியே சாக்கியக்கடலை வற்றுவித்து மிகு சாங்கியக்கிரி முறித்திட" (ஆர்த்திப் பிரபந்தம்) என்கிறபடியே அநர்த்த ஹேதுக்களாய் முடியும். இங்ஙனே மற்றும் பல வகையான உவமைப்பொருத்தங்கள் காணலாம்.

பூருவர்கள் பணித்தவோர் அற்புதமான ச்லோகரத்னமும் இங்கே அநுஸந்திக்கத் தகும்; அதாவது, "லக்ஷ்மீநாதாக்ய ஸிந்தௌ சடரிபுஜலத: ப்ராப்ய காருண்ய நீரம் நாதாத்ராவப்யஷிஞ்சத், ததநு ரகுவராம்போஜ சக்ஷுர்ஜ்ஜராப்யாம், கத்வா தாம் யாமுநாக்ய்யாம் ஸரிதம் அத யதீந்த்ராக்ய்ய பத்மாகரேந்த்ரம் ஸம்பூர்ய ப்ராணி ஸஸ்யே ப்ரவஹதி ஸததம் தேசிகேந்த்ர ப்ரமௌகை:" என்பதாம். இதன் பொருளாவது, நம்மாழ்வாராகிற காளமேகம் ச்ரிய: பதியென்னும் கடலிலே புக்குக் கருணையாகிற நீரை முகந்துகொண்டு ஸ்ரீமந் நாதமுனிகளாகிற மலையுச்சியில் வர்ஷிக்க, அந்த மழை உய்யக் கொண்டார் மணக்கால் நம்பிகளாகிற இரண்டு அருவிகளாகப் பெருகி யமுனைத்துறைவர் (ஆளவந்தார்) என்னும் ஆற்றிலே தங்கி அங்குநின்றும் பெருகி எம்பெருமானாராகிற ஏரியிலே நிறைந்து, வீராணத் தேரியின் தீர்த்தம் எழுபத்துநான்கு மதகுவழியாகப் பெருகிப் பலவூர் வயல்களிலே பாயுமாபோலே எழுபத்து நான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளின் வழியாய் ஸம்ஸாரி சேதநர்கள் பக்கலிலே இடையறாது பெருகிக்கொண்டிருக்கின்ற தென்கை. * ஆழி மழைக்கண்ணா' என்கிற இப் பாசுரத்தினால் எம்பெருமானாரை விளித்து, தேவரீர் உபய வேதாந்த ப்ரவர்த்தகாசார்ய ரென்கிற விருது பொலிய உபய வேதாந்தப் பொருள்களையும் ஸர்வ லோகோஜ்ஜீவனமாம்படி வர்ஷிக்க வேணுமென்று பிரார்த்திப்பதோ நியமிப்பதோ செய்யப்படுகிற தென்று உணர்க.

இதற்குச் சார்பான விவரணம் காணீர்;

[ஆழிமழைக்கண்ணா!] இதற்குப் பல படியாகப் பொருள் கூறலாம்; கண்ணா! என்றது நிர்வாஹகனே! என்றபடி. ஆசார்யன் ஒரு மழைக்கு நிர்வாஹகன்; "த்வதீக்ஷண ஸுதாஸிந்து வீசி விக்ஷேபசீகரை:, காருண்யமாருதாநீதைச் சீதளை ரபிஷிஞ்ச மாம்." என்று திருக்கச்சி நம்பிகளும் "தாபத்ரயீமய தவாநலதஹ்யமாநம்... ஹஸ்தீச த்ருஷ்ட்யம்ருதவ்ருஷ்டிபிராபஜேதா:" என்று கூரத்தாழ்வானுமருளிச் செய்த பகவத்கடாக்ஷமெனும் அம்ருதவ்ருஷ்டிக்கு ஆசார்யனேயன்றோ நிர்வாஹகன். எம்பெருமானுடைய திவ்ய கடாக்ஷாம்ருததாரையைப் பொழிவிக்கிற எம்பெருமானாரே! என்றபடி. மழையைக் கண்ணிலே யுடையவரே! என்றும் பொருள்

கொள்ளலாம். *ஆஹ்லாத சீதநேத்ராம்பு:* என்றும், *வண்பொன்னிப் பேராறு போல் வருங்கண்ணநீர் கொண்டு அரங்கன் கோயில் திருமுற்றம் சேறுசெய் தொண்டர்* என்றும் சொல்லுகிறபடியே பகவத்குண சேஷ்டிதங்களை நினைந்து கண்ணும் கண்ணீருமா யிருப்பவரே! என்றபடி.

'ஆழிமழைக்கு அண்ணா!' என்றும் பிரித்துக்கொள்ளலாம். *பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாளான ஆண்டாள் தனது திருத்தமையனாரை அண்ணாவென்று விளிக்க ப்ராப்தமேயன்றோ. ஆழி மழைக்கு ஸ்வாமியானவரே! என்று பொருள் படும். [நீ ஒன்றும் கைகரவேல்] ஸம்ஸாரிகளுக்கும் கைகொடுக்கவேணும், ஸர்வேச்வரனுக்கும் கைகொடுக்கவேணும் என்றதாக ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது. *ஞானக் கை தா* என்று ஆழ்வார்களருளிச்செய்த கணக்கிலும் *மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ரபாணிநா* என்று மஹர்ஷிகள் கூறின கணக்கிலேயும் ஸம்ஸாரிகளுக்குக் கைகொடுப்பது ஸஹஜம். ஸர்வேச்வரனுக்கு இவர் கைகொடுக்கையாவது என்? என்னில், இதை தேசிகன் யதிராஜஸப்ததியில் அருளிச் செய்கிறார்; எங்ஙனேயென்னில்; (ச்லோ—38) "குத்ருஷ்டி குஹநாமுகே நிபதத: பரப்ரஹ்மண: கரக்ரஹ விசக்ஷணோ ஜயதி லக்ஷ்மணோயம் முநி:"* என்றார். குத்ருஷ்டிகள் மாயக்கோலாஹலங்கள் பண்ணினவாறே அவற்றைப் பரிஹரிக்கவல்லார் ஆருமில்லாமையாலே எம்பெருமான் அத:பாதாளத்திலே விழுந்திட்டானாம்; அப்படிப்பட்டவனைக் கைதூக்கிப் பிடித்தெடுத்தவராம் எம்பெருமானார். ஆகவே, ஸம்ஸாரிகளுக்குப்போல ஸர்வேச்வரனுக்கும் கைகொடுத்தவர் ஸ்வாமிராமாநுஜர்—என்னத் தட்டில்லை. இதை ஆண்டாள் முன்னமே யறிந்து கூறினபடி.

மேலே உதாஹரித்த யதிராஜ ஸப்ததி ச்லோகவிஷயமான ஓர் ஐதிஹ்யம் கேண்மின். அப்பயதீக்ஷிதர் காஞ்சீபுரத்தில் தும்பை வனம் நிருமித்து அதில் வாஸம் செய்து கொண்டிருக்கையில் உஞ்சவ்ருத்தி பண்ணுகிற வொரு ஸ்ரீ வைஷ்ணவர் யதிராஜஸப்ததி சொல்லிக்கொண்டு அவ்வீதியில் வருவராம். ஒருநாள் அவருடைய க்ருஹத்தின் வாசலில் இந்த ச்லோகம் சொல்லுகையில் "கரக்ரஹ விசக்ஷணோ ஜயதி லக்ஷ்மணோயம் முநி:" என்றதைக் கேட்டதும், "ஐயங்காரே! இப்படி வாருங்கள்; 'கரக்ரஹ விசக்ஷண:' என்று தேசிகர் ஸாதித்திருக்க மாட்டார்; அது ப்ராஸத்திற்குச் சேராது;—"கசக்ரஹ விசக்ஷண:" என்றே அவர் ஸாதித்திருப்பார். இதுதான் ப்ராஸத்திற்கும் பொருந்தும், பொருளுக்கும் சேரும். தண்ணீரில் அமிழ்ந்தவனைத் தலைமயிரிலே பிடித்துத் தூக்குவது எங்குங்கண்டதாகையாலே "குத்ருஷ்டி குஹநாமுகே நிபதத: பரப்ரஹ்மண:" என்றதற்குச் சேர "கசக்ரஹ விசக்ஷண:" என்றுதா னிருக்கத்தகும்; இனிமேல் இப்படியே சொல்லுங்கள்" என்று திருத்திக் கொடுத்தாராம். உஞ்சவ்ருத்தி ஸ்வாமி விசேஷஜ்ஞரல்லாமையாலே மஹாபண்டிதரென்று ப்ரஸித்தரான தீக்ஷிதருடைய வார்த்தையில் கௌரவாதிசயத்தாலே அவ்விதமாகவே பாடத்தைத் திருத்திக்கொண்டு 'கசக்ரஹ விசக்ஷண:' என்றே சொல்லி வந்தார். அதைச் சில ஸ்ரீ வைஷ்ணவ வித்வான்கள் கேட்டு 'என்ன ஸ்வாமிந்! புதிய பாடமாயிருக்கிறதே, இது எங்கே கேட்டது?' என்றார்கள். அதற்கு இவர் தீக்ஷிதருடைய வார்த்தைகளைச் சொல்லி அவர் பெறுவித்த திருத்தம் என்றார். அதற்கு அந்த வித்வான்கள் சொன்னதாவது—தீக்ஷிதர் வித்வானேயாகிலும் அரஸிகர்; ப்ராஸத்திற்கு ஆசைப்பட்டு அர்த்தஸ்வாரஸ்யத்தை இழக்கலாகாது. தண்ணீரினுள் அமிழ்ந்தவனுடைய தலைமயிர் அகப்படுவதற்கு முன்னே அவனுடைய கைகள்தான் அகப்படும்; என்னைத் தூக்கிப் போடுவாருண்டாவென்று அவன் இருகைகளையும் உயர வெடுத்திருப்பன். ஆகவே கைதான் எளிதாக எட்டும். 'கரக்ரஹ' என்கிற பாடந்தான் மிகப்பொருத்தமானது என்று; இதைப் பிறகு தீக்ஷிதர் கேள்விப்பட்டு 'அர்த்தஸ்வாரஸ்யம் கண்டறிவதற்கு ஸ்ரீவைஷ்ணவர்களே இட்டுப் பிறந்தவர்கள்' என்று கொண்டாடி 'கரக்ரஹ'

என்பதுதான் யுக்தமான பாடமென்று தலைதுலுக்கிச் சென்றாராம். 'கைகரவேல்' என்ற இவ்விடத்திற்கு அந்த ச்லோகம் மிகவு மிணங்கும். ஆக ஆசார்யரே! ஸம்ஸாரி களுக்கும் ஸர்வேச்வரனுக்கும் கைகொடுக்கக் கடவீர் என்னும் பொருளிலே ஒன்றும் நீ கைகரவேல் என்றதாயிற்று.

அண்ணு! நீ ஒன்றும் கைகரவேல்—திருத்தமையனாராகிய எம்பெருமானாரே! உமக்கு முற்பட்ட ஆளவந்தார் முதலான ஆசாரியர்கள் பலரும் * ஓராண்வழியா யுபதேசித்தார் முன்னோர் * என்கிறபடியே தங்களுடைய ஔதார்யத்தை மறைத்துப் போந்தார்கள்; நீர் அப்படி மறைத்திடாமல் * ஏராரெதிராசரின்னருளால், பாருல கிலாசையுடையோர்க்கெல்லா மாரியர்காள் கூறுமென்று பேசி வரம்பறுத்தார் பின் * என்னும்படியாக உம்முடைய ஔதார்யத்தை நாடு நகரமும் நன்கறிய விளங்கச் செய்யக் கடவீர் என்பது இங்குக் கருத்தாம்.

ஆழியுள் புக்கு முகந்து கொடு—ஆழியாவது ஸமுத்ரம்; "நிர்மத்ய ச்ருதி ஸாகராத்" என்னப்பட்ட வடமொழிவேதக் கடலென்ன, *"நமாம்யஹம் த்ராவிட வேதஸாகரம்"* என்னப்பட்ட தமிழ் வேதக் கடலென்ன ஆகிய உபய வேதக்கடலி னுள்ளும் அவகாஹித்து அவற்றிலுள்ள அர்த்த விசேஷங்களைக் கொள்ளை கொண்டு என்றபடி. 'ஆழியில்புக்கு' என்னமல் 'ஆழி உள்புக்கு' என்கையாலே ஸ்வாமி யெம்பெருமானர் சாஸ்த்ரக் கடல்களில் மேலெழுந்த நோக்கின்றிக்கே மிகவும் ஆழ்ந்த நோக்குடையவராய், கடலினுள்ளே புகுந்து மணிமாணிக்கங்களைக் கொண்டு வருவாரைப் போல் சீரிய பொருள்களைக் கொணர்ந்து வர்ஷித்தவரென்பது விளங் கும் ஸ்ரீபாஷ்யத்தின் முகப்பில் "பாராசர்ய வசஸ் ஸுதாம் உபநிஷத் துக்தாப்தி மத்யோத்த்ருதாம்—பௌமா: ப்ரபந்த்வங்வஹம்" என்று ஸ்வாமி தாமே யருளிச் செய் திருக்கையாலே 'ஆழியுள்புக்கு' என்பதற்கு இங்கு விவரிக்கப்பட்ட பொருள் அவர் தம்முடைய திருவுள்ளத்திலு முறைந்ததே யென்று கொள்ளத்தகும்.

ஆர்த்து—கர்ஜித்து என்றபடி. ஸிம்ஹம் கர்ஜிக்குமாபோல கர்ஜித்துக் கொண்டன்றோ ஸ்வாமி தாம் அர்த்தங்களை வர்ஷித்தது. ஏறி—* பஜதி யதிபதௌ பத்ர வேதீம் த்ரிவேதீம் * என்று யதிராஜஸப்ததியில் பணித்தபடியே சீரிய சிங்கா சனத்தின் மீதேறி என்றபடி. அன்றியே, திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே நிதியாகப் பெற்ற அர்த்த விசேஷங்களை அவ்வூரிலே கோவிலில் மேல்தளத்திலே ஏறி வர்ஷித்தாரே, அது தன்னை ஸூசிப்பிக்கின்றது என்னலாம்.

ஊழிமுதல்வனுருவம் போல் மெய் கறுத்து—இதனுல் ஸ்வாமியினுடைய அவதார ரஹஸ்யம் ஸூசிதமாகிறது. ஸ்வாமி தாம் திருவனந்தாழ்வானுடைய திருவவதார மாகையாலே * துக்தோ தந்வத் தவள மதுரம் சுத்த ஸத்வைகரூபம் ரூபம் யஸ்ய ஸ்புடயதிதராம் யம் பணீந்த்ராவதாரம் * என்றபடியே பாலன்ன திருமேனியை யுடையராயிருப்பர். அப்படியிருக்கச் செய்தேயும் * தேவ பிரானுடைக் கரியகோலத் திருவுருவைத் தம்முள்ளே யடக்கியிருக்கையாலே அந்த நீலமேனியின் நிழலீட்டாலே ஸ்வாமி திருமேனியும் * முடிவில்லதோரெழில் நீலமேனியாகவே அடியார்க்கு ஸேவை ஸாதிக்கவேணுமென்று சொல்லுகிறது. பட்டர் ஸ்ரீரங்க விமானத்தை வருணிக்கும் போது ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் (45) * அபி பணிபதி பாவாத் சுப்ரமந்தச் சயாலோர் மரதகஸுகுமாரை ரங்கபர்த்துர் மயூகை:, ஸகல ஜலதிபாந ச்யாம ஜீமூதஜைத்ரம் புலகயதி விமானம் பாவனம் லோசநே ந: * என்றருளிச் செய்தார்; இந்த ச்லோகத்தின் கருத்தாவது—திருவனந்தாழ்வான் ஸ்ரீரங்கவிமானமாக வடி வெடுத்திருப்பதனுல் அத் திருவனந்தாழ்வானுடைய நிறம் வெளுத்ததாகையினலே இவ்விமானமும் வெண்ணிற முடையதேயாயினும் உள்ளே திருக்கண்வளர்ந்தருளா நின்ற காளமேகத் திருவுருவரான பெரிய பெருமாளுடைய திருமேனியின் நிழலீட்

டாலே கருத்துத் தோன்றுகின்றது என்கை. ஆக எம் அண்ணரே! நீர் பால் போன்ற திருமேனியோடு பிறந்திருந்தாலும் * மூந்நீர் ஞாலம் படைத்த எம்முகில் வண்ணனான ஊழிமுதல்வனது திருவுருவை உள்ளே யடக்கிக்கொண்டு தத்ஸாதர்மி யத்தைப் பெற்றிருப்பீர் என்றதாயிற்று.

பாழியந்தோளுடைப் பற்பநாபன் கையிலாழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்ற திர்ந்து—இதனாலும் ஸ்வாமியின் அவதாரரஹஸ்யமேஸூசிதமாகிறது. இராமாநுச நூற்றந்தாதியில் (33)*அடையார்கமலத் தலர்மகள் கேழ்வன் கையாழி யென்னும் படையோடு* என்கிற பாசுரத்தினாலும், யதிராஜஸப்ததியில் "ப்ரதயம் விமதேஷு தீக்ஷ்ணபாவம்" என்கிற ச்லோகத்தில் "வவ்ருதே பஞ்சபி ராயுதைர் முராரேः" என்ற தனாலும் ஸ்வாமி பஞ்சாயுதாழ்வார்களின் திருவவதாரபூதர் என்பதும் பேசப்பட்டிருக் கையாலே அவ்விஷயம் இங்குத் தெரிவிக்கப்பட்டதாகிறது. மேலே காட்டிய நூற்றந் தாதிப் பாசுரத்தில் "கையாழி யென்னும் படையோடு" என்று திருவாழியை முன்பே சொல்லி "புடையார் புரிசங்கமும்" என்று திருச்சங்கை முடிவிலே சொல்லியிருக்கிற படிக்குச்சேர, இங்கும் ப்ரத்யாஹாரந்யாயத்தாலே 'கையிலாழிபோல்........வலம்புரி போல்' என்று அருளிச் செய்யப்பட்டதென்று கொள்க.

இதற்கு மற்றொரு படியாகவும் கருத்துரைக்கலாம்; திருவாழி யாழ்வான் விரோதிகளுள்ள விடமெங்குஞ் சென்று வியாபரித்து "காசீவிப்லோஷ சைத்யக்ஷபண தரணிஜத்வம்ஸ" [ஸுதர்சந சதகம்] என்பது முதலான ச்லோகங்களிலும் * கீழுலகி லசுரர்களைக் கிழங்கிருந்து கிளராமே ஆழிவிடுத்தவருடைய கருவழித்தவழிப்பன்* என்பது முதலான பாசுரங்களிலும் சொல்லுகிறபடியே விரோதி நிரஸநங்களைப் பண்ணி வருவதுபோல் ஸ்வாமிதாமும் பாஷண்ட சார்வாக ஜைந பௌத்த மாயா வாதி ப்ரப்ருதிகளான பாஹ்யர்களும் குத்ருஷ்டிகளுமுள்ள விடங்களிலெங்கும் எழுந் தருளிக் கொடிய தர்க்க சரம் விட்டு வென்று வந்த படியைச் சொல்லுகின்றதாக. *அருளார் திருச்சக்கரத்தாலகல் விசும்பும் நிலனும் இருளார் வினை கெடச் செங் கோல் நடாவுதிர்* (திருவிருத்தம்) என்கிறபடியே திருவாழியாழ்வான் [உபயவிபூதி நிர்வாஹகனாயிருப்பதுபோல], ஸ்வாமிதாமும் உபய விபூதியையும் தம் கையிலே யுடையவர்' என்பதே பொருளாக 'உடையவர் என்று திருநாமம் பெற்றிருக்கும் பரிசும் இங்கு அநுஸந்திக்கத் தக்கது.

வலம்புரிபோல் நின்று அதிர்ந்து:—பாரதப் போர்த் தொடக்கத்தில் *படை போர்புக்கு முழங்கு மப்பாஞ்சசன்னியம்* என்றபடியே சங்கு முழங்க, அவ்வொலி கேட்டவர்கள் யாவரும் "ஸ கோஷோ தார்த்த ராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநி வ்யதாரயத்" என்கிறபடியே குடல்குழறிச் செத்ததுபோல, ஸ்வாமியின் திருமிடற்றோசை கேட்ட வாறே * தற்கச் சமணரும் சாக்கியப்பேய்களும் தாழ்சடையோன் சொற்கற்ற சோம் பரும் சூனியவாதரும் நான்மறையும் நிற்கக் குறும்புசெய் நீசரும் மாண்டன ராதலால் இப்பெருமையைத் தெரிவிக்கின்றதென்க. அன்றியும், *உண்பது சொல்லில் உலகளந் தான் வாயமுதம், கண்படை கொள்ளில் கடல்வண்ணன் கைத்தலத்தே* என்று இவ் வாண்டாள் தாமே அருளிச் செய்தபடியே எம்பெருமானுடைய திருக்கைத் தலத்தை ஒரு நொடிப் பொழுதும் விட்டு அகலாதே யிருந்து அமுதமுண்டு களிக்கும் சங்குபோல "த்வயம் அர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதா ஏவம் வக்தா யாவச்சரீரபாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ" என்று திருவரங்கச் செல்வனாருடைய திருவருள் பெற்று அப்பெருமாள் பரிஸரத்திலேயே இணைபிரியாதிருந்து தூயவமுதைப் பருகிப் பருகி மகிழ்ந்தவர் நம்ஸ்வாமி என்பதுமிங்குத் தெரிவிக்கப்பட்டதாகும்.

தாழாதே சார்ங்கமுதைத்த சரமழைபோல் பெய்திடாய், வாழப் பெய்திடாய்:— என்று இரண்டு வாக்யார்த்தமாகக் கொள்ளவேணும். பெய்யும் மழையினாலே நன்மையும் விளைவதுண்டு. தீமையும் விளைவதுண்டு. சிலர்க்கு நன்மையாகும். சிலர்க் குத் தீமையாகும். ஸ்வாமியின் திவ்ய ஸ்ரீஸூக்திவர்ஷங்களாலே வாழ்ந்து போவாரு

முண்டு, மாய்ந்து போவாரு முண்டு. "நாரணனைக் காட்டிய வேதம் களிப்புற்றது, தென்குருகை வள்ளல் வாட்டமிலா வண்டமிழ்மறை வாழ்ந்தது" என்று அமுதனார் பணித்தபடியே உபய வேதங்களும் அவை வல்லார்களும் வாழ்ந்து போக, "நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன" என்கிறபடியே புலையறமாகி நின்ற புத்தொடு சமணமெல்லாம் பாறியொழிந்தனவன்றோ. சார்ங்க முதைத்த சரமழையானது அஸுர ராக்ஷஸர்களை அடியறுத் தொழித்தது போல, அரக்கரசுரர் போல்வாரான பாஹ்ய குத்ருஷ்டிகளை ஸ்வாமியின் ஸ்ரீஸூக்திவர்ஷம் மாய்த்தொழித்தது. *"தம் த்ருஷ்ட்வா சத்ருஹந்தாரம்" என்றவுடனே "மஹர்ஷீணாம் ஸுகாவஹம்" என்றாற்போலே விரோதிகள் ஒழிந்தால் நல்லார்கள் வாழ ப்ராப்தமாகையாலே இங்கும் அவ்விரண்டும் தெரிவிக்கப்பட்டன. ஸ்ரீ பாஷ்யப்ரவசந முகத்தாலே விரோதிநிரஸநமும், பகவத் விஷய ப்ரவசநமுகத்தாலே ஆச்ரிதஸஜ்ஜந ஸமுஜ்ஜீவனமும் செய்து கொண்டு எழுந்தருளியிருந்தமை தெரிவிக்கப் பட்டதாயிற்று.

[சார்ங்கமுதைத்த சரமழை] சரமழையானது சார்ங்க வில்லில் நின்றும் தோன்றுவது இயல்பு. ப்ரக்ருதத்தில், முன்னேயெடுத்துக் காட்டிய *அடையார் கமலப் பாசுரப்படி ஸ்வாமி தாமே சார்ங்கவில்லாகக் கூறப்பட்டாரென்றுணர்க. அந்த நூற்றந்தாதிப் பாசுரத்தில 'ஒண்சார்ங்க வில்லும்' என்கிற சொல்லால் ஸ்வாமியே சார்ங்கவில்லாகச் சொல்லப்பட்டிருக்கின்றமை அறியத் தக்கது. அன்றியே, *தன் கைச் சார்ங்க மதுவே போல் புருவவட்ட மழகிய* என்று (நாச்சியார் திருமொழியில்) ஆண்டாள் தாமே அருளிச் செய்திருக்கையாலே சார்ங்க மென்றது புருவ மென்றபடி. புருவமுதைத்த சரமழையாவது—ஸ்வாமி தாம் ஆழ்வானுண்டான் போல்வாரை நோக்கிப் புருவம் நெறித்து விட்டால் உடனே அவர்கள் சரமழை போன்ற வாதங்களைச் செய்து நிற்பர்களே, அதைச் சொன்னபடியாகவுமாம்.

உலகினில் வாழப் பெய்திடாய் :—"உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே" என்பது தமிழர் வழக்காதலால் உயர்ந்த அதிகாரிகளை வாழச் செய்தருள வேணுமென்றபடி. [தாழாதே பெய்திடாய்] ஏககாலத்திலே ஆயிரக்கணக்கான துர்வாதிகள் மிடைதந்தாலும் பின்வாங்குகிறவரல்லரே ஸ்வாமி தாம். *கொண்டலனையவண்மையேரார் குணத் தெம்மிராமானுசன் அவ்வெழில் மறையில் சேராதவரைச் சிதைப்பது, அப்போதொரு சிந்தை செய்தே* என்கிற நூற்றந்தாதிப் பாசுரமும் இங்கே அநுஸந்திக்கத்தகும்.

[நாங்களும் மகிழ்ந்து மார்கழி நீராட] திருப்பாவையில் மார்கழி நீராட்டமென வருவதற்கு உள்ளுறை பொருள் முதற்பாட்டிலேயே விவரிக்கப் பட்டது. மார்க்கசீர்ஷாவகாஹநமே மார்கழி நீராட்டமாகும். மார்க்கங்களில்—உபாயங்களில், சீர்ஷம்—தலையாயிருக்குமது மார்க்க சீர்ஷம். அதில் அவகாஹிப்பதுதான் மார்கழி நீராட்டம். ஆசார்யாபிமான மென்கிற சிறந்த வுபாயத்தை நாங்கள் கடைப்பிடித்து மகிழ்ந்து வாழும்படியாக எம் அண்ணரே! அருள் செய்யவேணும் என்றதாயிற்று. 4

5. மாயனை மன்னு வடமதுரை மைந்தனை *
தூயபெருநீர் யமுனைத்துறைவனை *
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை *
தாயைக் குடல் விளக்கஞ் செய்த தாமோதரனை *
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது *
வாயினாற்பாடி மனத்தினால் சிந்திக்க *
போயபிழையும் புகுதருவானின்றனவும் *
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்.

கீழ்ப்பாட்டில் ஆசார்யனாகிற காளமேகத்தை விளித்து உஜ்ஜீவந ஹேது வான நற்பொருள்களை வர்ஷிக்குமாறு பிரார்த்திக்கப்பட்டது. இது மிகப் பெரிய காரியம். பரமபாக்யசாலிகளுக்கே அருந்தவப்பயனாகக் கிடைக்கக்கூடியது இது. இதனில் மிக்க ச்ரேயஸ்ஸு வேறு கிடையாது. உலகில் ஸாமாந்யமாக ஒரு வசன முண்டு—ச்ரேயாம்ஸி பஹு விக்நாநி பவந்தி மஹதாமபி, அச்ரேயஸி ப்ரபந்நே து க்வாபி யாந்தி விநாயகா:* என்று. மஹான்களுங்கூட நல்ல காரியங்களிலே கைவைத்தால் இடையூறுகள் பல நேர்ந்தே தீருமென்றும், கெட்ட காரியங்களோ வென்னில் ஒருவகை யிடையூறு மின்றிக்கே இனிது நிறைவேறி விடுமென்றும் இதனால் தெரிவிக்கப்படுகிறது. இதைத் தெரிந்துகொண்ட சிலர் 'நாமோ விசேஷ மாக மநோரதம் கொண்டிருக்கிறோம்; ஆனாலும் நம்முடைய பிரபல பாபங்களினால் நமது மநோரதம் இடையூறெய்தி பங்கப்படாமலிருக்கவேணுமே' என்று ப்ரஸ்தாவம் செய்ய, அந்த மஹா கோஷ்டியில் தலைவராயிருந்தவர் விடை கூறுகின்றார்.—நாம் அதிகரித்த காரியத்தில் த்ரிகரண சுத்தியுடன் ப்ரவர்த்திக்குமளவில் இடையூறுகட்கு அடியான ஸகல பாபங்களும் தொலைந்தொழியுமென்று.

உலகில் சுபகாரியங்கள் செய்யத் தொடங்கும்போது நிர்விக்ந பரிஸமாப் திக்காக ஸங்கல்பித்துக்கொண்டு விஷ்வக்ஸேநாராதனம் செய்வது வழக்கம். அந்த விஷ்வக்ஸேநாராதனம் இடையூறின்றி நிறைவேறுதற்காக வேறொரு அனுட்டானம் செய்வதுண்டோ வென்று பார்த்தால் செய்வது கிடையாது. அதுபோலவே இங்குக் கொள்க. "தாமோதரனை நாம் தூயோமாய்த் தூமலர்தூவி வாயினாற் பாடி மனத்தி னால் சிந்தித்த மாத்திரத்திலே பூதபவிஷ்யத் பாபங்களெல்லாம் தீயிலிட்ட தூசாகும்" எனப்படுகிறது. "தாமோதரன்" என்பது எப்படி கண்ணபிரானுக்கு வாசகமான திருநாமமோ, அப்படியே ஆசார்யனுக்கும் வாசகமானது. தாமாவை உதரத்திலே யுடையவன்—தாமோதரன்; *கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்பண்ணிய பெருமாயனாகையாலே யசோதைப்பிராட்டி கட்டின தாம்பைத் திருவயிற்றிலே யுடையவன் கண்ணபிரான். இனி ஆசார்யனும் வயிற்றிலே கயிற்றை யுடையவ னென்பதை நிரூபிப்போம்; திருமழிசைப் பிரான் திருச்சந்த விருத்தத்தில் "எட்டினோ டிரண்டெனுங் கயிற்றினால் மனந்தனைக் கட்டி" என்றருளிச்செய்தார். எட்டையு மிரண்டையுங் கூட்டினால் பத்தாகிறது. பத்து-பக்தி. அதற்கு ஆசாபாச மென்றும் ஒரு பெயருண்டு. பகவத் விஷயகமான ஆசாபாசமே பத்து எனப்படுகிறது. அது நம்போல்வார்க்கு வயிற்றினுள் அழுந்தியிராமல் மேலெழ [க்ருத்ரிமமாக] இருக்கும்; ஆசாரியர்கட்கு உதரத்தளவிலே ஊறியிருக்கும். ஆகவே ஆசாரியனைத் தாமோதர னென்னப் பொருந்தும். இனி, 'மாயனை' என்பது முதலான ஐந்து விசேஷணங் களும் ஆசார்யனிடத்தே மிகவும் இனிமையாகப் பொருந்துமென்பது அடைவே நிரூபிக்கப்படுகிறது.

[மாயனை] மாயமாவது ஆச்சரியம்; ஆச்சரியம் செய்பவனுக்கு மாயனென்று பெயர். க்ருத்ரிமம் செய்பவனுக்கும் மாயனென்று பெயருண்டு; கருத்ரிமம் செய் வதை பித்தலாடகம் செய்வதாக உலகம் வழங்குகின்றது. பித்தலம் ஆடகம் என்கிற இரண்டு சொற்கள் சேர்ந்து பித்தலாடகமாகிறது. பித்தலமாவது பித்தளை. ஆடகமாவது ஹாடகம்; பொன். பித்தளையைப் பொன்னாகக் காட்டுவது பித்த லாடகம். ஸ்வர்ணத்திற்காட்டிலும் எத்தனையோ மடங்கு நிஹீநமான பித்தளையைப் பொன்னாகக் காட்டுவது வெறும் க்ருத்ரிமமேயாகும். பித்தளையின் ஸ்தானத்திலே நிற்கிற அஜ்ஞாநி ஸம்ஸாரி சேதநர்களை ஆசாரியன் உபதேசாநுஷ்டானங்களாலே திருத்திப் பரிஷ்காரப்படுத்தி மெய்யே பொன்னாக ஆக்கிவிடுவது க்ருத்ரிமமன்று, ஆச்சரியம். 'இரும்பைப் பொன்னாக்குபவர்கள் ஆசாரியர்கள்' என்பது க்ரந்தங் களில் ப்ரஸித்தமான வார்த்தை. *பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கு மழுக்குடம்புமாய் நிற்கிற நம்மை மிகுஞானத்தவர்களாக்கி ஸதாசார ஸம்பந்நராக்கி

பரஞ்சுடருடம்பும் பெற்றேமாக்கி நிற்பது மிகுந்த ஆச்சரியமன்றோ. *இவை யெம்மிராமானுசன் செய்யு மற்புதமே * என்று நூற்றந்தாதியில் அமுதனார் கூறிய அற்புதங்களையும் இங்கே சேர்த்துக்கொள்வது. [மாயனை] *சூட்டு நன் மாலைகள் தூயன வேந்தி விண்ணோர்கள் நன்னீராட்டி அந்தூபந்தராநிற்கவேயங்கு, ஓர் மாயையினு லீட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப் போந்து.........(திருவிருத்தம் 21) என்கிற பாசுரத்தில் ஆழ்வார் எம்பெருமானிடத்திலே அநுஸந்தித்த மாயச் செய்கையும் ஆசாரியர் பக்கலிலேயுண்டு. இருவரும் திருநாட்டில் நின்றும் இங்கு வந்து சில நாட்களே யிருந்து செய்கிற மாயச்செயல்களிறே இவை.

[மன்னு வடமதுரை மைந்தனை.] * ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந:, நாகபர்யங்க முத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம்புரீம்* என்கிறபடியே எம்பெருமானைத் திருப்பாற்கடலை விட்டுத் தன்னிடத்தே வந்து சேரும்படியாகப் பண்ணிற்று வடமதுரை. அப்படியே இந்த லீலா விபூதியானது ஆசாரியர்களை நித்ய விபூதியை விட்டு வரப்பண்ணுமிடமாயிற்று. 'மைந்தன்' என்பதற்குப் பல பொருள்களுள. விருப்பமுடையவனென்னும் பொருள் இங்குக் கொள்ளத்தகும். ஸம்ஸாரிகளை வாழ்விப்பதற்குப் பாங்கான விடம் இதுவன்றோ வென்று இந்நிலத்திலே உகந்து வர்த்திப்பவர் ஆசாரியர். அன்றியும், பரமபதநாதனிடத்திலே அநுபவிக்கக் கிடைக்காத திருக்குணங்கள் பலவும் இங்கே திவ்யதேசங்களில் இனிமையாக அநுபவிக்கக் கிடைப்பதனாலே இங்கே யிருந்து அநுபவிப்பதிலேயே ரஸிகர்—என்றபொருளும் கொள்ளத்தகும்.

[தூயபெருநீர் யமுனைத்துறைவனை] எம்பெருமான் எந்த இடத்திலிருந்தாலும் ஒரு நதியைப் பற்றி வர்த்திப்பன். அங்கே விரஜை; இங்கே வந்தாலோ ஸரயூ, யமுனை, கங்கை முதலான நதிகள் பரமரஸ்யங்களாய் அமைகின்றன. ஆசாரியர்களும் பெரும்பாலும் நதிக்கரைகளிலேயே திருவவதாரம் செய்தருளுகின்றனர். இவ்விஷயம் ஸ்ரீ பாகவதத்தில் பதினோராவது ஸ்கந்தத்தில் ஐந்தாமத்யாயத்தில் 38, 39, 40 ச்லோகங்களில் நன்கு கூறப்பட்டுள்ளது. "க்ருதாதிஷு நரா ராஜந் கலாவிச்சந்தி ஸம்பவம். கலௌ கலு பவிஷ்யந்தி நாராயண பராயணா:, க்வசித் க்வசிந்மஹாபாக! த்ரமிடேஷு ச பூரிச:, தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ. காவேரீ ச மஹா பாகா ப்ரதீசீ ச மஹாநதீ." இத்யாதி ச்லோகங்கள் காண்க. இந்த ச்லோகங்களில் குறிக்கப்பட்ட தாம்ரபர்ணி, க்ருதமாலா, பாலாறு, காவேரி என்னு மிந்த நதிகளின் கரைகளிலேயன்றோ நம் ஆசார்ய ஸார்வபௌமர்கள் பெரும்பாலு மவதரித்தது. ஆக, இங்கு யமுனையைச் சொன்னது அநேக நதிகளுக்கு உபலக்ஷணமாகி ஆசாரியர்களின் திருவவதாரஸ்தல விசேஷங்களைத் தெரிவித்தபடியாயிற்று.

[ஆயர்குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை] 'அணிவிளக்கு' என்கிறவிது ஸூர்யனைச் சொல்லிற்றாகும். *ததோகில ஜகத் பத்ம போதாய அச்யுத பாநுநா. தேவகீபூர்வஸந்த்யாயாம் ஆவிர்ப்பூதம் மஹாத்மநா* (ஸ்ரீ விஷ்ணுபுராணம்) என்று பராசரமஹர்ஷி பணித்த (அச்யுதபாநு) கண்ணனென்னும் ஸூர்யன் ஆயர்குலத்திலே [இடைச்சேரியிலே] தோன்றிப் பெருமை பெற்றனன். * தஸ்மை நமோ வகுள பூஷணபாஸ்கராய* *கலயாமி கலித்வம்ஸம் கவிம் லோகதிவாகரம்* ஸ்ரீமாநாவிரபூத் பூமௌ ராமாநுஜ திவாகர:* என்று ஸூர்யர்களாகவே சொல்லப்படுகிற நம் ஆசாரியர்களும் ஆயர் குலத்தில் தோன்றியே வீறு பெற்றார்கள்; ஆசாரியர்கள் ப்ராஹ்மணாதி உத்தம குலங்களிலே திருவவதரித்தார்களே யல்லது ஆயர்குலத்தினில் தோன்ற வில்லையே யென்று சிலர் நினைக்கக்கூடும். பசுக்கள் வர்த்திக்கிற குலந்தானே ஆயர்குல மென்பது, "ந்ருபசு:" என்று ஆளவந்தாரும், "வ்ருத்த்யா பசுர் நரவபு:" என்று மணவாளமாமுனிகளும் அருளிச்செய்தபடியே ஜ்ஞாந ஹீநர்களாய் ஆசார சூந்யர்களாய் அத ஏவ பசுப்ராயர்களான நாம் பிறந்த குலங்களிலேயே

அவர்களும் அவதரித்தருளினமைபற்றி ஆயர் குலத்தினில் தோன்றினதாகச் சொல்லக் குறையில்லை காணீர். கண்ணன் ஆயர் குலத்தினில் அணிவிளக்காகத் தோன்றிச் செய்த காரியம் என்னவென்னில்; அக்குலத்திற்குப் பண்டில்லாத ஏற்றத்தை யுண்டு பண்ணினதே யன்றோ. அதுபோல நம் ஆசாரியர்களும் அறிவிலிகள் மலிந்த இந்த ஸம்ஸாரத்திலே திருவவதரித்து இதுதன்னைப் பரமபதத்திற் காட்டிலும் மேம்பட்டதாகச் செய்திருப்பது காணா நின்றோம். ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் போன்ற மஹாசார்யர்கள் திருவவதரித்ததனாலன்றோ இவ்விருள் தருமா ஞாலமும் வீறுபெற்று விளங்காநின்றது.

[தாயைக் குடல்விளக்கஞ் செய்த தாமோதரனை] தாயாவது காயத்ரி; "காயத்ரீச் சந்தஸாம்மாதா" என்று வேதத்தில் காயத்ரியைச் சந்தஸ்ஸுக்களுக்கு மாதாவாகச் சொல்லியிருக்கையாலே இங்குத் தாய் என்றது காயத்ரியை; அதைக் குடல் விளக்கஞ் செய்கையாவது குடலென்பது நடுவான பாகம். காயத்ரியில் நடுப்பாகமாவது "பர்க்கோ தேவஸ்ய தீமஹி" என்பது. இதுதானே அதில் உயிரான பாகம். இதை விளக்கம் செய்வதாவது ப்ரஹ்மவர்ச்சஸ்ஸு அதிகரிக்கச் செய்கை. இனி, திருமங்கையாழ்வார் *குலந்தரும் செல்வம் தந்திடு மென்ற பாசுரத்திலே "பெற்றதாயினுமாயினசெய்யும்" என்றருளிச் செய்திருக்கையாலே திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரத்தையும் தாயாகக் கொள்ளலாம். கண்ணபிரானுக்கு தேவகிப்பிராட்டி ஒரு தாய்; யசோதைப்பிராட்டி மற்றொரு தாய்; தேவகியைக் காட்டிலும் யசோதையே சிறந்த தாயெனக் கொண்டாடப் படுகிறாள், அதுபோல ஸ்ரீவைஷ்ணவஸந்தானத்திலும் காயத்ரியைக் காட்டிலும் திருவஷ்டாக்ஷரியே மிகச் சிறந்ததாகக் குலாவப்படுகிறது. ஆசார்ய ஹ்ருதயத்தில் "சந்தஸாம்மாதாவாலும் அதுக்குத் தாயாய்த் தாயினுமாயின செய்யுமத்தாலும் பிறப்பிக்குமது இருவர்க்கும் ச்ரேஷ்ட ஜன்மம்" என்ற சூர்ணிகை இங்கே அநுஸந்தேயம். திருவஷ்டாக்ஷரமஹா மந்திரத்திற்கு [குடல்] நடுப்பாகமாவது நமஸ்ஸு. அதை விளக்கம் செய்பவர் ஆசார்யர். ஸ்வரூப விரோதி உபாய விரோதி ப்ராப்யவிரோதி என்ற மூவகை விரோதிகளையும் கழிப்பதன்றோ நமஸ்ஸு. ஸ்வரூபாம்சத்திலும் உபாயாம்சத்திலும் உபேயாம்சத்திலும் தாங்கள் உஜ்ஜ்வலர்களாயிருந்து தமர்களையும் உஜ்ஜ்வலர்களாக்குமவர்-தாயைக் குடல்விளக்கம் செய்பவர் என்றதாயிற்று.

தாமோதரனென்பதற்கு முன்னமே பொருள் பணிக்கப்பட்டது. இப்போது மற்றொரு பொருளும் கேண்மின். கண்ணன் தாம்பினால் கட்டுண்டது தன்னுடைய இச்சையினாலத்தனை யொழிய கருமம் காரணமாகவன்று. அவ்வளவேயுமல்லாமல் அந்த தாமபந்தம் அவனுக்கு தேஜஸ்கரமாயும் நின்றது. அதுபோலவே ஆசாரியர்களும் இந்நிலவுலகில் பத்தஸம்ஸாரிகளிலே ஒரு கோவையாய் பந்தத்திற்கு உட்பட்டிருந்தது கருமத்தினாலன்றிக்கே பகவதிச்சையினாலாயது, அதுதானே அவர்களுக்கு தேஜஸ்கரமாயும் நின்றது. ஆக இத்தன்மைபற்றியும் ஆசார்யனைத் தாமோதரனென்னத் தட்டில்லை. ஆக அற்புதச்செயல்களைச் செய்பவரும், க்ஷீராப்தி முதலான விடங்களைவிட்டு எம்பெருமான் தம்மிடத்திலே வந்து தங்கியிருக்கப் பெற்றவரும், தாம்ரபர்ணி காவேரி முதலான நதிகளை நிரூபகமாக வுடையவரும் பசுப்ராயர்களான நம்மை யெல்லாம் உத்தரிக்க வந்து தோன்றினவரும், காயத்ரீயையும் திருமந்திரத்தையும் விளங்கச்செய்தவரும், கர்ம பந்தஸம்பந்தமற்றுப் பரம பக்தியே வடிவெடுத்தவருமான ஆசார்யரை.

[நாம் தூயோமாய் வந்து] ஆசார்ய விஷயத்தில் நமக்குத் தூய்மையாவது-ஸம்ஸாரிகளிலே அவர்களும் ஒருவராயிருக்கச்செய்தேயும் நித்யமுக்தர்களிலே ஒருவர் என்று நினைப்பதும், ஸர்வேச்வரனிற் காட்டிலும் சிறந்தவர் என்று கொள்வதுமேயாம். அவரது திருவாக்கில் நின்று வெளிவரும் ஸாமான்ய வசனங்களையுங் கூட

வேதங்களோடொக்கக் கொள்ளுதலும் தூய்மையுமாம். [தூமலர் தூவித்தொழுது] 'தூமலர்கள் தூய்த் தொழுது' என்கிறபாடமுமுண்டு. அஷ்டவிதபுஷ்பங்கள் சாஸ்த்ரங்களிலே சொல்லப்படுகின்றன. "அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்பமிந்த்ரியநிக்ரஹ:, ஸர்வபூததயா புஷ்பம் க்ஷமாபுஷ்பம் விசேஷத:. ஜ்ஞாநம் புஷ்பம்தப: புஷ்பம் த்யாநம் புஷ்பம் ததைவ ச, ஸத்யமஷ்டவிதம் புஷ்பம் விஷ்ணோ: ப்ரீதிகரம்பவேத" என்கிறபடியே அஹிம்ஸை இந்த்ரிய நிக்ரஹம் ஸர்வ பூததயை க்ஷமை ஜ்ஞானம் தபஸ்ஸு ஸத்யம் த்யானம் ஆகிறவிவை தூமலர்களாம். இவற்றைத் தூவித்தொழுகையாவது இவையெல்லாம் ஆசார்ய கடாக்ஷ மடியாக விளையவேணுமென்றநுஸந்தித்து உபஸத்திபண்ணுகையாம்.

[வாயினால்பாடி மனத்தினால் சிந்திக்க] பாடிச் சிந்திக்க என்றாலே போதுமானது. வாயினாலென்றதும் மனத்தினாலென்றதும் மிகையென்று தோன்றும். மிகையன்று. ஆசார்ய குணங்களைப்பாடுகை தான் வாய்படைத்ததற்குப் பலன் என்று நினைத்துக் கொண்டே பாடவேணுமென்றும், ஆசார்ய வைபவத்தைச் சிந்திக்கைதான் மனம் படைத்ததற்குப் பலன் என்று நினைத்துக்கொண்டே சிந்திக்கவேணுமென்றும் காட்டினபடி. இப்படி பாடுதலும் சிந்தித்தலும் செய்தால்.

[போய பிழையும் புகுதருவானின்றனவும் தீயினில் தூசாகும்] ஆசார்ய ஸமாச்ரயணம் பெறுவதற்கு முன்னே நிகழ்ந்த பாபங்கள் போய பிழையாம். ஆசார்யனையடிபணிந்த பின்பு புத்தி பூர்வமாகப் பாபங்கள் விளைவதற்கு ப்ரஸக்தி யில்லை. ப்ரக்ருதி ஸ்வபாவத்தாலும் ஸஹவாஸ தோஷாதிகளாலும் ப்ராமாதிகமாகச் சில பிழைகள் நேரும். அவை புகுதருவானின்ற பிழைகளாம். ஆக இருவகுப்பான அபசாரங்களும் தீயிலிட்ட தூசு போல் உருமாய்ந்தொழியு மென்கை.

"வேதமனைத்துக்கும் வித்தாகும் கோதை தமிழ் ஐயைந்துமைந்தும்" என்றபடி திருப்பாவை வேதமனைத்துக்கும் வித்தாகையாலே "தததிகம உத்தரபூர்வாகயோரச்லேஷவிநாசௌ தத்வ்யபதேசாத்" என்ற ப்ரமஹ்ஸூத்ரத்தில் விளக்கப்பட்ட வேதாந்த விழுப்பொருள் இப்பாசுரத்திலே நன்கு விளங்குமாறு காண்க. இதுநமது திவ்யார்த்த தீபிகை யுரையில்(முந்தினதில்)விசதமாக விவரிக்கப்பட்டுள்ளது.

6. புள்ளுஞ் சிலம்பினகாண் புள்ளரையன்கோயில்*
வெள்ளைவிளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ*
பிள்ளாயெழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு*
கள்ளச்சகடம் கலக்கழியக்காலோச்சி*
வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை*
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்*
மெள்ளவெழுந்தரியென்ற பேரரவம்*
உள்ளம்புகுந்து குளிர்ந்தேலோரெம்பாவாய்.

*நீலா துங்கஸ்தநகிரி தடீஸுப்தமுத்போத்ய க்ருஷ்ணம்* என்ற தனியனுக்குச் சேர *நப்பின்னை கொங்கைமேல் வைத்துக்கிடந்த மலர் மார்பனான கண்ண பிரானைப் பள்ளியுணர்த்துவதையே பிரதானமாகக் கொண்ட இத்திருப்பாவையில் இப்பாசுரந் தொடங்கிப் பதினைந்தாம் பாசுரமளவும் பத்துப் பாசுரங்கள் பாகவதர்களைப் பள்ளியுணர்த்துவன. "ஏக: ஸ்வாது ந புஞ்ஜீத புஞ்ஜீத தசபிஸ் ஸஹ" என்று சாஸ்த்ரம் பரம போக்யமான வஸ்துவை ஒருவனாக அநுபவிக்கலாகாதென்றும் பத்துப்பேரோடு கூடியே அநுபவிக்கவேணு மென்றும் சொல்லியிருக்கையாலே பெருங்கூட்டமாகக் கூடி யநுபவிக்கப் பாரிக்கின்றனர். பரத்வமென்னும் ஒரு திருக்குணம் மாத்திரமே விளங்குமிடமான பரமபதநாதனை யநுபவிக்கப் பலகோடி

நீராடியிரவர் திரளும்போது ஸகலதிருக்குணங்களும் ஒருங்கே விளங்கு மிவ்விடத்தே அநுபோக்தாக்கள் அதனிலும் விஞ்சியிருக்க வேண்டாவோ என்கிற ஆவலு முள்ளது. பெரு வெள்ளத்திலே இழியுமவர்கள் பெருந்திரளாக இழியுமா போலே "ஆழியா னென்னுமாழ மோழையில்" என்ற பெரியாழ்வாரருளிச் செயலின்படி அகாத ப்ரவாஹமான இவ்விஷயத்தில் பெருந்திரள் மிக அவசியமென்றும் கருதி னார்கள்; *காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்* என்னும்படியான விஷயத்தில் பலர் கூடியிருப்பது தைர்ய ஹேதுவாகு மன்றோ. நம்மாழ்வார் திருவாய்மொழியில் "அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்று கொலோ" என்று பாகவத கோஷ்டியில் சேரப் பெறுகையையே புருஷார்த்தமாகக்கூறி, முடிவிலும் "வந்தவ ரெதிர் கொள்ள மாமணி மண்டபத்து, அந்தமில் பேரின்பத்து அடியரோடிருந்தமை" என்று அப்பேறுதன்னையே பெற்றதாகக் கூறியிருக்கையாலே பகவதநுபவத்திற் காட்டிலும் பாகவத கோஷ்டியில் அந்வயமே பரமபுருஷார்த்தமாகத் தேறுதலால் இங்ஙனே யொரு பத்துப்பாட்டுக்கள் அமைந்தது மிகப் பொருத்தம். இங்கு மிக முக்கியமாகக் கருதத்தக்க தொன்றுண்டு; அதாவது—விபீஷணாழ்வான் பெருமாளிடத்தே ஆச்ர யிக்க வரும்போது கட்டும்காவலுமொன்று மின்றிக்கேயிருக்க நேராகப் பெருமாள் திரு வடிகளிலே வந்து பணியலாமாயிருக்கவும் அது செய்யாதே "வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து" என்கிற சாஸ்த்ரார்த்தத்தை நிறைவேற்ற வேண்டி வானர முதலிகளை முன்னிட்டாப்போலே இவர்களும் பாகவ தோத்தமர்களை முன்னிட்டுக் கொண்டு சாஸ்த்ரார்த்த பரிபாலனம் பண்ணுகிறார்க ளென்பதே.

பகவதநுபவத்தில் அவா எல்லார்க்கும் ஒத்திருக்கும்போது, சிலர் உள்ளே கிடந்துறங்குவதாகவும், சிலர் வெளியே உலாவி உணர்த்துவதாகவும் பாசுரமிட்டால் இது பொருந்துமோ? உள்ளே கிடந்துறங்குவார்க்கு அவா குறைவுபட்டதென்றும், வெளியே நின்று உணர்த்துவார்க்கு அவா அதிகமென்றும் தேறுமே; இவ்விதமான ஏற்றத்தாழ்வு பாகவதர்களுக்குள் இருக்கத் தகாதே! என்னில்; கேண்மின்; கண்ண பிரானுடைய திருக்குணங்களும் திவ்ய சேஷ்டிதங்களும் ராமசரங்கள் போலே சிலரை மயங்கப்பண்ணும், சிலரைத் துடிக்கப்பண்ணும். உள்ளே கிடப்ப வர்கள் மயங்கினவர்களின் கோஷ்டியில் சேர்ந்தவர்கள். வெளியே எழுப்புமவர்கள் துடிப்பவர்களின் கோஷ்டியில் சேர்ந்தவர்கள். ஆகவே அனைவரும் பகவத்குண நுபவத்திலீடுபட்டவர்களே யென்பதில் தட்டில்லை.

இப்பாட்டில் பிள்ளாய்! என்று விளியுள்ளது. சிறுபிள்ளையே! என்று பொருள். *கள்ளவிழ் சோலைக் கணபுரம் கைதொழும் பிள்ளையைப் பிள்ளையென் றெண்ணப் பெறுவரே* (பெரிய திருமொழி 8-2-9). என்று சொல்லியிருக்க பிள்ளாய்! என்று அழைக்கலாமோ வென்று சங்கை தோன்றும்; *பாண்டித்யம் நிர்வித்ய பால்யேந திஷ் டாஸேத்* என்கிற ச்ருதியை யடியொற்றிச் சொல்லுகிறபடி. சிறு பிள்ளைகளுக்குப் பொய் தெரியாது, கள்ளம் கவடு தெரியாது; ஆனதுபற்றியே நீதிமன்றங்களிலும் சிறுபிள்ளைகளின் ஸாக்ஷியத்தை மெச்சுகின்றார்கள். அப்படிப்பட்ட குணாதிசயத்தை யிட்டுப் பிள்ளாய்! என்கிறது. பிள்ளையென்று ஸ்தநந்தய ப்ரஜையைச் சொல்லுகிற படியன்று. [பாலாநாம் ஸுகபோதாய க்ரியதே தர்க்க ஸங்க்ரஹ:] என்ற விடத்து பாலரென்றது "க்ரஹணதாரண போஷண படுர் பால:" என்கிறபடியே விஷயங்களை க்ரஹிப்பதிலும் தரிப்பதிலும் மேன் மேலும் வளர்ப்பதிலும் ஸாமர்த்தியமுடைய வர்களை யாதலால் அப்படிப்பட்ட அதிகாரியையே இங்கு பிள்ளாய்! என்கிறது. நம் ஆசார்ய சிகாமணிகள் நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை திருவாய்மொழிப் பிள்ளை....என்றிப்படி பிள்ளைகளாகவன்றோ விளங்கு கின்றார்கள்.

இப்பாட்டில் பொழுது விடிவுக்கு மூன்றடையாளங்கள் கூறப்படுகின்றன; 1. புள்ளினங்களின் சிலம்புதல். 2. வெள்ளை விளிசங்கின் பேரரவம். 3. ஹரிர்ஹரி: என்ற திருமிடற்றோசை ஆக இம்மூன்று. இவற்றுள் புள்ளினங்களின் சிலம்புதல் மிகவும் ஸாமான்யமானது. இதையா மூந்துற முன்னம் சொல்லுவது? என்று சிலர் நினைக்கக்கூடும். "சேர்ப்பாரைப் பக்ஷிகளாக்கி ஜ்ஞான கர்மங்களைச் சிறகென்று குரு ஸப்ரஹ்மசாரி புத்ர சிஷ்யஸ்தானே பேசும்" என்பது ஆசார்ய ஹ்ருதயம். நம்மாழ்வார் முதற்பிரபந்தத்தில் தூதுபோகவிட வண்டுகளை யழைக்கும்போது "எம்மீசர் விண்ணோர் பிரானார் மாசின் மலரடிக் கீழெம்மைச் சேர்விக்கும் வண்டுகளே" என்கிறார். இதனால் கடகக்ருத்யம் செய்து எம்பெருமான் திருவடிகளிலே கொண்டு கூட்டும் புருஷகார பூதர்களான மஹான்களே பக்ஷிகளாக மறைத்துச் சொல்லப் படுகிறார்களென்பது விசதம். அதற்கடுத்தபாட்டிலும் "வண்டுகளோ வம்மின், நீர்ப்பூ நிலப்பூ மரத்திலொண் பூ உண்டு களித்துழல்வீர்க்கு" என்கிறார். நீர்ப்பூவாகிய தாமரை செங்கழுநீர் முதலானவற்றிலும், நிலப்பூவாகிய மல்லிகை மாதவி முதலானவற்றிலும், மரப்பூவாகிய பாதிரி புன்னை முதலானவற்றிலும் வண்டுகள் உழல்வதைச் சொல்லுவது மாத்திரம் இங்கு உத்தேச்யமன்று; நீர்ப்பூவாகிய க்ஷீராப்தி நாதனையும் நிலப்பூவாகிய ஸ்ரீராம க்ருஷ்ணாதி விபவ மூர்த்திகளையும், அர்ச்சாமூர்த்திகளையும், மரப்பூவாகிய * சேணுயர்வானத்திருக்கும் தேவபிரானையும், ச்ருதி ஸ்ம்ருதீதிஹாஸ புராண திவ்ய ப்ரபந்தாதிகள் மூலமாக அநுபவித்துக் களிக்குமவர்களையே முக்கியமாகச் சொல்லுகிறது. ஆக இப்படிப்பட்ட மஹான்களே **புள்ளும்** என்றதனால் விவக்ஷிதர்கள்.

அன்றியும், சாரீரக மீமாம்ஸையில் "சுகஸ்ய ததநாதர ச்ரவணாத் ததாத்ரவணாத் ஸூச்யதே ஹி" [1-3-33.) என்கிற ஸூத்ரத்தின் ஸ்ரீபாஷ்யத்தில் உபநிஷத் ப்ரஸித்தமான ஜாநச்ருதியின் இதிஹாஸமொன்று விவரிக்கப்படுகிறது. ஜாநச்ருதியென்கிற மஹாப்ரபு சிறந்த தார்மிகாக்ரேஸரரா யிருந்தும் ப்ரஹ்மஜ்ஞாந ஸம்பத்து இல்லாதவராயிருந்தார்; அவர்க்கு பரஹ்மஜிஜ்ஞாஸையை யுண்டுபண்ணுவதற்காக இரண்டு மஹாத்மாக்கள் ஹம்ஸபக்ஷிகளாக வடிவெடுத்து இரவில் இவரருகே பறந்து சென்று பரஸ்பரம் பேசிக் கொள்ளுகையில் இவரிடத்தில் ப்ரஹ்மஜ்ஞான மில்லாமையாகிற இழிவையும், ரைக்வரென்பவரிடத்தில் அச்செல்வம் மிக்கிருக்கையாகிற உயர்வையும் தெரிவித்துக்கொண்டே சென்றதாகவும், அதுகேட்டு ஜாநச்ருதிக்கு ப்ரஹ்மஜ்ஞானத்தில் ருசி விளைந்து ரைக்வரை நாடிச் சென்று விசேஷமாக குரு தக்ஷிணைகளை ஸமர்ப்பித்து அவரிடத்தில் ப்ரஹ்மஜ்ஞானம் பெறலாயிற்றென்பது ஔபநிஷதமான இதிஹாஸம். இதனால், ப்ரஹ்மஜ்ஞான ஸம்பாதனத்திற்கு ஹம்ஸரூப பக்ஷிவிசேஷங்களின் சிலம்புதலே காரணமாயிற்றென்பது பெறலாகும். அஃது இந்த நினைப்பூட்டப்படுகிறது.

**[புள்ளரையன் கோயில் வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?]** புள்ளரையனென்று பக்ஷிராஜனைச் சொல்லி, அவனுடைய கோயிலென்று வேதத்தைச் சொல்லுகிறது. * வேதாத்மா விஹகேச்வர:* என்றார் ஆளவந்தாரும். "ஸுபர்ணோஸி கருத்மாந் த்ரிவ்ருத்தே சிர:" இத்யாதியான வேத வாக்யமும் இங்கே அநுஸந்தேயம். ஆக, புள்ளரையன் கோயிலாகிய வேதத்தில் வெள்ளை விளிசங்காவது ப்ரணவம். சங்கு ப்ரணவாகாரமாயிருப்பதால் (அல்லது) ப்ரணவம் சங்குபோன்றிருப்பதால் சங்கென்று ப்ரணவத்தைச் சொல்லத் தகுதி யுண்டு. வெள்ளை என்றது "என்னை வெள்ளுயிராக்கவல்ல" என்னுமாபோலே, தன்னிடத்துள்ள பொருளையுணர்த்தும் முகத்தால் ஸம்ஸாரிகளை சுத்தஸ்வபாவராக்க வல்லது என்கிறபடி. விளி என்றது எல்லார்க்கும் ப்ரபோதத்தை யுண்டாக்கவல்லதென்றபடி. இப்படிப்பட்ட ப்ரணவத்தின் அரவம் ஒன்று, பேரரவம் மற்றொன்று. ரவ: என்கிற வடசொல் அரவமென்று கிடக்கிறது. த்வநி யென்றபடி. ப்ரணவத்தில் அகார உகார

மகாரங்களிருக்கின்றன. அகாரம் எம்பெருமானைச் சொல்லிற்று; மகாரம் ஜீவாத்மாவைச் சொல்லிற்று உகாரம் அவதாரணத்தைச் சொல்லிற்று. ஜீவாத்மாவானவன் பகவானுக்கு சேஷபூதன் என்று இதில் எங்கே சொல்லப் பட்டிருக்கிற தென்னில், "இதிலே சதுர்த்தி ஏறிக் கழியும்" என்றபடியே லுப்த சதுர்த்தியினுல் சேஷத்வம் சொல்லப்படுவதாக அறிகிறோம். பகவச்சேஷத்வத்தோடு நில்லாமல் * நின் திருவெட்டெழுத்துங் கற்று நானுற்றது முன்னடியார்க் கடிமை * என்கிறபடியே பாகவதசேஷத்வ பர்யந்தமாகவும் அநுஸந்திக்கப்படுகிறது. ஆக, சங்கின் அரவம்—பகவச்சேஷத்வம்; பேரரவம் பாகவத சேஷத்வம். இவ்வர்த்த விசேஷங்களை யெல்லாம் கேட்க வேண்டாவோ வென்று அழைக்கிறபடி.

இனி மூன்ருவதான அடையாளம் அரியென்ற பேரரவம் உள்ளம் புகுந்து குளிர்ந்ததாகச் சொல்லப்படுகிறது. 'ஹரிர்ஹரி:' என்று சொல்லுகிறவர்கள் யாரென்னில்; [முனிவர்களும் யோகிகளும்] சிலர் குணநுபவமே போது போக்காக இருப்பர்கள்; சிலர் கைங்கர்யம் செய்வதிலே குதூஹலம் கொண்டிருப்பர்கள். இவ்விருவகை யதிகாரிகளையும் சொன்னபடி. அவர்கள் எப்படிப்பட்டவர்களென்ன, வித்தினை உள்ளத்துக் கொண்டவர்களென்கிறது. வித்து—முக்திமூலம் என்றபடி. ஆசார்யரே முக்திபீஜமாதலால் அவரை நிரந்தரம் நெஞ்சில் தியானிப்பவர்களென்கை. அந்த ஆசார்யன் எப்படிப்பட்டவனென்ன, பேய்முலை நஞ்சுண்டவன், கள்ளச்சகடம் கலக்கழியக் காலோச்சினவன், வெள்ளத்து அரவில் துயிலமர்ந்தவன். இம் மூன்றையும் முறையே விவரிப்போம். கண்ணன் வளர்ந்தருளுமிடத்தில் தீயபுந்திக் கஞ்சனுல் ஏவப்பட்ட பூதனை யசோதைபோல் வேஷம்பூண்டு நஞ்சு தீற்றிய முலையை உண்ணக் கொடுத்துக் கண்ணனைக் கொல்ல முயன்று, தானே முடிந்துபோனுளென்பது *பேய்முலை நஞ்சுண்ட கதை இந்தப் பூதனையின் வரலாற்றைப் பேசுகின்ற தேசிகன் யாதவாப்யுதயத்தில் **கம்ஸப்ரயுக்தா சில காபி மாயா*** என்று மாயை யென்ற சொல்லால் கூறினர். மாயையென்று மூல ப்ரக்ருதிக்குப் பெயர். அஃது உண்மையில் விஷமயமாயிருக்கச் செய்தேயும் "பகவத்ஸ்வரூப திரோதாநகரீ விபரீதஜ்ஞாநஜநீம் ஸ்வவிஷயாயாச்ய போக்யபுத்தேர் ஜநநீம்.... தைவீம் குணமயீம் மாயாம்" என்கிற சரணுகதிகத்ய ஸூக்திப்படியே தன்னிடத்தில் போக்யதாபுத்தியை யுண்டுபண்ணிக்கொண்டு தன்பக்கலிலே யீடுபடுத்தி நம் போல்வாரை முடிப்பது போலவே ஆசார்யரையும் முடிக்கப் பார்க்கையில் அவரை முடிக்கமாட்டாமல் அவரது அளவற்ற பெருமையினுல் தானே முடிந்தொழிகின்றது. இவ்வகையாலே பேய்முலைநஞ்சுண்டவர் ஆசார்யர் கண்ணன் அஸுராவேசம் பெற்ற வொரு சகடத்தைத் தன் திருவடி ஸ்பர்சத்தினுல் நொறுக்கி முறித்து முடித்தனன் என்பது கள்ளச்சகட முதைத்த கதை. ஆசார்யரும் தமது திருவடி ஸ்பர்சத்தினுல் சகடபங்கம் செய்பவர். (எங்ஙனேயென்னில்;) ஓரிடத்திலிருந்து மற்றேரிடத்திற்குக் கொண்டுபோகும் ஸாதனம் சகடமெனப்படுவது. இங்கிருந்து நாம் அப்பால் செல்லப் பலவழிகளுண்டு; நரகம் சுவர்க்கம் முதலானவற்றின் வழிகளிற் கொண்டு செலுத்துவது கள்ளச்சகடமாகும். ஆசார்யருடைய திருவடி ஸம்பந்தத்தினுல் அது தொலைந்ததேயாம். அர்ச்சிராதிமார்க்கமாகிய நல்வழியிற் செல்லும் ஸாதனமே மேம்பட்டுத் தீய வழிகளிற் செல்லும் ஸாதனம் சிதைந்தொழிந்த தென்க. ஆக இவ்வகையாலே கள்ளச்சகடம் கலக்கழியக் காலோச்சினவன் ஆசார்யன். இனி வெள்ளத் தரவில் துயிலமர்ந்த விதம் எங்ஙனே யென்னில்; வெள்ளமாவது ஸம்ஸார ஸாகரம்; இதில் அரவாவது *விஷய விஷதர வ்ரஜ வ்யாகுலே* என்ற கூரத்தாழ்வான் ஸ்ரீஸூக்திப்படியே விஷயாந்தரங்களாகிற விஷதரம். அதைக் கண்ணெடுத்துப் பாராதவன் ஆசார்யன். இவ்விடத்தில் "யா நிசா ஸர்வபூதாநாம் தஸ்யாம் ஜாகர்த்தி ஸம்யமீ, யஸ்யாம் ஜாக்ரதி பூதாநி ஸாநிசா பச்யதோ முநே: * என்ற கீதாச்லோகம் அநுஸந்தேயம். ஆக இப்படிப்

பட்ட வித்தினை—மோக்ஷ பீஜபூதனான ஆசார்யனை, உள்ளத்துக் கொண்டவர்கள் மெள்ள வெழுந்திருக்கிறார்களாம்; அவ்வாச்சார்யனுடைய குணகணங்களில் ஈடுபட்டவர்கள் *தேவுமற்றறியேன்* என்றிருக்கு மதிகாரிகளாகையாலே பகவத் விஷயத்தி லீடுபடுகைக்கு ருசியுடையரல்லர்; ஆயினும் ஆசார்யனுடைய திருவுள்ளவுகப்புக்காக அதுவும் நமக்கு அவர்ஜநீயமேயென்று கொண்டு மெள்ளவெழுந்திருக்கிறார்களென்க. (அரியென்ற பேரரவம்) ஹரி யென்றதாகக் கொள்வது தவிர, அரியென்றதாகவும் கொள்ளலாம். அரி யென்கிற வடசொல் சத்ருவாசகம். நமக்கு அந்தரங்க சத்ருக்களாகிய அஹங்கார மமகாரங்களைத் தொலைக்கவேணும், தொலைக்கவேணும் என்று பெருமிடறு செய்துகொண்டே யிருப்பர்களாயிற்று, அதைச் சொல்லுகிறது. ஸ்வரூப விரோதியென்றும் உபாய விரோதியென்றும் உபேய விரோதியென்றும் விரோதிகள் மூன்றுண்டாகையாலே அவற்றைத் தொலைக்கவேணு மென்றதாகவுமாம். "நம இத்யேவ வாதிந:."

இப்பாசுரம் முதல் * எல்லே யிளங்கிளியே என்கிற பதினைந்தாம் பாசுரமளவும் பத்துப் பாசுரங்களினால் ஆழ்வார்கள் பதின்மர் எழுப்பப் படுகிறார்களென்கிற தத்துவமும் அதன் விவரணங்களும் நமது திவ்யார்த்த தீபிகை யுரையில் காண்க. .... .... .... .... ... .... 6

7. கீசுகீசென்று எங்கும் ஆனைச்சாத்தன்* கலந்து
பேசினபேச்சரவம் கேட்டிலையோ ? பேய்ப்பெண்ணே! *
காசும்பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து *
வாசநறுங்குழல் ஆச்சியர்* மத்தினால்
ஓசைபடுத்த தயிரரவம் கேட்டிலையோ ? *
நாயகப் பெண்பிள்ளாய் ! நாராயணன் மூர்த்தி *
கேசவனைப் பாடவும் நீகேட்டே கிடத்தியோ ? *
தேசமுடையாய் ! திறவேலோ ரெம்பாவாய். *

இப்பாட்டில் உணர்த்தப்படுகின்ற ஆய்ப்பெண்ணுக்கு மூன்று விளிகள் உள்ளன; பேய்ப்பெண்ணே! நாயகப் பெண்பிள்ளாய்!, தேசமுடையாய்! என்னு மிம்மூன்று விளிகளும் ஒன்றுக்கொன்று மேற்பட்டவை. பேய்ப்பெண்ணே! என்பது ஏளனமல்ல; * அத்தா அரியேயென்று உன்னையழைக்க, பித்தாவென்று பேசுகின்றார் பிறரென்னை* (பெரியதிருமொழி 7—1—8) என்ற திருமங்கையாழ்வார் பாசுரப்படியே, பாமரரர்கள் கைவிட வேண்டும்படி பகவத் விஷயத்தில் மிகுந்த ஈடுபாடுடைய அதிகாரியே! என்று ஏற்றமாகச் சொல்லுகிறபடி. *என்னத்தனச்சனரங்கனுக்கடியார்களாகி அவனுக்கே பித்தராவர், பித்தரல்லர்கள் மற்றையார் முற்றும் பித்தரே* (பெருமாள்திருமொழி 2—9) என்ற குலசேகராழ்வார் பாசுரமும் இங்கு நினைக்கத்தக்கது. பெரியதொரு முக்தாஹாரத்திற்கு நடுநாயகமான ஓராபரண விசேஷம் மிகுந்த சிறப்பைத் தருமாபோலே பாகவத கோஷ்டிக்கெல்லாம் நடுநாயகமாயிருந்து கொண்டு ஒளிவிளக்கம் தருகின்ற உத்தமாதிகாரியே! என்றபடி. தேசமுடையாய்!—தேஜஸ் என்னும் வடசொல்லும் தேசமெனத்திரியும்; தேச: என்னும் வடசொல்லும் தேசமெனத் திரியும். *"ரூபமேவாஸ்ய ஏதந்மஹிமாநம் வ்யாசஷ்டே" என்ற சுருதியின்படியும், 'அகத்தினழகு முகத்திலே தெரியும்' என்கிற லோகோக்தியின்படியும் உள்ளுள்ள பெருமையையெல்லாம் கோட்சொல்லித் தருகின்ற முகவொளியையுடைய விலக்ஷணாதிகாரியே! என்றபடி. அன்றியே, ஸகல தேசங்களையும் கையிலுடையவளே! என்னவுமாம்; இன்னாரியனையாரென்னாதே ஸகல தேசஸ்தர்களையும் குணங்களினாலீடுபடுத்திக் கொண்டமை சொன்னவாறு.

முன் பாசுரத்தில் 'புள்ளும் சிலம்பின' என்று பக்ஷிஸாமாந்ய வாசகமான சொல் உள்ளது; இப்பாட்டில் பக்ஷிவிசேஷத்தைச் சொல்லும் சொல் உள்ளது. ஆனைச்சாத்தமென்பது வலியன். இப்பறவை கண்ணழகுக்கு த்ருஷ்டாந்தமாகச் சொல்லப்படும். வடமொழியில் (கஞ்ஜரீட:) என்றும், (கஞ்ஜந:) என்றும் வழங்கப் படுவதிது. இத்தால் ஞானக்கண்ணில் சிறப்புடைய மஹாஜ்ஞாதாக்களைச் சொன்ன படி. இப்பறவைக்கு வடமொழியில் பரத்வாஜபக்ஷி யென்று பெயர் என்பாருமுளர். பரத்வாஜமஹர்ஷியைப்போல் ஸகல வேதபாரங்கதரைச் சொன்னபடியாகக் கொள்ளலாம். 'கீசு கீசென்று' என்பதனால் விலக்ஷணாதிகாரிகளின் பரமபோக்ய மான திருமிடற்றோசையும் உத்தேச்யமென்று காட்டினபடி.

"ஆனைச்சாத்தம் கலந்து பேசின பேச்சு கேட்டிலையோ" என்னுமளவே சொல்லப் போதுமாயிருக்க, "பேச்சரவம் கேட்டிலையோ" என்றதில் ஒரு விசேஷ முண்டு; ரவ: என்னும் வடசொல்லே அரவமென்றாகி யிருக்கிறது. இதற்கு த்வநி யென்று பொருள். மஹான்களினுடைய ஸ்ரீஸூக்திகளில் சப்தலப்யமான வாச் யார்த்தத்தோடு நில்லாமல் த்வனிப் பொருளென்னப்படுகிற உள்ளுறை பொருளும் குறிக்கொள்ளத்தக்கதென்று உணர்த்தப்படுகிறது. "திருப்பாவையில் ஸ்வாப தேசார்த்தம் கேளாமல் வெறும் சப்தார்த்தம் மட்டுமா கேட்பது" என்று ஆண்டாள் தானே கூறிவைத்ததாகக் கொள்க. அதில் "கலந்து பேசின பேச்சு" என்றதில் பல விசேஷங்கள் தோன்றும். விரோதப்படாமல் பேசுகை கலந்து பேசுகை யெனப்படும். ஜைமிநி மஹர்ஷியானவர் வ்யாஸருடைய சிஷ்யரா யிருக்கச் செய் தேயும் ஆசார்யரான வ்யாஸருடைய அபிப்ராயத்திற்கு இணங்கப் பேசாமல் மாறு படப் பேசினார். இவ்விஷயம் "குரு சிஷ்ய க்ரந்த விரோதங்களை" என்று தொடங் கும் ஆசார்ய ஹ்ருதய சூர்ணையின் வியாக்கியானத்திலே கண்டு கொள்ளத்தக்கது. நம் ஆசார்யர்கள் அப்படியன்றிக்கே *பேசிற்றே பேசும் ஏககண்டர்கள் என்கிற விசேஷம்* கலந்து பேசின பேச்சென்பதில் தொனிக்கும். அன்றியும், இதரர்கள் எழுதும் நூல்களில் ச்ருதி ஸ்மிருதீதிஹாஸ புராண பஞ்சராத்ர திவ்ய ப்ரபந்த பூர்வா சார்ய ஸ்ரீஸூக்திகளாகிற எல்லாவற்றையும் கலந்து கொண்டு பேசியிருப்பது கிடையாது. இவ்வதிசயம் நம் ஆசாரியர்களுக்கே அஸாதாரணமென்பது ஈடுமுப்பத் தாறாயிரப்படி முதலான வியாக்கியான க்ரந்தங்களினாலும், ஆசார்ய ஹ்ருதயம் அஷ்டாதசரஹஸ்யம் முதலான மூலக்ரந்தங்களினாலும், ஸுவிசதமாகும். ஆகவே, கலந்து பேசின பேச்சென்பதற்கு—பலவற்றையும் [ஸகல ப்ரமாணங்களையும்] கலந்து கொண்டு பேசின பேச்சென்பதும் பொருளாகும்.

காசும் பிறப்பும் கலகலப்ப—காசு என்றும், பிறப்பு என்றும் ஆபரண விசேஷங்களைச் சொன்னபடி. இடைச்சாதிக்கு உரிய ஆபரணங்களிவை. ஸ்வாப தேசத்தில் சமமும் தமமுமாகிற முக்கியமான ஆத்மபூஷணங்களிரண்டையும் கொள் வது. இவை கலகலப்பதாவது வடிவிலே தொடை கொள்ளலாம்படியிருக்கை. கைபேர்த்து என்றது—கேவலம் உபதேசத்தினால் மட்டும் உபகரித்துப் போய் விடாமல் பிற்காலத்தவர்களும் உஜ்ஜீவிக்கும்படியாகவும் உஜ்ஜீ விப்பிக்கும்படியாகவும் மூலக்ரந்தங்களையும் வியாக்கியான க்ரந்தங்களையும் கைநோவ எழுதி வைத்த மஹோபகாரகர்களின்படியை நினைப்பூட்டுகின்றது. [வாசநறுங்குழ லாய்ச்சியர்] ஆய்ச்சியர் எப்படி பகவானுக்குப் பரமப்ரீதி பாத்ரபூதர்களோ அப்படி யிருக்கும் பரமபாகவதர்கள் இங்கு விவக்ஷிதர்கள். இவர்களுடைய கூந்தல் நறு மணம் மிக்கதென்று சொன்னதனால் விநய ஸம்பத்து மிகுந்து தலைவணங்கி நிற்கும் படியைத் தெரிவித்தவாறு. இவர்கள் மத்தினாலோசை படுத்துவதாவது—*மறைப் பாற்கடலைத் திருநாவின் மந்தரத்தாற் கடைந்து* என்று பிள்ளைப் பெருமாளையங் கார் பணித்தபடியே நாவையசைத்துப் பரமகம்பீரமான த்வநியையுண்டாக்குதல். [தயிரரவம் கேட்டிலையோ?] தயிரைக் கடைவது வெண்ணெய் திரட்டுகைக்காகவாத

லால் ஸாரமான அர்த்தங்களை யெடுத்து உபகரிக்கிறபடியைச் சொல்லி, இதைச் செவிமடுத்துண்டு களிக்க வேண்டியிருக்க, கேளாமலிருப்பது தகுதியோ? என்று கூறியவாறு. [நாராயணன்மூர்த்தி கேசவனைப்பாடவும்] கண்ணபிரான் குதிரை வடிவங் கொண்டு வந்த கேசியென்னுமஸுரனை வதைத்துக் கேசவனென்று பெயர்பெற்றது போல, ஆசாரியர் "இந்த்ரியாணி ஹயாநாஹு:" என்கிறபடியே குதிரையாகச் சொல்லப்பட்ட இந்திரியங்களைவென்று ஜிதேந்த்ரியரென்று பேர்பெற்றவர். *ஸாக்ஷாந் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும், மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ரபாணிநா* என்கிறபடியே அவ்வாசார்யர் ஸாக்ஷாத் நாராயணனேயாகையாலே நாராயணன்மூர்த்தியென்றது மிகப்பொருந்தும். [கேட்டே கிடத்தியோ?] *புருஷார்த்தோயமேவைக: யத்கதாச்ரவணம் ஹரே:* என்று செவிக்கின்பம் பெறுவதே பரமபுருஷார்த்தமென்று தெரிந்து வைத்தும் இங்ஙனே உபேக்ஷையாயிருக்கலாமோ? என்று கூறுகிறபடி. [திற] போர்வையைத்திற, வாயைத்திற, கதவைத்திற.

8. கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு*
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்*
போவான் போகின்றாரைப் போகாமல் காத்து* உன்னைக்
கூவுவான் வந்துநின்றோம்* கோதுகலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறைகொண்டு*
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய*
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்*
ஆவாவென்றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.

இப்பாட்டில் 'கோதுகலமுடைய பாவாய்!' என்பது விளியாகவுள்ளது. (சிலர் 'கோதுகுலமுடைய' வென்று ஓதுவர். அது கொள்ளத்தக்க பாடமன்று.) 'கௌதூஹலம்' என்னும் வடசொல்லே 'கோதுகலம்' என்று திரிந்திருக்கின்றது. குதூஹலமென்பதே பொருள். குதூஹலத்தையுடைய பாவையே! என்று விளித்த விதற்கு இரண்டு வகையான பொருள் கூறலாம். தன்னுடைய குதூஹலத்தை எம்பெருமானிடத்திலுடையவளே! என்றும், எம்பெருமானுடைய குதூஹலத்தைத் தன்னிடத்திலுடையவளே! என்றும் இருவகைப் பொருளையும் ஸஹிக்குஞ் சொல் இது. பகவத்கீதையில், "ப்ரியோஹி ஜ்ஞாநி நோத்யர்த்தமஹம் ஸச மம ப்ரிய:" என்று பகவான் தானே சொல்லுகிறான். தன்னுடைய குதூஹலம் ஞானியினிடத்து உள்ளதாகவும், ஞானியினுடைய குதூஹலம் தன்னிடத்து உள்ளதாகவும் இதில் சொல்லிற்று. நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் (5—1—7) "மெய்ம்மாலா யொழிந்தேன் எம்பெருமானு மென் மேலானே" என்கிற பாசுரத்தினால் இதனையே யருளிச் செய்தார். எம்பெருமானிடத்தில் நாம் ப்ரீதி வைப்பது சிறந்ததா? அவன் நம்மிடத்தில் ப்ரீதி வைப்பது சிறந்ததா? என்று ஒருவர் கேட்க, அதற்கு மற்றொருவர் சொன்னாராம்; இங்ஙனே கேள்வி கேட்பதில் பயனில்லை; எம்பெருமானிடத்தில் நாம் வைக்கிற ப்ரீதி அதிகமா? அவன் நம்மிடத்தில் வைக்கிற ப்ரீதி அதிகமா? என்று கேள்வி கேட்க வேணுமென்றாராம். இக்கேள்விக்கு யாரால் விடை யிறுக்க முடியும்? எம்பெருமானிடத்தில் நாம் வைக்கிற ப்ரீதியின் அளவை நாம் தெரிந்து கொள்ள முடியுமேயல்லது, அவன் நம்மிடத்தில் வைக்கும் ப்ரீதியின் அளவை நாம் எங்ஙனே தெரிந்து கொள்ள முடியும்? என்பர் சிலர். கீதை முதலானவற்றில் அவன்தானே கூறியிருப்பது கொண்டு அதை நாம் தெரிந்து கொள்வதில் என்ன அருமை? கீழே உதாஹரித்த "ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோத்யர்த்தம் அஹம் ஸ ச மம ப்ரிய:" என்கிற ச்லோகமே அவன் தன்னுடைய ப்ரீதியின் அளவைத் தெரிவிக்கும். அந்த ச்லோகத்தில் அத்யர்த்தம் என்றுள்ள சொல்லுக்கு வாசாமகோசரம் என்பது பொரு

ளென்று கீதாபாஷ்யத்தில் விவரிக்கப்பட்டது. இச்சொல்லை இரண்டிடத்திலும் அந்வயிக்க முடியும். 'ஞ்ஞாநிந: அஹம் அத்யர்த்தம் ப்ரிய:' என்று கீதாபாஷ்யத்தில் காண்கிற யோஜனை; ஸ்ரீ பாஷ்யத்திலோ வென்னில்; ஸ: (ஜ்ஞாநீ) மம அத்யர்த்தம் ப்ரிய:' என்று அந்வயக்ரமம் திருவுள்ளம் பற்றலாயிற்று. அநாவ்ருத்தி ஸூத்ர பாஷ்யத்தில் "அத்யர்த்த ப்ரியம் ஜ்ஞாநிநம்" என்கிற ஸ்ரீஸூக்தி காண்பதனல் இங்ஙனே அந்வயக்ரமம் கொண்டருளினது இதனல் ஸ்பஷ்டமாயிற்று. ஞானி பக்கலிலே எம்பெருமான் வைக்கும் ப்ரீதியின் அளவே அதிகமென்று இதனல் தெரிவிக்கப்பட்டது. இப்படி பகவத் ப்ரீதியைத் தன்னிடத்து அதிகமாகக் கொண்டுள்ள ஒரு சிறந்த வ்யக்தியே 'கோதுகலமுடைய பாவாய்!' என்று விளிக்கப்பட்டதாகக் கொள்க.

கீழ்வானம் வெள்ளென்று—இதற்குப் பலபடியாக ஸ்வாபதேசார்த்தம் கொள்ளலாம். வானமென்பது ஆகாசம். *தஹர உத்தரேப்ய:* என்ற ப்ரஹ்மஸூத்ரத்தையநுஸரித்துக் கூரத்தாழ்வான் ஸுந்தர பாஹுஸ்தவத்தில் *யம் தம் விதுர் தஹரமஷ்டகுணோபஜுஷ்டமாகாசம் ஔபநிஷதீஷு ஸரஸ்வதீஷு* என்றருளிச் செய்துள்ளார். "தஹ்ரம் விபாப்மம் பரவேச்மபூதம் யத் புண்டரீகம் புரமத்ய ஸம்ஸ்தம், தத்ராபி தஹ்ரம் ககநம் விசோகஸ் தஸ்மிந் யதந்தஸ் ததுபாஸிதவ்யம்" என்ற உபநிஷத்தையும் சிந்திப்பது. நம்முள்ளே தஹராகாசமென்று இரண்டுண்டு; மேலே காட்டின உபநிஷத்தில் "பரவேச்மபூதம்" என்று ஓதினபடியே பரமபுருஷனுக்கு ஆதாரமான தஹரபுண்டரீகம் கீழ்வானமெனப்படும். அதிலே யெழுந்தருளியிருக்கிற எம்பெருமானும் தஹராகாச சப்தவாச்யனுகையாலே அவனே மேல்வானமென்றும், அவனுக்கு ஆதாரமான தஹரத்தைக் கீழ்வான மென்றும் கொள்க. அந்தக் கீழ்வானம் பரிசுத்தமாக இருந்தாலொழிய மேல்வானமான எம்பெருமான் அதில் தங்கியிருக்க மாட்டானுகையாலே கீழ்வானம் வெள்ளென்றிருக்க வேணுமென்கிறது. 'வெள்ளென்று' என்றது "ஆசம்ஸாயாம் பூதவச்ச" என்னும் வடமொழி வியாகரண நியாயத்தாலே வெள்ளென்ருக வேணுமென்று ஆசம்ஸிக்கிறபடி.

அன்றிக்கே, மேல்வானத்திற்கு ப்ரதிகோடியானது கீழ்வானம். மேல்வானமென்பது நித்யவிபூதி; கீழ்வானமென்பது லீலாவிபூதி. *உரைக்கவல்லார்க்கு வைகுந்தமாகும் தம்மூரெல்லாம்* (திருவாய்மொழி 5—3—11) என்ருழ்வாருளிச் செய்தபடியே லீலாவிபூதியும் ஒருபடி வைகுண்டமாகிறபடியாலே இதைக் கீழ்வானமென்னத் தட்டில்லை. இது ஆசார்யருடைய ஸன்னிதானத்தாலே இருள்தருமாஞாலமாக வல்லாமல் வெள்ளென்றிருக்கிறது—சுத்த ஸத்வமயமாகக் காண்கிறது என்றபடி.

அன்றியே, வானமென்று மேகத்திற்கும் பெயராகையாலே மேல்வானமென்று விண்ணுலகத்து மேகத்தைச் சொல்லிற்ருய், கீழ்வானமென்று மண்ணுலகிலுள்ள ஆசார்யமேகத்தைச் சொல்லுகிறது. மேகமானது தன்னிடத்துள்ள நீரை நன்ருக வர்ஷித்து விட்டு வெண்மையடைவதுபோல இவ்வாசார்ய மேகமாகிற கீழ்வானமும் தன்னிடத்துள்ள ஸகலார்த்த தீர்த்தங்களையும் வர்ஷித்து வெளுக்க வேணுமென்கிறது. அன்றியே, கிழக்கு வெளுத்ததென்கிற பொருளையே கொண்டு "ப்ராசீ ஸந்த்யா காசிதந்தர்நிசாயா: ப்ரஜ்ஞாத்ருஷ்டேரஞ்ஜந ஸ்ரீரபூர்வா" என்கிற ஹயக்ரீவஸ்தோத்ர ஸூக்திப்படியே பொருள் காணலாம். கிழக்கு வெளுக்கிற காலத்திலே பெரும்பாகம் வெளுப்பாயும், சிறுபாகம் கறுப்பாயுமிருக்குமே; ஆசார்யனுடைய உபதேசம் கேட்கிறபோது "என்னை வெள்ளுயிராக்கவல்ல" என்கிறபடியே வெளுப்பாயிருக்கும்; ஆசார்ய ஸன்னிதியை விட்டு அகன்றவாறே இருள் தோன்றியிருக்கும்.

எருமை சிறுவீடு மேய்வான் பரந்தனகாண்—எருமையென்று தாமஸ ப்ரக்ருதிகளைச் சொல்லுகிறது. சிறுவீடென்பது சிற்றின்பம்; தாமஸ ப்ரக்ருதிகள் சிற்றின்ப நுகர்ச்சியிலே பரந்து செல்லுகின்றார்களந்தோ; காண்—அவர்களைக் கடாக்ஷித்தருள வேணும் என்கை. எருமைகளின் தன்மையைத் திருமங்கையாழ்வார் திருநாங்கூர்ப் பதிகமொன்றில் வருணிக்கிறார்—*ஓங்குபைந்தாள் கண்ணார்கரும்பின் கழைதின்று வைகிக் கழுநீரின் மூழ்கிச் செழுநீர்த்தடத்து மண்ணேந்திள மேதிகள் வைகுநாங்கூர்* என்று. எருமைகள் கரும்பைத் தின்னாதே கரும்பின் கழைகளைத் தின்னுமா போலே "கள்வா! கடன்மல்லைக் கிடந்த கரும்பே!" என்று கரும்பாகச் சொல்லப் பட்ட பகவத் விஷயத்தை யநுபவிக்கமாட்டாதே ஹேயவிஷயங்களிலே மண்டித் திரிபவர்கள் இங்கு எருமைகளாக விவக்ஷிதர்கள். "நீலதயா ஸ்தூலதயா தூரதயா தாநலோலுபைர் மதுபை:, தாவிதமிபராஜதியா ஹந்தாஸீதந்ததோ மஹிஷ:" என்றான் பண்டிதராஜன். அங்ஙனே அறிவிலிகள் ப்ரமிக்கக்கூடிய நிலையிலே நிற்பவர்களையும் எருமையாகக் கொள்ளலாம்.

மிக்குள்ள பிள்ளைகளும் இத்யாதியில் மிகச்சிறந்ததொரு விசேஷார்த்தம் அநுஸந்திக்கத் தகும்; (அதாவது) "அர்வாஞ்சோ யத்பதஸரஸிஜத்வந்த்வமாச்ரித்ய, பூர்வே மூர்த்நா யஸ்யாந்வயமுபகதா தேசிகா முக்திமாபு:, ஸோயம் ராமாநுஜமுநிரபி" என்கிறச்லோகத்திற் கூறியபடியே ஏற்கெனவேகாலஞ்சென்றவர்களையும்அப்போது பரமபதம் சென்று சேராதபடி நிறுத்தி வைத்து, தாம் அவதரித்த பின்பு தம்முடைய திருமுடி ஸம்பந்தத்தினால் அவர்களையும் உத்தீர்ணராக்கத்தக்க பெருமை ஸ்வாமி யெம்பெருமானா ரொருவர்க்கு அஸாதாரணமாகச் சொல்லப்படுகிறது. இதை ஸ்ரீமத் வேதாந்ததேசிகனும் நியாய பரிசுத்தியின் தொடக்கத்தில் [மங்கல ச்லோகத்தில்] "தத்பாத கோடீரயோஸ் ஸம்பந்தேந ஸமித்த்யமாநவிபவாந்" என்பதனாலே தெரிவித் தருளினார். "எம்பெருமானார் தமக்கு முற்பட்டவர்களைத் தம்முடைய திருமுடி ஸம்பந் தத்தாலே உத்தீர்ணராக்கியும், தமக்குப் பிற்பட்டவர்களைத் தம்முடைய திருவடி ஸம்பந்தத்தாலே உத்தீர்ணராக்கியும் போருவர்" என்று ப்ரஸித்தமாகச் சொல்லிப் போருவதுண்டே. இவ்வர்த்த விசேஷம் "போவான் போகின்றாரைப் போகாமல் காத்து உன்னைக் கூவுவான் வந்து நின்றோம்" என்பதில் அநுஸந்திக்கவுரித்தாயிருக் கின்றமை யுணர்க.

மாவாய் பிளந்தானை—மா என்று குதிரைக்குப் பெயராயிருப்பது தவிர, ம்ருகஸா மாந்யத்திற்கும் பெயராயிருப்பதுண்டு. நாற்கால் விலங்குகளெல்லாம் மா எனப்படும். *ஜ்ஞாநேந ஹீந: பசுபிஸ் ஸமாந:* என்கிறபடியே ஜ்ஞான ஹீநதையாலே பசுப் ராயர்களா யிருக்கின்ற அஸ்மதாதிகளே மா என்பதற்குப் பொருள்; இப்படிப்பட்ட நரபசுக்கள் வாய் திறக்கமாட்டாமல் ஊமைகளாயிருக்க, வாய் பிளந்தான் — ஆசார்யர் வாயைப் பெருக்கினாராயிற்று. வாய் திறந்து நன்றாகப் பேசும்படி செய்தன ரென்கை. [மல்லரை மாட்டிய] கண்ணன் சாணூர முஷ்டிகர்களாகிற இரண்டு மல்லர்களை மடித்ததுபோல ஆசிரியர் *நீர்நுமதென்றிவை வேர்முதல்மாய்த்து* என்கிறபடியே அஹங்கார மமகாரங்களாகிற ப்ரபல விரோதிகளிருவரை வேரற மாய்த்தவர். [தேவாதி தேவன்] தேவனிற்காட்டிலும் அதிகமான—மேம்பட்டவனான தேவன் ஆசார்யன். "ஆசார்யாதிஹ தேவதாம் ஸமதிகாமந்யாம் ந மந்யாமஹே" என்ற தேசிக ஸூக்தி காண்க. இப்படிப்பட்ட மஹாசார்யனைச் சென்றுநாம் சேவித் தால்—*ஸ குருமேவாபிகச்சேத்* என்றும் *ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா* என் றும் சொல்லுகிறபடி நாம் சென்று ஸேவித்தால். [ஆ வாவென்று ஆராய்ந் தருளும்] ஹா என்று இரக்கங்காட்டி, வாவென்று சொல்லி ப்ரேமத்துடனழைத்து, சிஷ்யலக்ஷண பூர்த்தி யுள்ளதாவென்று ஆராய்ந்து பார்த்து, அஃது உள்ளதென்று தெரிந்தவாறே ஸகலார்த்தங்களையும் பரமகருணையோடு அருளிச் செய்வர். ... 8

9. தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூபம்கமழத் துயிலணைமேல் கண்வளரும் *
மாமான் மகளே ! மணிக்கதவம் தாள்திறவாய் *
மாமீர் ! அவளையெழுப்பீரோ ?* உன்மகள்தான்
ஊமையோ ? அன்றிச் செவிடோ ? அனந்தலோ ? *
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ ? *
மாமாயன் மாதவன் வைகுந்த னென்றென்று *
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய்.

இப்பாட்டில் "மாமான் மகளே !" என்கிற விளியானது தேஹ ஸம்பந்தத்தில் நோக்காகக் காண்கிறது. தேஹபந்துக்களை ஆபாஸ பந்துக்களென்றும் பாந்தவா பாஸர்களென்றும் சொல்லி அவர்களை த்யாஜ்யர்களாகவும் சொல்லியுள்ளது சாஸ்த்ரம். நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் *கொண்ட பெண்டிர் மக்களுற்றார்* என்னும் பதிகத்தில் தேஹ பந்துக்களை விட்டொழிக்கும்படி உபதேசித்தருளுகிறார். அப்படியிருக்க, 'மாமான் மகளே!' என்று தேஹ பந்துத்வத்தையிட்டு விளித்த தனால் ஒரு நுட்பமான சாஸ்த்ரார்த்தம் தெரிவிக்கப்படுகிறது. தேஹ பந்துக்கள் ஸர்வாத்மநா த்யாஜ்யர்கள் என்பதில்லை. "நல்ல பதத்தால் மனை வாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே" என்றும் சொல்லி வைத்தார் நம்மாழ்வார்தாமே. பகவத்பாக வத கைங்கரியங்களுக்குப் பிரதிகூலர்களான தேஹ பந்துக்கள் த்யாஜ்யர்களே யல்லது அநுகூலர்களான பந்துக்கள் மிகவும் உபாதேயர்களேயாவர். பூர்வாசார்யர் களில் பலருடைய தனியன்களில் "ஸ்ரீவத்ஸாங்கஸுத: ஸ்ரீமாந்" என்றும் "க்ருஷ்ணபாதஸ்ய ஸூநவே" என்றும் "ஆசார்ய பௌத்ரமபிராமவராபிதாநம்" என்றும் தேஹஸம்பந்தத்தை யிட்டுக் கூறியிருப்பது காணலாம். எம்பார் முதலி யாண்டான் முதலான சில ஆசாரியர்களுக்கு எம்பெருமானாரோடு தேஹ ஸம்பந்த மிருந்தது; கூரத்தாழ்வானுக்கு அது இல்லையாயிருந்தது. அதனால் ஆழ்வான் அடிக்கடி 'அந்தோ! எனக்கு ஸ்வாமியோடே ஒரு குடல் துடக்கு இல்லாமல் போயிற்றே!' என்று நிர்வேதப்படுவராம். ஆளவந்தார் "பிதாமஹம் நாதமுநிம் விலோக்ய" என்று ஸ்ரீமந்நாதமுனிகளை தேஹ பந்துத்வத்தை யிட்டுப் பேசினார். தைத்திரீயோபநிஷத்தில் "ப்ருகுர் வை வாருணி:, வருணம் பிதரமுப ஸஸார. அதீஹி பகவோ ப்ரஹ்மேதி." என்று வருணபுத்ரரான ப்ருகுவானவர் தம்முடைய பிதாவான வருணன் பக்கலிலேயே ப்ரஹ்மவித்யை யதிகரித்ததாக ஓதிற்று. இங் ஙனே பல பல விஷயங்களை யாராயுமிடத்து தேஹாநுபந்திகள் ஸர்வாத்மநா த்யாஜ் யர்களல்லரென்றும், ஹேது விசேஷத்தாலே உபாதேயர்களாகவுங் கூடுமென்பதும் புலனாகிறது. இதனைத் தெரிவிக்க வேண்டியே ஆண்டாள் மாமான் மகளே! என்று விளித்தனளென்க.

[தூமணி மாடத்து] எந்த இடத்திலிருந்துகொண்டு நோக்கிப் பார்த்தால் எல் லாப் பொருள்களும் நன்றாகப் புலப்படுமோ அது மாடமெனப்படும். ப்ரஜ்ஞாப்ரா ஸாதமென்று மஹர்ஷிகளும் கூறுவர். மணிமாடமென்றது நவரத்னங்களிழைக்கப் பெற்ற ப்ரஜ்ஞாப்ராஸாத மென்றவாறு. நவவித ஸம்பந்தங்களே நவரத்னங்க ளெனப்படும். பித்ருபுத்ரபாவம், ரக்ஷ்ய ரக்ஷக பாவம், சேஷ சேஷிபாவம், பர்த்ரு பார்யாபாவம், ஜ்ஞாத்ருஜ்ஞேயபாவம், ஸ்வஸ்வாமி பாவம், ஆதாரா தேயபாவம், சரீராத்மபாவம், போக்த்ரு போக்யபாவம் என்று திருமந்த்ரஸித்தமான இந்த நவவித ஸம்பந்தங்களையும் நன்கு தெரிந்துகொண்ட ப்ரஜ்ஞா விசேஷமே தூமணிமாடம். [சுற்றும் விளக்கெரிய] * ஞானச்சுடர் விளக்கேற்றினேன் * என்றும் * உய்த்துணர் வென்னு மொளிகொள் விளக்கேற்றி * என்றுமிங்ஙனே யுள்ள பாசுரங்கள்

ஞானத்தை விளக்காகச் சொல்லுகின்றன. *வேதாந்த விழுப்பொருளின்மேலிருந்த விளக்கு* என்றும் மிக்கஞான மூர்த்தியாய வேதவிளக்கு* என்றும் *நந்தாவிளக்கே!* என்று மிங்ஙனேயுள்ள பாசுரங்கள் எம்பெருமானையே விளக்காகச் சொல்லுகின்றன. "மாநம் ப்ரதீபமிவ காருணிகோ ததாதி" என்கிற பட்டர் ஸ்ரீஸூக்தி சாஸ்த்ரங்களை விளக்காகச் சொல்லுகின்றது. *மிக்கானை மறையாய் விரிந்த விளக்கை* என்றும் *தோன்றுசோதி மூன்றுமாய்த் துளக்கமில் விளக்கமாய்* என்றிங்ஙனேயுள்ள பாசுரங்கள் ஸகலசாஸ்த்ர பீஜபூதமான அகாரத்தை விளக்காகச் சொல்லுகின்றன. இவையெல்லாம சுற்றும் விளக்கு என்பதனால் விவக்ஷிதங்கள். தூமணி மாடத்ததிகாரிக்கு இந்த விளக்குகளெல்லாம் ஜ்வலித்துக் கொண்டே யிருக்கும்படியைச் சொல்லுகிறதாயிற்று.

[தூபம் கமழ] கீழே ஜ்ஞான விசேஷம் சொல்லிற்று. இதில் பரிமள விசேஷம் சொல்லுகிறது. ஜ்ஞானம் பரிமளிப்பது அனுட்டானத்தாலே. *ஞான மனுட்டான மிவை நன்றாகவேயுடையனான குருவையன்றோ அடையவேணும். அனுட்டானமில்லாமல் ஞானம் மட்டுமுடையவன் நொண்டியோ டொப்பன்; ஞானமின்றி அனுட்டானம் மட்டுமுடையவன் குருடனோடொப்பன். இவ்விருவரும் துணையின்றி நடந்து செல்லகில்லார்கள். ஸத்கதிக்கு இரண்டும் வேண்டும். அவ்விரண்டு முடைமை சொல்லிற்று இங்கு. [துயிலணைமேல் கண்வளரும்] ஊணுமுறக்கமுமே போதுபோக்கான ப்ராக்ருதர்கள் தங்களுடைய ஆனந்தாநுபவத்திற்குப் பாங்கான ஆஸ்பதமாகக் கொள்ளுவது துயிலணை. ஆனந்தாநுபவமென்பது அவரவர்களது அபிருசிக்குத் தக்கபடி வெவ்வேறாயிருக்கும். மாஞானிகள் ஆனந்தாநுபவம் செய்யும் துயிலணை ஸ்ரீபாஷ்ய பகவத்விஷயாதிகளேயாம். அவற்றிலேகண்வளரும்—மேன்மேலும் கண்ணோட்டம் செல்லப் பெற்றவரென்றபடி. துயிலணையினாலே, மேல்கண்வளரும்—மேலானகண்—ஞானக்கண்; அது வளர்ந்து செல்லப்பெற்றவரென்னவுமாம்.

[மாமான் மகளே!] தேஹபந்து த்வத்திலோ ஆத்மபந்துத்வத்திலோ விவக்ஷையாகலாம். ஸ்ரீ வசந பூஷணத்தில் ப்ரபந்நதிநசர்யாப்ரகரணத்தில் "இப்படி ஸர்வ ப்ரகாரத்தாலும் நாசஹேதுவான அஹங்காரத்துக்கும் அதினுடைய கார்யமான விஷயப்ராவண்யத்துக்கும் விளைநிலம் தானாகையாலே தன்னைக் கண்டால் சத்ருவைக் கண்டாற் போலேயும், அவற்றுக்கு வர்த்தகரான ஸம்ஸாரிகளைக் கண்டால் ஸர்ப்பத்தைக் கண்டாற்போலேயும், அவற்றுக்கு நிவர்த்தகரான ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்டால் பந்துக்களைக் கண்டாற் போலேயும்" என்ற விடத்து மணவாளமா முனிகளின் வியாக்கியான ஸ்ரீஸூக்திகளை ஸேவிப்பது. அப்படிப் பட்ட ஆப்த பந்துக்களின் தன்மையை யுடையவரைச் சொல்லுகிறது. [மணிக்கதவம் தாள் திறவாய்.] உள்ளே மிகச் சிறந்த பொருள்களை வைத்திருக்குமிடத்திற்கே மணிக்கதவ மிடுவர்கள். ஆசார்யருடைய திருவுள்ளத்திலே ஸுரக்ஷிதமாகச் சேமிக்கப்பட்டிராநின்ற அர்த்த விசேஷங்களை மடை திறந்தாப்போலே திறந்துவிட்டருள வேணுமென்று பிரார்த்திக்கிறபடி. மாமீர் அவளை எழுப்பீரோ? என்றது ப்ராசார்ய புரஸ்காரேண ஆசார்யாநுக்ரஹத்தை அபிவிருத்தி செய்வித்துக் கொள்ளுகிறபடி. உன் மகள் தானூமையோ என்று தொடங்கி ஆசார்யருடைய அப்ரமேய ப்ரபாவங்களை ப்ராசார்ய ஸன்னிதானத்திலே விஜ்ஞாபிக்கிறது. "பரீவாதேஷு யே மூகாঃ பதிராச்ச பரோக்திஷு, பரரந்த்ரேஷு ஜாத்யந்தாஸ் தைர்ஜிதம் புவநத்ரயம்" என்பது நீதி சாஸ்த்ரவசனம். பிறரைப்பற்றி நிந்தனைகள் செய்வதில் ஊமைகளாகவும், பிறர் நம்மைப்பற்றிக் குறையாகச் சொல்லும் வார்த்தைகளில் செவிடர்களாகவும், பிறருடைய குற்றங்குறைகள் காண்பதில் குருடர்களாகவுமிருப்பவர்கள் மூவுலகையும் வென்றவர்களாவர் என்பது மேலே குறித்த சுலோகத்தின் கருத்து. பாசுரத்தில் ஊமையோ? செவிடோ? என்றதோடு குருடோ? என்பதும் கூட்டிக்கொள்ளத்தக்கது. ஆக, பரதூஷணைகள் செய்யாமையும், பிறர்செய்யும் நிந்தைகளில் செவிகொடாமையும்,

பிறரது குற்றங்குறைகள் காணுமையுமாகிற பெருமைகள் பொலிந்தவரென்றதாயிற்று. [அனந்தலே] அனந்தலென்று சோம்பலுக்குப்பெயர்; திருமாலையில்* காம்பறத் தலை சிரைத்து உன்கடைத்தலையிருந்து வாழுஞ் சோம்பரையுகத்திபோலுஞ் சூழ்புனலரங்கத்தானே * என்னப்பட்ட உத்தமாதிகாரி யென்கை. அனந்தலென்று மயக்கமுமாம். வ்யாமோஹமோ? என்றவாறு [ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ!] மந்திரமென்றது திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரம். அதில் நன்ருக ஈடுபட்டால் ஏமப்பெருந்துயிலுண்டாகும்; ஸ்வரக்ஷணே ஸ்வாந்வய நிவ்ருத்தி நன்ருகவுண்டாவதுதான் ஏமப்பெருந்துயில் கொள்ளுகை.

"மாமாயன் மாதவன் வைகுந்தன்" என்பன ஆசார்யனுக்கும் மிகப்பொருந்திய திருநாமங்கள். மாமாயன்—இரும்பைப் பொன்னுக்குமாபோலே மிகவும் ஆச்சரியமான செயலைச் செய்பவர். மாதவன்—மஹா தபஸ்வியென்றபடி. "தபஸ் ஸ்வாத்யாய நிரதம் தபஸ்வீ" என்ற விடத்தில் விவக்ஷிதமான பொருள்காண்க. வைகுந்தன்—வைகுண்டப்ரதன் என்றபடி. .... .... .... ... 9

**10. நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனுய்!***
**மாற்றமும் தாராரோ? வாசல் திறவாதார் ***
**நாற்றத்துழாய்முடி நாராயணன் * நம்மால்**
**போற்றப் பறைதரும் புண்ணியனுல் * பண்டொருநாள்**
**கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகரணனும் ***
**தோற்றுமுனக்கே பெருந்துயில்தான் தந்தானே ?***
**ஆற்ற அனந்தலுடையாய்; அருங்கலமே !***
**தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய்.***

இப்பாட்டில் தொடக்கத்திலுள்ள 'நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற வம்மனுய்!' என்ற விளியும், முடிவில் 'அருங்கலமே!' என்ற விளியும் மிகவும் குறிக்கொள்ளத் தக்கவை. அருங்கலமே! என்ற விளியைப்பற்றி முன்னம் விமர்சிப்போம். அருங்கலமே! என்பதற்கு மூன்று பொருள்களுண்டு. கலமென்று பாத்ரமும் பூஷணமும். அருமையான பாத்திரமே!—ஸத்பாத்திரமே என்றபடி. * அநுத்தமம் பாத்ரமிதம் தயாயா:* என்று ஆளவந்தாரருளிச் செய்தபடி எம்பெருமானுடைய கருணையைப் பெறுதற்கு—உரிய ஸத்பாத்ர மென்கை. இனி பூஷணமென்னும் பொருளில் அருமையான பூஷணமாயிருப்பவளே! என்றும், அருமையான பூஷணங்களை யுடையவளே! என்றும் இருவகைப் பொருள் கொள்ள இடமுண்டு. பூஷணத்தினுல் சோபை விஞ்சுமாபோலே இந்த கோபிகையினுல் ஆய்ச்சிகளின் கோஷ்டிக்கே அபூர்வமானதொரு சோபை உண்டாகும்படி யிருக்குமென்க. இவள் பூஷணங்களையுடையவள் என்னும் பொருளில் 'பராவரகுருக்கள் பூட்டுமாத்ம பூஷணங்கள்' என்ற ஆசார்ய ஹ்ருதய ஸூக்தியின்படி ஸுசிக்ஷிதமான ஆத்மாலங்காரங்களை யுடையாய்! என்றதாகும். [நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனுய்!] இது ஹேளனமாகச் சொல்லுகிறதாவுமாம், புகழ்ச்சியாகச் சொல்லுகிறதாகவுமாம். அம்மா நீ இங்ஙனே உறங்கினுயாகில் வெகு நன்ருக நோன்பு நோற்றுத் தலைக்கட்டி ஆனந்தாநுபவம் செய்யப் பெறுவாயன்றோ என்று கொண்டால் ஹேளனம். நீ எங்களைப்போலே இனிமேல் நோன்பு நோற்க வேண்டாமல் நோன்பு நோற்றுத் தலைக்கட்டி ஆனந்தாநுபவம் செய்து கொண்டிருக்கிறாய்! என்று சொல்லுவதாகக் கொண்டால் புகழ்ச்சி. ஸ்வர்க்கம் என்கிற வடசொல் சுவர்க்கமென்று திரிந்துள்ளது. ஸ்ரீ ராமாயணத்தில் பிராட்டி பெருமாளை நோக்கிச் செல்லுகையில் *யஸ் த்வயா ஸஹ ஸ ஸ்வர்க்கோ நிரயோ யஸ் த்வயா விநா*

என்பதனுல் ஸ்வர்க்க நரக சப்தங்களுக்குப் பொருள் கூறியிருக்கிருள். எம்பெருமானேடு கூடி வாழ்வதே ஸ்வர்க்கமென்றும், அவனைப் பிரிந்து கிலேசப்படுவதே நரகமென்றும் தெரிவித்தவாறு. சாஸ்த்ரங்களில் க்ருதக்ருத்யர் என்று ஓர் உத்தமாதிகாரி சொல்லப்படுகிருர். அவருடைய தன்மையை ஆசார்ய ஹ்ருதயத்தில் "சாஸ்த்ரிகள் தெப்பக்கையரைப்போலே இரண்டையு மிடுக்கிப் பிறவிக்கடலை நீந்த, ஸாரஜ்ஞர் விட்டத்திலிருப்பாரைப்போலே இருகையும் விட்டுக் கரை குறுகுங் காலமெண்ணுவர்கள்" என்கிற சூர்ணையின் வியாக்கியானத்தில் ஸேவிப்பது. அதில், ஸாரஜ்ஞர் என்னப்பட்ட அதிகாரியே இப்பாட்டில் கூறப்பட்டவரென்று கொள்க. திருமாலையில் *மேம்பொருள் போகவிட்டு மெய்ம்மையை மிகவுணர்ந்து, ஆம்பரி சறிந்து கொண்டு ஐம்புலனகத்தடக்கிக், காம்பறத் தலைசிரைத்து உன்கடைத் தலையிருந்து வாழுஞ் சோம்பர் * என்னப்பட்ட அதிகாரியேயிவர். இவரே அருங்கலம். உத்தம ஸத்பாத்ரமென்றபடி. " க்ருதக்ருத்யாঃ ப்ரதீக்ஷந்தே" இத்யாதி.

ஆக இவ்வர்த்த விசேஷங்களை நெஞ்சில் திடமாகப் பதியவைத்துக் கொண்டு பாசுரத்தை நோக்கினல் இதற்கு அநுகுணமான அர்த்தங்கள் பாங்காகப் புலப்படும். நோற்று – க்ருத க்ருத்யராகி யென்றபடி. சுவர்க்கம் புகுகின்ற—ஸு—வர்க்கம் என்பது ஸு—வர்க்கம் என்று பிரிந்து நல்ல கோஷ்டியென்று பொருள்படும். பெரியாழ்வார் கண்ணபிரானுடைய வேணுகான விஷயமாக ஒரு பதிகம் [*நாவலம் பெரிய தீவினில் வாழும்*] பாடி அதற்குப் பலனுரைக்குமிடத்து "குழலை வென்ற குளிர்வாயினராகிச் சாதுகோட்டியுட் கொள்ளப்படுவாரே" என்றருளிச் செய்தார்; அந்த கோஷ்டியே ஸுவர்க்க மென்பது. ஸுஷ்டுவான வர்க்கமென்றபடி. அந்த ஸாது வர்க்கத்திற் சேர்ந்தவர்கள் ஸாமான்ய ஜனங்களோடு வார்த்தையாடவும் மாட்டார்கள், அவர்களை அருகே வரவழைக்கவும் மாட்டார்க ளென்கிறது "மாற்றமுந்தாராரோ வாசல்திறவாதார்" என்பதனுல்.

* ப்ரஹர்ஷேணவருத்தா ஸா வ்யாஜஹார ந கிஞ்சந * என்று பிராட்டி ஸந்தோஷாதிசயத்தாலே விம்மல் பொருமலாய் ஒன்றும்பேசிற்றிலள் என்ருப்போலே பகவதநுபவ ஜநித ஹர்ஷப்ரகர்ஷத்தாலே வாய்திறந்தொன்று சொல்லமாட்டாத நிலைமை தெரிவிக்கப்படுகிறது மாற்றமுந்தாராரோ வென்பதனுல். ரஹஸ்யார்த்த விசேஷங்கள் அநதிகாரிகளின் செவிப்படலாகாதென்று வாசற்கதவைத் தாளிட்டு ஏகாந்தமாக உபதேசிப்பார்படியை நினைப்பூட்டுகிறது வாசல் திறவாதா ரென்பது.

[நாற்றத்துழாய்முடி யித்யாதி.] *தோளிணை மேலும் நன்மார்பின் மேலும் சுடர்முடிமேலும் தாளிணை மேலும் புனைந்த தண்ணந்துழா யுடையம்மான்* என்கிறபடியே எம்பெருமானுடைய திருமுடியிலே திருத்துழாய் அஸாதாரணமாக விளங்குவது போல, *தொடுத்த துழாய் மலர் சூடிக்களைந்தன சூடுமித் தொண்டர்களோம்* என்கிறபடியே பாகவதோத்தமர்களின் திருமுடியிலும் எம்பெருமான் சூடிக் களைந்த திருத்துழாய் சூடப்பெற்று விளங்குமாதலால் 'நாற்றத்துழாய்முடி' யென்ற விசேஷணமும் ஸ்வாபதேசார்த்த லக்ஷ்யபூமியிலே பொருந்தக்குறையில்லை. இங்ஙனே நாராயண னென்றதும் பொருந்தும்; "ஸாக்ஷாந் நாராயணோ தேவঃ க்ருத்வா மர்த்ய மயீம் தநூம், மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ரபாணிநா." என்கிற ப்ரமாணப்படியும்; * பீதகவாடைப் பிரானர் பிரம குருவாகி வந்து * என்கிற பெரியாழ்வார் திருவாக்கின்படியும் நாராயணனே யன்றே மநுஷ்யரூபேண அவதரித்துப் போந்தபடி. "சேமம் குருகையோ செய்ய திருப்பாற்கடலோ, நாமம் பராங்குசமோ நாரணமோ? தாமம் துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்குமுளவோ பெருமானுனக்கு." என்று நம்மாழ்வாரை நோக்கிக் கூறிய பாசுரம் இங்கே அநுஸந்தேயம்.

[நம்மால் போற்றப் பறைதரும் புண்ணியன்] *ஏற்றி மனத்தெழில் ஞான விளக்கை யிருளனைத்தும் மாற்றினவர்க்கொரு கைம்மாறு மாயனும் காணகில்லான், போற்றி யுகப்பதும் புந்தியிற் கொள்வதும் பொங்குபுகழ் சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே *என்று ஆசிரியர் பணித்தபடி ஆசார்யனைப் போற்றுவது சிஷ்ய க்ருத்யமாகையாலே ஸ்வரூபஜ்ஞர்களான சிஷ்யர்களால் போற்றப்பட்டு, பறைதரும் புண்ணியன்—நமக்கு உத்தேச்யமான புருஷார்த்தங்களைத் தந்தருள்பவனான பரமபாவனன் என்றபடி. "புநாதீதி புண்ய:. பரம்பரிசுத்தங்களான அர்த்த விசேஷங்களை யுபதேசித்து சிஷ்யர்களின் ஸகல கல்மஷங்களையும் போக்கிப் பரிசுத்தியை விளைவிப்பவரென்றவாறு. முத்ராலங்கார ரீதியில் அர்த்தம் கொள்ளும்போது விபக்தி அவிவக்ஷிதம். ஆகவே புண்ணியனுலென்ற த்ருதீயா விபக்திக்கு எங்கே அந்வயமென்று பார்க்கவேண்டா. அந்தந்த சொற்களிலிருந்து கிடைக்குமர்த்த விசேஷங்கள் ரஸிக்கத்தக்கன.

பண்டொருநாளென்று தொடங்கி, கும்பகரணனுடைய நித்திரையிற்காட்டிலும் பெருமைபெற்ற நித்திரை இந்த விலக்ஷண வ்யக்தியினிடத்திலுள்ளதாகச் சொல்லப்படுகிறது. ரஜஸ்தமோ குணகார்யமான நித்திரை அவனுடையது. அதுவன்று இங்கு. பெருந்துயிலென்றது பெருமை பெற்ற துயிலென்றபடியாய் ஸத்வ குண ப்ராசுர்யம் தோற்ற நின்ற நித்திரையைச் சொல்லுகிறது. நித்ரையென்பது ரஜஸ்தமோ குணகார்யமாக இருக்குமேயொழிய, ஸத்வகுண நிபந்தனமான நித்ரையும் ஒன்றுண்டோ வென்னவேண்டா; பாஹ்ய விஷயங்களொன்றையு மறியாமையை நித்ரை யெனப்படும். "யத்ர நாந்யத் பச்யதி நாந்யத் ச்ருணோதி நாந்யத் விஜாநாதி ஸ பூமா" என்கிறபடியே பாஹ்ய விஷயங்களிலே ஒரிந்த்ரியத்தையும் செல்லவொட்டாத பகவத்விஷய மனனத்திலேயே ஊன்றியிருப்பவர்கள் நித்ரை செய்பவர்களோடொப்பர்; இந்த நித்ரை பரமவிலக்ஷணமானது. இது பரம ஸாத்விகமுமானது. [கூற்றத்தின் வாய்வீழ்ந்த] கூற்றமென்று யமனுக்குப் பெயர்—உடலையுமுயிரையும் கூறு செய்பவனாகையாலே. யமனைச் சொன்னது யமனுடைய திசையைச் சொன்னபடியாய் தக்ஷிண திக்கைச் சொல்லக் கடவது. கும்பகரணனென்பது கும்பத்தைக் காரணமாக [ஜன்மபூமியாக]க் கொண்ட அகஸ்த்ய முனிவனைச் சொல்லக்கடவது; * தக்ஷிணா திக் க்ருதா யேந சரண்யா புண்யகர்மணா * என்கிற ஸ்ரீ ராமாயணப்படியே தென்திசையை நன்மை பெறுத்தின வண்டமிழ்மாமுனி யென்னப்பட்ட அகஸ்த்ய முனிவரை யொத்த மஹாத்மாவை நினைக்கிறது. [தேற்றமாய் வந்து திற] நாங்கள் தெளிவு பெறும்படி வாயைத் திறந்து ஸ்ரீஸூக்திகள் பணிக்கவேணுமென்றபடி. .... .... .... .... 10

11. கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து*
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்*
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே*
புற்றர வல்குற் புனமயிலே போதராய்*
சுற்றத்துத் தோழிமா ரெல்லாரும் வந்து*நின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட*
சிற்றாதே பேசாதே செல்வப்பெண்டாட்டி*நீ
எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய்.

இப்பாட்டில், கோவலர்தம் பொற்கொடியே!, புற்றரவல்குல்புனமயிலே!, செல்வப் பெண்டாட்டி! என்னும் ஸம்போதனங்கள் முன்னம் குறிக்கொள்ளத்தக்கன. கோவலர் என்கிற சொல் இடையர்களைச் சொல்லுவதுபோல வித்வான்களையும் சொல்லும். கோ என்னும் வடசொல்தானே கோவென்று திரிந்தது. அந்த வடசொல்லுக்கு உள்ள

பல பொருள்களில் வாக்கு என்பதும் ஒரு பொருளாகையாலே வாக்கிலே வல்லவர்—கோவலர்; அவர்களிடத்திலே பணிந்து வாழ்பவரைப் பொற்கொடி யென்கிறது. இனி, கோ—அலர் என்று பிரித்தும் பொருள் கொள்ளலாம். அரசர்க்குக் கோவென்று பெயர்; ஸ்வாதந்திரிய முடையவரென்று சொன்னபடி. கோ அல்லாதவர்கள் கோவலர்; ஸ்வாதந்திரிய நாற்றமே யின்றிப் பாரதந்த்ரியமே பரிமளிக்க நிற்பவர்களென்றபடி. அவர்களுக்குள்ளே பொற்கொடி—கொடியானது ஒரு கொள்கொம்பைப்பற்றியே ஜீவிக்குமாபோலே பரதந்த்ரர்களுக்குள்ளும் அத்யந்த பாரதந்த்ரியமே வடிவெடுத்த உத்தமாதிகாரியைச் சொன்னபடி.

[புற்றரவல்குல்] பாம்பானது வெளியில் திரியும்போது மிகப்பெரிய வடிவுடைத்தா யிருந்தாலும் அது புற்றிலே புகும்போது அப்பெரிய வடிவை மிகச்சிறிய தாக்கிக் கொள்ளும். அதுபோல் நுண்ணிய இடையை யுடையவளென்று இடையழகைச் சொல்லிப் புகழ்ந்திருக்கின்றது. ஜ்ஞான பக்தி விரக்திகளென்னும் மூன்றில் இடையிலுள்ள பக்தியின் சிறப்பைச் சொன்னபடி. பக்தி சிறக்கவுண்டானால் அது முன்னேயுள்ள ஞானத்தையும் பின்னேயுள்ள விரக்தியையும் ஸாதித்துத் தரும். * மாயாம் ந ஸேவே பத்ரம் தே ந வ்ருதா தர்மமாசரே, சுத்த பாவம் கதோ பக்த்யா சாஸ்த்ராத் வேத்மி ஜநார்த்தநம் * என்று த்ருதராஷ்ட்ரனை நோக்கி ஸஞ்ஜயன் சொன்னவார்த்தையினால் பக்தி ஜ்ஞாந ஸாதனமாகுமென்பது அறியவெளிது. * பரமாத்மநி யோ ரக்தோ விரக்தோ பரமாத்மநி * மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர் தோள் கைவிட்டு * இத்யாதி ப்ரமாணங்களினால் பக்தி, விரக்திஸாதனமுமாகுமென்பது அறிய வெளிது. ஸ்ரீமந்நாத முனிகளைத் துதிக்கின்ற ஆளவந்தார் * நமோசிந்த்யாத்புதாக்லிஷ்ட ஜ்ஞாந வைராக்ய ராசயே, நாதாய முநயே அகாத பகவத் பக்திஸிந்தவே * என்னும் ச்லோகத்தில் பக்தி ஸாத்யங்களான ஜ்ஞாந வைராக்யங்களை ஒரு சேர்த்தியாகச் சொல்லி அவற்றுக்கு ஸாதநமான பக்தியைத் தனிப்பட வருளிச்செய்தார். ஆக, ஜ்ஞாநபக்தி விரக்திகளுள் இடைப்பட்டதான பக்தியின் சிறப்பு ‘புற்றரவல்குல்’ என்றதனால் தெரிவிக்கப்பட்டதாயிற்று.

[புனமயிலே] மயிலுக்கும் ஆசாரியர்க்கும் பலபடிகளாலே ஸாம்யமுண்டு. (1) மயிலுள்ளவிடத்தே விஷப்பூச்சிகள் நாடமாட்டா; அதுபோல * யத்ராஷ்டாக்ஷர ஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே, ந தத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதிதுர்ப்பிக்ஷ தஸ்கரா:. * கொன்றுயிருண்ணும் விசாதி பகை பசி தீயனவெல்லாம் நின்றிவ்வுலகில் கடிவான் நேமிப் பிரான் தமர்போந்தார் * என்கிறபடியே மஹான்களுள்ள விடத்தில் ஒரு வகையான அவத்யமும் தலைகாட்டமாட்டாது. (2) மயில் ஸந்தோஷாதிசயமுண்டான காலத்திலே சிறகை விரித்துக் கூத்தாடும்; மஹான்களும் ப்ரஹ்மானந்தம் தலைசிறந்து பொங்குங் காலத்திலே தம்முடைய ஜ்ஞானவிகாஸத்தைக் காட்டி நின்றாடுவர்கள். (3) ‘மயிலே மயிலே! இறகு போடு’ என்றால் போடாது; அதனை ச்ரமப்படுத்தியே இறகு ஸம்பாதிப்பார்கள்; அதுபோல அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யர்களான மஹான்களை * மைத்ரேய: பரிபப்ரச்ச ப்ரணிபத்யாபிவாத்ய ச * என்றும் * ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா * என்றும் சொல்லுகிறபடியே மிகவுமநுவர்த்தித்தே ஜ்ஞாநஸம்பாதனம் செய்யலாயிருக்கும். (4) * கருங்கண் தோகை மயிற்பீலி யணிந்து * மகுடாலம்பி மயூரபிஞ்சமாலா:* இத்யாதிப்படியே மயிலின் அவயவைகதேசம் எம்பெருமானுடைய திருமுடிமீது ஏறி விளங்கும். அதுபோல எம்பெருமான் ஆழ்வாராசாரியர்களின் ஸ்ரீஸூக்திகளைக் கேட்டருளித் தலைதுலுக்கிக் கொண்டாடுவன். (5) மயில் முகிலைக் கண்டவாறே களித்துக் கூத்தாடும்; மஹான்களும் * கார்முகில்போல் வண்ணன்கண்ணனெம்மானைச் சொல்லிப்பாடி யெழுந்தும் பறந்தும் துள்ளுவர்கள். (6) மயிலைக் கண்டவாறே பாம்புகள் பயந்தோடும்; மஹான்களைக் கண்டவாறே குடிலவ்ருத்திகளா யிருப்பார் அஞ்சி நடுங்கி அகல்வார்கள். இங்ஙனே மற்றும் பல பொருத்தங்கள் கண்டு கொள்க.

[செல்வப்பெண்டாட்டி] * குலந்தரும் செல்வம் தந்திடும் * என்றவிடத்தில் விவக்ஷிதமான பக்திச் செல்வமுடைமையும், * ந ஸ்த்ரீ ஸ்வாதந்த்ர்யமர்ஹதி * என்கிற படியே ஸ்த்ரீகளைப்போலே பாரதந்த்ரியமே வடிவெடுத்திருக்குமிருப்பும் சொல்லிற்றாயிற்று. இனிப் பாசுரத்தை ஆதியே தொடங்கி யநுபவிப்போம். [கற்றுக் கறவை] கன்று + கறவை என்றும் பிரிக்கலாம், கற்று கறவை என்றும் பிரிக்கலாம். கற்று— *குருகுலக்லிஷ்டோ முராரி: கவி:* என்கிறபடியே குருகுலத்திலே நெடுநாள் வஸித்திருந்து வரியடைவே கல்விகளைக் கற்று. "அங்குஷ்டாக்ரபரீணஹ ஜிஹ்வாக்ராயாஸ பீரவ: ஸர்வாங்கீண பரிக்லேசம் ஸஹந்தே ஹந்த ஸந்ததம்" என்றான் ஒரு மஹாகவி ; கட்டைவிரல் நுனியளவான நாக்கின் நுனியை இளமையிலே பரிச்ரமப் படுத்த இறாய்த்திருந்தவர்கள் பிறகு யாவஜ்ஜீவம் ஸகலாவயவங்களையும் பரிச்ரமப் படுத்தி ஜீவிக்கவேண்டுமென்பது இந்தச்லோகத்தின் கருத்து. ஆகவே இளமையிற் கற்கவேண்டுமென்கை.

[கறவை] காமதேனுபோலே ஸகலார்த்தங்களையும் கறக்கவல்ல மஹான்களிடத்திலே யென்றபடி. [கணங்கள் பல கறந்து] கணமென்று சிறியதோரளவுக்குப் பெயர் ; ஒரேநாளில் வித்வானாய்விட முடியாது ; சிறிது சிறிதாகவே பயிலவேண்டுமென்கை. (க்ஷண:) என்கிற வடசொல்லும் கணமெனத் திரியும் ; *க்ஷணச: கணசச்சைவ வித்யாம் அர்த்தஞ்ச ஸாதயேத் * என்றதை நினைப்பது. [செற்றார்திறலழியச் சென்று செருச்செய்யும்] நிரீச்வரவாதம் பண்ணுவார், நிர்க்குணப்ரஹ்மவாதம் பண்ணுவார், பிக்ஷுகனைப் பரதெய்வமென்பார், வேதங்களை அப்ரமாணமென்பார், ஈச்வரன் அநுமாநகம்யனென்பார் ஆக இத்தகைய துர்வாதிகள் செற்றாரெனப்படுவர். அன்னவர்களிருக்குமிடங்களிலே சென்று வாதயுத்தங்களை நடத்தி ஸித்தாந்த ஸ்தாபனம் பண்ணவேணுமென்று சிக்ஷிக்கிறபடி. [குற்றமொன்றில்லாத] அப்படி வாதயுத்தம் நடத்துகையில் குற்றமொன்று ஏற்படும் ; (அதாவது) "குரும் த்வங்க்ருத்ய ஹுங்க்ருத்ய விப்ரம் நிர்ஜித்ய வாதத:, ச்மசானே ஜாயதே வ்ருக்ஷ: கங்கக்ருத்ரோபஸேவித:" என்னப்பட்டவொரு குற்றமுண்டாகும் ; இக்குற்றத்திற்கு அவகாசமில்லாதபடி வாதயுத்தம் நடத்துவது. தர்சந ஸ்தாபநார்த்தமாகச் செய்யும் வாதயுத்தத்தில் இக்குற்றம் புகாதென்பர் ஒரு சாரார் ; ஆசார்யபீடத்திலமர்ந்தவர்கள் தாங்கள் நேராக வாதயுத்தஞ் செய்கையன்றிக்கே [தாசரதிகளையிட்டு விரோதி நிரஸநம் பண்ணுவித்துக்கொண்ட விச்வாமித்ரமஹர்ஷியைப்போல] தமது சிஷ்யர்களையிட்டு துர்வாதி நிரஸநம்செய்துகொள்ளும் படியைத் தெரிவித்ததாகிறது. இந்த முறை ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் தேசிகனால் விசதீகரிக்கப்பட்டுள்ளது. நம்முடைய ஸபாபுஜங்கீஸர்வஸ்வ நூலில் இது பரக்கக் காணத்தக்கது. அது இரண்டு ஸர்க்கங்கொண்ட ச்லோகரூபமான க்ரந்தம் ; தமிழ்ப் பொழிப்புரையோடும் கூடியது.

[சுற்றத்துத் தோழிமாரெல்லாரும் வந்து] மஹான்களிடத்திலே தேஹபந்துக்களும் ஆத்மபந்துக்களும் நெருங்கியிருப்பார்களென்க. இது எம்பெருமானார் பக்கலிலே காணத்தக்கது. எம்பார் முதலியாண்டான் போல்வார் ஸ்வாமிக்கு தேஹ பந்துக்களுமாயிருந்தார்கள் ; கூரத்தாழ்வான் கிடாம்பியாச்சான் போல்வார் ஆத்ம பந்துக்களாயிருந்தார்கள். [நின்முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட] முற்றமென்று பாகவதோத்தமர்கள் திரளுமிடத்தைச் சொல்லுகிறது. * அணியரங்கன் திருமுற்றத் தடியார் தங்களின்பமிகு பெருங்குழுவு கண்டு * என்ற பெருமாள் திருமொழியுங் காண்க. [சிற்றாதே பேசாதே] * சிற்றவேண்டா சிந்திப்பேயமையும் * (திருவாய்மொழி 9-1-7) என்ற நம்மாழ்வார் கட்டளையின்படியே யிருக்குமிருப்பைச் சொல்லுகிறது. 11

12. **கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி ***
**நினைத்து முலைவழியே நின்று பால்சோர ***
**நனைத்தில்லஞ் சேறுக்கும் நற்செல்வன் தங்காய் ***
**பனித்தலை வீழநின் வாசற்கடை பற்றி ***
**சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற ***
**மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய் ***
**இனித்தா னெழுந்திரா யீதென்ன பேருறக்கம் ***
**அனைத்தில்லத்தாரு மறிந்தேலோ ரெம்பாவாய்.**

கற்றுக் கறவை யென்னும் பதினோராம் பாட்டையும், கனைத்திளங்கற்றெருமை யென்னும் இப்பன்னிரண்டாம் பாட்டையும் சேர்த்துப் பார்த்தால் ஒரு விலக்ஷண மான சாஸ்த்ரார்த்தம் தெரியவரும். கற்றுக்கறவைப் பாசுரத்தில் "கறவைக்கணங் கள் பல கறந்து'' என்று இடையர்களின் க்ருத்யமாகிய பால் கறப்பதென்னும் செயல் செய்யப்பட்டதாகச் சொல்லிற்று. [* கனைத்திளம் பாசுரத்தில் அந்த க்ருத்யம் செய்யப்படவில்லை யென்று சொல்லிற்று.] அது எந்த வாக்கியத்தினால் சொல் லிற்றென்னில் "கனைத்திளங்கற்றெருமை கன்றுக்கிரங்கி நினைத்து முலைவழியே நின்று பால் சோர நனைத்தில்லஞ் சேறாக்கும்'' என்பதனால்—எருமையைக் கறப்பா ரில்லாமலும் கன்றைக் கட்டவிழ்த்து விடுவாரில்லாமலும் போனபடியாலே கன்றின் வாய் வழியுமன்றிக்கே கறப்பார் கைவழியுமன்றிக்கே எருமையானது முலை வழி யாகவே பாலைப் பெருக்கி இல்லத்தை யெல்லாம் நனைத்துச் சேறாக்கி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. கறக்கவேண்டியவர் ஏன் கறக்கவில்லை யென்று கேள்வி வரும். அதற்கு விடையாக 'நற்செல்வன்' என்றது. இந்த நற்செல்வன் யாவனென்னில், கண்ணபிரானை ஒரு க்ஷணகாலமும் விட்டுப் பிரிய மாட்டாதே அநவரதமும் கண்ண னோடு கூடவே திரியுமவனும். பெரியாழ்வார் தமது திருமொழியில் (3—4—3.) *சுரி கையும் தெறிவில்லும் செண்டு கோலும் மேலாடையும் தோழன்மார் கொண்டோட. ஒரு கையா லொருவன் தன் தோளை யூன்றி* என்றருளிச் செய்கிறார்; கண்ணன் தனக்கு அந்தரங்க ப்ரியனான ஒரு கோபால பாலகனுடைய தோளை யூன்றிக் கொண்டு உலாவுவனென்று கூறியுள்ளார். அவன் ஸதா ஸர்வதா கண்ணனோடு கூடவே யிருந்து போது போக்குமவனாகையாலே அவனுக்குத் தன் ஜாதிக்கேற்ற கருமமாகிய கறத்தல் தொழிலைச் செய்வதற்கு ப்ரஸக்தி யில்லாமற் போயிற்றென்று இங்குக் காட்டப்பட்டது. ஆக, கீழ்ப்பாட்டில், கறப்பதாகிய ஜாதி க்ருதயத்தைச் செய்கிறபடி சொல்லி இப்பாட்டில் அது செய்யாதபடி சொல்லுகையாலே உலகில் இருவகைப்பட்ட அதிகாரிகளுண்டென்று காட்டப்பட்டதாகிறது. கர்மாநுஷ்டானத் திலேயே ஊன்றியிருப்பார் சிலர்; பகவத் கைங்கர்ய நிஷ்டையாலே கர்மாநுஷ் டானத்திற்கு அவகாசம் பெறாதே அது செய்யாதிருப்பார் சிலர். முந்தின அதிகாரி கள் கற்றுக்கறவைப் பாட்டிலே சொல்லப்பட்டனர்; பிந்தின அதிகாரிகள் இப் பாட்டிலே சொல்லப்பட்டனர். ஆசார்ய ஹ்ருதயத்தில் "ஜாத்யாச்ரம தீக்ஷைகளில் பேதிக்கும் தர்மங்கள் போலே அத்தாணிச் சேவகத்தில் பொதுவானது நழுவும்'' என்ற சூர்ணையின் மணவாள மாமுனிகளின் வியாக்கியானம் ஸேவிக்கத் தக்கது.

ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் *"யதி சக்ரோஷி கச்ச த்வம் அதிசஞ்சலசேஷ்டித!, இத்யுக்த்வா அத நிஜம் கர்ம ஸா சகார குடும்பிநீ''* என்ற ச்லோகத்திற்கு ஒரு விசேஷார்த்தம் பெரியவாச்சான் பிள்ளை திருவுள்ளம்பற்றி யிருப்பதுண்டு; அதா வது—யசோதைப் பிராட்டியானவள் கண்ணபிரானை ஸஞ்சாரக்ஷமனன்றிக்கே கட்டிப் பொகட்டு வைத்து, பிறகு தான் தன்னுடைய க்ருத்யத்தைச் செய்யப் போனாள் என்று இதில் சொல்லியிருப்பதானது, நம் முதலிகள் எம்பெருமானு

டைய வெளிப்புறப்பாடு காலங்களில் அநுவ்ருத்தியாலே நித்யகர்மாநுஷ்டானம் தவிர்ந்திருந்து, எம்பெருமான் புறப்பாடு தலைக்கட்டி ஸ்வஸ்தானத்திலமர்ந்தவாறே நித்யகர்மாநுஷ்டாந நிஷ்டராவர்களென்பதற்கு ஸூசகம் என்று. இவ்விஷயமும் இங்குக் குறிக்கொள்ளத்தக்கது.

இப்பாசுரத்தில் அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யரன்றிக்கே க்ருபா மாத்ர ப்ரஸந்நாசார்யராயிருப்பாருடையபடி சொல்லுகிறது. இளங் கன்றுகளையுடைய எருமை கன்றுக்கிரங்கி [கன்று அருகேயில்லாமற் போனாலும் பாவநாப்ரகர்ஷத்தாலே இருப்பதாக] நினைத்து முலைவழியே நின்று பால் சோருமாபோலே, இளையசிஷ்யர்களையுடைய ஆசார்யர் சிஷ்யர்கள் அநுவ்ருத்தி செய்யாமற்போனாலும் "நண்ணுதார் மெய்யிலூனுசை நிர்வேதத்தோடே ......" "தாய்க்கும் மகனுக்கும் தம்பிக்கும் இவர்க்கும் இவரடி பணிந்தவர்க்குமே இவையுள்ளது" என்கிற ஆசார்யஹ்ருதய சூர்ணைகளில் அருளிச்செய்கிறபடியே தாமாகப் பரமக்ருபை கொண்டு ஸ்வாவதாரப்ரயோஜனத்தை நினைத்துப் பால்போன்ற அர்த்தவிசேஷங்களைச் சொரிவர்கள் என்பது இவ்விடத்திற்கு உள்ளுறை பொருள். இங்கு எருமை என்பது மஹிஷி யென்றபடியாய் லக்ஷிதலக்ஷணையாலே தேவதேவ திவ்யமஹிஷீதுல்யரான ஆசார்யரை நினைப்பூட்டக்கடவது. [முலைவழியே பால்சோர] கறவைகள் நான்கு முலைகளினின்றும் பால் சுரப்பதுபோல ஆசார்யரும் ஸ்ரீபாஷ்யம் கீதாபாஷ்யம் பகவத்விஷயம் ரஹஸ்யம் ஆகிற க்ரந்த சதுஷ்டயத்தினின்று அர்த்தங்களைச் சுரப்பர். [நின்றுபால்சோர] நின்று—ஓயாதே நிலைநின்று என்றபடி. வான்மீகிபகவான் நாரத மஹர்ஷியை நோக்கி, சில திருக்குணங்களைச் சொல்லி இவையுடையவொரு புருஷபுங்கவனைச் சொல்லவேணு மென்றவாறே *இக்ஷ்வாகு வம்சப்ரபவ: ராமோ நாம ஜநை: ச்ருத:* என்று தொடங்கி வர்ஷித்தான் நாரதபகவான். இங்ஙனே ஸ்ரீவிஷ்ணுபுராண பகவத்கீதாதிகள் அல்பப்ரார்த்தனையிலே அபரிமிதக்ஷீரதாரையாக அவதரித்தமையை இங்கு அநுஸந்திப்பது. [நனைத்து இல்லஞ்சேறாக்கும்] *ஏறடர்த்ததும் ஏனமாய் நிலங் கீண்டதும் முன்னிராமனாய் மாறடர்த்ததும் மண்ணளந்ததும் சொல்லிப்பாடி, வண்பொன்னிப் பேராறுபோல் வருங் கண்ணநீர் கொண்டு அரங்கன் கோயில் திருமுற்றம் சேறுசெய்தொண்டர்* [பெருமாள் திருமொழி 2—3] என்கிறபடியே பகவத்குணாநுபவ ஜநித பாஷ்பதாரைகளாலே தங்களிருப்பிடத்தைச் சேறாக்குவதேயிறே பரமபாகவதர்களுக்குப் பணி. *கங்குலும்பகலும் கண்டுயிலறியாள் கண்ணநீர் கைகளாலிறைக்கும்* என்ற நம்மாழ்வாரைப்போலவும் *பங்கதிக்தஸ் து ஜடிலோ பரத:* என்னப்பட்ட பரதாழ்வானைப்போலவும் இருக்கும் அநுபவரஸிகர்களைச் சொல்லுகிறது. [நற் செல் வன்] இப்படியிருக்கைதானே விலக்ஷணமான செல்வமாயிற்று. [தங்காய்] ஜ்யேஷ்டை யென்று ப்ரஸித்தி பெற்றவள் மூதேவி; அவள் ரஜஸ்தமோ குணமே வடிவெடுத்திருப்பள். தங்கையென்று ஸ்ரீமஹா லக்ஷ்மிக்கு ப்ரஸித்தி. புருஷகார க்ருத்யத்திலே அவளை யொத்திருப்பரென்க.

தங்காய்! என்றவிடத்தில் விலக்ஷணமானவொரு பொருளும் கேண்மின். க்ருஷ்ணயஜுர்வேதத்தில் முதல்காண்டம் எட்டாம்ப்ரச்நத்தில் *ஏஷ தே ருத்ர பாக: ஸஹ ஸ்வஸ்ரா அம்பிகயா தம் ஜுஷஸ்வ* என்று ஓதப்பட்டுள்ளது. 'ருத்ரபகவானே! ஸ்வஸாவான அம்பிகையோடுகூட இந்த பாகத்தை அடைந்துகொள்' என்பது இதற்குப் பொருள். [ஸ்வஸ்ரா அம்பிகயா] என்று இங்கு மூலமுள்ளது. வடமொழியில் 'ஸ்வஸா' என்று தங்கைக்குப் பெயர்; ருத்ரனுக்கு அம்பிகை எப்படி தங்கையாகக் கூடுமென்று சங்கை தோன்றும். பட்டபாஸ்கர பாஷ்யத்தில் பலவகையாகப் பொருந்தவிடப்பட்டிருப்பதைக் காண்கிறோம். அவற்றுள் ஒருவகை கேண்மின். லக்ஷிதலக்ஷணை என்கிற சாஸ்த்ர மர்யாதையின்படி (ஸ்வஸா) என்னும் பதம் தத்ஸமாநார்த்தகமான (பகிநீ) என்கிற பதத்தைக் காட்டி நிற்கும். அந்த பதத்திற்கு ஸௌபாக்யவதீ என்கிற பொருளுமுண்டு. அப்பொருளே இங்கு விவக்ஷிதமாகி 'ஸௌ

பாக்யவத்யா அம்பிகயா ஸஹ ஜுஷஸ்வ' என்பதாக பாஷ்யமிட்டார். ஸௌ பாக்யவதி என்னுமர்த்தம் ஸ்வஸா என்கிற சொல்லுக்கு ஸாக்ஷாத்தாக ஸம்பவியாமற் போனாலும் கீழே உபபாதித்த லக்ஷிதலக்ஷணா க்ரமத்தாலே ஸம்பவிப்பதாகும். இந்த க்ரமத்தை திவ்யப்ரபந்தங்களும் தழுவியிருப்பதுண்டு; இரண்டாந் திருவந்தாதியில் * கூந்தல்வாய் கீண்டானே * என்று பூதத்தாழ்வார் அருளிச்செய்திருப்பதுண்டே. கூந்தலென்கிற தமிழ்ச் சொல்லானது கேசமென்கிற வடசொல்லை ஸ்மரிப்பிக்க, அவ்வழியாலே 'கேசி ஹந்தா' என்கிற பொருள் தேறுகின்றதன்றோ. ஆகவே இந்த லக்ஷிதலக்ஷணாக்ரமம் சாஸ்த்ரீயமும் ஸர்வஸம்ப்ரதிபந்நமுமாகக் கொள்ளத்தக்கது. தங்காய்! என்ற இவ்விடத்திலும் இந்த க்ரமத்தில் பொருள் காட்டினது சாஸ்த்ரீயமேயாகுமென்க.

[பனித்தலைவீழ நின்வாசல் கடைபற்றி] * அறிவையென்னுமமுதவாறு தலைப் பற்றி வாய்க்கொண்டதே * என்கிற பெரியாழ்வார் திருமொழியை இங்கே நினைக்க வேணும். ஆசார்யனுடைய திருமாளிகை வாசலைப் பற்றி நின்றால் அறிவையென்னு மமுதவாறு தலைப்பற்றிற்றாகுமென்பதில் ஸந்தேஹமுண்டோ? [சினத்தினால் இத்யாதி] சின்னம் என்கிற சொல் சினமென்று தொகுத்தல் விகாரம் பெற்றுக் கிடக்கிறது. சின்னமாவது அடையாளம். சிஹ்நமென்கிற வடசொல் திரிபு. பஞ்சஸம்ஸ்கார முகத்தாலே சின்னஞ்செய்து என்றபடி. * தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ் திருச்சக்கரத்தின் கோயிற்பொறியாலே யொற்றுண்டு நிற்கப்பண்ணி. [தென்னிலங்கைக் கோமானைச்செற்ற] ராவணன் என்றவாறே 'நமமேயம்' என்பதுதான் நினைவுக்கு வரக் கடவது. * வணங்கலிலரக்கன் * என்றும் * வணங்காமன்னனாய்த் தோன்றி * என்றும் அருளிச்செய்தாரே திருமங்கைமன்னனும். அப்படிப்பட்ட அஹம்பாவத்தைப் போக்கினபடியைச் சொல்லிற்றாகக் கொள்க. [மனத்துக்கு இனியான்] 'மனனம்' என்கிற சொல் கடைக் குறையாய் மனமென்றுள்ளது. மனனம் செய்வதற்குப் பரமபோக்யராயிருப்பர் ஆசார்யர். சிந்தித்த சிந்தனை புறம் பொசிந்து பாட்டாகப் பெருகினபடியாலே பாடவும் எனப்பட்டது. [நீ வாய் திறவாய்] எல்லாரும் பாட முடியுமோ? பாடினால் கேட்பதற்கும் சில அதிகாரிகள் வேண்டுமே.

[இனித்தானித்யாதி] ஸதாசார்யர் கிடைத்த பின்பும் * அநாதி மாயயா ஸுப்த: * என்றிருக்கவொண்ணுமோ? மாயாஸ்வாபம் மடிந்தொழியுங்காலம் அணுகிற்றென்று களித்தெழுந்திருக்க வேணுமென்கிறது. [அனைத்தில்லத்தாரு மறிந்து] ஆசார்யரொருவராலே உலகமெல்லாம் அறிவு பெறும்படியாயன்றோ விருப்பது. மூவாயிரப்படியில் பெரியவாச்சான்பிள்ளை எம்பெருமானாரை ப்ரஸ்தாவித்திருப்பதும் காணத்தக்கது. ... .... .... .... 12

13. புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லாவரக்கனை *
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய் *
பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம் புக்கார் *
வெள்ளியெழுந்து வியாழ முறங்கிற்று *
புள்ளுஞ் சிலம்பினகாண் போதரிக்கண்ணினாய் *
குள்ளக்குளிரக் குடைந்து நீராடாதே *
பள்ளிக்கிடத்தியோ பாவாய்நீ நன்னாளால் *
கள்ளந் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய்.

இப் பாட்டில் இன்சுவைப் பொருளொன்றை முன்ன மநுபவிப்போம். கீழ்ப் பாட்டில் "சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக் கினியானைப் பாடவும் நீ வாய் திறவாய்'' என்று கண்ணபிரானுடைய ப்ரஸ்தாவமே

யில்லாமல் இராமபிரானைக் கொண்டாடிக் கூறியதிலிருந்து திருவாய்ப்பாடியில் ஒரு பெரிய கிளர்ச்சி யுண்டாகி விட்டது ; (அதாவது) கண்ணபிரானுக்கு அஸாதாரண ஸ்தலமாகிய இவ்வாய்ப்பாடியில் இராமன் பெயரைச் சொல்லுவது தேவதாந்தரத்தின் பெயரைச் சொல்லுவதோ டொக்குமன்றோ. * ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாமபவந் கதா: * என்னும்படியான அயோத்யையிலே க்ருஷ்ண நாமத்தைச் சொன்னால் அங்குள்ளார் ஸஹித்திருப்பர்களா ? இவ்வாய்ப்பாடியில் ராமநாமத்தை யாரேனும் சொல்ல விரும்பினால் பலராமனுடைய நாமத்தைச் சொல்லலாமே யல்லது தென்னிலங்கைக் கோமானைச் செற்ற ராமனுடைய பெயரையா இங்குச் சொல்லுவது ? அதிலும் ராமனை 'மனத்துக்கு இனியான்' என்றும் சொன்னதனால் நம் கண்ணன் மனத்துக்கு இனியானல்லன் போலல்லவா தோன்றுகிறது. ஒருவன் மனத்துக்கு இனியானாக வேணுமானால் தேஹ குணங்களாலும் ஆத்ம குணங்களாலும் ஆக வேணும்; இவ்விரண்டு குணங்களிலும் கண்ணன் உயர்ந்தவனா ? இராமன் உயர்ந்தவனா ? என்று ஆராய்ந்து பார்க்குமளவில் கண்ணனே மிக வுயர்ந்தவனாவன். கழுத்திலே ஓலை கட்டித் தூது போன குணமும், "மணிவிடம்பிநி தஸ்ய மநோஹரே வபுஷி மக்ந மநா முளி மண்டலீ, ஜபமமுஞ்சத ஹோமமமுஞ்சத வ்ரதமமுஞ்சத வேதமமுஞ்சத" என்றும் "யதார்ஹம் கேசவே வ்ருத்தி மவசா: ப்ரதிபேதிரே" என்றும் சொல்ல நின்ற நலமும் இராமனுக்கு எட்டுமோ ? * எம்மழகனார் அணியாய்ச்சியர் சிந்தையுள் குழகனார் * என்ன நின்ற ஏற்றம் நம் கண்ணனுக்கேயன்றோ அஸாதாரணம். கீதாசார்யனான ஏற்றமும் அநிதரஸாதாரண மன்றோ. அதவா, இராமனே மனத்துக்கு இனியானாக இருக்கட்டும் ; நம் கண்ணன் மனத்துக்கு இனியனல்லன் என்பதாகவும் உண்மை யிருக்கட்டும். நம்முடைய கணவன் குரூபியும் மூர்க்கனுமா யிருக்கிறனென்று ஸுந்தரனும் மேதாவியுமான பரபுருஷனைக் காதலிப்பது தகுமோ? என்றிப்படி விவாத கோலாஹலம் வளர்ந்துவிட்டது. மருமமறிந்தவர்கள் அந்தோ இதென்ன வம்பு விவாதம்! இராமன் வேறு கண்ணன் வேறு என்கிற இந்தத் தவறான நினைவு உங்களுக்கு எப்படியுண்டாயிற்று! யசோதை கண்ணனை யழைக்கும்போது "வருக வருக வருக விங்கே வாமனநம்பீ வருக விங்கே, கரியகுழல் செய்ய வாய்முகத்தென் காகுத்தநம்பீ வருக விங்கே" என்று பலகாலுமழைக்க நீங்கள் கேட்டதில்லையா! ஆயர் சிறுமிகளே! நீங்களும் சிற்றிலிழைக்கையில அதைக் கண்ணன் வந்து சிதைத்த போது "சீதைவாயமுத முண்டாய்! எங்கள் சிற்றில் நீ சிதையேல்" என்று சொன்னதில்லையா? பொய்கைக் கரையில் அவன் வஸ்த்ராபஹாரம் பண்ணின போது "இரக்கமேலொன்று மிலாதாய் இலங்கை யழித்த பிரானே" என்று சொன்னதில்லையா? என்றிங்ஙனே பலவுஞ் சொல்லி ஸமாதானப் படுத்த ஒருவாறு ஸமாதானமடைந்த கோபிகள் 'கண்ணனும் ராமனுமாகிய இருவரையும் பாடுவோம் ; கண்ணனே நமக்குத் குலதெய்வமாகையால் அவனை முன்னே பாடிப் பிறகு ராமனைப் பாடுவோம்' என்று சொல்லி அப்படியே * புள்ளின் வாய்கீண்ட கண்ணபிரானது கீர்த்திமை பாடுவார் முன்கோஷ்டியாகவும், * பொல்லா வரக்கனைக் கிள்ளிக் களைந்த இராமனது கீர்த்திமை பாடுவார் பின் கோஷ்டியாகவும் அமைந்து பாடிக் கொண்டே செல்கின்றன ரென்னும் ஸ்வாரஸ்யம் இப்பாட்டில் அநுபவிக்கத் தக்கது.

இதில், போதரிக்கண்ணினாய்! பாவாய்! என்ற இரண்டு விளிகள் முன்னம் குறிக்கொள்ளத்தக்கன. போதம் என்னும் வடசொல் போது எனத்திரியும்; * போதிற் கமல வன்னெஞ்சம் * என்ற பெரியாழ்வார் திருமொழியிலும் இந்தப் பிரயோக முள்ளது. போதமாவது அறிவு ; அதனை ஹரிப்பதிலேயே நோக்கமுடையவரே! என்று ஒரு விலக்ஷணதிகாரியை ஸம்போதித்தபடி. ஜிஜ்ஞாஸுவான அதிகாரியே! என்றதாயிற்று. [பாவாய்] பாவையென்று பதுமைக்குப் பெயர். அது, வைத்தவிடத்திலேயே யிருப்பதுபோல பாரதந்திரியமே வடிவாயிருக்கு மதிகாரியே! என்றபடி. [பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம்புக்கார்] பாவைக்களமென்று காலக்ஷேப கூடத்தைச்

சொன்னபடி. பிள்ளைகளென்று ஸப்ரஹ்மசாரிகளைத் தெரிவித்தவாறு. நம்மவர்கள் யாவரும் காலக்ஷேப ஸ்தலத்திற்குப் போய்ச் சேர்ந்துவிட்டார்களென்று உணர்த்திய படி. போனவர்களுக்குப் பாதேயமின்னதென்கிறது முன்னிரண்டடிகளால்.

புள்ளின்வாய்கீண்டானைக் கீர்த்திமைபாடிப் போனார்கள், பொல்லாவரக் கனைக் கிள்ளிக்களைந்தானைக் கீர்த்திமைபாடிப் போனார்களென்கிறது. கண்ண பிரான் *பள்ளத்தில் மேயும் பறவையுருக் கொண்டு கள்ளவசுரன் வருவானைத் தான்கண்டு, புள்ளிதுவென்று பொதுக்கோ வாய்கீண்டிட்டான்; அப்படி ஆஸுரப்ரக்ருதிகளாய் ப்ரச்சந்ந பௌத்தர்களென்று ப்ரஸித்தர்களானவர்களை வாய் திறக்கவொட்டாமல் வாய்மாளப்புடைத்தவரான ஆசார்ய ஸார்வ பௌமருடைய பெருமை சொல்லிற்றாயிற்று. மூலத்தில் பகாஸுரனைச் சொன்னது உபலக்ஷண மாய் அவனைப்போன்ற மற்றும் பலரையும் கொள்ளக்கடவதாகையாலே, உள்ளுறை பொருளிலும் * தற்கச் சமணரும் சாக்கியப்பேய்களும் தாழ்சடையோன் சொற்கற்ற சோம்பரும் சூனியவாதரும், நான்மறையும் நிற்கக் குறும்புசெய் நீசருமென்னப்பட்ட ஆஸுரப்ரக்ருதிகள் பலரையுங் கொள்ளவடுக்கும். க்ருத்ரிம புத்தியோடு எதிரிட வந்தவர்களெல்லாரையும் வாய்மாளப்பண்ணின படியைத் தெரிவித்தவாறும்.

[பொல்லாவரக்கனைக் கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமைபாடி] க்ருஷ்ணவதாரத்தில் அஸுரர்களும், ராமாவதாரத்தில் ராக்ஷஸர்களும் எதிரிட்டு மடிந்ததாக இதிஹாஸங் களினாலறிகிறோம். அவ்வஸுர ராக்ஷஸ உபய வர்க்கத்தினரும் ஆசாரியர்களின் காலத்திலே எதிரிட்டு முடிந்தார்கள். ஆழ்வார் * பொலிக பொலிகவிலே * அரக்கர சுரர் பிறந்தீருள்ளீரேல் உய்யும் வகையில்லை தொண்டீர் * என்றருளிச் செய்தது எம்பெருமானார் காலத்து நிகழ்ச்சியை முன்னமே ஸாக்ஷாத்கரித்து அருளிச்செய்த தாகையாலே இப்பாட்டில் சொன்ன அஸுர ராக்ஷஸவிநாசநம் ஆசார்ய ஸார்வ பௌமர் செய்ததேயாகக் கொள்ளக் குறையில்லை. இத்தகைய பெருமைவாய்ந்த ஆசார்யருடைய திவ்யகீர்த்திகளை யநுஸந்தானம் செய்து கொண்டே பல பக்தர்கள் காலக்ஷேப ஸ்தலத்திற்குச் சென்று சேர்ந்தமை சொல்லிற்றாயிற்று.

[வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்று] இது ஸுப்ரபாதலக்ஷணம் சொல்லுகிற படி. அஜ்ஞாநாந்தகாரம் நீங்கி நல்ல ஜ்ஞானோதய முண்டாகுங் காலமணுகிற் றென்று ஸூசிப்பித்தவாறு. [புள்ளும் சிலம்பின] குயில் கொக்கு அன்னம் கருடன் என்னுமிந்த நான்கு பக்ஷிகளை யெடுத்துப் பரமபாகவதர்களின் ஒரோவகைக்கு ஒப்புச் சொல்லுவதுண்டு. கண்டத்வநியிலே குயில் போன்றிருப்பவர்களாய், ஏகாக்ர சிந்தையிலே கொக்கைப் போன்றிருப்பவர்களாய், ஸாரக்ரஹணத்திலே ஹம் ஸத்தையொத்தவர்களாய், * தாஸஸ் ஸகா வாஹநமாஸநம் த்வஜ: * இத்யாதிப் படியே எம்பெருமானுக்குப் பலவகையடிமைகளுஞ் செய்வதில் பக்ஷிராஜனைப் போன்றவர்களாயிருப்பாரை இங்கு ஸ்மரிப்பது. அன்னவர்கள் ஆரவாரஞ் செய்து கொண்டு கிளம்பினார்களென்கிறது.

[குள்ளக்குளிரவித்யாதி] நீராடுகையாவது ஞானத்துறை படிந்தாடுகை. குடைந்து நீராடுகையாவது — மூலை முடுக்குகளிலுள்ள அர்த்தவிசேஷங்களில் ஒன்றையும் விடாமல் பரிபூர்ணவகாஹநம் செய்து கொண்டு போருகை. அதனால் ஸகலதாபங்களும் தீர்ந்து ஆத்மபர்யந்தமான குளிர்ச்சி விளையு மாகையாலே அதுதோன்றக் குள்ளக்குளிரவென்கிறது. இங்ஙனே யவகாஹிக்க வேணுமென்று காட்டினபடி. [பள்ளிக்கிடந்தி] பள்ளியாவது கல்வி; அது தன்னிலே ஊற்றமாகவிருத்தல் பள்ளிக்கிடத்தல். ஓவென்று ஆச்சரியந்தோற்றச் சொல்லு கிறபடி. [நன்னாள்] இப்படிப்பட்ட உத்தமாதிகாரியை ஸேவிக்கப்பெற்றதற்கு உகந்து * அத்ய மே ஸபலம் ஜந்ம ஸுப்ரபாதா ச மே நிசா * என்ற நுஸந்தித்தவாறு.

[கள்ளந்தவிர்ந்து கலந்து] பரமபோக்யமான விஷயத்தை ஏகாந்தமாகத் தனியே யநுபவிக்கை கள்ளம்; அது தவிர்ந்து, கலந்து—கூடி யநுபவிக்க ப்ராப்த மாக வேணுமென்றதாயிற்று. ... .... .... .... 13

14. உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள் *
செங்கழுநீர் வாய்நெகிழ்ந் தாம்பல்வாய் கூம்பினகாண் *
செங்கற் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர் *
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார் *
எங்களை முன்ன மெழுப்புவான் வாய்பேசும் *
நங்கா யெழுந்திராய் நாணுதாய் நாவுடையாய் *
சங்கொடு சக்கர மேந்துந் தடக்கையன் *
பங்கயக் கண்ணனைப் பாடேலோ ரெம்பாவாய்.

இப்பாட்டில்—நங்காய், நாணுதாய், நாவுடையாய் என்ற மூன்று விளிகளும் ஆசார்ய ஸார்வபௌமருடைய பெருமைக்கு ஏற்ற விளிகளாம். உத்தம புருஷர் களை நம்பி யென்றும் உத்தமஸ்த்ரீகளை நங்கை யென்றும் கூறுவது வழக்கம். எல்லா வகையான நிறைவும் பொருந்தியவர்களையே இச்சொற்களால் கூறுவர். *சொல் லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா வறநெறி யாவுந் தெரிந் தவன்* என்று நூற்றந்தாதியில் கூறியபடியே ஸகலவித பாண்டித்யங்களும் நிறைந்து அநுஷ்டாந ஸம்பத்தும் நிரம்பியிருக்கப்பெற்ற ஸ்வாமிபோல்வாருடைய பெருமையை நங்காய்! என்னும் விளியினல் தெரிவித்தவாறு.

[நாணுதாய்] நாண் என்பது வெட்கத்திற்குப் போலவே அஹங்காரத்திற்கும் பெயர்; வேதாந்த தேசிகன் ஒரு ரஹஸ்யத்தின் இறுதியில் *காண்பனவு முரைப்பனவு மற்றொன்றின்றி* என்னுஞ் செய்யுளில் *நாண்பெரியோமல்லோம்* என்று பிரயோகஞ் செய்திருப்பது காண்க. 'நாம் அஹங்காரம் மிக்கோமல்லோம்' என்பதுவேயன்றோ அங்குப் பொருள். ஆகவே நாணுதாய் என்றது அஹங்கார மற்றவரே! என்றபடி. இது மமகார மற்றமைக்கும் உபலக்ஷணம். *நீர்நும தென் றிவை வேர்முதல் மாய்த்தவர்களில் தலைவரானவரே! என்றதாயிற்று. வெட்கப்பட வேண்டிய செய்கையைச் செய்யாதவரே! என்றுமாம்.

[நாவுடையாய்!] உலகத்தில் யார்க்கு நாக்கு இல்லை? எல்லார்க்குமுள்ளதே. யாருடைய நாவினல் உலகமெல்லாம் வாழ்கின்றதோ அவரே நாவுடையராவர்; பிராட்டி திருவடியை நோக்கி *வாசா தர்ம மவாப்நுஹி* என்றாள்—வாய் படைத்த ப்ரயோஜனம் பெறுவாயாக என்றாள். *ஸா ஜிஹ்வா யா ஹரிம் ஸ்தௌதி* என்று ரொருவர்; *ஸா ஜிஹ்வா ஸ்யாத் யயா ஸர்வே ஜீவந்தி ப்ராணிநோ புவி* என்றார் மற்றொரு வர்; *ஸா ஜிஹ்வா யத்ர ராஜந்தே வித்யா ஹ்ருத்யாச் சதுர்தச* என்று முரைத்தனர் மற் றொருவர். இவற்றால் தேறினதென்ன? பகவானை ஸ்துதிக்கும் நாவே நா; உலகுக் கெல்லாம் உதவி செய்யும் நாவே நா; பதினன்கு வித்யைகளையும் தன்னில் கொண் டிருக்கும் நாவே நா—என்றதாகத் தேறிற்று. இத்தகைய நாவுடைமை எம்பெரு மானர் பக்கலிலே அற்புதமாகக் காணலாம். (1) சரணகதி கத்யம் முதலியவற்றால் எம்பெருமானை ஆச்சரியமாகத் துதித்த நாவுடையர். (2) *உக்த்யா தநஞ்ஜய விபீஷண லக்ஷ்யயா தே ப்ரத்யாய்ய லக்ஷ்மண முநேர் பவதா விதீர்ணம், ச்ருத்வா வரம் தத நு பந்தமநாவலிப்தே நித்யம் ப்ரஸீத பகவந் மயி ரங்கநாத!* என்று ந்யாஸதிலகத்தில் தேசிகனும், *காலத்ரயேபி கரணத்ரய நிர்மிதாதி பாபக்ரியஸ்ய சரணம் பகவத்க்ஷமைவ, ஸா ச த்வயைவ கமலாரமணேர்த்திதா யத் க்ஷேமஸ் ஸ ஏவ ஹி யதீந்த்ர பவச்ச்ரிதாநாம்* என்று யதிராஜவிம்சதியில் மணவாள மாமுனிகளும் அருளிச் செய்தபடியே வரம் பெற்று ஸ்ரீ வைஷ்ணவவுலகம் முழுவதையும் உஜ்ஜீவிப்பித்த நாவுடையர். ஸ்ரீமத்

ரஹஸ்யத்ரய ஸாரத்தில் எட்டாவதான அதிகாரி விபாகாதிகாரத்தில் "ஒரு மலையில் நின்றும் ஒரு மலையில் தாவும் ஸிம்ஹசரீரத்தில் ஜந்துக்களைப் போலே பாஷ்யகாரர் ஸம்ஸாரலங்கனம் பண்ண அவரோடுண்டான குடல்துடக்காலே நாம் உத்தீர்ணராவுதோமென்று முதலியாண்டா னருளிச்செய்த பாசுரம்" என்றுள்ள ஸ்ரீ ஸூக்தி இங்கு விசேஷித்து அநுஸந்தேயம். (3) *ஜயதி ஸகலவித்யாவாஹிநீஜந்மசைல:* என்றபடியே ஸகல வித்தைகளும் கமழும்படியான நாவுடையர் ஸ்வாமியே. ஆக, 'நங்காய்! நாணாதாய் நாவுடையாய்!' என்ற மூன்று விளிகளும் எம்பெருமானார்க்குப் பொருத்தமாயின. இனி, பாசுரத்தில் மற்றுள்ள மொழிகளெல்லாமும் ஸ்வாமிக்கே நன்கு பொருந்தும்படியை விவரிப்போம்.

[உங்கள் புழைக்கடைத்தோட்டத்து இத்தியாதி] பாஞ்சராத்ர சாஸ்த்ரங்களில் பகவானுக்குத் திருவாராதநக்ரமங்களைச் சொல்லுமிடத்து 'எம்பெருமானுக்குச் செய்யும் உபசாரங்களை மஹாராஜாக்களுக்குச் செய்யுமுபசாரம் போல் பாவித்துச் செய்யவேணுமென்று சொல்லிற்று. *தமேவ மத்வா பரவாஸுதேவம் ரங்கேசயம் ராஜவதர்ஹணீயம்* என்கிற திருப்பள்ளியெழுச்சித்தனியனும் அந்நிலையே வற்புறுத்தியது. உலகில் செங்கோல் செலுத்துகின்ற அரசனைப்போலவே எம்பெருமான் *அருளார் திருச்சக்கரத்தால் அகல்விசும்பும் நிலனும் இருளார் வினைகெடச் செங்கோல் நடாவுதிர்* என்ற நம்மாழ்வார் பாசுரப்படிக்கும் *பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ் சோராமே யாள்கின்ற வெம்பெருமான் செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார்* என்ற ஆண்டாள் பாசுரப்படிக்கும் செங்கோல் செலுத்தி வருகிற முறையில் *திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே யென்னும்* என்ற திருவாய்மொழிப் பாசுரத்திற்குப் பாங்காக அரசனுடைய தன்மைகளும் (எம்பெருமானுடைய தன்மைகளும்) மிகவும் ஒற்றுமைப் பட்டிருக்கின்றன வென்பது காணலாம். எங்ஙனே யென்னில்; அரசனுடைய நிலைமைகளை ஐந்து விதமாகக் காண்கிறோம். 1. பகற்போதில் ஸகல பரிஜந ஸேவிதனாய்க்கொண்டு தன் வீறுதோற்ற நியாயாலயத்திலிருந்து காட்சி தந்து நீதி செலுத்துதல். 2. ராஜ்யத்திலுள்ளாருடைய குணதோஷங்கள் அறிகைக்காக இரவிலே பிறரறியாதபடி கறுப்புடுத்து நகரசோதனம் பண்ணுகை. 3. ராஜ்ஜியத்தில் சிக்ஷாரக்ஷைகளுக்காகத் தான் தனியிருந்து கார்யவிசாரஞ்செய்கை. 4. துஷ்ட மிருகங்களை நிரஸிப்பதற்காக வேட்டை யாடுகை. 5. வேட்டையாடின விடாய்தீரப் பூந்தோப்புகளிலே அபிமத விஷயங்களோடே விளையாடுகை. ஆகிய இவ்வைந்தும் உலகிற் காணும் அரசர்கட்குரிய நிலைமைகளாம். *பாரளந்த பேரரசே எம்விசும்பரசே! எம்மை நீத்துவஞ்சித்தோரரசே!* (திருவிருத்தம்) என்னப்பட்ட வானிளவரசனான ஸர்வேச்வரனுக்கும் இவையேபோன்ற ஐந்து நிலைமைகள் உள்ளன. எங்ஙனே யென்னில்;

1. அரசன் பகற்போதிலே பரிஜநபரிவாரஸேவிதனாய்க் கொண்டு சீரிய சிங்காசனத் திருப்பதுபோல, எம்பெருமானும் இருள் கலசாத பகலான பரமபதத்திலே *வைகுண்டேது பரே லோகே ச்ரியா ஸார்த்தம் ஜகத்பதி:, ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர் பாகவதைஸ் ஸஹ* என்கிறபடியே நித்யரும் முக்தரும் ஸேவிக்கத் தன் திருமாதுடனே தான் தனியரசா யிருக்குமிருப்பு. 2. அரசன் இராப்போதுகளில் பிறரறியாதபடி கறுப்பு உடுத்து நகர சோதனம் பண்ணுவதுபோல எம்பெருமான் *இவற்றுளெங்கும் மறைந்துறைவாய்* (திருவாய்மொழி) என்கிறபடியே மறைந்து உள்ளுவாருள்ளிற்றெல்லாமறிகை. 3. அரசன் ராஜ்யத்தில் சிக்ஷாரக்ஷைகளுக்காகத் தனியிருந்தும் அந்தரங்கர்களோடே கூடியும் கார்யவிசாரம் செய்வதுபோல எம்பெருமானும் *பாற்கடல் யோகநித்திரை சிந்தை செய்த வெந்தையாய் வாஸுதேவ ஸங்கர்ஷணப்ரத்யும்ந அநிருத்த ரூபேண வ்யூஹீபவித்து உறங்குவான்போல் யோகு செய்கை. 4. அரசன் துஷ்டஸத்வநிரஸனார்த்தமாக வேட்டை,

யாடுவதுபோல் எம்பெருமானும் *காட்டை நாடித் தேனுகனும் களிறும் புள்ளுமுடன் மடிய வேட்டையாடி வருவானை விருந்தாவனத்தே கண்டோமே* என்கிறபடியே ஆச்ரித விரோதிகளான தேனுகன் பிலம்பன் காளியனென்னுந் தீப்பப்பூடுகளை யடங்கவுழக்குகை. 5. அரசன் வேட்டையாடின விடாய் தீரப் பூந்தோப்புகளிலே அபிமத விஷயங்களோடே விளையாடுகைபோல எம்பெருமானும் விரோதி நிரஸநச்ரமந்தீர *ஆராமஞ்சூழ்ந்தவரங்கம் கணமங்கைக் காரார்மணிநிறக் கண்ணனூர் விண்ணகரம் சீரார் கணபுரஞ் சேறை திருவழுந்தூர் காரார் குடந்தை கடிகை கடல்மல்லை ஏரார் பொழில் சூழிடவெந்தை நீர்மலை சீராரும் மாலிருஞ்சோலை திருமோகூர் பாரோர் புகழும் வதரிவடமதுரை முதலான திருப்பதிகளிலே இனிது உறைகை.

இவ்வண்ணமாகவே ஸ்வாமியெம்பெருமானார்க்கும் ஐந்து நிலைமைகளுண்டு. எங்ஙனே யென்னில்; *பஜதி யதிபதௌ பத்ரவேதீம் த்ரிவேதீம்* (யதிராஜஸப்ததி.) என்னப்பட்ட கோப்புடைய சீரிய சிங்காசனத்திலேயெழுந்தருளி ஸகல பக்தர்களும் கண்ணார ஸேவிக்க விருக்கை. 2. *உணர்ந்த மெய்ஞ்ஞானியர் யோகந்தொறும்.... புக்கு நிற்குமிராமானுசன்* என்று நூற்றந்தாதியிற் பணித்தபடியே அந்தரங்கபக்தர்களினுடைய ஹ்ருதய கோசங்களிலே பிறரறியாதபடி பேணியமர்ந்திருக்கை. 3. உபயவேதாந்த க்ரந்த நிர்வாஹங்களுக்காக ஏகாந்தமாய்த் தனியே யிருந்தும் ஆழ்வான் ஆண்டான் எம்பார் பிள்ளான் போல்வாரான விரகர்களோடே கூடியிருந்தும் திவ்யார்த்த விசாரங்கள் செய்கை. 4. நாட்டிய நீசச்சமயங்கள் மாண்டனவென்னும்படியே சங்கரபாக்கரயாதவபாட்ட ப்ரபாகரர் தங்கள் மதம் சாய்வுறுமாறு வேட்டையாடுகை. 5. பூக்களும் பழங்களும் தழைத்த சோலைகள் போன்ற உபய வேதாந்தக்ரந்த ப்ரவசனத்தில் ஆழ்ந்து அகமகிழுகை. இவ்வளவு விஷயங்களையும் நெஞ்சில் தேக்கிக்கொள்ள முடியாவிட்டாலும், (5) என்று லக்கமிட்டுக் குறித்த விஷயமொன்றைமாத்திரமாவது திடமாக நெஞ்சிற்கொண்டால் *உங்கள் புழைக்கடைத் தோட்டத்துவாவியுள்* இத்யாதிக்கு இங்கு அறிவிக்கப்படும் உள்ளுறை பொருள் நெஞ்சில் நன்கு பதியும்.

அரசன் தோட்டத்திலே விளையாடுதல் போலவும், மூவுலகுக் கரசன் [ஆராமஞ்சூழ்ந்த] வண்டின முரலுஞ் சோலை மயிலினமாலுஞ் சோலை கொண்டல்மீதணவுஞ் சோலை குயிலினங் கூவுஞ் சோலை அண்டர்கோனமருஞ் சோலை யணிதிருவரங்கம் முதலான திருப்பதிகளிலே *விஹரதி ஹரௌ லக்ஷ்ம்யா* என்னும்படி விஹரிப்பது போலவும், ஸ்வாமி யெம்பெருமானார் விஹரிக்கும் தோட்டம் இருவகைப்பட்டிருக்கும். ஸ்ரீ பாஷ்ய கீதாபாஷ்ய வேதார்த்த ஸங்க்ரஹாதிகள் ஒருவகையான தோட்டம். திவ்யப்ரபந்த ரஹஸ்யத்ரயாதிகள் மற்றொருவகையான தோட்டம். உலகில் மஹா தனிகர்கள் அந்தரங்கத் தோட்டமென்றும் பஹிரங்கத் தோட்டமென்றும் இருவகைத் தோட்டங்கள் அமைப்பது வழக்கம். ஸர்வஸாதாரணங்களான புஷ்ப பலத்ருமங்களை வளர்க்கும் தோட்டம் பஹிரங்கத் தோட்டமாகும். பெருமாள் திருவாராதனத்திற்குரிய திருத்துழாயையும் செண்பகமல்லிகையோடு செங்கழுநீரிருவாட்சிகளையும் வளர்க்குந் தோட்டம் அந்தரங்கத் தோட்டமாகும். இதுவே புழைக்கடைத் தோட்டமாகவும் வழங்கப்பெறும். இதுபோல, ப்ரஹ்மஸூத்ரம் பகவத்கீதை உபநிஷத்துக்கள் முதலானவை ஸர்வ ஸாதாரணத் தோட்டமாகவும் ஆசாரியர்களால் திருவுள்ளம் பற்றப்படுகின்றன. ப்ரஹ்மஸூத்ராதிகளில் தெரிவிக்கப்படும் அர்த்தங்களிற் காட்டில் பகவத் விஷய ரஹஸ்யார்த்தங்கள் மிகவும் அந்தரங்கமானவை. இதைப்பற்றி விரிவாக நிரூபிக்கவேண்டியவை யுண்டானாலும் இங்குச் சுருக்கமாகச் சொல்லுகிறோம் கேண்மின். ப்ரஹ்மஸூத்ரத்தில் நான்கு அத்யாயங்களும் பதினாறு பாதங்களும் ஐந்நூற்றுச் சொச்சம் ஸூத்ரங்களுமுண்டே; இவற்றுள் ஒரு ஸூத்ரத்திலும் எம்பெருமான் திருவவதாரம் செய்தருளுகிறானென்னும் விஷயம் சொல்லப்

O22:417x1,13:9 58784
N62

படவில்லை; அவதார சேஷ்டிதங்களைச் சொல்வதற்கு ப்ரஸக்தியே யில்லை. அவன் லக்ஷ்மீபதி என்கிற விஷயமும் சொல்லப்படவில்லை. ப்ரபத்தி வ்யக்தமாகச் சொல்லப்படவில்லை. மங்களாசாஸனமே ஸ்வரூபாநு ரூப கைங்கர்யமென்பது சொல்லப்படவில்லை. இங்ஙனே பல குறைகளுள்ளன. திவ்யப்ரபந்தங்களுக்கு இப்படியொரு குறையும் சொல்ல வொண்ணாது. ஆழ்வார் பாசுரந் தொடங்கும்போதே *எங்ஙின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா!* என்று அவதாரத்தையே ப்ரஸ்தாவிக்கிறார். *பிறந்தவாறும்!* என்று சொல்லியும் *எத்திறமுரலினோடிணைந் திருந்தேங்கிய வெளிவே!* என்று சொல்லியும் மாதக்கணக்கில் மோஹிக்கிறார். *திருவில்லாத் தேவரைத் தேறேல்மின் தேவு* என்று லக்ஷ்மீ ஸம்பந்தமில்லாத தெய்வத்தைத் தெய்வமாகவே எண்ணவேண்டாவென்கிறார். *நெறிகாட்டி நீக்குதியோ* என்று உபாயாந்தரங்களின் அநர்த்தாவஹத்வத்தை முறையிட்டு ப்ரபத்தியையே வாய்வெருவுகிறார். *ஆட்செய்தாழிப் பிரானைச் சேர்ந்தவன்* என்றும் *உற்றேனுகந்து பணி செய்து உனபாதம் பெற்றேன்* என்றும் *ஒழிவில்காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்ய வேண்டு நாம்* என்றும் கைங்கர்யமே பரமபுருஷார்த்த மென்று அறுதி யிடுகிறார்; தங்களுடைய திவ்யப்ரபந்தங்களை மங்களாசாஸநமயமாகவே ஆக்கிவைத்திருக்கிறார்கள். ஸ்ரீராமாநுஜதர்சனமென்கிற ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்திற்கு இவையே உயர்நிலையான திவ்யார்த்தங் களாகையால் இப்படிப்பட்ட புஷ்பங்களும் பழங்களும் பயிராகும் திவ்ய சாஸ்த்ரங்களே ஸ்வாமிக்குப் புழைக்கடைத் தோட்டமாகும். இவை எம்பெருமானார் காலத்திற்கு முந்தி ப்ரசுரப்ரகாசமடையாமல் *த்ராதம் ஸம்யக் யதீந்த்ரைঃ* என்று தேசிகனருளிச் செய்தபடி எம்பெருமானார் தோன்றியே மிகவிளக்க முற்றபடியால் 'உங்கள் புழைக்கடைத் தோட்டம்' எனப்பட்டது. உம்மாலே விசேஷித்து க்ருஷி செய்து வளர்க்கப்பட்ட தோட்ட மென்றபடி.

[தோட்டத்து வாவியுள்.] வாபீ என்கிற வடசொல் வாவியென்று திரிந்துள்ளது. நீர்நிலையென்று பொருள். நீர்நிலையில்லாத தோட்டம் செழிப்புற்று வளராது. தோட்டத்தில் விளையும் பூக்களும் பழங்களும் செழித்துவிளங்குவதற்கு வாவியே காரணமாகும். ஸதாசார்யோப தேசமே இங்கு வாவியென்று மறைத்துச் சொல்லப்படுகிறது. *சாஸ்த்ரஜ்ஞாநம் பஹுக்லேசம் புத்தேச் சலநகாரணம், உபதேசாத் ஹரிம் புத்த்வா விரமேத் ஸர்வகர்மஸு* என்கிறபடியே ஸதாசார்யோபதேச யில்லாதபோது சிறந்த அர்த்தங்களை க்ரஹிக்கவும் வளர்க்கவும் போகாதாகையால் வாவியின் ஸ்தானத்திலே ஸதாசார்யோபதேசம் கொள்ளத்தகும். பஞ்சாசார்ய பதாச்ரிதரான ஸ்வாமி ஸதாசார்யோபதேசங்களை நன்கு பெற்றவராவர்.

[செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பினகாண்] வெளிச்சங் கண்டு அலரும் புஷ்பம் செங்கழுநீர்; இருள்கண்டு மலரும் புஷ்பம் ஆம்பல். ஸ்வாமிந்! தேவரீருடைய உபதேசபரம்பரையில் தாமஸமான அர்த்தங்கள் தலைமடிந்து ஸாத்விகமான அர்த்தங்கள் விகாஸ மடைந்தன என்றபடி. கலியுக தர்மங்கள் தலைமடிந்து க்ருதயுக தர்மங்கள் தலையோங்கி வளர்ந்தன வென்றபடி. *பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச்சாபம், நலியும் நரகமும் நைந்த நமனுக்கிங்கியா தொன்றுமில்லை, கலியுங் கெடுங் கண்டுகொண்மின்* என்கிற பாசுரமும் அதைப்பற்றின ஐதிஹ்யமும் இங்கே அநுஸந்தேயம்.

[செங்கல் பொடிக்கூறை இத்யாதி.] மேலே 'தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்' என்று திவ்யதேச கைங்கர்ய நிஷ்டர்களின் யாத்திரையைச் சொல்ல நினைத்து *செங்கல்பொடிக் கூறையென்று காஷாயாம்பர சோபிகளான உத்தமாச்ரமிகளை ப்ரஸ்தாவிக்கையாலே, ஸ்வாமி யெம்பெருமானார் திவ்யதேச கைங்கர்யாபி விருத்திக்காக ஆங்காங்கு உத்தமாச்ரமிகளை மடாதிபதிகளாக நியமித்தருளி திவ்ய

தேச கைங்கர்ய நிர்வாஹ ஸாம்ராஜ்யத்தை அவர்கள் பொறுப்பாக ஆக்கி வைத்த விஷயம் தெரிவிக்கப்படுகிறது. ஸம்ந்யாஸிகள் க்ராமைக ராத்ரமாய் ஓடித்திரியும் யோகிகளாயிருக்க வேண்டியிருக்க, அவர்களை மடாதிபதிகளாக்கி பகவத் ஸந்நிதி களிலே கைங்கர்யங்களைக் குறையற நிர்வஹிக்கும்படி நியமித்தருளினவர் ஸ்வாமி யெம்பெருமானார் தாமேயிறே. *மாடபத்யம் யதி: குர்யாந் விஷ்ணுபூஜாபிவ்ருத்தயே* என்கிற பகவச் சாஸ்த்ரவசனமும் ஸ்வாமிக்குக் கைகொடுத்தது.

[வெண்பல்தவத்தவர்] அப்படிபட்ட பகவத் ராமாநுஜ சிஷ்யர்களின் ஏற்றம் சொல்லுகிறது இது. பல்லின் வெண்மை சொல்லுவதனால் *யத் தஸ்மை திஷ்ட தேப்ய: க்ருபணமசரணோ தர்சயந் தந்த பங்க்தீ* (ஸ்ரீ குணரத்நகோசம்) என்று பட்டர் அருளிச்செய்தபடி க்ஷுத்ரர்களிடத்திலே சென்று பல்லைக்காட்டி இரவாதவர் களாய் *த்ருணீக்ருத விரிஞ்சாதிநிரங்குச விபூதய:, ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ர யணசாலிந:* என்கிறபடியே விரிஞ்சாதி விபூதிகளையும் த்ருணீகரித்திருப்பார் இராமானுசனடியார் என்கிறது. *க்ஷோணீகோண சதாம்ச பாலநகலா துர்வாரகர் வாநல க்ஷுப்யத்க்ஷுத்ர நரேந்த்ர சாடுரசநா தந்யாந் ந மந்யாமஹே* (வைராக்ய பஞ்சகம்) என்று தேசிகனருளிச் செய்தபடியே க்ஷுத்ரப்ரபுக்களிடத்தில் காட்டப் படாத பல்லே யன்றோ வெண்பல்லாகும். *மதநகதநைர் ந க்லிச்யந்தே யதீச்வர ஸம்ச்ரயா:* என்றும் *காமாதிதோஷஹரமாத்மபதாச்ரிதாநாம் ராமாநுஜம் யதி பதிம்* என்றும் சொல்லுகிறபடியே காமாதி தோஷவைதேசிகர்களான எம்பெரு மானாரடியார்கள் எம்பெருமான் பக்கலிலும் பல்லைக்காட்டார்களென்னும் போது பிறரிடத்திலே பல்லைக்காட்டார்களென்னுமிடம் சொல்ல வேணுமோ? வெண்பல் என்றதன் கருத்து இதுவே [தவத்தவர்.] தபஸ்விகள் என்றபடி. இவர்களுக்கு எது தபஸ்ஸென்னில்; *ஸ்வாத்யாயப்ரவசநே ஏவேதி நாகோ மௌத்கல்ய:, தத்தி தபஸ் தத்தி தப:* என்ற தைத்திரீ யோபநிஷத்தின்படியே ஸ்வாத்யாயப்ரவசனங் களேயாம் இவர்களுக்குத் தபஸ்ஸு. அன்றிக்கே. தவத்தவர்—மம என்னுதே தவ தவ என்பவர்கள் தவத்தவராவர். “காரியம் நல்லனகள் அவை காணில் என் கண்ணனுக்கென்று ஈரியாயிருப்பாள்” [திருவாய்மொழி] என்கிறபடியே எதையும் எம்பெருமானுக் கென்றே கொண்டிருப் பர்களே யல்லது தமக்கென்று கொண்டி ரார்களென்கை. ‘தவ’ உமக்கு—என்பவர் தவத்தவர்.

[தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்] கீழ்ச்சொன்ன உத்தமாதிகாரி கள் பகவத் ஸன்னிதிகளில் கைங்கர்யங்களுக்காகப் போகின்றார்கள் என்கிற பொருள் தவிர மற்றொரு ஆழ்பொருளும் இங்கு அறியக்கிடக்கின்றது. தங்கள் இல், திரு இல், கோ இல் என்று மூன்றாகப் பிரித்து ரஹஸ்யத்ரயத்தையும் சொன்னதாகக் கொள்ளவேணும். திருமந்த்ரமானது தங்கள் இல்; த்வயமானது திரு இல்; சரமச்லோகமானது கோ இல். (இதை விவரிப்போம்.) திருமந்த்ரத்தில் அநந்யார்ஹசேஷத்வ அநந்ய சரணத்வ அநந்யபோக்யத்வங்களாகிற ஸ்வஸ்வ ரூபம் நன்கு சிக்ஷிக்கப்படுகிறபடியாலே அது சேதநர்களுக்கான கோவில். த்வயத் தில்—பிராட்டி புருஷகாரமானாலல்லது எம்பெருமான் கார்யம் செய்யானென்னும் படியான பிராட்டியின் ஏற்றம் சொல்லுகையாலே அது பிராட்டிக்கான கோயில். சரமச்லோகத்தில் *அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி* என்று எம் பெருமான் காரியஞ்செய்து தலைக்கட்டுவதாகச் சொல்லுகையாலே அது கோவான வீசன்கோயில். ஆகவே தங்கள்திருக்கோயிலென்றவிதனால் ரஹஸ்யத்ரயமும் மிக நன்றான முறையில் தெரிவிக்கப்பட்டதாயிற்று. அதிலே, சங்கு இடுவான் போகின்றார்— சங்கு என்று திறவுகோலுக்குப் பெயர். ரஹஸ்யத்ரயப்பெட்டியைச் சாவியிட்டுத் திறந்து அன்பர்களுக்கு அளிக்கப்போகிறார்களென்கை.

[எங்களை முன்னமெழுப்புவான் வாய்பேசும் நங்காய்] எழுப்புவான் என்றது எழுப் புவதற்காகவென்றபடி. *அநாதிமாயயா ஸுப்த:* என்கிறபடியே அநாதிமாயை

யினால் உறங்கிக் கிடக்கிற வெங்களை உபதேசாதிகளாலே ப்ரபோதமடைந்தவர் களாகச் செய்யும்பொருட்டு, முன்னம் வாய்பேசும்—ஓராண் வழியாய் உபதேசித்தார் முன்னோர், எராரெதிராச ரின்னருளால்—பாருலகில் ஆசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள் கூறுமென்று பேசி வரம்பறுத்தார் பின் * (உபதேசரத்தினமாலை) என்கி றபடியே நியமனவார்த்தையை முன்பு பேசியருளின பரமக்ருபாநிதியே! என்றவாறு.

[சங்கொடு சக்கரமேந்தும் தடக்கையன்] எம்பெருமானுருடைய சரிதையிலே இது மிக மருமமானவொரு விஷயம். "அப்பனுக்குச் சங்காழி யளித்தருளும் பெரு மாள்" என்கிறபடியே திருவேங்கடமுடையானுக்காகச் சங்கொடு சக்கரமேந்தும் தடக்கையர் ஸ்வாமி. [பங்கயக்கண்ணனை] யாதவப்ரகாசர்பாடே வேதாந்தச்ரவணம் பண்ணும்போது "தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ" என்கிற ச்ருதிக்கு அவர் அபார்த்தம் கூற அதுபொறாமல் கண்ணீர்பெருக்கி * கம்பீராம்பஸ் ஸமுத் பூத ஸம்ருஷ்டநாள ரவிகரவிகஸித புண்டரீகதளாமலாயதேக்ஷண: * என்று சுவை மிக்க பொருள் கூறிப் பங்கயக்கண்ணனைச் சேமித்த இதிஹாஸத்தை நினைப்பூட்டுகிறபடி.

இப்பாட்டில் ப்ரமாணநிர்த்தாரணரூப சாஸ்த்ரார்த்தம் உய்த்துணரத் தக்கது. 'செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பின' என்னுமொரு ப்ரபாத லக்ஷ ணங் கூறுமிவர்கள் "எங்கும் தோட்டத்து வாவியுள்" என்று சொல்லவேண்டி யிருக்க, அங்ஙனஞ் சொல்லாது "உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்" என்கிறார்கள்; கீழே "கீசுகீசென்று எங்கும் ஆனைச்சாத்தம் கலந்து பேசின" அடையாளஞ் சொன்னார்கள்; மேலே "வந்து எங்கும் கோழியழைத்தன காண்" என்று சொல்லப் போகிறார்கள். அப்படியே யன்றோ இவ்விடத்திலும் "எங்கும்" என்று சொல்லவேண்டும்; உள்ளே புக வழி பெறாமல் வாசலிலே நின்று துவளு மிவர்கள் "உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்" என்று சொல்லுவது தகுதியன்றே—என்னில்; கேண்மின்; ப்ரத்யக்ஷம் முதலான எட்டு ப்ரமாணங் களைக் கொள்வார் சிலர்; ப்ரத்யக்ஷமொன்றுதான் ப்ரமாண மென்பார் சிலர். இப்படி யல்லாமல், ப்ரத்யக்ஷம் அநுமானம் சப்தம் (அதாவது சாஸ்த்ரம்) ஆகிய மூன்றையும் ப்ரமாணமாகக் கொள்வர் வேதாந்திகள். இம்மூன்று ப்ரமாணங்களும் இப்பாட்டில் காட்டப் படுகின்றன. "உங்கள் புழைக்கடை" இத்யாதியால் சொல் லப்படுகிற விஷயம் அநுமான ஸித்தமே யாதலால் அநுமானமும் ப்ரமாணமென்று காட்டப்பட்டது. "தவத்தவர் தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்" என்பது அனைவரும் கட்கூடாகக் காணும் விஷயத்தைச் சொல்லுவதாதலால் ப்ரத்ய க்ஷமும் ப்ரமாணமென்று காட்டப்பட்டது. "எங்களை முன்ன மெழுப்புவான் வாய் பேசும் நங்காய்" என்று ஆப்த வாக்யமான சொல்லைக் காட்டியதனால் ஆப்த வசன மாகிய சாஸ்த்ரமும் ப்ரமாணமென்று காட்டப்பட்டது. இந்த சாஸ்த்ரார்த்தம் இப்பாட்டில் ரஸிக்கத் தக்கது. .... .... ... ... 14

**15.** **எல்லே யிளங்கிளியே யின்ன முறங்குதியோ ***
**சில்லென் றழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன் ***
**வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும் ***
**வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக ***
**ஒல்லைநீ போதா யுனக்கென்ன வேறுடையை ***
**எல்லாரும் போந்தாரோ போந்தார் போந்தெண்ணிக்கொள் ***
**வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க**
**வல்லானை * மாயனைப் பாடேலோ ரெம்பாவாய்.**

இப்பாட்டு ஆய்ச்சிகளின் பரஸ்பர ஸம்பாஷணரூபமாக வுள்ளது. ஓரடி வெளியிலுள்ளாருடைய பேச்சும், மற்றோரடி உள்ளே கிடப்பவளுடைய பேச்சுமாக இங்ஙனே மாறி மாறி அமைக்கப்பட்டிருக்கின்றது. இப்பாட்டில் "நானே தானாயிடுக" என்பதே உயிரானது. உலகில் பிழையைப் பலர் ஒப்புக்கொள்ளாமல் மறுத்து விடுவார்கள். பலர் சிரமப்பட்டு ஒப்புக்கொள்ளுவார்கள். சிலர் மறுத்திடாமல் உடனே ஒப்புக்கொள்வர்கள். பிழையைச் செய்துவிட்டு செய்யவில்லையென்று மறுப்பதிற் காட்டிலும் 'ஆம், பிழைசெய்ததுண்டு' என்று உடனே இசைந்துகொள்வது மேலதாயினும், உண்மையில் தான் செய்யாததொரு பிழையையும் பிறர் செய்ததாகச் சொன்னால் அதையும் மறுத்துவிடாமல் உடனே யொப்புக்கொள்வதுண்டே அது மிக மிக மேம்பட்டது. இதுதான் உத்தம ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம். நம்மைக் குற்றவாளியாகப் பெரியார் கூறினால் வஸ்துஸ்திதியில் நாம் குற்றம் செய்யாதிருந்தாலும் பெரியார் வாக்கு பொய்யாக வாராது என்னுமுறுதியினால் 'நான் குற்றவாளியே' என்று ஒப்புக்கொள்வதே உத்தம ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணமாகும். இவ்விஷயத்தை இப்பாட்டு வெகு அற்புதமாக சிக்ஷிக்கின்றது. நாம் உபந்யாஸ மேடைகளிலிருந்து உபந்யஸிக்கும்போது அவையடக்கம் கூறுகையில் 'அடியேன் ஒன்றும் படியாதவன்; எதிலும் எவ்விதமான ஞானமுமில்லாதவன்; அடியேன் வாக்கில் வருவதெல்லாம் பிழையாகத்தானிருக்கும்; பெரியார் பொறுக்கவேணும்' என்று கூறுவோம். உபந்யாஸம் முடிந்த பிறகு ஒருவர் எழுந்து 'இதுவரை இவர் பேசினதெல்லாம் வெகு அபத்தம்; மிகவும் அஸம்பத்தம்; அடியோடு படிப்பில்லாதவரிவர்' என்று சொல்லுவாராகில் அவரை நாம் நிந்திக்கப்போவோம்; அடியேனே என்னுடைய அயோக்யதையை ஆரம்பத்திலேயே விஞ்ஞாபித்துக்கொண்டேனே; தேவரீர் சொல்லுவது வாஸ்தவமே' என்று உகந்துகொள்ளுமவர் ஒருவர்கூடத் தேறமாட்டார். அது ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணமன்று. ஸ்ரீபரதாழ்வான் 'மத்பாபமேவாத்ர நிமித்தமாஸீத் வநப்ரவேசே ரகுநந்தநஸ்ய' என்றது போல, தம் குற்றமல்லாததையும் குற்றமாக இசைந்துகொள்வதே உத்தம ஸ்ரீ வைஷ்ணவ லக்ஷணமென்று இப்பாட்டில் வெகு ரஸமாகக் காட்டப்படுகிறது. இதற்காகவே பாசுரமும் பரஸ்பர ஸம்பாஷணரூபமாக அமைக்கப்பட்டது. ஸம்வாதமாக வைக்காமல் இப்பொருளைக் காட்ட முடியாதோ வென்னில்' உபதேச ரூபமாகக் காட்டலாமேயொழிய ஸ்வாநுஷ்டான ரூபமாகக் காட்ட முடியாதென்பது திண்ணம். உபதேசத்திற் காட்டிலும் அநுஷ்டானமே சிறந்ததாதலால் இப்பரமார்த்தத்தை அநுஷ்டாநரூபத்தினாலேயே காட்டவேணுமென்று கருதி ஆண்டாள் இப்பாட்டை ஸம்பாஷணையில் வைத்துப் பேசியுள்ளாள். "வல்லீர்கள் நீங்களே நானே தானாயிடுக" என்றது மிக வினிய பேச்சு. இதன் கீழே "வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்" என்று வீதியிலுள்ள ஆய்ச்சிகளின் ரோஷப் பேச்சு வெளிவந்தது. அதற்கு விடையாக "வல்லீர்கள் நீங்களே" என்றாள் உள்ளே கிடப்பவள். இதற்குமேல் வீதியிலுள்ளாருடைய ரோஷப் பேச்சு வெளிவருதற்கு இடமில்லாதபடி 'நானே தானாயிடுக" என்று தன் குற்றத்தை யொப்புக்கொண்டு முடித்திட்டது பரமரஸம்.

"எல்லேயிளங்கிளியே இன்னமுறங்குதியோ" என்று வெளியிலுள்ளவர்கள் சொன்னவுடனே உள்ளிருப்பவள் "சில்லென்றழையேன்மின்" என்றாள்; இதனால் வெளியிலுள்ளவர்களின் வார்த்தையானது உள்ளேயிருப்பவளுக்குக் கோபஜநகமாயிற்றென்று விளங்குகின்றது. முதலடியில் கோபஹேதுவான வார்த்தை என்ன இருக்கிறதென்று பார்க்கவேணும். உலகில் சிலரை உயர்த்திச் சொன்னால் அது கோபஹேதுவாகும்; சிலரைத் தாழ்த்திச் சொன்னால் அது கோபஹேதுவாகும். இங்கே இரண்டுமுள்ளது; இளங்கிளியே! என்ற விளி கௌரவந்தோற்றச் சொன்னதாகையாலே இதற்காகக் கோபமுண்டாயிருக்கலாம். 'இன்னம் கண்வளருதியோ?' என்னாமல் 'இன்னமுறங்குதியோ?' என்று அவமரியாதையாகச் சொல்லியிருக்கை

யாலே அதற்காகவும் கோபமுண்டாகியிருக்கலாம். ஏதோவொரு காரணத்தினல் உள்ளேயிருப்பவளுக்குக் கோபமுண்டாயிற்றென்பது இரண்டாமடியினல் விளங்கிற்று. அதுகேட்ட வெளித்தோழிகள் 'வல்லை, உன்கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்'' என்றார்கள். இவர்கள் இப்படி கடுத்துக் கூறவேண்டிய காரணமென்ன வென்றால், உள்ளிருப்பவள் 'தோழிகாள்!' என்று விளித்துக் கூறவேண்டியிருக்க, நங்கைமீர்! என்று விளித்ததே காரணமென்று கொள்வது. "வல்லை, உன்கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்'' என்று வெளித்தோழிகள் கூறியது கேட்ட அவள் உடனே "வல்லீர்கள் நீங்களே'' என்று தூக்கியெறிந்தாப்போல் வெட்டிதாகப் பேசினள். இதற்கு மேல் வாக்கலஹம் வளர்ந்து செல்லவேண்டும். அப்படி வளரவொட்டாமல் உள்ளேயிருப்பவள் "நானே தானுயிடுக'' என்று விநயமதுரமாகச் சொல்லிக் கலஹத்தை சமநம்பண்ணினதுதான் இதில் விசேஷம். குற்றத்தைத் தன்னுடையதாகவே இசைந்து பேசினது ஸ்வரூபவுணர்ச்சியின் ஸீமாபூமி. உள்ளிருப்பவள் 'வல்லீர்கள் நீங்களே' என்றவுடனே வெளியிலுள்ளவர்கள் 'யாமே தாமாயிடுக' என்று சொன்னதாக வைத்தும் பாசுரம் பாடலாம். அங்ஙனே வைத்துப் பாடாமல் குற்றத்தைத் தன்னதாக இசைந்து கொள்ளுவதை உள்ளேயிருப்பவளுடைய பேச்சிலே அமைத்துப் பாடியதனுல், இப்படிப்பட்ட உத்தமாதிகாரி உலகில் பலபேர்கள் கிடைப்பதரிது, "ஓரொருவருண்டாகில்'' என்ற கணக்கிலே ஒரு வ்யக்திதான் தேறக்கூடும் என்பது தெரிவிக்கப்பட்டதாகிறது.

'நானே தானுயிடுக' என்றபிறகு வாக்கலஹம் சாந்தமாய் விட்டபடியால் மீண்டும் விவாதத்தைக் கிளப்புவது யுக்தமன்று. ஆயினும் வெளியிலுள்ளவர்கள் மீண்டும் விவாதத்தைக் கிளப்புவார் போன்று 'ஒல்லைநீ போதாய்' என்று மட்டும் சொல்லாமல் "உனக்கென்ன வேறுடையை'' என்று அதிகமானவொரு வார்த்தையையும் சொல்லியிருக்கிறார்கள். இது எதற்காகச் சொல்லிற்றென்னில்; 'இவள் மறுபடியும் ஸ்வஸ்வரூபத்தை மறந்து விவாதப்படத் தொடங்குகிறளா பார்ப்போம்' என்று பரீக்ஷிப்பதற்காகவேயாயிற்று. அவளோவென்னில், ஸ்வரூப வுணர்ச்சியில் உறுதி கொண்டவளாய் இந்தப் பரீக்ஷையில் பங்கமடைந்திலள்; * எல்லாரும் போந்தாரோ? * என்று வினவும் முகத்தால் அடியார்களீட்டங்காணக் குதூஹலங் கொண்டிருக்கும்படியை வெளியிட்டு நின்றாள். அதற்கு, வெளித் தோழிகள் 'எல்லாரும் போந்தார்' என்று மட்டும் சொல்லிநில்லாமல் '**போந்து எண்ணிக்கொள்**' என்றும் சொன்னார்கள். இங்ஙனே சொன்னதற்கு ஹ்ருதயமென்னென்னில் போந்து எண்ணிக்கொள்ளும்போது ஒவ்வொருவ்யக்தியையும் விரலால் தொடுவதும் கண்ணால் காண்பதும் ப்ராப்தமாகுமாதலால் * யம் யம் ஸ்ப்ருசதி பாணிப்யாம் யம் யம் பச்யதி சக்ஷுஷா, ஸ்தாவராண்யபி முச்யந்தே கிம் புநர் பாந்தவா ஜநா: * என்கிறபடியே விலக்ஷணமானதொரு ச்ரேயஸ்ஸைப் பெறலாமென்பதேயாம்.

* வல்லானை கொன்றானை * என்றதற்கு ஸ்வாபதேசார்த்தமாவது — * வாரி சுருக்கி மதக்களிறைந்தினையும் சேரிதிரியாமல் * என்று பொய்கை யாழ்வார் பணித்தபடியே இந்திரியமாகிற மதயானையைக் கொல்பவன் ஆசார்யன். மாற்றாரை மாற்றழிக்க வல்லான் — துர்வாதிகளின் பேச்சு தலையெடுக்க வொட்டாதபடி கண்டித்தொழிக்கும் பெருமை சொன்னபடி. மாயன் — இரும்பைப் பொன்னுக்குமாபோலே நித்யஸம்ஸாரியை நித்ய ஸூரிபரிஷத்திலே வைத்தருளுகையாகிற ஆச்சரியச்செயல் செய்பவன். இப்படிப்பட்ட ஆசார்ய ஸார்வபௌமருடைய ஸங்கீர்த்தந பலத்தாலே இந்த ஸ்வரூபநிஷ்டை உண்டாயிற்றென்று காட்டினபடி.

இப்பாட்டில் எழுப்பப்படுகிற வ்யக்தியைக் கிளியே! என்றழைத்ததனுல் முன்னோர் மொழிந்தமுறை தப்பாமல் கேட்டுப் பின்னோர்ந்து தாமதனைப் பேசும்படியை சிக்ஷித்ததாகிறது. .... ... .... .... 15

16. **நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய**
**கோயில் காப்பானே*கொடித்தோன்றுந் தோரண**
**வாசல் காப்பானே*மணிக்கதவந் தாள் திறவாய்***
**ஆயர் சிறுமியரோமுக்கு*அறை பறை**
**மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்***
**தூயோமாய் வந்தோந் துயிலெழப் பாடுவான்***
**வாயால் முன்ன முன்னம் மாற்றாதே யம்மா*நீ**
**நேச நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய்.**

திருப்பாவையில் நீராட்டமென்னும் ப்ரஸ்தாவம் ஐந்து பாசுரங்களில் நிகழ்ந்துள்ளது. முதற் பாட்டில் * நீராடப்போதுவீர் போது மினோ* என்றுள்ளது; மூன்றாம் பாட்டில் * நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால் * என்றுள்ளது. நாலாம் பாட்டில் * நாங்களும் மார்கழி நீராட மகிழ்ந்து * என்றுள்ளது. இருபதாம் பாட்டில் * இப்போதே யெம்மை நீராட்டு * என்றுள்ளது. இருபத்தாறும் பாட்டில் * மார்கழி நீராடுவான் * என்றுள்ளது. ஆக இவற்றால் நீராடுகை ஆய்ச்சிகளுக்கு உத்தேச்யமென்று தெரியவந்தாலும் நீராடு மிடமான யமுனைக்கோ ஒரு பொய்கைக்கோ இவர்கள் சென்றவர்களல்லர். எனினும், ஸ்வாபதேசார்த்த ப்ரக்ரியையிலே நீராடுமிடம் எதுவோ அவ்விடத்திற்கே சென்று சேர்கின்றார்களென்பது காணலாம். ஸ்வாபதேசத்தில் நீராடுமிடம் இன்னதென்பதை முன்னுரையிலும் முதற்பாட்டினுரையிலும் விரிவாக விளக்கியுள்ளோம். [கீழ் 3, 7 பக்கங்கள் காண்க.] கண்ணபிரானாகிற * தாமரை நீள்வாசத்தடத்திலே அவகாஹிக்கச் செல்லுகின்றார்களென்பது தேறி நின்றது. கண்ணபிரானை நோக்கி வந்த விவர்கள் கண்ணா! என்றழைக்கலாம்; அல்லது, கண்ணன் நந்தகோபன் குமரனாயும் அசோதை யிளஞ்சிங்கமாயும் பல தேவற்கோர் கீழ்க்கன்றாயும் வளருகையாலே அவர்களை முன்னிட்டுக்கொண்டு அழைக்க வேணுமென்று தோறின்னல் ' நந்த கோபாலா!' என்று அவரை முற்பட அழைக்கலாம். இங்ஙனன்றிக்கே * நந்தகோபனுடைய கோயில் காப்பானே!* என்றும் * தோரண வாசல் காப்பானே!* என்றும் த்வாரபாலகர்களை யெழுப்பி அவர்களின் அருளைப் பிரார்த்திப்பதாக இப்பாசுரம் அமைக்கப்பட்டுள்ளது. திருவாய்ப்பாடியில் நந்தகோபர் கோபாலர்களுக்குள் தலைவராயிருந்தாரென்று வைத்துக்கொள்வோம். அவருடைய திருமாளிகை ஸாமான்யமாக இருந்திருக்குமே யல்லது கோயில் காப்பானையும் வாசல் காப்பானையும் கொண்டிருந்ததாகக் கொள்வதற்கு ஔசித்யமில்லையே. மேலும், கோபிகள் கண்ணபிரானையே பரதெய்வமாக நினைத்திருப்பவர்களாதலால் " நாயகன் முழுவேழுலகுக்கும் நாதன் " என்கிறபடியே அவனையே நாயகனாகச் சொல்லவேண்டியிருக்க நந்தகோபனை நாயகனாகச் சொல்லுவதற்கும் ஔசித்யமில்லையே என்று சிலர் நினைக்கக்கூடும். இராமபிரான் ராவண ஸம்ஹாரம் பண்ணிப் புஷ்பக விமானத்திலேறி இலங்கையினின்று அயோத்திக்குத் திரும்பி வரும்போது ஸீதைக்குப் பல இடங்களையும் காட்டிக் கொண்டே வருகையில் அயோத்தியைக் காட்டும்போது * ஏஷா ஸா த்ருச்யதே ஸீதே! ராஜதாநீ பிதுர் மம * [இதோ என் தகப்பனாருடைய ராஜதானியான அயோத்யை தென்படுகிறதுகாண்] என்றான். 'இதோ நம்முடைய நகரம் வந்துவிட்டது பார்' என்னுமல் பதினான்கு வருடங்களுக்கு முன் மறைந்துபோன தகப்பனாரை ப்ரஸ்தாவித்து அவருடைய வூர் வந்துவிட்டதுபார் என்று சொன்னதனால் தகப்பனாருக்குப் பெருமைகொடுப்பதுதான் இராமனுக்கு உகப்பு என்னுமிடம் விளங்குகின்றது. கண்ணனுடைய திருவுள்ளமும் இதுவேதானென்று தெரிந்துகொண்ட கோபிகள் நந்தகோபனையே நாயகனாகவைத்துக் கூறினது நன்று. இனி, கோயில் காப்பானும் வாசல்காப்பானு மில்லாதிருக்க அவர்களை விளித்து, அவர்களின் அநுமதியை அபேக்ஷித்திருப்பதானது அர்ச்சாவ

தார ஸமாதியினுலென்க. கோபிகளின் அநுபவம் விபவாவதாரத்திலாஞலும் ஆண்டாளுடைய அநுபவம் அர்ச்சாவதாரத்தில் தானே நிகழ்கின்றது. திவ்ய தேசங்கள் ஸேவிக்கப் போமவர்கள் அநுஸந்திக்க வேண்டிய ப்ரகாரங்களை பட்டர் ஸ்ரீ ரங்கராஜஸ்தவத்திலே "விததது ஸுகம் விஷ்வக்ஸேநஸ்ய தே ப்ரதமே படா: கரிமுக ஜ்யத்ஸேநௌ காலாஹ்வஸிம்ஹமுகௌ ச ந:" என்றும் "ப்ரஹரணபரிவார வாஹநாட்யாந் குமுத முகாந் கணநாயகாந் நமாமி" என்றும் "சண்ட ப்ரசண்டமுகத: ப்ரணமாமி ரங்கத்வாராவலீஷு சதஸ்ருஷ்வதிகாரபாஜ:" என்றும் மூன்று ச்லோகங்களிலருளிச் செய்துள்ளார். கரிமுகர், ஜயத்ஸேநர், காலர், ஸிம்ஹமுகர்—இவர்கள் நால்வரும் க்ஷேத்ர பாலகர்கள். குமுத குமுதாக்ஷ புண்டரீக வாமந சங்ககர்ண ஸர்ப்ப நேத்ர ஸுமுக ஸுப்ரதிஷ்டிதர்களாகிற எண்மர் நகரபரிபாலகர்கள். சண்ட ப்ரசண்ட ஜய விஜய பத்ர ஸுபத்ர தாத்ரு விதாதாக்கள் எண்மர் த்வாரபாலகர்கள். ஆக இவர்களின் அநுமதிகொண்டு மங்களாசாஸனத்திற்கு உள்புகவேணுமென்கிற சாஸ்த்ரார்த்தம் இப்பாட்டில் ஸூசிதமாகிறது. *மணிக்கதவம் தாள் திறவாய்* என்கிற ப்ரார்த்தனை கோயில் காப்பானிடத்திலும் தோரண வாசல்காப்பானிடத்திலும் செய்யப்படுவதாகக் கொள்க. இங்கு இரண்டு விளிகள் இருந்தாலும் இரண்டு வாக்கியங்களாலும் த்வாரபாலக வ்யக்தியொருவரே எழுப்பப்படுகிருரென்று கொள்ளலாம். இரண்டு வ்யக்திகளென்று கொண்டாலும் குறையில்லை. [கொடித் தோன்றும் தோரண வாசல் காப்பானே !] திருவாய்ப்பாடியில் எல்லா மாளிகைகளும் வாசியற்றிருக்கையாலே, இருளில் பதறியோடிவருகின்ற ஆய்ச்சிகள் ப்ரமியாமல் தெரிந்து கொள்வதற்காகக் கொடியும் தோரணமுமாக அடையாளம் செய்யப்பட்டுள்ளதென்பர். வேனிற்காலங்களில் ஆங்காங்கு தண்ணீர்ப்பந்தல் வைப்பவர்கள் இங்ஙனே அடையாளமிட்டு வைப்பதுண்டே. * தன்வன்னிவ பிரபா அஸி * என்று வேதத்தில் பகவானும் மருகாந்தாரத்துத் தண்ணீர்ப் பந்தலாகச் சொல்லப்பட்டிருக்கையாலே இங்கும் தண்ணீர்ப் பந்தலுக்கே அடையாளம் செய்து வைத்திருக்கிறபடி.

மணிக்கதவம் தாள் திறக்க வேண்டப்பட்ட வாசற்காப்பான் இவ்வாய்ச்சிகளின் அமுதமென் மொழிகளைச் செவியாரப் பருகவிரும்பித்தான் சில சொல்லுவதும், அவற்றுக்கு ஆய்ச்சிகள் மறுமொழி கூறுவதுமாக நிகழ்ந்த ஸம்பாஷணையைச் சிறிது விவரிப்போமிங்கு.

வாசல் காப்பான்;—ஸர்வ ப்ரகாரத்தாலும் அஞ்சவேண்டும் நிலமான இவ்வாய்ப்பாடியிலே அகாலத்திலே வந்து கதவைத்திறக்கச் சொல்லுகிறவர்கள் யார்?

கோபிகள் ; —அப்பா! இது அஞ்ச வேண்டும் நிலமென்கிருயே ; இது தகுமா? * பயம் பயாநாமபஹாரிணி ஸ்திதே மநஸ்யநந்தே மம குத்ர திஷ்டதி ?* என்று ப்ரஹ்லாதாழ்வான் சொன்னது கேட்டறியாயோ? பயநாசனனை எம்பெருமானுள்ள விடத்தே அஞ்சவேண்டுவது முண்டோ?

வாசல் காப்பான் ;—கோபிகளே ! நீங்கள் சொல்லுவது வெகுநன்ருயிருக்கிறது. இப்போது ராமாவதாரமென்று நினைத்திருக்கிறீர்களோ? ஸ்ரீ ராமனவதரித்தது க்ருதயுகத்திற்குத் தோள்தீண்டியான த்ரேதா யுகத்திலாகையாலே காலம் நன்ருயிருந்தது; தகப்பனரோ சம்பராந்தகரென்று பேர்பெற்ற மஹாசூரராய், பத்துத் திசைகளிலும் தேரை யோட்ட வல்லவரான தசரதர்; பிள்ளைகளோ மஹாவீர சூரர்களும், வழியே போய் வழியே வருபவர்களான ஸாதுக்களுமாயிருந்தார்கள். ஊரோ அயோத்யையென்று பேர்பெற்று ஒருவராலும் போர்செய்து வெல்லவொண்ணுத இடமாயிருந்தது. புரோஹிதர்களோ வஸிஷ்டர் முதலான மஹாஜ்ஞாநாதிகர்களாயிருந்தார்கள். ஊரிலுள்ளவர்களோ * ஸ்த்ரியோ வ்ருத்தாஸ் தருண்யச் ச ஸாயம் ப்ராதஸ் ஸமாஹிதா :, ஸர்வாந் தேவாந் நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே யசஸ்

வின்ஃ * என்கிறபடியே மிகப் பரிவர்களாயிருந்தார்கள். அக்காலத்தில் அசேதநங்களான புல்பூண்டு முதலானவையுங்கூட * விஷயே தே மஹாராஜ! ராமவ்யஸந கர்சிதா:. அபி வ்ருக்ஷா: பரிம்லாநா: ஸபுஷ்பாங்குர கோரகா: * என்கிற ஸுமந்த்ர வசனத்தின்படியே ராம ப்ரேமமே வடிவெடுத்திருந்தன. ஆகவே ராமாவதாரத்தில் எள்ளளவும் பயப்பட வேண்டாவாயிருந்தது. இவ்வவதாரத்திலோ வென்னில், கலிக்குத் தோள் தீண்டியான த்வாபராந்தம். தகப்பனரோ பசும்புல்லுச் சாவமிதியாத பரமஸாது நந்தகோபர்; பிள்ளையோ * நிச்சலும் தீமைகள் செய்து குறும்பு செய்வானோர் மகன்; ஊரோ அறிவொன்று மில்லாத ஆய்க்குலம்; தீயபுந்திக் கஞ்சனுக்கு அணித்தான ஊர். எழும் பூண்டெல்லாம் அசுரப் பூண்டாயிராநின்றன. இந்த நிலைமைக்கு அஞ்சாதிருக்க வொண்ணுமோ?

கோபிகள்;—அப்பா! நீ சொல்லிற்றெல்லாம் நன்றே; நாங்கள் பெண்டிர்களல்லவா? அபலைகளல்லவா எங்களிடத்திலா பய சங்கை?

வாசல் காப்பான்;—உண்மையே; சூர்ப்பணகையும் பெண் தானே. இன்னமும் அவளை நினைத்தால் * அஞ்சுவன் வெஞ் சொல் நங்காய் அரக்கர் குலப்பாவை தன்னை * (பெரிய திருமொழி 3—7—3) என்ன வேண்டியிருந்ததே! பஞ்சவடியில் ஒரு வாசலும் வாசற் காப்பானு மில்லாதிருந்ததனாலன்றோ அப்பெண் பிள்ளையினால் வாசா மகோசரமான அனர்த்தம் விளைந்தது.

கோபிகள்;—அவளோ ராக்ஷஸி; நாங்களோ ஆய்ச்சிகள். அவளோடொக்க எங்களை யெண்ணுவது தகுமா வுனக்கு?

வாசல் கப்பான்;—ராக்ஷஸியென்றும் கோபி யென்றும் ஜாதியில் வாசி யுண்டோ? பூதனை யென்னும் பேய்ச்சியும் ஆய்ச்சியாகத் தானே வந்தாள். * கஞ்சன் கறுக்கொண்டு நின்மேல் கருநிறச் செம்மயிர்ப்பேயை, வஞ்சிப்பதற்கு விடுத்தானென்பதோர் வார்த்தையுமுண்டு * என்கிறார்கள்; அந்தப் படுபாவி கம்ஸன் இன்னும் எத்தனை பேர்களை விடுத்திருக்கிறானோ நானறிவேனோ?

கோபிகள்;—மஹாப்ரபோ! அப்பூதனை வயது முதிர்ந்தவள்; * கருநிறச் செம்மயிர்ப் பேயென்று நீயே சொல்லும்படி செம்பட்ட மயிரையுடையளான அவளையும் கருங்குழலாய்ச்சிகளான எங்களையு மொக்க எண்ணலாமா? நாங்கள் ஆயர் சிறுமியரோ மல்லவா? எங்கள் வடிவைப் பாராய். எங்களை நோக்கியா நீ அஞ்சுவது! வெகு நன்றாயிருக்கிறது. கால விளம்பம் செய்யாமல் எங்களை உள்ளே புகவிடாய் பிரானே!

வாசல் காப்பான்;—எல்லா மிருக்கட்டும்; நீங்கள் இவ்வகாலத்தில் எதற்காக வந்தீர்கள்? உள்ளே போய் என்ன செய்யப் போகிறீர்கள்? அதைச் சொல்லுங்கள்.

கோபிகள்;—அப்பா! இப்போது நீ கேட்ட இந்தக் கேள்வி மிக நன்று; இது கேட்க வேண்டியது அவச்யமே. கேளாய், சொல்லுகிறோம். ஒரு புருஷார்த்த விசேஷம் பெறுவதற்காக வந்திருக்கிறோம். நேற்றுமாலை நாங்கள் கண்ணபிரானைக் கண்டு கேட்டிருந்தோம்; அவனும் ‘ சிற்றஞ்சிறுகாலை வாருங்கள், கொடுக்கிறேன் ’ என்று சொல்லி யிருப்பதால் நாங்கள் உள்ளே சென்றவுடனே அப்பேறு பெறுவோம்; எங்களைப் புகவிடாய் பெருமானே!

வாசல் காப்பான்;—கோபிகாள்! கண்ணபிரான் நேற்று உங்களுக்கு ஏதோ வாக்களித்திருப்பதாகச் சொல்லுகிறீர்களே; இஃது உண்மையாகத் தோன்றவில்லை. உங்களை இவ்வகாலத்தில் அவர் வரச் சொல்லியிருந்தால் இதை என்னிடமும் சொல்லியே யிருப்பர். அவர் இதைப்பற்றி என்னிடம் ப்ரஸ்தாவமே செய்திருக்கவில்லை. நானோ வாசல்காப்பான்; வருபவர்களை யெல்லாம் தாராளமாக உள்ளே புகவிடு

வதற்கோ நான் இங்கு உட்கார வைக்கப்பட்டிருக்கிறேன்; நன்று நன்று; உங்களுடைய அந்தஃகரண சுத்தியைத் தெரிந்துகொள்ளாமல் உங்களை நான் புகவிடவே மாட்டேன். பொழுது விடியுந்தனையும் அப்படி யிருங்கள், பிறகு பார்ப்போம்.

**கோபிகள் ;—** அப்பா! இப்படி வெட்டிதாக வார்த்தை சொல்லத்தகாது; எங்களுடைய அந்தஃகரண சுத்தியைப் புதிதாகவோ நீ பரிசோதிக்க வேணும்? நாங்கள் எல்லாபடியாலும் தூய்மையை யுடையோம். உபாயாந்தர ப்ராவண்யமோ, உபேயாந்தர ப்ராவண்யமோ இவை போல்வன அவத்யங்கள் எம்மிடம் ஈஷத்தும் கிடையா. நாங்கள் மங்களாசாஸன பரர்களென்பதைத் திண்ணமாக எண்ணவேணுமப்பா!

**வாசல் காப்பான் ;—** அப்படியானால் உள்ளபடி சொல்லுங்கள்; உள்ளே போய் நீங்கள் செய்ய நினைத்திருக்கிற காரிய மென்ன அதைச் சொல்லுங்கள்; அது கொண்டு நான் உங்கள் படியைத் தெரிந்து கொள்ளுகிறேன்.

**கோபிகள் ;—** திருப்பள்ளி யெழுச்சி பாடுவதென்றும் ஸுப்ரபாதம் பாடுவதென்றும் நீ கேட்டறியாயோ? அது எங்கள் போல்வாருடைய க்ருத்யமேயாகும். அதைத்தான் செய்யப் போகிறோம். 'உம்பர் கோமானே! உறங்கா தெழுந்திராய்' என்றும் 'அரவணையாயாயரேறே! அருள்புரியத் துயிலெழாயே' என்றும் இங்ஙனே சொல்லிப் பாடுவோம். வேறொன்றும் செய்யோம்.

**வாசல் காப்பான் ;—** ஆய்ச்சிகாள்! நீங்கள் சொல்லுவது வெகுநன்றா யிருக்கிறது! ப்ரபுக்கள் துயில் கொள்ளும்போது உள்ளே புகுவதுவே அபசாரம்; அதிலும் உள்ளே போய்த் துயிலெழுப்புவதென்பது மஹாபசாரம். சித்ர கூடத்திலே சிறு காக்கை முலை தீண்டப்பெற்ற பிராட்டி சயனித்திருந்த ஸ்ரீராமபிரானைத் துயிலெழுப்பி விட்டு * **ஸ மயா போதித: ஸ்ரீமாந் ஸுகஸுப்த: பரந்தப:** * என்று பிறகு எவ்வளவு அநுதாபப்பட்டாளென்பதை அறியீர்கள் போலும். திருக்கண் வளர்ந்தருளும் போதை யழகு காண உள்ளே போகிறோமென்று சொன்னாலும் பாதகமில்லை; துயிலெழுப்பப் போகிறோமென்று நீங்கள் சொல்லுவது மஹத்தான அபசாரம். நீங்கள் உள்ளே போகத்தகவே தகாது.

**கோபிகள் ;—** அப்பப்பா! இப்படி நீ தடை செய்யத் தகவே தகாது. ஸ்ரீராமாயணத்தில் உனக்குப் பரிபூர்ண ப்ரவேசமில்லை போலும். ஸ்ரீராம லக்ஷ்மணர்களை யழைத்துக் கொண்டு போன விச்வாமித்திர முனிவர் * **கௌஸல்யா ஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே, உத்திஷ்ட நரசார்தூல!** * என்று சொல்லி யெழுப்பினதை நீ அறியாய் போலும். எங்கள் தகப்பன்மார்களும் * அரவணையாயாயரேறே! அம்மமுண்ணத்துயிலெழாயே * என்றும் * அரங்கத்தம்மா! பள்ளி யெழுந்தருளாயே * என்றும் சொல்லி யெழுப்பி யுள்ளார்கள். மெய்யாக வுறங்குகிறவர்களைத் துயிலெழுப்புவது அபசாரமே யொழிய * உறங்குவான் போல் யோகு செய்த பெருமானை யுணர்த்துவது உபசாரமேயாகும், அப்பா! இந்த சாஸ்த்ரார்த்த விசாரம் இப்போது நமக்கு வேண்டாம். பேரருள் செய்து எங்களை உள்ளே புகவிடாய்.

**வாசல் காப்பான் ;—** (மன மிரங்கினவனாகி,) கோபிகாள்! உங்களுடைய ஆர்த்தி அபரிமிதமாகக் காண்பதனால் நான் தடை செய்யாது அநுமதிக்கிறேன்; உள்ளே போங்கள்; கதவை நீங்களே திறந்து கொண்டு போங்கள்—என்று சொல்ல. அது கேட்ட கோபிகள், நாங்களே கதவைத் திறந்து கொண்டு போவதென்பது ஸ்வரூபாநுரூபமன்று; நீயே திறந்து எங்களை உள்ளே புகவிட வேணும் என்கிறார்கள். தடை செய்தவன் தானே தன் கையால் திறந்து புகவிட்டால் தானே இவர்களுக்கு மகிழ்ச்சியாகும். ஸ்ரீராமகோஷ்டியிலே புகவந்த விபீஷணாழ்வானைத் தடைசெய்தவன் ஸுக்ரீவன்; தடை செய்யலாகா தென்றவர் திருவடி பெருமாள் அவனை அங்கீகரிப்பதாக முடிவு செய்தவளவில், முன்பு தடை செய்த ஸுக்ரீவ மஹாராஜரையே ஏவி

* ஆநயைநம் ஹரிச்ரேஷ்ட * என்றாரே யல்லது ஸ்நிக்தனான அனுமனை ஏவ வில்லை. தடை செய்தவனைக் கொண்டே ஸ்வீகரிக்கச் செய்வது ரஸவத்தரம் என்பது கருத்து. அந்த நியாயமேயாயிற்று இங்கும்.

கீழே * புள்ளுஞ் சிலம்பின காண் பாசுரம் தொடங்கி பத்துப் பாசுரங்களால் ஆழ்வார்கள் பதின்மரையும் எழுப்பினபடியை ஒவ்வொரு பாட்டிலுமுள்ள சொல் நயங்களைக் காட்டிப் பொருத்தமாக நிர்வஹித்த கணக்கிலே இப்பாட்டில் எம்பெருமானார் எழுப்பப்படுகிறா ரென்பது மூதலிக்கலாகிறது; * பூதம்ஸரச்ச * என்கிற ச்லோகத்திலே ஆழ்வார்களின் திரளிலே 'யதீந்த்ரமிச்ரரந்' என்று எம்பெருமானாரும் பரிகணிதராயிருப்பது காண்க. "பாராங்குச பரகால யதிவர" என்ற ஆசார்ய ஹ்ருதய ஸூக்தியுங் காண்பது.

[நாயகனாய் நின்ற] ஆசார்ய கோஷ்டியில் நடுநாயகமாக நிற்பவர் எம்பெருமானார் என்று காட்டுகிறபடி. "அமுநா தபநாதிசாயி பூம்நா யதிராஜேந நிபத்த நாயகஸ்ரீ: ?" என்ற யதிராஜ ஸப்ததிஸூக்தியும் காண்க. [நந்தகோபன்.] எம்பெருமானைப் புத்திரனாகப் பெற்றவிஷயத்தில் எம்பெருமானார்க்கு நந்தகோபனோடு ஸாதர்மியம். யதிராஜ ஸம்பத்குமாரனென வழங்கப்படுகிற செல்வப்பிள்ளையை க்ருஷ்ணகிசோர ஸ்தானீயனாகக் கொள்க. [உடைய] ஸ்வாமிக்கு உடையவரென்று வழங்குந் திருநாமத்தை ஸூசிப்பித்தபடி. [கோயில்காப்பான்] கோயிலென்கிற சொல் திருவரங்கம் பெரிய கோயிலை மட்டும் சொல்லுவதாகவுங் கொள்ளலாம்; மற்றும் பல கோவில்களையும் சொல்லுவதாகவுங் கொள்ளலாம். * தென்னரங்கச் செல்வம் முற்றும் திருத்திவைத்தான் வாழியே * என்றும் * ஸ்ரீமந் ஸ்ரீரங்கச்ரிய மநுபத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய * என்றும் சொல்லுகிறபடியே திருவரங்கச் செல்வத்தைக் காத்தருளினவரென்கை. * மன்னிய தன்னரங்காபுரி மாமலை மற்று முவந்திடுநாள் * என்கிறபடியே ஸகல திவ்ய தேசங்களையும் உத்தரிப்பித்தவர் ஸ்வாமியே யாதலால் கோயில்களைக் காத்தருளினவரென்பதும் பொருத்தமே. [கொடித்தோன்றுந் தோரண வாசல் காப்பானே!] * கொடியணி நெடுமதிள் கோபுரம் குறுகினர் * என்றும் * நெடுவரைத் தோரணம் நிரைத்தெங்குந் தொழுதனருலகே * என்றும் சொல்லுகிறபடியே கொடியும் தோரணமுமான வாசல் பரமபதவாசல்; அது தன்னையும் ஸ்வாமி யெம்பெருமானார் தம்முடைய ஆளுகையிலே வைத்துக் கொண்டிருப்பவரென்கை. எம்பெருமானார் திருவருளைப் பெறாதவர்களுக்கு அந்த வாசலிற் புகுவது அரிது என்கிற ப்ரஸித்தியைக் காட்டினபடி. [மணிக்கதவம் தாள் திறவாய்] மணியாவது ரத்னம். நவரத்னமென்று சொல்லப்படுவதனால் ஒன்பது ரத்னங்கள் என்று ப்ரஸித்தம். நவரத்னம் போன்ற ஒன்பது திவ்யக்ரந்தங்களை ஸ்வாமிபணித்தருளினார். ஸ்ரீபாஷ்யம், வேதாந்த தீபம், வேதாந்த ஸாரம், வேதார்த்தஸங்க்ரஹம், கீதாபாஷ்யம், சரணாகதி கத்யம், ஸ்ரீரங்ககத்யம், ஸ்ரீவைகுண்ட கத்யம், நித்யம்—என்று ஒன்பது திவ்யக்ரந்தங்களையே இங்கு மணிக்கதவ மென்கிறது. கதவு எப்படி பதார்த்தங்களுக்கு ரக்ஷகமோ அப்படியே இந்த திவ்யக்ரந்தங்களும் மறைப் பொருள்களுக்குச் சேமக் காப்பாக அமைந்தவை யாதலால் கதவென்றது மிகப்பொருத்தம். (கதவு, கதவம்—இவை பர்யாயமே.) இந்த க்ரந்தங்களிலுள்ள பொருள்களை நாங்கள் அநுபவிக்கும்படி செய்தருளவேணுமென்பது தாள் திறவா யென்றதன் கருத்து. "ஆயர்சிறுமியரோமுக்கு மணிக்கதவம் தாள் திறவாய்" என்று அந்வயிப்பது. அறிவிலிகளான எங்களுக்குப் புரியும்படி யருளிச் செய்யவேணு மென்கை.

[மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்.] எம்பெருமான் தன்னுடைய சாஸ்த்ரங்களிலே முன்னமே தேவரீரைப்பற்றிச் சோதிவாய் திறந்து பணித்துள்ளானென்று கருத்து. * கலௌ 'ராமாநுஜஸ் ஸ்ம்ருத: * கலௌ கச்சித் பவிஷ்யதி * உபதேக்ஷ்யந்திதே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்வதர்சிந * இத்யாதி ப்ரமாணங்களை இங்கே அநுஸந்திப்பது. [தூயோமாய் வந்தோம்] * ஆசார்யாதிஹ தேவதாம் ஸமதிகாம் அந்யாம் ந

மங்யாமஹே * என்கிறபடியே ஆசாரியர்க்கு மேற்பட்ட தெய்வமில்லை யென்கிற பாவசுத்தியோடே வந்திருக்கிறோம் என்கை. தூயோமாக வந்தோம் என்றும் கொள்ளலாம். ஸகலார்த்தங்களையும் நாங்கள் தெரிந்துகொண்டு பவித்திரர் களாம்படி வந்தோமென்றவாறு. [துயிலெழ பாடுவான் வந்தோம்] *அநாதி மாயயா ஸுப்த:* என்னும்படி அநாதிமாயையினாலே உறங்கிக் கிடக்கிற நாங்கள் அவ் வுறக்கம் விட்டு உணர்ச்சி பெறுவதற்காகவும், * ஏதத் ஸாம காயந்நாஸ்தே* என்கிற படியே ஸாமகானம் பண்ணிக்கொண்டிருக்கவும் வந்தோம். [வாயால் முன்ன முன்னம் மாற்றுதேயம்மா] *நாஸம்வத்ஸரவாஸிநே ப்ரப்ரூயாத்* இத்யாதிகளைச் சொல்லி எம்மை விலக்கித் தள்ளாமல் அங்கீகரிக்கவேணுமென்கை. [நீ நேச நிலைக்கதவம் நீக்கு.] கதவுகள் இரட்டையாயிருப்பது போலத் திருமந்த்ரமும் த்வயமும் சரமச்லோகமும் இரட்டையாயிருக்கையாலே அவற்றைக் கதவாக விவக்ஷித்து அவற்றின் பொருள்களை உபதேசித்தருளவேணு மென்கிறது. திருமந்த்ரமானது—ப்ரணவம் மந்த்ரசேஷமென்று இரட்டை; த்வயம்—பூர்வ வாக்யம் உத்தரவாக்ய மென்று இரட்டை. சரமச்லோகம்—பூர்வார்த்தம் உத்தரார்த்தம் என்று இரட்டை. இவையே நேசநிலைக்கதவமாகச் சொல்லப்பட்டன. இவற்றைத் திறப்பதாவது—இவற்றின் பொருள்களை விவரித்தலாம் ... ... .... 16

**17.** **அம்பரமே தண்ணீரே சோறே யறஞ்செய்யும் ***
**எம்பெருமான் நந்தகோபாலா வெழுந்திராய் ***
**கொம்பனார்க் கெல்லாங் கொழுந்தே குலவிளக்கே ***
**எம்பெருமாட்டி யசோதா யறிவுறாய் ***
**அம்பர மூடறுத் தோங்கி யுலகளந்த ***
**உம்பர் கோமானே யுறங்கா தெழுந்திராய் ***
**செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா ***
**உம்பியும் நீயு முறங்கேலோ ரெம்பாவாய்.**

இப்பாட்டில், நந்தகோபர் யசோதை கண்ணபிரான் நம்பி மூத்தபிரான் [பல ராமன்] ஆகிய நான்கு வ்யக்திகள் எழுப்பப்படுகிறார்கள். நந்தகோபர் ஔதார்யத்தில் மிகச்சிறந்தவரென்று சிறப்பித்துக் கூறப்படுகின்றார். இப்பிரபந்தத்தில் நந்த கோபரைப்பற்றின ப்ரஸ்தாவம் 1, 16, 17, 18, 21 ஆகிய ஐந்து பாசுரங்களிலுள்ளது. முதற்பாட்டில் *கூர்வேற் கொடுந்தொழிலன் நந்தகோபன்* என்பதனால் அவ ருடைய மங்களாசாஸனபரத்வம் பேசப்பட்டது. பதினாறும்பாட்டாகிய கீழ்ப்பாட்டில் அவர் திருவாய்ப்பாடிக்கெல்லாம் தலைவரென்று அப்பெருமை பேசப்பட்டது. மேற் பாட்டில் ஒப்பற்ற வலிமையுடையவரென்பதும், இருபத்தோராம் பாட்டில் வள்ளல் பெரும்பசுக்களை விசேஷமாகவுடையவரென்பதும் பேசப்படுகின்றது. இப்பாட்டில் நிகரற்ற ஔதார்யமாகிற பெருமை பேசப்படுகின்றது, வஸ்த்ரதானம் செய்பவர், தீர்த்ததானஞ் செய்பவர், அன்னதானஞ் செய்பவர் என்று கூறப்படுகின்றது. நந்தகோபர் இத்தகைய தானங்கள் செய்ததாக ஒரு புராணத்திலும் சொல்லப்பட் டிருக்கவில்லையே. ஆனால் யாதவாப்யுதய காவியத்தில் * அதிசகார வதாந்யமணே: ச்ரியம் வ்யதித கல்பதரோரநு கல்பதாம் * என்று கண்ணபிரான் தனக்கு மகனாகப் பிறந்த மகிழ்ச்சியினால் சிந்தாமணி போலவும் கல்பவ்ருக்ஷம் போலவும் (நந்தகோபன்) தானங்கள் செய்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. ஒரு விசேஷ காலத்தில் தானஞ் செய்வதென்பது உலகில் யார்க்குமே உள்ளதாதலால் அதையிட்டு *அம்பரமே தண்ணீரே சோறேயறஞ்செய்யுமென்று சொல்லிற்றாகக் கூறுவது அழகியதன்று. ஆகில் பாசுரத்திலுள்ள ஔதார்யத்தை எங்ஙனே நிர்வஹிப்பதென்னில், கேண்மின் வஸ்த்ரதானம் தீர்த்ததானம் அன்னதானம் என்று இங்குச் சொல்லப்பட்டிருக்

கின்ற மூன்றுதானங்களும் நந்தகோபன் குமரனான கண்ணபிரானிடத்தில் ப்ரஸித்தமாகவுள்ளன. "காரண குணா: கார்யே ஸங்க்ராமந்தி" என்கிற நியாயத்தினால் காரணபூதரான நந்தகோபரிடத்திலிருந்தே கார்யபூதனான கண்ணபிரானிடத்திலே இவை ஸங்கிரமித்தன போலும் என்று கருதிச் சொல்லுகிறார்களென்க. கண்ணன் வஸ்த்ரதானஞ் செய்தது த்ரௌபதியிடத்திலே ப்ரஸித்தம். தீர்த்ததானஞ் செய்தது பெரியாழ்வார் திருமொழியில் (4-2-7) *மன்னர் மறுக மைத்துனன்மார்க்கொரு தேரின்மேல்; முன்னங்கு நின்று மோழை யெழுவித்தவன்* என்கிற பாசுரத்தில் காணத்தக்கது. பாரத யுத்தத்திற்காகக் குருக்ஷேத்திரத்திற்குப் பாண்டவர்களும் தானுமாய்த் தேரில் போகும்போது அர்ஜுனனுடைய தேர்க்குதிரைகள் தண்ணீரில்லாமல் விடாய்த்தவளவிலே அர்ஜுனன் பிரார்த்திக்கக் கண்ணபிரான் கடினமான ஸ்தலத்திலும் நீர்நரம்பு அறியுமவனாதலால் அங்கு வாருணாஸ்த்ரத்தைப் பிரயோகித்துக் கீழுள்ள நீரை வெளிக் கிளப்பிக் குதிரைகளின் விடாயையும் பாண்டவர்களின் விடாயையும் தீர்த்ததாக இதிஹாஸம் மேலேயெடுத்த பெரியாழ்வார் பாசுரத்தில் அநுஸந்திக்கப்பட்டிருக்கின்றது. இங்ஙனேயான தீர்த்ததானம்தவிர,*இட்டமான பசுக்களை இனிது மறித்து நீரூட்டி* என்ற ஆண்டாள் பாசுரத்தினால் தெரியவருகின்ற நித்ய தீர்த்த தானமுமுள்ளது. இனி அன்னதானஞ் செய்தது எங்குள்ளதென்னில்; *வேர்த்துப் பசித்து வயிறசைந்து வேண்டடிசிலுண்ணும்போது, ஈதென்று பார்த்திருந்து நெடுநோக்குக்கொள்ளும் பத்தவிலோசனத்து* என்றாண்டாளருளிச் செய்தபடி பக்தவிலோசனத்திலிருந்து மஹர்ஷிபத்நிகள் நித்தியமும் கொணர்ந்து ஸமர்ப்பித்துக் கொண்டிருந்த அடிசிலைத் தன்னேராயிரம் பிள்ளைகளுக்குத் தானஞ்செய்து வந்தது ஆக இப்படிப்பட்ட வஸ்த்ர - தீர்த்த - அன்னதானங்கள் கண்ணபிரான் பக்கலிலே காணப்படுமவற்றை நந்தகோபரிடத்தே யேற்றிச் சொன்னதாகக் கொள்ளலாம். அன்றியே, கோபிகளுக்குக் கூறையும் நீரும் சோறுமானவை யெல்லாம் *ரைஸு தேவஸ் ஸர்வமென்கிற நியாயத்தாலே கண்ணபிரானேயாதலால் அவனைக் கொடுத்ததையிட்டு *அம்பரமே தண்ணீரே சோறே யறஞ் செய்யுமென்று சொல்லிற்றாகவுங்கொள்ளலாம்.

எம்பெருமானென்கிற திருநாமம் ஸர்வேச்வரனான பகவானுக்கே அஸாதாரணமாயிருக்க, அதனை நந்தகோபரிடத்தே யேறிட்டு 'எம்பெருமான் நந்தகோபாலா' வென்று சொல்லலாமோவென்னில்; ஸர்வநியாமகனான அந்தப் பகவானையும் நியமிப்பவனாக நந்தகோபாலன் அமைந்ததனால் ப்ரக்ருதத்திலே அவனை எம்பெருமானென்னக் குறையில்லையென்க. பிறகு யசோதைப் பிராட்டியுணர்த்தப்படுகிறாள் கொம்பனார்க்கெல்லாமென்று தொடங்கி. கொம்பனார் என்றது கொம்பு அன்னார் என்றபடியாய் வஞ்சிக்கொடிபோல் துவண்ட இடையையுடையார் என்ற காரணத்தினால் மாதர்களைச் சொல்லக்கடவது. இங்கு ஸாமாந்யஸ்த்ரீகளைச் சொல்லுகிறதன்று; பகவானை மகனாகப் பெறப் பெற்ற பாக்யவதிகளான கௌஸல்யை, தேவகி முதலான ஸ்த்ரீ ரத்னங்களைச் சொல்லுகிறது. அப்படிப்பட்ட பகவஜ்ஜநநிகளுக்குள்ளே தலை சிறந்த யசோதைப் பிராட்டியே! என்றழைக்கிறபடி. கௌஸல்யாதிகள் எம்பெருமானைப் பிள்ளையாகப் பெற்றார்களே யொழிய *ஞாலத்துப் புத்திரனைப் பெற்றார் நங்கைமீர் நானே மற்றாருமில்லை* என்று யசோதை தானே சொல்லிக்கொண்டதுபோலச் சொல்லிக்கொள்ளலாம் பெருமை ஏகதேசமும் அவர்களுக்கில்லையே. தேவகிதானும் *திருவிலேனொன்றும் பெற்றிலேன், எல்லாம் தெய்வ நங்கை யசோதை பெற்றாளே* என்று சொல்லும்படியான பேறன்றோ யசோதையினுடையது. [குலவிளக்கே] *ஆயர்பாடிக்கணி விளக்கே!* என்றும் *ஆயர் குலத்தினில் தோன்று மணிவிளக்கை* என்றும் *ஆயர்குல விளக்காகச் சொல்லப்பட்ட கண்ணபிரானையும் விளங்கச் செய்த விளக்கன்றோ யசோதை. *அறிவொன்று மில்லாத வாய்க்குலம்* என்று இழித்துரைக்கப்பட்ட கோபால

குலம் இவளாலே யன்றோ விளக்கம் பெற்றது. [எம்பெருமாட்டி யசோதாய்!] நந்த கோபாலன் எம்பெருமானாகும்போது அவனது மனைவியான யசோதை எம்பெரு மாட்டியாகக் குறையில்லையே. நந்தகோப யசோதைகளையே பெருமாளும் பிராட்டியு மாகப் பாவித்துச் சொல்லுகிறபடி. எமக்கெல்லாம் பெருமையை விளைவித்தவளே! என்றுமாம்.

மேல் எசோதை யிளஞ்சிங்கமான கண்ணபிரானை யுணர்த்துகிறார்கள். 'நந்த கோபன் குமரா எழுந்திராய்' என்றோ 'நாராயணா வெழுந்திராய்' என்றோ சொல்ல லாமாயிருக்க அங்ஙனஞ் சொல்லாது 'ஓங்கி யுலகளந்த வும்பர் கோமானே * என்று விளித்து எழுப்புவதானது - ஸௌலப்யத்தில் கண்ணபிரானுக்கும் உலகளந்த மூர்த்திக்கு முள்ள ஒற்றுமை நயம்பற்றியென்க. * சிறியனென்றென்னிளஞ் சிங்கத்தை இகழேல் கண்டாய், சிறுமையின் வார்த்தையை மாவலியிடைச் சென்று கேள் * என்பது யசோதைப் பிராட்டியின் வார்த்தை. முப்பது பாசுரமான திருப் பாவையில் மூன்று பதிகங்களிலும் கண்ணபிரானை உலகளந்த பெருமானாகக் கூறியிருப்பது குறிக்கொள்ளத்தக்கது. முதற்பதிகத்தில் *ஓங்கியுலகளந்த வுத்தமன்* என்றது; இப்பதிகத்தில் இப்பாசுரம். மேற்பதிகத்தில் * அன்றிவ் வுலகமளந்தா யடிபோற்றி * என்பது. * தாவியன்றுலகமெல்லாந் தலைவிலாக்கொண்ட வெந்தை யான திரிவிக்கிரமன் போலவே இன்னாரினையாரென்று வாசிவையாமல் எல்லாரோடுங் கலந்து பழகுந்தன்மைக்குக் கண்ணபிரானும் உலகளந்த பெருமானும் ஒப்பர் களென்க.

கண்ணபிரானை யெழுப்பியும் அவன் வாய்திறந்திலனாக, திருத்தமையனாரை யெழுப்பியே தன்னை யெழுப்பவேணு மென்றிருந்தானாகக் கொண்டு, மேல் நம்பி மூத்தபிரானை [பலராமனை] யெழுப்புகின்றனர். பலதேவனைச் செம்பொற் கழலடிச் செல்வா! என்று விசேஷித்து எழுப்புவது மிகவழங்கியது. *மக்களறுவரைக் கல்லிடைமோத இழந்தவள் தன் வயிற்றில், சிக்கின வந்து பிறந்து நின்றாய்* (பெரி யாழ்வார் திருமொழி 5-3-1). என்றபடி தேவகியின் வயிற்றிற் பிறந்த குழந்தைகள் அறுவர் கம்ஸனால் மோதி முடிக்கப்பட்டபின் அவதரித்த கண்ணபிரானுக்கு அங் ஙனம் ஒரு விபத்தும் விளையாதபடி பலராமன் முன் தோன்றினனன்றோ. கண்ண பிரானுக்கு ஒரு தீங்கு மில்லாமைக்குக் காரணம் பலராமனுடைய பொற்கால் நலமே யென்று கருதிய கோபிகள் *செம்பொற் கழலடிச் செல்வா! என்றழைக்க ப்ராப்தமே யன்றோ. உலகில், ஒரு வீட்டுக்கு நாட்டுப்பெண் ஒருத்தி வந்தால் அவள் வந்தது முதலாகக் குடும்பத்தில் நன்மைகள் மிகுந்தால் மாமியார் மாமனார்கள் அவளுடைய கால்நலத்தைக் கொண்டாடிக் கூறுவதும், நன்மைக்கு எதிராகத் தீமைகள் விளைந் தால் 'இவள் என்றைக்கு இவ்வீட்டில் தனது கரிக்காலை வைத்தாளோ அன்று முதல் சனி பிடித்தது' என்று நிந்தித்துக் கூறுவது முண்டே. இங்குச் சீர்மல்குமாய்ப் பாடிச் செல்வத்திற்கெல்லாம் மூலகந்தம் பலராமனுடைய கால் நலமே யென்று கருதி யது மிகப் பொருத்தம். இங்ஙனம் பலதேவனை யுணர்த்தி உம்பியும் நீயு முறங்கேல் என்கிறார்கள். நீங்களிருவருமாகச் சேர்ந்து எங்களை நோக்கியருளவேணு மென்பது கருத்து. *ஸந்தேசைஸ் ஸாம மதுரை: ப்ரேம கர்ப்பை ரகர்விதை:, ராமேணாச் வாஸிதா கோப்ய:* என்கிற ஸ்ரீவிஷ்ணு புராண வசனப்படிக்கும், *தூத்யேநாபி ச யஸ்ய கோபவநிதா: க்ருஷ்ணகஸாம் வ்யஸ்மரந் * என்கிற பட்டர் ஸ்ரீஸூக்திப் படிக்கும் பலராமன் பேச்சில்வல்லவனென்பது தெரிய வருவதால், இவன் தன் பேச்சிலினிமையாலே கண்ணபிரானைத் தங்களுக்கு வசப்படுத்தவேணு மென்னுங் கருத்தினால் "நீயெழுந்திராய்" என்றவளவோடு நிறுத்தாமல் * உம்பியும் நீயுமுறங் கேல் * என்கிறார்கள்.

இப்பாட்டில், நந்தகோபர் யசோதை கண்ணபிரான் பலராமன் என்கிற வியாஜத்தினல் முறையே ஆசார்யன், திருமந்த்ரம், திருமந்த்ரார்த்தம், திருமந்த்ரார்த்த ஸாரம் ஆகிய இந்நான்கும் உரிய சொற்களால் தெரிவிக்கப்படுகின்றன. (எங்ஙனேயென்னில்;) நந்தகோபாலன் அம்பரமும் தண்ணீரும் சோறும் அறஞ்செய்வதாகச் சொல்லியுள்ளது. இம்மூன்றையும் ஆசார்யனே அறஞ்செய்யக் காண்கிறோம். அம்பரமென்பது ஆகாசம்; பரமாகாச சப்தவாச்யமான *நலமந்தமில்லதோர் நாடெனும் ஸ்ரீவைகுண்டத்தை ப்ராபிக்கச்செய்வதே அம்பரமறம் செய்கை. தண்ணீரென்பது விரஜையாறு. விரஜா நதீஸ்நானத்தைச் செய்விப்பவனென்கை. சோறு என்பது—"அந்நம் ப்ரஹ்மேதி வ்யஜாநாத்" என்ற உபநிஷத்தில் அன்னமாக ஓதப்பட்ட ப்ரஹ்மமேயாம். *அஹமந்நாதோஹ மந்நாதோ ஹமந்நாத:" என்று ஸாமகானம் செய்துகொண்டு ப்ரஹ்மாநுபவம் செய்யும்படி பண்ணுவிப்பவர் ஆசாரியர். நந்தகோபாலனென்றதும் ஆசார்யரிடத்திற் பொருந்தும். *எடுத்த பேராளன் நந்தகோபன்* என்று நம்மாழ்வாரருளிச் செய்தபடி நந்தகோபர் நிதிபெற்றுப் பரிபூர்ண பகவதநுபவம் செய்தவர். ஆசார்யரும் அப்படியேயன்றோ.

இனி, கொம்பனார்க் கெல்லா மென்று தொடங்கி இரண்டடிகளால்-பகவானைப் பிள்ளையாகப்பெற்ற மாதாக்களுள் மிகச் சிறந்தவளே! என்று சொல்லி யசோதைப் பிராட்டி எழுப்பப்படுகிறாள். "மந்த்ரோ மாதா குரு; பிதா" என்ற பிரமாண வசனத்தின்படி மாதாவாகச் சொல்லுகிறது அஷ்டாக்ஷர மந்த்ரத்தையே. மாதாவானவள் ப்ரஜையைத் தன் வயிற்றினுள்ளே அடக்கிக் கொண்டிருப்பது போல மந்த்ரமும் பகவானைத் தன்னுள்ளே அடக்கிக் கொண்டிருக்குமே. பகவானுடைய மாதாக்களுள் யசோதை "ஞாலத்துப் புத்திரனைப் பெற்றார் நங்கைமீர்! நானே மற்றாருமில்லை" என்னும்படி சிறப்புற்றது போலத் திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரம் மற்றுள்ள மந்த்ரங்களிற் காட்டில் சிறப்புற்றதன்றோ. முமுக்ஷுப்படியில் "பகவந் மந்த்ரங்கள்தான் அனேகங்கள்; அவைதான் வ்யாபகங்களென்றும் அவ்யாபகங்களென்றும் இரண்டு வர்க்கம். அவ்யாபகங்களில் வ்யாபகங்கள் மூன்றும் ச்ரேஷ்டங்கள்; இவை மூன்றிலும் வைத்துக்கொண்டு பெரிய திருமந்த்ரம் ப்ரதாநம்" என்றருளிச் செய்தது இங்கே அநு ஸந்தேயம்.

இதற்குமேல் "அம்பரமூடறுத் தோங்கி யுலகளந்த" இத்யாதியால் திருமந்த்ரார்த்தம் அநுஸந்திக்கப்பட்டதாகிறது. எம்பெருமான் ஸர்வ வ்யாபகனென்பதே நாராயண மந்த்ரார்த்தமாதலால் அந்த ஸர்வவ்யாபகத்வமே இங்கு அநுஸதிக்கப்பட்டதாயிற்று. திருமங்கையாழ்வாரும் திருநெடுந்தாண்டகத்தில் (4) "மந்திரத்தை மந்திரத்தால் மறவாதென்றும் வாழுதியேல்" என்று திருமந்த்ர ப்ரஸ்தாவம் செய்தவுடனே *ஒண்மிதியிற் புனலுருவி* என்கிற அடுத்த பாசுரத்தினல் திருமந்த்ரார்த்தமான த்ரிவிக்ரமாபதானத்தையேயன்றோ அநுஸந்தித்தது. இதற்குமேல் *செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா* இத்யாதியினல் பாகவதோத்தமனை நம்பி மூத்தபிரானை [பலராமனை] யுணர்த்தியது "நின் திருவெட்டெழுத்துங் கற்று நானுற்றது முன்னடியார்க் கடிமை" என்று திருமங்கையாழ்வார் திருமந்த்ரத்தின் ஸாரார்த்தமாக எடுத்துக் காட்டியருளினது பாகவத சேஷத்வமாகையாலே அதனை ஸூசிப்பித்தபடி. இங்கு "உம்பியும் நீயுமுறங்கேல்" என்று இருவரையும் ஒன்று சேர்த்துச் சொன்னது பகவச் சேஷத்வமும் பாகவத சேஷத்வமும் ஒன்றை விட்டொன்று பிரிந்திரா தென்கிற தத்துவத்திற்கு ஸ்மாரகமாகும்.

18. உந்து மதகளிற்ற னோடாத தோள்வலியன்*
நந்தகோபாலன் மருமகளே நப்பின்னாய்*
கந்தங் கமழுங் குழலீ கடைதிறவாய்*
வந்தெங்குங் கோழி யழைத்தனகாண்* மாதவிப்
பந்தல் மேற் பல்காற் குயிலினங்கள் கூவினகாண்*
பந்தார்விரலி யுன் மைத்துனன் பேர்பாட*
செந்தாமரைக்கையாற் சீரார் வளையொலிப்ப*
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

இப்பாட்டில் கண்ணபிரானுடைய திவ்ய மஹிஷியான நப்பின்னைப்பிராட்டியை உணர்த்துகிறார்கள் கோபிகள்.

ஸ்ரீக்ருஷ்ணவதாரத்தில் கண்ணபிரானுக்கு நப்பின்னை பிரதான மஹிஷியாகக் குலாவப்படுகிறாள். அர்ச்சாவதாரங்களில் (கண்ணபிரானுக்கு) ருக்மிணிப் பிராட்டியே பிரதான மஹிஷியாக திவ்ய தேசங்களில் ஸேவை ஸாதித்தாலும் ஆழ்வார்களின் திவ்ய ஸூக்திகளில் ருக்மிணியைப் பற்றின பேச்சு மூன்று நான்கிடங்களில் மாத்திரமேயுள்ளது; நப்பின்னையைப்பற்றியே பல நூறிடங்களிலுள்ளது. இதற்கு என்ன காரணம்? என்பது பற்றிக் கூரத்தாழ்வான் ஸுந்தரபாஹுஸ்தவத்தில் "ஹே ஸுந்தரைகதரஜந்மநி க்ருஷ்ணபாவே" என்னும் சுலோகத்தில் கூறியுள்ளார். திருமழிசைப்பிரான் திருச்சந்த விருத்தத்தில் *ஆயனாகி ஆயர்மங்கை வேயதோள்விரும்பினாய்* என்றருளிச் செய்திருப்பதை மூலமாகக் கொண்டு கூரத்தாழ்வானுடைய (மேலே குறித்த) ச்லோகம் அவதரித்ததென்று அறியக்கிடக்கிறது. [அவ்விடத்து அடியேனுடைய வியாக்கியானம் காண்க. ச்லோ—107.] யதுகுலோத்பவனான கண்ணனுக்கு கோபாலகுலமே விசேஷித்து ஆதராஸ்பதமாயிருந்தபடியால் அக்குலத்திற்கு வாய்த்த திவ்ய மஹிஷியான நப்பின்னையே அவனுடைய பரமப்ரீதிக்கு இலக்காயிருக்கத் தகுந்தவளென்றுகொண்டே ஆழ்வார்கள் அவளையே அடிக்கடி பேசுகிறார்கள். ஆனால் ஸ்ரீவிஷ்ணுபுராணம் ஸ்ரீபாகவதம் முதலிய நூல்களில் நப்பின்னையைப்பற்றின ப்ரஸ்தாவமே காண்பதில்லை; கண்ணனைப்பற்றி எத்தனையோ ஸம்ஸ்க்ருதகவிகள் காவியங்கள் இயற்றியிருக்கிறார்களே; அவர்களும் நப்பின்னையைப் பற்றி அணுவளவும் பேசியிருப்பதில்லை. ஆழ்வார்களின் திவ்யப்பிரபந்தங்களிலும் இவற்றைச் சார்ந்து தோன்றிய பிற தமிழ் நூற்களிலுமே இப்பிராட்டியைப்பற்றிப் பேசியிருப்பன காண்கிறோம். தேசிகனுடைய யாதவாப்யுதயத்திலுள்ளதென்பதைப் பல கால் விளக்கியிருக்கிறோம். திவ்வியப்பிரபந்தங்களில் 'பின்னை' எனறு பலவிடங்களிலும், 'நப்பின்னை' என்று சில விடங்களிலும் வழங்கியிருக்கக் காண்கிறோம். இது தமிழ்ப் பெயர். இதற்குச் சேர்ந்த வடமொழிப் பெயர் யாதென்று ஆராயுமளவில் நம் ஆசாரியர்களின் திவ்யஸூக்திகளிலிருந்து நீலா என்பது வடமொழிப் பெயரென்று தெரிந்துகொள்ளலாகிறது. பட்டர் அருளிச் செய்த *நீலாதுங்க ஸ்தநகிரிதடீ த்யாதி. (திருப்பாவைத்) தனியனிலும், மேலே காட்டிய கூரத்தாழ்வானுடைய ச்லோகமொன்றிலும், யாதவாப்யுதய ச்லோகமொன்றிலும் நப்பின்னையை நீலா என்று கூறியிருத்தலால் இதுவே இவளுடைய வடமொழித் திருநாமமென்று அறுதியிடப் பெறுகிறோம்.

இப்பிராட்டிக்கு இத்திருநாமம் இடுகுறிப்பெயரா? காரணப்பெயரா? என்று ஆராயுமளவில் அடியேனுடைய ஆராய்ச்சியில் தேறினதைத் தெரிவிக்கிறேன். எம்பெருமான் திருநாட்டில் ஸ்ரீ தேவி, பூதேவி, நீலாதேவியென்று மூன்று திவ்ய மஹிஷிகளோடு கூடியிருப்பதாக பகவச்சாஸ்த்ரங்களினால் தெரிய வருகிறது; ஸ்ரீ ராமாயணத்தில் ஸமுத்ரசரணாகதி ப்ரகரணத்திலுள்ளதான *புஜை: பரமநாரீணாம்

அபிம்ருஷ்ட மநேகதா* என்ற ச்லோகத்தின் வியாக்கியானத்திலும் இதுகாணலாகிறது. கூரத்தாழ்வானும் ஸ்ரீ வைகுண்டஸ்தவத்தில் (ச்லோ. 78 முதல்) ஐந்து ச்லோகங்களினால் அம்மூன்று திவ்ய மஹிஷிகளையும் ப்ரசம்ஸிக்கிறார். ஆழ்வார்களருளிச் செயல்களில் * உடனமர்காதல் மகளிர் திருமகள் மண்மகளாயர் மடமகள் என்றிவர் மூவர் * கூந்தல் மலர் மங்கைக்கும் மண்மடந்தைக்கும் குலவாயர் கொழுந்துக்கும் கேள்வன் தன்னை * இத்தியாதி பாசுரங்கள் பல பல. இப்பாசுரங்களில் நீளை யென்று சொல்ல வேண்டு மிடங்களில் அச்சொல்லையிட்டுச் சொல்லாமல் ‘ஆயர்மடமகள்’ என்றும் ‘குலவாயர் கொழுந்து என்றுமே சொல்லியிருப்பதால் அது பற்றியே ஆசாரியர்கள் நப்பின்னையை நீளாதேவியாகக் கொண்டார்கள். இக்கொள்கையை அடியேன் பல நூல்களில் விவரித்திருக்கிறேன். திவ்யப்ரபந்த திவ்யார்த்ததீபிகையிலும் பஞ்சஸ்தவாதி ஸ்தோத்ரவுரைகளிலும் கண்டுகொள்வது.

இந்த நப்பின்னையானவள் கும்பரென்பவர்க்கு மகளாதலால் ‘கும்பர் திருமகளாரே!’ என்றழைக்கலாமாயிருக்க, அங்ஙன மழையாதே நந்தகோபாலன் மருமகளே; என்றழைத்ததென்னென்னில்; பெண்டிர்க்குப் பிறந்தகத்து ஸம்பந்தத்திற் காட்டிலும் புக்ககத்து ஸம்பந்தமே பரமோத்தேச்யமாயிருக்கும். ஆனதுபற்றியே அசோகவனத்தில் பிராட்டி, திருவடிக்குத் தன்னை இன்னாளென்று உணர்த்தும் போது “ஸ்நுஷா தசரத ஸ்யாஹம்” என்று ‘தசரத மஹாராஜர்க்கு நான் நாட்டுப் பெண்’ என்று முன்னஞ்சொல்லி, பின்னையே “துஹிதா ஜநகஸ் யாஹம் வைதேஹஸ்ய மஹாத்மந:” என்று ஜநகசக்ரவர்த்திக்குத் திருமகளாவேன் நான் என்றாள். அதையடியொற்றியே இங்கும் நந்தகோபாலன் மருமகளே யென்றது. நந்த கோபாலற்கு * உந்துமதகளிற்றனென்று ஒரு அடைமொழி கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு மூன்று வகையான பொருள்கள் சொல்ல இடமுள்ளது. மதமுந்துகளிற்றன் என்றாக்கி. மதநீரைப் பெருக்குகின்ற யானையையுடையவன் என்று ஒரு பொருள். (மதகளிற்றையுந்துமவன் என்பது மற்றொரு பொருள்.) மதயானையோடே பொருது அதை விழத்தள்ளுமவன் என்றவாறு. மதமுந்துகளிறு போன்றவன் என்பது மூன்றாவது பொருள்.

இப்பொருள்களை அடைவே விவரிப்போம். மதநீரைப் பெருக்குகின்ற யானையையுடையவன் என்றன்றோ முதற்பொருள் கூறப்பட்டது. திருவாய்ப் பாடியிலே மாடுகளும் ஆடுகளும் எருமைகளுமிருக்குமே யல்லது யானையிருக்க ப்ரஸக்தியேது? நந்தகோபாலன் யானை கட்டி வாழ்ந்ததாக எங்கும் சொல்லப்பட்டிருக்கவில்லையே யென்று சங்கிக்க வேண்டா. *தொடர் சங்கிலிகை சலார்பிலாரென்னத் தூங்கு பொன் மணியொலிப்பப், படுமும் மதப்புனல் சோர வாரணம் பையநின்றூர்வது போல், உடன் கூடிக் கிண்கிணியாரவாரிப்ப உடைமணி பறைகறங்கத், தடந்தாளிணை கொண்டு சார்ங்கபாணி தளர்நடை நடவானோ* (பெரியாழ்வார் திருமொழி 1-7-1.) என்று யசோதைப் பிராட்டி கண்ணபிரானை மதமொழுகு வாரணமாகவே சொல்லியிருக்கையாலே கண்ணனாகிற யானையையுடையவனென்னத் தட்டில்லை. ஆழ்வார்கள் பலவிடங்களிலும் எம்பெருமானை யானையாகவே சொல்லிப் போருவர்கள்; * தென்னானாய் வடவானாய் குடபாலானாய்! குணபாலமதயானாய் * (திருநெடுந்தாண்டகம்-10.) என்று நாலுதிசைக்கும் நாலு யானையாகவன்றோ திருமங்கையாழ்வார் எம்பெருமானை அநுபவித்தது.

யானைக்கும் எம்பெருமானுக்கும் பலபடிகளாலே ஒற்றுமையுண்டு; சில படிகளை யிங்குக் காட்டுவோம். (1) யானை, எத்தனை தடவை பார்த்தாலும் பார்க்கும் போதெல்லாம் அபூர்வ வஸ்துபோலவேயிருந்து பரமானந்தம் பயக்கும்; எம்பெருமானும் * எப்பொழுதும் நாள் திங்களாண்டுழியூழிதொறும் அப்பொழுதைக்கப்

பொழுதென்னுரார்வமுதமே * என்னும்படி அபூர்வவத்விஸ்மயாவஹனுயிருப்பவன். (2) யானை, தன்மீது ஏற விரும்புமவனுக்குத் தன் காலையே காட்டிக்கொடுக்கும்; எம்பெருமானும் தன்னையெய்த விரும்புவார்க்கு *அடிக்கீழமர்ந்து புகுந்து அடியீர்! வாழ்மினென்றென்றருள் கொடுக்குமவனுகையாலே தன் திருவடியையே காட்டிக்கொடுப்பன். (3) யானை தன்னைக் கட்டுவதற்குத் தானே கயிறு கொடுக்கும்; * எட்டினேடிரண்டெனுங்கயிற்றினல் * (திருச் சந்த விருத்தம்.) என்கிறபடியே எம்பெருமானைக் கட்டுப்படுத்தும் பக்தியாகிற கயிற்றை அவன் தானே தந்தருள்வன். * பகவந்! பக்திமபி ப்ரயச்ச மே * மதிநலமருளினன். (4) யானை நீராட்டப் பெற்றாலும் * கலபம் க ஏவ ஸ்நாத்வாபி தூளீரஸிகம் நிஷேத்தா ?* என்று பட்டரருளிச் செய்கிறபடியே அடுத்த க்ஷணத்திலே அழுக்கோடே சேரும்; எம்பெருமானும் சுத்த ஸத்வமயனுய்ப் பரம பவித்திரனுயிருக்கச் செய்தேயும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்புமுடைய நம்போல்வாரோடே சேரத் திருவுள்ளமாயிருப்பன் வாத்ஸல்யாதி சயத்தாலே. (5) யானையைப் பிடிக்க வேண்டில் பெண்யானையைக் கொண்டே பிடிக்கவேண்டும்; எம்பெருமானை வசப்படுத்த வேண்டில் பிராட்டியை முன்னிட்டே வசப்படுத்த வேண்டும். (6) யானை, பாகனுடைய அனுமதியின்றித் தன் பக்கல் வருமவர்களைத் தள்ளிவிடும்; எம்பெருமானும் *வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து* என்றபடி வைதிகோத்தமர்களை முன்னிட்டு அணுகாதாரை அகற்றிவிடுவன். (7) யானையின் பாஷை பாகனுக்கே தெரியும்; எம்பெருமானுடைய பாஷை திருக்கச்சி நம்பிபோல்வார்க்கே தெரியும். (8) யானையினுடைய நிற்றல் இருத்தல் கிடத்தல் திரிதல் முதலிய தொழில்கள் யாவும் பாகனிட்ட வழக்காயிருக்கும்; எம்பெருமானும் * கணிகண்ணன் போகின்றான் காமரூ பூங்கச்சி மணிவண்ணா நீ கிடக்கவேண்டா....உன்றன் பைந்நாகப்பாய் சுருட்டிக்கொள் * என்றும் * நீ கிடக்க வேண்டும். உன்றன் பைந்நாகப்பாய் விரித்துக்கொள் * என்றும் * கிடந்தவாறு, எழுந்திருந்து பேசு * என்றுஞ் சொல்லுகிற திருமழிசைப் பிரான் போல்வார்க்கு ஸர்வாத்மநா விதேயனுயிருப்பன். (9) யானை உண்ணும்போது இறைக்கும் அரிசி பலகோடி நூறாயிரமெறும்புகட்கு உணவாகும்; எம்ருபெமானமுதுசெய்து கை வாங்கின ப்ரஸாதத்தாலே பல கோடி பக்த வர்க்கங்கள் உஜ்ஜீவிக்கலாயிருக்கும். (10) யானை மிக நீண்ட கையையுடையது; எம்பெருமானும் * அலம்புரிந்த நெடுந்தடக்கையன். (11) யானை தான் இறந்த பின்பும் உதவும்; எம்பெருமானும் தீர்த்தம் ப்ரஸாதித்துத் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளின பின்பும் இதிஹாஸ புராணங்கள் அருளிச் செயல்கள் மூலமாகத் தனது சரிதைகளை யுணர்த்தி யுதவுகின்றான். (12) யானைக்கு ஒரு கையேயுள்ளது; எம்பெருமானும் வேண்டிற்றெல்லாந்தருங் கோதில் வள்ளலாகையாலே கொடுக்கும் கையொழியக் கொள்ளுங் கையுடையனல்லன். *கொள்வனுன் மாவலி மூவடிதாவென்றதும் கள்வமே யன்றோ; அதுதானும் ஸ்வார்த்த மாகவன்றே. *தைத்யௌதார்யேந்த்ர யாச்ஞாவிஹதிமபநயந் வாமநோர்த்தீ த்வமாஸீ:* என்ற பட்டர் ஸ்ரீஸூக்தி காண்க. (13) பாகனுக்கு ஜீவனங்கள் ஸம்பாதித்துத் தரும் யானை; எம்பெருமானும் அர்ச்சக பரிசாரகர்களுக்கும் காலக்ஷேபபரர்களுக்கும் ஜீவனேஜ்ஜீவனங்களை யளித்தருள்வன். இங்ஙனே மற்றும் பல உவமைப் பொருத்தங்கண்டுகொள்க. இவ்வகைகளாலே யானையாகிய கண்ண பெருமானை யுடையவன் நந்தகோபன்.

மதகளிற்றையுந்துமவன், மதமுந்துகளிறு போன்றவன் என்ற மற்றையிரண்டு பொருள்களிலும் கருத்து ஒன்றே; தாமரையை வென்ற கண்ணன் எனினும், தாமரை போன்ற கண்ணன் எனினும் ஒக்குமன்றோ; அதுபோலவே, மதயானை போன்ற மிடுக்கை யுடையவன் நந்தகோப னென்கை. வேதத்தில் எம்பெருமானை * ய ஆத்மதா: பலதா:* என்று ஓதிவைத்தது. தன்னையுங் கொடுத்துத் தன்னை யநுப

விக்கும்படியான வலிமையையுங் கொடுப்பனம் எம்பெருமான்,*ஓடாத தோள்வலியன்* என்ற அடுத்த அடைமொழியினுலும் இதுவே விவரிக்கப்பட்டதாகும்.

ஆசார்யபரமான உள்ளுறை பொருள் கொள்ளுமளவில்; [உந்து மதகளிற்றன்] *மதக்களிறைந்தினையும் சேரிதிரியாமல்* என்ற பொய்கை யாழ்வார் பாசுரத்தின் படியே மதயானை போன்ற பஞ்சேந்திரியங்களேயும் நொறுக்கித் தள்ளுமவன்—ஜிதேந்திரியன் என்றபடி. [ஓடாத தோள்வலியன்.] தோள் என்றது கையென்றபடி; கையாவது ஞானக்கை. வாதிகளேயோ பிரதிவாதிகளேயோ கண்டு பிற்காலிக்க வேண்டாதே வித்வத் கோஷ்டிகளில் முன்னணியில் நிற்குமாசார்யரைச் சொல்லுகிறது. அன்றியே, அஸ்மதாதிகள் ஸம்ஸார காந்தாரங்களில் ஓட வேண்டாத மிடுக்குடையவர் என்னவுமாம். [நந்தகோபாலன் மருமகள்] எம்பெருமானுக்கு ப்ராண வல்லபர்களாயிருக்கும்படியைச் சொல்லுகிறது. எம்பெருமான் பிராட்டியின் வாக்கை மீறி நடவாதாப் போலே ஆசார்யர்களின் திருவாக்கையும் மீறி நடக்ககில்லானுகையாலே அவனுக்குப் பத்நீஸ்தாநீயர்களா யிருப்பர்களாயிற்று ஆசாரியர்கள். [நப்பின்னுய்] ஏழு ரிஷபங்களாகிற விரோதிகளே யழித்துக் கைப்பற்றப் பட்டவள் நப்பின்னை; இவ்வண்ணமாகவே காமக்ரோதலோப மோஹமத மாத்ஸர்ய அஸூயைகளாகிற பல விரோதிகளின் நிரஸந பூர்வகமாக எம்பெருமானுல் கைக்கொள்ளப் பட்டவர் ஆசாரியர்.

[கந்தங் கமழுங்குழலீ] மாதர்கள் *செண்பக மல்லிகையோடு செங்கழுநீரிருவாட்சி யெண்பகர் பூக்களேக் குழலிலே சூடி நறுமணம் கமழப் பெறுவர்கள்; ஆசாரியர்கள் * அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்ப மிந்த்ரியநிக்ரஹஃ, ஸர்வபூததயா புஷ்பம் க்ஷமா புஷ்பம் விசேஷதஃ, த்யாநம் புஷ்பம் தபஃ புஷ்பம் ஜ்ஞாநம் புஷ்பம் ததைவ ச; ஸத்யமஷ்ட விதம் புஷ்பம் விஷ்ணோஃ ப்ரீதிகரம் பவேத்* என்னப்பட்ட புஷ்பங்களினுலே நறுமணம் வீசப் பெறுவர்கள். இவர்களின் திருமேனி முழுவதும் நறுமணம் கமழ நின்றாலும் முக்கியமாகத் திருமுடியிலேயாயிற்று அது காணலாவது; வணங்காமுடி மன்னராகவன்றிக்கே வணக்கமே கொண்டிருக்கும்படியைச் சொல்லுகிறது.

[கடை திறவாய்.] கடை யென்கிற சொல்லுக்கு ஆபண மென்னும் பொருளே ஸ்வாபதேசத்தில் கொள்ளத்தகும், 'ஸர்வவித்யா நிஷத்யா' என்றன்றோ மஹான்களேச் சொல்லுவது! அவரவர்கள் எதிர்பார்க்கும் ஸகலார்த்தங்களும் கிடைக்கக்கூடிய கடை காலக்ஷேபகோஷ்டி; அதிலே எங்களேப் புகவிட வேணுமென்று அபேக்ஷிக்கிறபடி. [வந்தெங்கும் கோழி யழைத்தன காண்]. கோழியானது குப்பைகளில் கிடக்கும் ரத்னங்களேயும் மூக்கால் கொந்தியெடுத்து விடுமென்று ப்ரஸித்தி. ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணத்தில் "கொக்கைப் போலிருக்கும் கோழியைப் போலிருக்கும்" என்பது ப்ரஸித்தமான வார்த்தை. ஸாரக்ராஹிகளான ஸச்சிஷ்யர்கள் பலவிடங்களிலிருந்தும் பிரார்த்திக்க வந்திருக்கிறார்களென்கை. [மாதவிப் பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவின காண்.] * மாதவீம் மாதவப்ரியாம் * என்கிற ச்ருதியின்படியே மாதவ திவ்ய மஹிஷியாகிய பிராட்டியை மாதவி யென்கிறது. பந்தல் என்று நிழல்தரு மிடத்தைச் சொல்லுகிறது. பிராட்டியின் அபிமான நிழலிலே யொதுங்கி யிருக்கின்ற குயில்களென்றதாயிற்று. குயில்கள் பரப்ருதமென்று பெயர் பெற்றவை; அதுபோல * உப த்வா நேஷ்யே* என்று வைத்துக்கொள்ளும் ஆசாரியர்களால் போஷிக்கப் படுமவர்கள் குயிலாக விவக்ஷிதர்கள். *பிகஃ கூஜதி பஞ்சமம் * என்கிற படியே குயில் கூவுவது பஞ்சமராக மெனப்படும். ஆசாரியர்கள் சொல்லும் சொற்கள் 'இது ஐந்தாவது வேதமோ!' என்னலாம்படியிருக்கும். *மாம்பொழில் தளிர் கோதிய மடக்குயில்வாயது துவர்ப் பெய்த, தீம்பலங்கனி தேனது நுகர் திருவெள்ளறை* என்கிறபடியே முதலிலே மாந்தளிர்களே யுண்டு அதனுல் வாய் துவர்த்துப்போக, பிறகு பலாப்பழத் தேனைப் பருகிக் களிக்குமாம் குயில்கள்; அப்படியே முதலில்

காவ்ய நாடகாதிகளிலும் ஸாமாந்ய சாஸ்த்ரங்களிலும் போதைப் போக்கி வெறுத்து, பிறகு ரஸ்ய ரஹஸ்யார்த்த ஸேவைகளிலே விருப்பங் கொண்டிருக்குமவர்கள் குயிலாக விவக்ஷிதர்கள்.

[பந்தார் விரலி!] *ஹரே விஹரஸி க்ரீடா கந்துகைரிவ ஜந்துபி:* என்கிற படியே லீலோபகரணமா யிருக்கின்ற பிராணிகளையே பந்தாகச் சொல்லுகிறது. இவர்களைக் கைப்படுத்தி அவர்களோடே போது போக்குவர் ஆசாரியர். [செந்தாமரைக் கையால்] யதிராஜ ஸப்ததியில் "உந்நித்ரபத்மஸுபகாம் உபதேச முத்ராம்" என்று கூறியிருப்பதை நினைப்பது. உபதேசமுத்திரை கொண்ட திருக்கையினுலென்றபடி. [சீரார்வளை யொலிப்ப வந்துதிறவாய்] த்வநிப் பொருள்கள் மல்கும்படி உபதேசித்தருள வேணுமென்கை. [மகிழ்ந்து] எம்முடைய நிர்ப்பந்தத்திற்காக வன்றிக்கே தம்பேருக உகந்து உபதேசிக்க வேணுமென்கை.

அந்தரங்கமான வொரு ஸ்வாபதேசார்த்தம் கேளீர். *தக்கார் பலர் தேவிமார் சாலவுடையீர்* என்றும் *பல்லாயிரம் பெருந்தேவிமாரொடு* என்றும் சொல்லுகிறபடியே கண்ணபிரானுக்கு இவ்வவதாரத்தில் பல பல தேவிமார்களிருந்தாலும் திருவாய்ப்பாடியில் நப்பின்னைப் பிராட்டியே மிகச்சிறந்த தலைத் தேவியாவள். இது போல எம்பெருமானுக்கு அபிமத விஷய பூதர்களான ஆசாரியர்கள் பல பலரிருந்தாலும் எம்பெருமானுரொருவரே "தஸ்மிந் ராமாநுஜார்யே குருரிதி ச பதம் பாதி நாந்யத்ர" என்னும்படி அவன் திருவுள்ளமுகந்த பேராசிரியராவர். ஒருவர்க்கு மடங்காத ஏழு காளைகளை வலியடக்கிக் கண்ணன் நப்பின்னைப் பிராட்டியை மணம் புணர்ந்தான். பகவான் எம்பெருமானுரைப் பரிக்ரஹித்து, ஒருவர்க்குமடங்காத காளைபோன்ற ஏழுவிரோதிகளைக் களைந்தொழித்தான். அந்த ஏழு விரோதிகள் யாவரென்னில், "அறுசமயச் செடியதனை யடியறுத்தான் வாழியே" என்பதிற் சொல்லப்பட்ட அறுவரும், "செறு கலியைச் சிறிது மறத் தீர்த்து விட்டான் வாழியே" என்பதிற் சொல்லப்பட்ட கலிபுருஷனுமாக எழுவர். இந்த நப்பின்னையைக் "கந்தங்கமழுங் குழலீ!" என்று கேசபாசத்தினழகையிட்டுக் கூறினது எம்பெருமானர் மதாந்தர ஸந்யாஸிகளைப் போலே சிகையைத் துறவாமல் "கமநீயசிகாநிவேசம்" என்றும் "சிகயா சேகரிணம் பதிம் யதீநாம்" என்றும் "காரிசுதன் கழல் சூடிய முடியும் கனநற் சிகை முடியும்" என்றும் சொல்லுகிறபடியே சிகாபந்த ஸௌந்தர்யத்துடனெழுந்தருளி யிருந்தபடியை நினைப்பூட்டும். பந்தார்விரலி! என்றதும் ஸ்வாமிக்கு மிகப் பொருத்தம். பந்து என்பது ஆசார்ய ஹ்ருதயத்தில் "பந்து கழற்பாவை.......பொங்கைம் புலனில் போக்யாதிஸமூஹம்" என்றருளிச் செய்தபடி லீலாவிபூதி முழுவதையும் சொல்லுகிறது. இது நித்ய விபூதிக்கு முபலக்ஷணம். ஸ்வாமிக்கு உடையவர் என்று திருநாமம்; உபய விபூதியையும் தம் கையிலே யுடையவர் என்றபடி. அதுவே பந்தார்விரலியென்பதனுல் ஸூசிதமாகிறது. ... ... .... 18

19. குத்து விளக்கெரியக் கோட்டுக்காற் கட்டில்மேல்*
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி*
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்*
வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்*
மைத்தடங் கண்ணினுய் நீயுன் மணுளனை*
எத்தனைபோதுந் துயிலெழ வொட்டாய்காண்*
ஏத்தனையேலும் பிரிவாற்ற கில்லாயால்*
தத்துவமன்று தகவேலோ ரெம்பாவாய்.

கீழ்ப் பாசுரத்தினால் லெழுப்பப்பட்ட நப்பின்னைப் பிராட்டியானவள் கோபிகள் திறத்திலே இரக்கங்கொண்டு இவர்களுக்கு நாம் கதவு திறக்கவேண்டுவது அவசியமே யென்று கொண்டு தானெழுந்து திறக்கப் புக்கவளவிலே, அதுகண்ட கண்ணபிரான் 'இவர்கள் *உம்பர் கோமானே உறங்காதெழுந்திராய்* என்று முந்துற முன்னம் நம்மையன்றோ எழுப்பினார்கள்; நாமன்றோ முன்னம் இவர்களுக்குக் காரியம் செய்ய வேணும்; இவள் முற்படுவதாவதென்!' என்று அவளை யெழுந்திருக்கவொட்டாமல் தகைந்து தானெழுந்திருக்கத் தொடங்கினான். அவள் கண்ணனை நோக்கி 'பிரானே! நீ வீண் சண்டைக்கு வருவது நியாயமன்று; உன்னை யெழுப்பினவுடனே நீ யெழுந்து காரியம் செய்திருந்தால் அது தகுதியே; அப்போது நீ வாளா கிடந்தாய்; என்னை யெழுப்பினபோது நானெழுந்து திறக்கப் புக்கால் என்னை நீ தடுப்பது தகுதியன்று' என்றாள்; அதற்குக் கண்ணபிரான் 'நீ சாஸ்த்ரார்த்த முணராமல் வீண் வழக்குத் தொடருவது தகாது; எப்போதும் உனக்குப் புருஷகார க்ருத்யத்தில் மட்டும் அந்வயமேயொழிய, காரியஞ் செய்வதில் எனக்குத்தான் உரிமையுள்ளது; உனக்கு இல்லை' என்றான். அதற்கு அவள் 'மோக்ஷம் கொடுப்பதாகிற பெரிய காரியத்தில் எனக்கு யோக்யதை இல்லையாயினும் கதவைத் திறப்பதாகிற இச்சிறு காரியத்தில் கூடவா யோக்யதையில்லை? வீண் வம்புப்பேச்சு பேசாதே; என்னை யழைத்தவர்களுக்கு நான் தான் திறப்பேன்' என்று சொல்லி பலாத்காரமாக எழுந் திருக்கப்புக்காள். என்னடியார்களுக்கு நான்தான் காரியஞ் செய்வேனென்று சொல்லி அவளைத் தகைகிறான் கண்ணபிரான். இப்படி உள்ளே ஒருவர்க்கொருவர் விவாதப்பட்டுக் கொண்டிருக்கிறபடியை ஜாலகரந்த்ரத்தினால் கண்டகோபிகள் திவ்ய தம்பதிகளான இருவர் காலிலும் விழுந்து இரக்கிறார்கள் இப்பாட்டில். இப்பிரபந்தத் திற்குத் தனியனிட்டருளின பட்டர் இப்பாசுரத்தையே பற்றிக்கொண்டு *நீளா துங்கஸ் தநகிரி தடீஸுப்த மித்யாதியான ச்லோகத்தை யருளிச் செய்தார்.

*குத்துவிளக்கெரிய என்று தொடங்கியுள்ள வார்த்தைகளில் கோபிகளின் கிலாய்ப்பும் தோன்ற விருக்கின்றது. அம்மா! நாங்கள் இருளைத் தேடியும், கல்லும் முள்ளுமான வழிகளிலே விரைந்தோடி மணற்குன்றுகளிலே கிடந்தும், *கூர்மழை போல் பனிக்கு ஊதலெய்திக் கூசிநடுங்கி யமுனையாற்றில், வார்மணற் குன்றில் புலர நின்றேன் வாசுதேவா வுன்வரவு பார்த்தே* என்று வஞ்சனை பெற்றும் வருந்திக் கிடக்க, உன்னுடைய பாக்கியம் என்னே! குத்துவிளக் கெரியவன்றோ உன்னுடைய போகம்; கட்டில்மேல் பஞ்சசயனத்தின் மேலன்றோ உன்னுடைய கிடக்கை! என்று கிலாய்ப்புத்தோற்றச் சொல்லுகிறார்களென்னலாம்.

இப்பாசுரமிருக்கும்படியைப் பார்த்தால் இது ஸதஸ்ஸுக்கு உரிய பாட்டு அன்றுபோல் தோன்றும்; உண்மையில் வேதாந்த விழுப்பொருள்கள் நிரம்பிய பாட்டு இது. [நப்பின்னை கொங்கை மேல் வைத்துக் கிடந்த மலர் மார்பா! வாய் திறவாய்.] திருவாய்ப்பாடியில் ஆய்ச்சிகளுக்குள்ளே நப்பின்னை எப்படி மிகச் சிறந்தவளோ, அப்படி சிஷ்யவர்க்கங்களில் மிகவுயர்ந்து விளங்குகின்ற வொரு ஜ்ஞாநதிகருடைய ஞான பக்திகளிலே வியப்புக் கொண்டிரா நின்ற ஆசார்ய ஸார்வ பௌமரே! வாய் திறந்து உபதேசங்கள் செய்தருள வேணுமென்று வேண்டுகிறபடி. இந்த சிஷ்யா சார்யர்களின் வாஸஸ்தானம் எதுவென்னில்; [மெத்தென்ற பஞ்சசயனம்.] மென்மை, குளிர்ச்சி, நறுமணம், வெண்மை, விரிவு என்கிற ஐவகைச் சிறப்புக்கள் பொருந்திய படுக்கைக்குப் பஞ்ச சயன மென்று பெயர். இந்த ஐவகையில் மெத்தென்றிருத்த லும் சேர்ந்திருக்கச் செய்தேயும், தனிப்பட மெத்தென்ற என்று விசேஷண மிட்டது. அது முக்கியமாயிருக்கும்படியைக் காட்டுதற்காம். *ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மந:* இத்யாதிச்லோகங்களாலும், *மிக்க விறை நிலையும் மெய்யா முயிர் நிலையு மித்யாதி பாசுரங்களாலும் தெரிவிக்கப்பட்ட அர்த்த பஞ்சகமே இங்கு மெத்தென்ற பஞ்ச சயனமாக விவக்ஷிதம். அந்த அர்த்த பஞ்சகம் எங்கே

கிடைக்கிற தென்ன; [கோட்டுக்கால் கட்டில்மேல்] சாஸ்த்ரங்களே கட்டிலாக விவ க்ஷிதம், கட்டிலே நான்கு கால்கள் தாங்குவது போல சாஸ்த்ரப்ரமேயங்க ளெல்லாம் நால்வகைப்பட்டிருக்கு மென்று கொள்க. "சதுர்விதமான தேஹவர்ணாச்ரமாதிகார பல மோக்ஷஸாதந கதியுகதர்ம வ்யூஹரூப க்ரியாதிகளை யறிவிக்கிற" இத்யாதி-ஆசார்ய ஹ்ருதய சூர்ணையின் வியாக்கியானம் ஸேவிப்பது. சாஸ்த்ரங்கள் எதற்காக ஏற்பட்டதென்ன; [குத்து விளக்கெரிய] ஞான வெளிச்ச முண்டாவதற்காக. [கோட்டுக்கால்.] கோடு என்று யானைத் தந்தத்திற்குப் பெயர். *காட்டை நாடித் தேனுகனும் களிறும் புள்ளுமுடன்மடிய வேட்டையாடி வந்த கண்ணன் யானையை முடித்துக் கொணர்ந்த தந்தத்தினல் நப்பின்னைக்குக் கட்டில் அமைப்பதுபோல, ஆசார்யர் பரசமயிமத வேழங்களை வென்று முடித்து அந்த வெற்றி தோற்ற வீற்றிருக் கும் இருப்பின் வீறு இங்கு அநுஸந்திக்கத்தக்கது.

[மைத் தடங் கண்ணினுய்] ஆசார்ய ஸார்வ பௌமருடைய விசேஷாபிமான பாத்ரபூதனன விலக்ஷண சிஷ்யனுடைய தன்மை சொல்லுகிறது இதனல். மையென்பது அஞ்சனம்; அதாவது ஸித்தாஞ்ஜனம். *மநஸி விலஸதாக்ஷண பக்தி ஸித்தாஞ்ஜநேந* என்று பட்டரும், *ஸித்தாஞ்ஜநேந பவ்தைவ விபூஷிதாக்ஷா: பச்யந்தி* என்று தேசிகனும் பணித்தபடியே பக்தி ஸித்தாஞ்ஜனமணியப் பெற்று அதனல் ஞானவிகாஸம் பெற்றவரே! என்கை. [நீயுன் மணாளனை எத்தனைபோதும் துயிலெழ வொட்டாய்] மணாளனென்கிறது ஆசார்யரை. அவர் கண் திறந்து எங்களைக் கடாக்ஷிக்க நினைத்தாலும் எங்கள் மேல் கடாக்ஷ வீக்ஷணம் ப்ரஸரிக்க வொண்ணுத படி உன்மேலே ஒரு மடைப்படுத்தி யிருக்கின்ருயே என்றவாறு. இப்படியிருக்கை யன்ருே ஸச்சிஷ்யர்களுக்குப் பெருமை. "எத்தனை போதும் துயிலெழ வொட்டாய்" என்றதனல் அந்தப் பெருமை தான் காட்டப்பட்டதாகிறது. [எத்தனையேனும் பிரிவாற்றகில்லாய்] *ஆசாரியன் செய்த உபகாரமானவது, தூய்தாக நெஞ்சு தன்னில் தோன்றுமேல், தேசாந்தரத்திலிருக்க மனந்தான் பொருந்த மாட்டாது'* என்கிற படியே ஆசார்யரை க்ஷணகாலம் விட்டுப் பிரிகையும் அஸஹ்யமாயிருக்குமாயிற்று ஸச்சிஷ்யனுக்கு. [தத்துவ மன்று தகவு=தத்துவம் தகவன்று] இதில் பரம குஹ்ய மான வேதாந்த விழுப்பொருளொன்று நுட்பமாகக் காணத்தக்கது. அத்வைதிகள் "தத்த்வமஸி" என்கிற வாக்யத்தையே பற்றிக்கொண்டு அத்வைத வாதத்தை ப்ரபலப் படுத்துகிருர்கள். அவர்கள் கூறும் பொருளை நம் ஆசார்யர்கள் அயுக்த மென்று கண்டிக்கிருர்கள்; இங்கு 'தத்த்வம் தகவன்று' என்றது *தத்த்வமஸிக்குப் பிறர்கூறும் பொருள் தகுதியற்றது—என்று ஸூசிப்பித்தபடி. இப்பாட்டில் நுட்ப மான மற்றும் பல விசேஷார்த்தங்கள் காணக்கிடக்கின்றன. அவற்றையும் சிறிது விவரிப்போம்.

தோரண விளக்கென்றும் குத்துவிளக்கென்றும் விளக்கில் இரு வகையுண்டு. தோரணவிளக்கு பெயர்த்துக் கொண்டு போக முடியாதபடி இருந்தவிடத்திலேயே யிருக்கும். குத்துவிளக்கு எங்கும் பெயர்த்துக் கொண்டு போகலாம்படி யிருக்கும். தோரண விளக்கின் ஸ்தானத்தில் திருக்கோட்டியூர் நம்பியையும். குத்துவிளக்கின் ஸ்தானத்தில் திருக்கோட்டியூர் நம்பியையும். குத்துவிளக்கின் ஸ்தானத்தில் எம் பெருமானரையுங்கொள்க. திருக்கோட்டியூர் நம்பி தம் ஊரிலேயே தம் திருமாளிகை யிலேயே யிருந்தவர். ஸ்வாமி எங்கும் பெயர்ந்தவர். "கோட்டுக்கால் கட்டில்மேல்" என்றவிடத்து "ஏகதேச விக்ருதம் அநந்யவத் பவதி" என்ற வடமொழி வியாகரணம் வல்லாரின் கொள்கைப்படி (கோட்டு) என்றதை 'கோட்டி' என்று கொள்க. கோட்டியூர் திருக்கோட்டியூர் என்றதாயிற்று. குத்துவிளக்கென்று நிரூபிக்கத் தக்க உடையவர். எரிய-ஜ்ஞானவிளக்கம் பெறுவதற்காக [ரஹஸ்யார்த்த ஜ்ஞான விசேஷத்திற்காக] கோட்டியூருக்கு எழுந்தருளினபடி ஸூசிதமாகிறது. அங்கே நம்பிகள் ஸ்வாமிக்கு அர்த்த விசேஷத்தை யுபதேசித்தபோது 'இதை ஒருவர்க்கும்

சொல்லுவதில்லை' யென்று தம் திருவடிமேல் ஆணையிடும்படி நியமித்தார். அது "கால் கட்டில்" என்பதனால் ஸூசிதம். கால் திருவடி; கட்டு-ஆணை. பிறகு ஸ்வாமி செய்ததென்ன. அப்படியே சபதம் செய்து கொடுத்துச் சில விலக்ஷணாதி காரிகளுக்கு உபதேசிக்கும் பொருட்டு ஸன்னிதியின் மேலேறினர். அது [மேலேறி] என்பதனால் ஸூசிதம். அப்படி அவர் ஆசார்ய நியமனத்தையும் அதிக்ரமித்துச் செய்ததற்கு ஹேது அவருடைய ஹ்ருதய வைசால்யமேயாதலால் அது [மலர் மார்பா!] என்பதனால் ஸூசிதம். மலர்—விசாலமான, மார்பா—ஹ்ருதயமுடையவரே! என்ற படி. மற்றுமுள்ள சொற்றொடர்களும் இங்ஙனே பொருந்துமாறு காண்க. .... 19

20. முப்பத்து மூவ ரமரர்க்கு முன்சென்று *
கப்பந் தவிர்க்குங் கலியே துயிலெழாய் *
செப்பமுடையாய் திறலுடையாய்* செற்றார்க்கு
வெப்பங்கொடுக்கும் விமலா துயிலெழாய் *
செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல் *
நப்பின்னை நங்காய் திருவே துயிலெழாய் *
உக்கமுந் தட்டொளியுந் தந்துன் மணாளனை*
இப்போதே யெம்மை நீராட்டேலோ ரெம்பாவாய்.

கீழ்ப்பாட்டிற்போலவே இப்பாட்டிலும் கண்ணபிரானும் நப்பின்னைப் பிராட்டியுமாகிற திவ்ய தம்பதிகளையே யெழுப்புகிறார்கள். கீழ்ப்பாட்டில் கண்ண பிரானுடைய ராஸிக்யத்தை [ச்ருங்கார ரஸவிதக்தனாயிருக்குந் தன்மையைச்] சொல்லி யநுபவித்தார்கள்; இப்பாட்டில் அவனுடைய பெருமிடுக்கைச் சொல்லி யநுபவிக்கிறார்களென்று வாசி.

"முப்பத்து மூவரமரர்க்கு முன் சென்று கப்பந் தவிர்க்குங்கலியே!" என்ற விளியில் எட்டுவகையான கருத்துக்கள் தொனிக்கும். (1) முப்பத்து மூவரமரர் என்றது முப்பத்து முக்கோடி தேவர்களைச் சொன்னபடி யாதலால் பெருந் தொகையான முப்பத்து முக்கோடி தேவர்களைத்தான் ரக்ஷிப்பேன். அதனிற் சிறுதொகையான பஞ்சலக்ஷங்குடிப் பெண்களை ரக்ஷிக்ககில்லேன் என்று திரு வுள்ளமோ? (2) ஆண்களுக்கு நேரும் விபத்துக்களையே போக்குவேன். பெண் களுக்கு நேரும் விபத்துக்களைப் போக்ககில்லேன் என்று விரதங்கொண்டதுண் டோ? (3) பெருமிடுக்கர்களுக்கு நேரும் கிலேசங்களையே தவிர்க்கவல்லேன். அபலை களுக்கு நேரும் கிலேசங்களைத் தவிர்க்க கில்லேன் என்று கொள்கையுண்டோ? (4) 'ஸோஹம்' என்று செருக்குக் கொண்டு மார்பு நெறித்திருப்பாருடைய வருத்தங் களையே போக்குவேன். 'தாஸோஹம்' என்று விநயங்கொண்டிருப்பாருடைய வருத்தங்களைப் போக்ககில்லேன் என்று கொண்டிருப்பதுண்டோ? (5) க்ஷுத்ர புருஷார்த்தங்களை யாசைப்பட்டு வந்து பணிவாருடைய காரியமே செய்வேன். பரம புருஷார்த்தத்தைப் பேணிவருவாருடைய காரியம் செய்யகில்லேன் என்பதாக வுண்டோ? (6) *ஜீவகக்ரஹணே நம்ராஃ க்ருஹீத்வா புநருந்நதாஃ* என்கிறபடியே ப்ரார்த்திக்கும்போது திருவடியைப் பிடிப்பதும், ப்ரார்த்தனை நிறைவேறினவாறே அம்பு தொடுப்பதுமா யிருப்பார்க்கே காரியம் செய்வேன், ஸாதநதசையோடு ஸாத்யம் கைபுகுந்த தசையோடு வாசியற * உன் சேவடி செவ்வி திருக்காப்பு * என்கிற பாசுரமல்லது வேறொன்றறியாதார்க்குக் காரியம் செய்யகில்லேன் என்று எண்ணங்கொண்டிருப்பதுண்டோ? (7) உன்னுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை

நோவுபடுத்தி ஸ்வகார்யத்தை ஸாதித்துக்கொள்ளப் பார்ப்பவர்களுக்கே மநோரத பூர்த்தி செய்வதென்றும், உன்திரு மேனிக்குக் காப்பிடுகையே பணியாயிருப்பார்க்கு மநோரத பூர்த்தி செய்யலாகாதென்றும் கருதியிருப்பதுண்டோ? (8) நச்வரமான உடலைப்பற்றின ஆபத்தைப் போக்கவேணுமென்பார்க்கே காரியம் செய்யலாகும்; சாச்வதமான ஆத்மாவை நோக்கியருளாய் என்பார்க்குக் காரியம் செய்யலாகாது என்று திருவுள்ளமுண்டோ?...இங்ஙனே மற்றும் பல கருத்துக்களும் ஊஹித்துணரலாம்.

முன் சென்று கப்பம் தவிர்க்கும் = முன் என்பதைப்பற்றித் தமிழர்கள் இடமுன், காலமுன் என்பர்கள். இடமுன்னுனல் முன்னிடத்திலே சென்று நின்று என்றதாம்; காலமுன்னுனல் அவர்களுக்குத் துன்பம் நேரிடுவதற்கு முன்னமே சென்று என்றதாம். போர்க்களத்தில் முன்னணியில் நிற்பதற்கஞ்சிப் பின்னுல் நிற்கப் பார்ப்பர் பலர்; கண்ணபிரான் பாரதப் போரில் பற்றலர்வீயக் கோல்கையிற் கொண்டு பார்த்தன் தன் தேர் முன் நின்றானை* என்கிறபடியே ஸாரதியாய் முன்னே நின்று காரியம் பார்த்தான். எதிரிகள் விடும் அஸ்த்ர சஸ்த்ரங்களைத் தன் மார்வில் ஏற்கவல்ல ஸாமர்த்திய முடைமையாலே இங்ஙனஞ் செய்தானுயிற்று. இனி, கால முன்னுகக் கொண்டால், பக்தர்களுக்கு ஆபத்து வந்த பிறகு பரிஹாரம் செய்வதிற் காட்டிலும் அது வருவதற்கு முன்னமே பரிஹரிக்க வல்லவனென்னு மேற்றம் விளங்கும். ப்ரஹ்லாதாழ்வான், கஜேந்திராழ்வான், த்ரௌபதி போல்வார்க்கு ஆபத்து வந்த பிறகு தானே அதற்குப் பரிஹாரம் செய்தானென்று ஸஹஸா க்ஷேபம் செய்து விடலாகாது; நாம் செய்த பாபங்களுக்கு க்ஷணே க்ஷணே நமக்கு ஆபத்துக்கள் நேர வேண்டியிருந்தும் அங்ஙனம் நேராமலிருப்பது அப்பெருமானுடைய திருவருளினுலென்று அநுஸந்திக்கவேணும்.

கப்பம் என்பதை வடசொல் விகாரமாகவுங் கொள்ளலாம்; தனித் தமிழ்ச் சொல்லாகவுங் கொள்ளலாம். (கம்பஃ) என்னும் வடசொல்லுக்கு நடுக்கமென்று பெயர்; அச்சொல்லே கப்பமென்றாயிற்றென்று கொண்டால், தேவர்களுக்குண்டாம் நடுக்கத்தைப் போக்குபவன் என்று பொருளாம். தோற்றார் வென்றவர்களுக்குக் கப்பம் செலுத்துவதுண்டே அதைத்தவிர்ப்பவனென்றுமாம். யசோதைப்பிராட்டி "கஞ்சன் கடியன் கறவெட்டு நாளில் என் கைவலத்தாதுமில்லை" [பெரிய திருமொழி 10.7-10.] என்கிறுள்; 'கம்ஸனே பொல்லாதவன்; அவனுக்கு எட்டு நாளைக்குள் கப்பம் கட்ட வேண்டியிருக்கிறது; என் கையிலோ வொன்றுமில்லை' என்று வருந்திக் கூறுகின்றுள். [கறவு—கப்பம்.] இப்படி கப்பம் செலுத்த வேண்டுவதைத் தவிர்ப்பவன் கண்ணபிரான். [முப்பத்து மூவர் அமரர்,] வேதத்தில் அடிக்கடி *த்ரயஸ்த்ரிம்சத் வை தேவா:* என்று தேவர்களை முப்பத்து மூவராகச் சொல்லுவதுள்ளது. அஷ்டவஸுக்கள், ஏகாதசருத்ரர்கள், த்வாத சாதித்யர்கள், அச்விநிகள் இருவர்—என்று வேதமே விவரணமுங் காட்டும், பொய்கையாழ்வார் *எண்மர் பதினெருவர் ஈராறுவர் ஓரிருவர்* என்றும், நம்மாழ்வார் (பெரிய திருவந்தாதியில்) *இருநால்வர் ஈரைந்தின் மேலொருவர் *எட்டோடொரு நால்வர் ஓரிருவர்* என்றும் அருளிச் செய்திருப்பது காண்க. ஸ்வாப தேசார்த்தத்தில் "முப்பத்து மூவரமரர்" என்றது மூன்று விதமான பக்தியையுடைய மூவரான அமரர் என்றபடி. பரபக்தி பரஜ்ஞான பரமபக்திகளென்பவை மூன்று விதமான பக்தி; மூவர் யாரென்னில், "அஜ்ஞரும் ஜ்ஞாநாதிகரும் பக்திபரவசரும்" என்று ஸ்ரீவசந பூஷணத்திலருளிச் செய்யப்பட்டமூவர். இவர்கள் எப்படி அமரர்களென்னில்; *அஜராமரவத் ப்ராஜ்ஞோ வித்யாம் அர்த்தஞ்ச ஸாதயேத்; க்ருஹீத இவ கேசேஷு ம்ருத்யுநா தர்ம மாசரேத்.* என்கிற ச்லோகத்தின்படி அமரர்கள். அமரர் என்பதற்குச் சாவில்லாதவர் என்று பொருள். *மின்னின் னிலையில மன்னுயிராக்கைகள்* என்பதும் *தடிச் சஞ்சல மாயுஷ்யம்* என்பதும்

தெரிந்திருக்கச் செய்தேயும் கல்வி கற்கும்போதும் பொருளீட்டும்போதும் தம்மை [அமரராக] சாவாதவர்களாக நினைத்துக்கொள்ள வேண்டும். இல்லையேல், கற்பதிலும் பொருளீட்டுவதிலும் ப்ரவ்ருத்தியே ஏற்படாது. ஆக, அஜ்ஞர்களாயும் ஜ்ஞாநாதிகர்களாயும் பக்திமான்களாயும் கல்வி கற்பதில் உத்ஸாஹிகளாயு முள்ளவர்களுக்கு அபேக்ஷா நிரபேக்ஷமாகச் சென்று உபதேசிக்கும் ஆசார்யர்களைச் சொல்லுகிறதிங்கு. ஆளவந்தார்க்கு மணக்கால் நம்பிதாம் பச்சையிட்டு அநுவர்த்தித்தன்றோ உபதேசித்தது. கலியே! என்றது பெருமிடுக்கரே! என்றபடி.

[செப்ப முடையாய்.] ஆர்ஜவ மென்னுங் குணத்திற்குச் செப்பமென்று பெயர்; * மநஸ்யந்யத் வசஸ்யந்யத் கர்மண்யந்யத் துராத்மநாம் * என்னும்படி யிருப்பது இக்குணத்திற்கு எதிரானது; அது கௌடில்ய மெனப்படும். * மநஸ்யேகம் வசஸ்யேகம் கர்மண்யேகம் மஹாத்மநாம் * என்னும்படி யிருப்பதே ஆர்ஜவ மென்பது; இதுதான் செப்பமென்றும் செம்மையென்றும் சொல்லப்படும். ஸ்தோத்ரரத்நத்தில் * வசீவதாந்யோ குணவாந் * என்றதற்குப் பின் (ருஜு:) என்றது காண்க. ஆசார்யர்களிடத்தில் செப்பமாவது, ப்ரமாண வசனங்களுக்கு அர்த்தம் செய்யுமிடத்து மனம் போனபடி செய்யாமல் * பகவத் போதாயந க்ருதாம் விஸ்தீர்ணம் ப்ரஹ்மஸூத்ரவ்ருத்திம் பூர்வா சார்யாஸ் ஸஞ்சிக்ஷிபு:; தந்மதாநு ஸாரேண ஸூத்ராக்ஷராணி வ்யாக்க்யாஸ்யந்தே * என்று ஸ்ரீபாஷ்யோபக்ரமத்தில்ருளிச் செய்தபடி * முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டுப் பின்னோர்ந்து தாமதனைப் பேசுவதேயாம். [திறலுடையாய்.] எம்பெருமான் சௌர்ய வீர்ய பராக்ரம நிதியாயிருப்பதைச் சொல்லுகிறது. ஆசார்யர் பக்கலிலே-எத்தனை துர்வாதிகளையும் அநாயாஸேந அடர்க்கவல்ல சக்தி விசேஷம் திறல்.

[செற்றார்க்கு வெப்பங் கொடுக்கும்.] செற்றார்—சத்துருக்கள்; எம்பெருமானுக்கு நேராக சத்துருக்கள் இலர்; * த்விஷதந்நம் ந போக்தவ்யம்...பாண்டவாந் த்விஷஸே ராஜந் மம ப்ராணா ஹி பாண்டவா:* என்ற பகவத் வசனத்தின்படியே பாகவத விரோதிகளையே தன்னுடைய சத்ருக்களாக அவன் நினைப்பது. அன்னவர்களுக்கு வெப்பம் கொடுப்பவன்-பீதி ஜ்வரத்தை விளைப்பவன். எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபகுணவிபூதி விக்ரஹ சேஷ்டிதங்களிலே விப்ரதிபத்தி பண்ணுமவர்கள் ஆசாரியர்களுக்கு சத்துருக்கள்; அன்னவர்களுக்கு நிரஸநம் செய்பவர் ஆசார்யர். [விமலா] எம்பெருமானுக்கு அகில ஹேய ப்ரத்யநீகனென்று விருது. தோஷ பூயிஷ்டங்களான பொருள்களோடே சேர்ந்திருக்கச் செய்தேயும் தன்மீது சிறிதும் தோஷமேறப் பெறாதவனென்கை. ஆசார்யர்க்கு விமலத்வமாவது—ஸம்ஸாரிகளினிடையே தாமும் ஒரு ஸம்ஸாரியாக உலாவா நிற்கச் செய்தேயும் ஸம்ஸாரிகளுக்குண்டான தோஷங்கள் (காமக்ரோதாதிகள்) ஸ்பர்சிக்கப் பெறாதிருக்கை.

* செப்பன்ன மென்முலை யென்று தொடங்கி நப்பின்னைப் பிராட்டியின் அவயவ ஸௌந்தர்யாதிசயம் பேசப்படுகிறது. ஸ்ரீவசந பூஷணத்தில்—பிராட்டி சேதநனையும் திருத்துவள் எம்பெருமானையும் திருத்துவள் என்று ஸாதித்து வருமிடத்தில் "இருவரையும் திருத்துவது முபதேசத்தாலே ;....உபதேசத்தாலே மீளாதபோது சேதநனை அருளாலே திருத்தும்; ஈச்வரனை அழகாலே திருத்தும்" என்றருளிச் செய்திருக்கையாலே, எம்பெருமானை அஸ்மதாதிகள் திறத்தில் அபிமுகனாகச் செய்வதற்கு உபயோகப்படும் வடிவழகாகையாலே இங்கு அதனை வருணிக்கிறது. ஸ்ரீவசநபூஷணத்தில் ஸாதித்தது ஸ்ரீமஹா லக்ஷ்மியைப் பற்றியே யொழிய நப்பின்னைப் பிராட்டியைப் பற்றியன்றே யென்று சங்கிக்க வேண்டாதபடி * நப்பின்னை நங்காய் திருவே * என்றருளிச் செய்யப்பட்டது. இவளையும் திருவின் அம்சபூதையாகக் கொள்கவென்றபடி. ஆசார்ய பரமான ஸ்வாபதேசப் பொருளில் "ஆசாரியன் சிச்சனாருயிரைப் பேணுமவன், தேசாரும் சிச்சன் அவன் சீர்வடிவை" என்கிற உபதேச

ரத்தின மாலைப் பாசுரப்படியே சிஷ்யர்களுக்கு ஆசார்யருடைய திவ்யமங்கள விக்ரஹமே பரமோத் தேச்யமென்கிற சாஸ்த்ரார்த்தம் உணரத்தக்கது. *சீராரு மெதிராசர் திருவடிகள் வாழி* என்றும் *செய்யதாமரைத் தாளிணை வாழியே* என்றும் நாம் நிச்சலும் அநுஸந்திப்பது இதுபற்றியே யன்றோ.

[உக்கமுந் தட்டொளியுமித்யாதி.] உக்கமாவது—விசிறி; தட்டொளியாவது கண்ணாடி. இவ்விரண்டைச் சொன்னது மற்றுமுள்ள கைங்கர்யோபகரணங்களையும் சொன்னபடி. பகவத் ஸந்நிதியிலும் ஆசார்ய ஸந்நிதியிலும் கைங்கர்யமே பரம புருஷார்த்தமென்று காட்டிற்றாயிற்று. ... .... ... 20

**21.** **ஏற்ற கலங்க ளெதிர்பொங்கி மீதளிப்ப ***
**மாற்றாதே பால் சொரியும் வள்ளற் பெரும்பசுக்கள் ***
**ஆற்றப் படைத்தான் மகனே யறிவுறாய் ***
**ஊற்றமுடையாய் பெரியாய்*உலகினில்**
**தோற்றமாய் நின்ற சுடரே துயிலெழாய்**
**மாற்றாருனக்கு வலிதொலைந்துன் வாசற்கண் ***
**ஆற்றாது வந்துன் னடிபணியு மாபோலே ***
**போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய்.**

கீழ்ப் பாட்டில் பின்னடிகளாலுணர்த்தப்பட்ட நப்பின்னைப் பிராட்டி பதறியெழுந்து வந்து கதவைத்திறந்து 'நான் உங்களிலொருத்தியன்றோ; உங்களுக்கு வேண்டுவன செய்யக் காத்திருக்கிறேன்' என்று சொல்லி இவர்களின் திரளிலே கலந்துகொள்ள, எல்லாருமாய்ச் சேர்ந்து கண்ணபிரானைத் துதிக்கின்றன ரிப்பாட்டினால், நந்தகோபனுடைய பால்ஸம்ருத்தியைப் புகழ்ந்துகொண்டு அவனுடைய மகனே! என்று சொல்லி ஸ்ரீ க்ருஷ்ணனுடைய திருமுக மண்டலத்தை விகஸிக்கச் செய்கிறார்கள்.

***ஏற்ற கலங்களெதிர்பொங்கி மீதளிப்ப மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்களாற்றப் படைத்தான் மகனே!** என்று கண்ணபிரான் அழைக்கப்படுவதாக அந்யாபதேசார்த்தம். சுரந்தபாலை ஏற்றுக் கொள்வதற்காக ஏந்தப்பட்ட கலங்களானவை ஒரு க்ஷணத்தில் நிறைந்து எதிரேபொங்கி மேலே வழியும்படியாக இடைவிடாமல் பாலைச் சுரக்கின்ற வள்ளல் பெரும் பசுக்களை விசேஷமாகப் படைத்துள்ள நந்தகோபனுடைய குமாரனே! என்பது பொருள். ஸ்வாபதேசத்திலோ வென்னில்; சிஷ்யலக்ஷணஸம்பந்நர்களான ஸச்சிஷ்யர்கள் "இவர்கள் ஆசிரியர்களிற் காட்டிலும் மேம்பட்டவர்கள்" என்று நாடு புகழும்படியான சிறந்த யோக்யதை பெறுமாறு பால்போன்ற மஹார்த்தங்களை நிரந்தரமாக வர்ஷிக்கின்ற ஆசிரியர்கள் பலரையுண்டாக்கின வொரு மஹாசார்யரை ஆற்றப்படைத்தானென்பதனால் சொல்லி, அவரிடத்திலே ஸர்வாத்மநா விதேயராயிருக்கின்ற வொரு உத்தம சிஷ்யரை மகனே! என்று விளிக்கிறபடி. ஆழ்வான் ஆண்டான் எம்பார் பிள்ளான் முதலானவர்கள் ஆசார்யாதிசாயிப்ரபாவசாலிக ளாகையாலே அவர்கள் எதிர்பொங்கி மீதளிக்கும் ஏற்ற கலங்களாகக் கருதத் தக்கவர்கள். இவர்கள் இப்படிப்பட்டவர்களாம்படி மாற்றாதே பால் சொரிகின்ற வள்ளல் பெரும்பசுக்கள்—ஸ்வாமியெம்பெருமானாரேயாவர். (பூஜாயாம்பஹுவசநம்.) வள்ளல் பெரும்பசுக்களாற்றப்படைத்தவர் ஆளவந்தார் என்று கொள்வது. அவர்க்கு மகன் போன்றிருந்த பெரியநம்பி திருமலைநம்பி திருக்கோட்டியூர் நம்பி திருமாலையாண்டான் முதலானவர்களிலொருவர், மகனே! என்று அழைக்கப்படுகிறார்.

அன்றிக்கே, எதிர்பொங்கி மீதளிக்கும் ஏற்றகலம்—ஸ்வாமி யெம்பெருமானார். இவர் பஞ்சாசார்ய பதாச்ரிதராகையாலே பெரிய நம்பி முதலான அந்த ஆசாரியர்கள் மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள். அப்பசுக்களை ஆற்றப்படைத்தான்—ஆளவந்தார்; அவர்க்கு மகனாக எம்பெருமானாரே கொள்ளத்தகுவர். இதுவும் மிகப் பொருத்தமான நிர்வாஹமென்க.

**ஏற்ற கலங்கள்** = ஆசார்யன் உபதேசித்தருளும் அர்த்தவிசேஷங்களை *அறிவித்தேனாழ் பொருளைச் சிந்தாமல் கொண்மினீர் தேர்ந்து* என்று திருமழிசைப்பிரான் கூறினபடியே சிந்தாமல் கொள்ளவல்ல பாத்திரங்கள் சிஷ்யர்களாதலால் அவர்களே கலங்கள் என்பதனால் விவக்ஷிதர்கள். ஏற்ற கலங்கள் என்றது—ஆசார்யனுக்கு ஏற்ற சிஷ்யர்கள் என்றபடி. வேதாந்த தேசிகன் ந்யாஸவிம்சதியில் *ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே* என்கிற ச்லோகத்தினால் ஆசார்யலக்ஷணத்தையும், *ஸத்புத்திஸ் ஸாதுஸேவீ* என்கிற ச்லோகத்தினால் சிஷ்ய லக்ஷணத்தையும் அருளிச் செய்தார். அப்படி ஸதாசார்ய லக்ஷணம் வாய்ந்த குரவர்களுக்கு ஏற்றவாறு ஸச்சிஷ்ய லக்ஷணம் வாய்ந்தவர்களாய்க்கொண்டு வந்து சேர்ந்த அந்தேவாஸிகளை இங்கு ஏற்ற கலங்கள் என்கிறது. தைத்திரீய ஆரண்யகத்தில் *நைவம் விதுஷா சார்யாந்தேவாஸிநௌ, அந்யோந்யஸ்மை த்ருஹ்யாதாம்* என்று ஓதப்பட்டிருப்பதை நன்கறிந்து ஆசார்யர் வர்த்திக்க, அதற்குச் சார்பாக வர்த்திக்கும் சிஷ்யர்களே ஏற்றகலங்கள்.

**எதிர்பொங்கி மீதளிப்ப**—*புத்ராதிச்சேத் பராஜயம்* என்றும் *சிஷ்யாதிச்சேத் பராஜயம்* என்றும் சொல்லுவர்கள். தகப்பனார் தம் மகனிடத்தில் தோல்வியடைய விரும்பவேண்டும்; ஆசாரியர் தம் சிஷ்யனிடத்தில் தோல்வியடைய விரும்பவேண்டும். அதாவது—ஆசாரியன் தன்னைக்காட்டிலும் மிக வல்லவனாய் தனக்கும் அறிவூட்ட வல்லவனான சிஷ்யனைப்பெற்று அஸூயைப்படாதே மிகவும் மகிழ்ந்திடுவன் என்றவாறு. எம்பெருமானார், திருமாலையாண்டான் பக்கலிலே திருவாய்மொழி கேட்கும்போது, ஆளவந்தார் திருவுள்ளத்திலிருந்த அர்த்த விசேஷங்களைத் தாம் அறியப்பெற்று அவ்வாசிரியர்க்கும் உணர்த்தினாரென்பது ப்ரஸித்தம். கூரத்தாழ்வான் போதாயந வ்ருத்திக்ரந்தத்தையெல்லாம் திருவுள்ளத்தில் தேக்கிக் கொண்டிருந்து ஸ்வாமி தாமும் விஸ்மயப்படும்படியான மேதாப்ரதிபாவிலாஸ சாலியா யிருந்தாரென்பதும் ப்ரஸித்தம். விளக்கில் கொளுத்தின தீவட்டிபோலே ஆழ்வானை அதிசயித்து பட்டரும், பட்டரை அதிசயித்து நஞ்சீயரும், நஞ்சீயரையதிசயித்து நம்பிள்ளையும் ஞான நிதிகளாக விளங்கினார்களன்றோ. இவர்களெல்லாரும் ஸமய விசேஷங்களிலே ஸ்வாசார்யர்களுக்கும் உத்போதநம் பண்ணி *வளர்த்ததனால் பயன் பெற்றேன் வருகவென்று மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினாளே* என்ற திருநெடுந்தாண்டகப் பாசுரத்திற்கு இலக்கியமாக விளங்கினார்களென்பது பலபல ஐதிஹ்யங்களினால் விளங்குகின்றது. ஏற்றகலங்கள் எதிர்பொங்கி மீதளிக்குந்தன்மை இதுவேயாம்.

**மாற்றாதே பால் சொரியும்** = மேலே விவரித்த விதமான அதிசயத்தை சிஷ்யர்கள் பெறும்படியாக ஆசார்யர்கள் செய்வது இதுவே. *உனது பாலே போல் சீரில் பழுத்தொழிந்தேன்* (பெரிய திருவந்தாதி) என்று ஆழ்வார் பகவத் குணங்களைப் பாலாகப் பேசியிருக்கையாலே, பால் சொரிய மென்றது—பகவத் குணங்களைத் தாரை தாரையாக வர்ஷிக்கும்படியைச் சொன்னவாறு. மாற்றாதே யென்பதற்குப் பல படியாகப் பொருள் கொள்ளலாம்; முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டுப் பின்னோர்ந்து தாமதனைப் பேசுவதே முறைமையாயிருக்க, அந்த முறையைத் தவிர்ந்து அவர்கள் அருளிய பொருள்களை மாற்றுவர்கள் பலர்; அப்படி மாற்றாதே, *பகவத் போதாயநக்ருதாம் விஸ்தீர்ணாம் ப்ரஹ்ம ஸூத்ரவ்ருத்திம் பூர்வாசார்யாஸ் ஸஞ்சிக்ஷிபு: தந்மதாநுஸாரேண ஸூத்ராக்ஷராணி வ்யாக்க்யாஸ்யந்தே* என்று ஸ்ரீ பாஷ்யகாரரும்,

*எந்தை திருவாய்மொழிப்பிள்ளையின்னருளால் வந்த வுபதேச மார்க்கத்தைச் சிந்தை செய்து* என்று மணவாளமாமுனிகளும் அருளிச் செய்தபடியே முன்னோர் வழியை மாற்றாமல் என்பது முதற்பொருள்.

ஒரு வ்யவஸ்தையிலே நின்று பேசாதவர்கள் தம் நெஞ்சில் தோன்றின படியே இன்று ஒரு பொருளைச் சொல்லி, மறுநாள் அதில் அநுபபத்தியைத் தாமே கண்டு 'நேற்றுதவறுதலாகச் சொல்லிவிட்டேன் ; அதைக் கொள்ள வேண்டா ; இன்று உள்ளவாறு சொல்லுகிறேன், இதைக் கொள்ளுங்கள்' என்பது ; மறுநாள் அதையும் தாமே மறுத்து மற்றொரு பொருள் சொல்லுவது— என்றிப்படி தம் உக்திகளைத் தாமே மாற்றுவர்களே சிலர்; அப்படியல்லாமல், நிஷ்க்ருஷ்டமான பொருளை நிலைகுலையாமே சொல்லி — என்பது இரண்டாவது பொருள். தாம் உரைத்த பொருளிலே மற்றொருவர் அநுபபத்திகளை எடுத்துரைத்து அது தவறென்று கண்டித்து வேறொரு பொருள் சொல்லவேண்டாதபடி; எல்லாரும் இப்பொருளையே ஆதரிக்கவேண்டும்படி என்பது மூன்றாவது பொருள். இப் பொருளில், மாற்றாதேயென்றது மாற்றவேண்டாதே யென்றபடி.

பஹுச்ருதத்வஸித்திக்காகவும் மற்றோராசிரியரிடத்தில் போக வேண்டாமல் *யஸ்மாதேவ மயா ஸர்வம் சாஸ்த்ரமக்ராஹி நாந்யத:* என்று ஓராசிரியர் பணித்தபடியே ஸகலார்த்தங்களையும் ஒருவர் தாமே உபதேசிக்கும்படியையும் மாற்றாதே யென்பது சொல்லும்; 'ஆசார்யரை மாற்றவேண்டாதபடி' என்கை. இது நான்காவது பொருள்.

மாற்றாதே—ஏமாற்றாதே; மானிடர்க்குரிய தோஷங்களான ப்ரமம் ப்ரமாதம் முதலியவற்றில் விப்ரலிப்ஸை என்பது மொன்று ; அதாவது வஞ்சிக்கவேணு மென்கிற இச்சை ; பொய்யான பிரமாணங்களையும் தப்பான பொருள்களையும் சொல்லி வஞ்சிக்க நினையாதே என்றபடி. இது ஐந்தாவது பொருள். இடை விடாமல் என்பது மொன்று. *ஸததம் கீர்த்தயந்தோ மாம்* என்று கீதாசார்யன் சொன்னபடியே. ஆக ஆறு பொருள்கள் காண்க.

பால் சொரியும்—வெண்ணிறமாயிருக்கும் பால் ; அதுபோல சுத்தமான அர்த்தங்களைப் பொழிவர்கள். பிறந்தநாள் தொடங்கி இறக்கும் நாள் வரையில் பால் உபஜீவ்யமாகும் ; அதுபோல. *அன்றுநான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்* என்கிறபடியே ஸத்தை பெற்ற நாள் முதலாக யாவதாத்மபாவி உபஜீவ்யங்களாம் ஆசாரியன் அருளும் அர்த்த விசேஷங்கள். கன்றைக்கண்டாலல்லது பால் சுரவாது. சிஷ்யர்களைக் கண்டாலல்லது ஆசாரியர்களுக்குஅர்த்தம் ஸ்புரிக்காது. பாத்திரத்தில் ஏந்திவைக்கப்படுகிற பாலே பலர்க்கும் பயன்படும் ; ஏடுகளில் எழுதி வைக்கப்படுகிற அர்த்த விசேஷங்களே பின்னுளர் பலர்க்கும் பயன்படும். நம் பிள்ளைபோல்வார் உபந்யஸித்தருளின அர்த்த விசேஷங்கள் வடக்குத் திருவீதிப் பிள்ளை போல்வாரால் ஏடுபடுத்தப் படவேயன்றோ இன்று நம்போல்வாரும் பருகிக் களிக்கப்ராப்தமாகிறது. ஆக இவ்வகைப் பொருத்தங்களாலே அர்த்த விசேஷங்கள் பாலென்னத்தகும். மிகவும் சிரமப்பட்டு ஆலோசித்து ஒன்றிரண்டு அர்த்தங்களைச் சொல்லுவாருமுண்டே ; அப்படியன்றிக்கே திருமலையருவிபோலப் பொழிவர்களென்கிறது சொரியும் என்பதனால்.

வள்ளல் பெரும் பசுக்கள்—" உதார: ஸந்தர்சயந் நிரமிமீத புராணரத்நம்" என்று ஆளவந்தார் பராசர மஹர்ஷியை வள்ளலென்றார் ; *த்வாம் ஹி ச்ரிய: ச்ரியமுதாஹுருதாரவாச:* என்று கூரத்தாழ்வான் திருமங்கையாழ்வாரை வள்ளலென்றார். கைம் மாறு கருதாமல் இப்படி ஸ்ரீஸூக்தி ரத்னங்களை வழங்குமாசிரியர்களே வள்ளல்கள்.

[பெரும்பசுக்கள்] பசுக்களும் மிருகஜாதியாயிருக்கச் செய்தேயும் மற்ற மிருகங்கள் கொலையுங் கொடுமையுமே இயல்வாயிருக்க, பசுக்கள் மாத்திரமே பாலையும் தயிரையும் வெண்ணெயையும் சுரந்து உலகத்தையெல்லாம் உகப்பிப்பதுபோல, ஆசார்யர்களும் மநுஷ்யஜாதியாயிருக்கச் செய்தேயும் மற்ற மநுஷ்யர்கள் மனிதவுருக்கொண்ட நாற்கால் விலங்குக ளென்னும்படியாயிருக்க இவர்கள் மாத்திரமே அம்ருதகல்பமான அர்த்தங்களை வர்ஷித்து உலகத்தை வாழ்விக்கையாலும், இத் தன்மையிலே எம்பெருமானைக்காட்டிலும் பெருமை பெற்றிருக்கையாலும் பெரும்பசுக்களென்னப் பொருந்தும். பசுக்கள் தின்பது எதுவாயிருந்தாலும் மதுரமான பாலே வெளிவரும்; அதுபோல, ஆசாரியர்கள் நாமுண்ணு மவற்றையே உண்பவர்களாயிருந்தாலும் அமுதினுமாற்றவினிய ஸ்ரீஸூக்திகளே அவர்களது திருப்பவளத்தினின்று வெளிவரும். பசுக்கள் நான்கு முலைகளினின்றும் பாலைத் தருவதுபோல, ஆசாரியர்களும் க்ரந்த சதுஷ்டயம் என்று ப்ரஸித்தமாகச் சொல்லுகிற நான்கு க்ரந்தங்களினின்றும் திவ்யார்த்தங்களைத் தந்தருள்வர்கள். (க்ரந்த சதுஷ்டயமாவது=ஸ்ரீபாஷ்யம், கீதாபாஷ்யம், பகவத்விஷயம், ரஹஸ்யம்.) பசுக்கள் க்ருஹத்தில் கடைசியான ஸ்தானத்தில் வாழ்வதுபோல ஆசாரியர்களும் *ஸப்தபர்வவ்யவதாநதுங்காம் சேஷத்வகாஷ்டாம்* என்று பாதுகாஸஹஸ்ரத்திற் பணித்தபடியே *அடியாரடியார்தம் அடியாரடியார் தமக்கடியாரடியார்தம் அடியா ரடியோங்களே* என்றும் *த்வத்ப்ருத்யப்ருத்ய பரிசாரகப்ருத்யப்ருத்யப்ருத்யஸ்யப்ருத்ய:*என்றும்,*த்வத்தாஸதாஸகணநா சரமாவதெள யஸ் தத்தாஸதைகரஸதா அவிரதா மமாஸ்து* என்றும் எல்லை நிலமான நிகர்ஷத்தை யநுஸந்தித் திருப்பர்கள்.

முமூர்ஷுதசையிலே பசுதானம் சிறக்கும்; அப்படியே தர்ம தேவதையின் முமூர்ஷுதசையிலே ஆசார்யர்களாகிற வள்ளல் பெரும் பசுக்கள் எம்பெருமானாலே தானஞ் செய்யப்படுகிறார்கள். இவ்விஷயம் கீதையில் நான்காமத்யாயத்திலே ஸூசிதம்; எங்ஙனே யென்னில்; *யதா யதாஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி பாரத, அப்யுத்தாநமதர்மஸ்ய ததா ஆத்மாநம் ஸ்ருஜாம்யஹம்* என்பது கீதாசார்யனுடைய அருள்மொழி; இதில் 'ஆத்மாநம் ஸ்ருஜாமி' என்றதில் உபதேசபரம்பரையிலே கேட்டறியவேண்டிய ரஹஸ்யார்த்தமுண்டு. (அதாவது) அந்த கீதையிலேயே ஏழாமத்யாயத்தில் *ஜ்ஞாநீது ஆத்மைவ மேமதம்* என்று சொல்லியிருக்கையாலே ஆத்மாநம் ஸ்ருஜாமி யென்றது ஞானிகளையுண்டாக்கித் தருகிறேனென்றபடி. அவர்களை எப்போது தருகிறானென்னில், (யதா யதாஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி, ததா) தர்மதேவதை முமூர்ஷுவாயிருக்குங் காலத்திலே யென்றபடி.

ஆக இத்தகைய பல பொருத்தங்களினாலே வள்ளல் பெரும் பசுக்களென்னத் தகுந்தவர்கள் ஆசார்யபதவியை வஹிப்பதற்கு முன்பு நெடுங்காலம் சிஷ்யபதவியிலே வாழ்ந்தவர்களாதலால், இவர்களைப் படைத்தான் என்று ஒரு மஹாசாரியர் விவக்ஷிக்கப்படுகிறார். ஆளவந்தார் 'ஆம் முதல்வன்' என்று எம்பெருமானாரைக் கடாக்ஷித்தருளி அவர் வழியாகப் பலபல வள்ளல் பெரும்பசுக்களைப் படைத்தாராதலால் அவ்வாளவந்தார் இங்கு 'ஆற்றப் படைத்தான்' என்பதனால் கொள்ளப்படலாம். அவருடைய மகனாக ஒரு ஆசாரியரைக் கொள்ளுவது. இப்பாசுரத்தில் நான்கு தலைமுறை காட்டப்பட்டுள்ளது; ஏற்றகலங்களென்பது ஒரு தலைமுறை. வள்ளல் பெரும்பசுக்கள் என்பது ஒரு தலைமுறை. ஆற்றப் படைத்தானென்பது ஒரு தலைமுறை. மகனே யென்பது ஒரு தலைமுறை. இதனால், *யஸ்ய வேதச்ச வேதீ ச விச்சித்யேதே த்ரிபூருஷம். ஸ வை துர்ப்ராஹ்மணோ ஜ்ஞேயஸ் ஸர்வகர்ம பஹிஷ்க்ருத:* என்னும் பழிப்பில்லாத ப்ரபந்நஜநஸந்தாநசுத்தி காட்டப்பட்டது என்றுணர்க.

அறிவுறாய்—பிறவினையில் வந்த தன்வினை; அறிவுறுத்தாய் என்றபடி. அடியோங்களுக்கு உபதேசங்கள் தந்து அறிவை வளர்த்த வேணு மென்றபடி. அடி

யோங்களைத் திருவுள்ளத்திலே கொண்டருள வேணும் என்று பிரார்த்திக்கிற படியாகவுமாம்.

[ஊற்றமுடையாய்] உறுதியான பிரமாணத்தினால் ஸித்திப்பவரே! என்றபடி. * ஆசார்யவாந் புருஷோ வேத * என்றும் * பாபிஷ்ட: க்ஷத்ரபந்துச் ச புண்டரீகச் ச புண்யக்ருத், ஆசார்யவத்தயா முக்தௌ தஸ்மாத் ஆசார்யவாந் பவேத் * என்று முள்ள பல ப்ரமாணங்கள் இங்குக் காண்க. ஸதா ஸர்வதா சிஷ்யர்களை வாழ்விப் பதிலேயே ஊற்றமுள்ளவரே! என்னவுமாம்.

[பெரியாய்!] * புவியுமிருவிசும்பும் நின்னகத்த, நீ யென் செவியின் வழிபுகுந்து என்னுள்ளாய்,—அவிவின்றி, யான் பெரியன், நீ பெரியை யென்பதனை யாரறிவார், ஊன்பருகு நேமியாயுள்ளு * என்கிற பெரிய திருவந்தாதிப் பாசுரப்படியே எம்பெரு மானிலும் பெரியவரே! என்றபடி. உபய விபூதி நாதனான எம்பெருமானையும் தம் முள்ளே அடக்கிக் கொண்டிருக்குமவர் எம்பெருமானிற் காட்டிலும் பெரியவராகத் தானே யிருக்கவேண்டும்.

[உலகினில் தோற்றமாய் நின்ற சுடரே!] * ப்ராதுர்ப்பாவைஸ் ஸுரநரஸமோ தேவ தேவஸ் ததீயா:* என்கிற ப்ரமாண வசனத்தையுட் கொண்டு இது அருளிச் செய்கிறபடி. எம்பெருமான் பலபல யோனிகளிலும் பிறந்தாலும் * ஸ உ ச்ரேயாந் பவதி ஜாயமாந:* என்கிற சுருதியின் படியே தன்னுடைய தேஜஸ்ஸு சிறிதும் குன்றாமல் மேன்மேலும் கொழுந்துவிட்டொளிருமாபோலே அப்பெருமானடியார் களும் பல பல யோனிகளிற் பிறவா நின்றாலும் அவர்களது குலம் தொண்டக்குலமே யாய் ஒளிமழுங்காதே விளக்க முற்றேயிருப்பர்கள் என்பது மேலெடுத்த ப்ரமாண வசனத்தின் கருத்து. ஆகவே உலகினில் தோற்றமாய் நின்ற சுடரே! என்றவிளி பகவானுக்குப் போலவே பாகவதர்களுக்கும் மிகப் பொருந்தும்.

[துயிலெழாய்] * அநாதிமாயயா ஸுப்த:* என்றிருக்கு மெங்களைத் துயிலெழுப்ப வேணும் என்கை. தேவரீர் திருக்கண்விழித்து அடியோங்களைக் கடாக்ஷித்தருள வேணுமென்றதாகவுமாம். இப்படிப்பட்ட பாகவதோத்தமர்களின் திருமாளிகைக்குத் தாங்கள் வந்து சேர்ந்தபடியை த்ருஷ்டாந்த பூர்வமாகப் பேசுகிறார்கள் மேல் மூன்றடிகளினால்.

[மாற்றாருனக்கு வலி தொலைந்து இத்யாதி.] மாற்றார்—மாறுபாடுகொண்டவர்கள்; பகைவர்களென்றபடி. ப்ரமாணங்களையும் ப்ரமேயங்களையும் ப்ரமாதாக்களையும் தூஷித்துக்கொண்டு வேறுபட்டிருந்த மதாந்தரஸ்தர்கள் இங்கு மாற்றார் எனப்படு கிறார்கள். அவர்கள் வந்து வாதஞ் செய்து வலிமாண்டு அடி பணிந்தார்களென்பது ஆளவந்தார் எம்பெருமானார் பட்டர் நம்பிள்ளைபோல்வாருடைய சரிதைகளிலே விசதம். யாதவ ப்ரகாசர் யஜ்ஞமூர்த்தி முதலானார் எம்பெருமானார் திருவடிகளிலே வலிதொலைந்து அடிபணிந்தவர்கள். * தஞ்சீரை ஞானியர்கள் தாம் புகழும் வேதாந்தி கள் நஞ்சீயராகி பட்டர் திருவடிகளிலேவந்து பணிந்ததும், துன்னுபுகழ்க் கந்தாடைத் தோழப்பர், நடுவில்திருவீதிப் பிள்ளை பட்டர் முதலானார் நம்பிள்ளை திருவடிகளிலே வந்து பணிந்ததும் ப்ரஸித்தம். அவரவர்கள் குணங்களுக்குத் தோற்றுப் போற்றிப் புகழ்ந்துகொண்டு வந்து புகுந்ததுபோல அடியோங்களும் வந்து புகுந்தோம், எம் மையும் ஆட்கொண்டருளவேணும்—என்று வேண்டிக் கொள்ளுகிறபடி. அத்வேஷி களாகவும் அநுகூலர்களாகவுமிருந்தவர்கள் வந்து பணிவதிற்காட்டிலும் த்வேஷி களாயிருந்தவர்கள் மாச்சரியம் நீங்கி வந்து பணிவது விசேஷமாதலால் அஃது இங் கெடுத்துப் பேசப்பட்டது. .... ... .... ... 21

**22. அங்கண்மா ஞாலத் தரசர் * அபிமான**
**பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட்டிற்கீழே***
**சங்க மிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்***
**கிங்கிணி வாய்ச் செய்த தாமரைப் பூப்போலே***
**செங்கண் சிறுச்சிறிதே யெம்மேல் விழியாவோ***
**திங்களு மாதித்தியனு மெழுந்தாற்போல்***
**அங்க ணிரண்டுங்கொண் டெங்கள்மேல் நோக்குதியேல்***
**எங்கள்மேற் சாப மிழிந்தேலோ ரெம்பாவாய்.**

கண்ணபிரான் சயனத்திலிருந்து கொண்டே 'ஆய்ச்சிகாள்! நீங்கள் எதற்காக வந்தீர்கள்? என்னுல் உங்களுக்கு என்ன காரியமாகவேணும்? சொல்லுங்கள்' என்றுகூற, நாங்கள் வேறுபோக்கற்று வந்திருக்கிறேமென்பது திருவுள்ளத்தில் பட்டிருந்தும் எங்கள்மேல் உன்னுடைய கடாக்ஷவீக்ஷணம் விழவில்லையே; * தொண்டரோர்க் கருளிச் சோதிவாய்திறந்து உன் தாமரைக்கண்களால் நோக்காய் * என்று பிரார்த்திக்குங் குடியிலன்றே நாங்கள் பிறந்தவர்கள். உன் திருக்கண்ணேக்கம் எங்கள்மீது படவேணும் என்கிற இவ்வளவு ஆசையே கொண்டு வந்தவர்களன்றே நாங்கள்; திருக்கண்களைத் திறந்து எங்களைக் கடாக்ஷித்தருளாமலே "எங்கு வந்தீர்கள்? என்ன விசேஷம்?" என்று கேட்கிறவிது புதிய அப்யாஸமாகக் காண்கிறதே, எப்போது முன்னேடு கூடியிருக்கவேண்டிய நாங்கள் பிரிந்தே யிருப்பது ஏதோ சாபவிசேஷத்தினுலன்றே? அந்த சாபம் தொலைய உனது கடாக்ஷவீக்ஷணத்தையே வேண்டிவந்தோம் நாங்கள். வேறு எதையும் கோலிவந்தோமல்லோம், திருக்கண்களை மெல்ல மெல்லத்திறந்து சிறிது கடாக்ஷித்தருளாய்—என்கிறுர்கள். கீழ்ப்பாட்டில் "மாற்றூருனக்கு வலிதொலைந்து" இத்யாதியை இப்பாட்டில் மூன்றடிகள் விவரிப்பன.

எம்பெருமானுடைய விபவாவதாரத்திலும் அர்ச்சாவதாரத்திலும் பலபல அரசர்கள் அஹங்கார மொழிந்து பகவத்பாதாரவிந்தத்திலே வந்து சேர்ந்தபடியைக் கூறுகின்றதிங்கு. முதன்முதலில் அரசர்கள் என்று பெயருண்டாகப் பெற்றதே எம்பெருமானுடைய க்ருபையின் லவலேசத்தினுலென்பதை சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. * யுககோடி ஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்ய பத்மபூ:, புநஸ் த்ரைலோக்ய தாத்ருத்வம் ப்ராப்தவாநிதி சுச்ரும * என்பது ப்ரஸித்தமான மஹர்ஷிவசனம். நான்முகக்கடவுள் யுககோடி ஸஹஸ்ரங்களில் விஷ்ணுவை ஆராதித்து மீண்டும் தன் பதவியைப் பெற்றதாக இதில் சொல்லப்பட்டது. பூதத்தாழ்வார் தம்முடைய திருவந்தாதியில் * கோவாகி மாநிலங்காத்து நங் கண்முகப்பே மாவேகிச் செல்கின்ற மன்னவரும், பூமேவுஞ் செங்கமல நாபியான் சேவடிக்கே யேழ்பிறப்பும், தண்கமலமேய்ந் தார் தமர்.* என்றருளிச் செய்த பாசுரத்தினுல், இப்போதுள்ள அரசர்கள் யாவரும் எத்தனையோகாலம் எம்பெருமானை யாராதித்தே அரசர்களாயினர் என்பது தெரிவிக்கப்படுகின்றது. *அஷ்டாபிர் லோகபாலாநாம் மாத்ராபிர் நிர்மிதோ ந்ருப: * * நாவிஷ்ணு: ப்ருதிவீபதி:* இத்யாதி ப்ரமாணங்களுங் காண்க. நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் * திருவுடைமன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே யென்னும் * என்கிறுர். அரசர்களைக் கண்டால் எம்பெருமானைக் கண்டதாகச் சொல்லுவதற்குக் காரண மென்னவெனில், இவர்கள் நெடுங்காலம் பகவானை ஆராதித்தவர்கள் எனபதுவேயாம். அப்படி அபரிமித காலம் ஆராதித்து அரசர்களாகப் பெற்றவர்கள் பதவியையடைந்த உடனே * ஜீவநக்ரஹணே நம்ரா: க்ருஹீத்வா புநருந்நதா:* என்கிற கணக்கிலே அஹங்காரிகளாகி வணங்காமுடி மன்னர்களாயிருப்பர்கள். அவர்களும் நாளடைவில் செருக்கொழிந்து பகவான் திருவடி வாரத்திலே

வந்து பணியாநிற்பர்கள். எல்லாருமே அஹங்காரிகளாயிருப்பர்களென்று கொள்ள வேண்டா; அஹங்காரிகளாயிருந்தவர்கள் அஹங்காரம் தொலையப் பெறுவர்கள்; சிலர் அஹங்கார முண்டாகப் பெறுமலேயிருப்பர்கள். "அபிமானபங்கமாய்" என்றதில் இவ்விரண்டு பொருளையுங் கொள்ளலாம்; * அபஹதபாப்மா * என்ற விடத்திற்போல.

அர்ச்சாவதாரத்தில் பல அரசர்கள் ஆங்காங்கு திவ்யதேசங்களில் வந்து பணிந்தமை திவ்வியப் பிரபந்தங்களிலே விளங்காநின்றது. *தென்னன் தொண்டையர்கோன் செய்த நன்மயிலைத் திருவல்லிக்கேணி * மன்னவன் தொண்டையர்கோன் வணங்கும் நீண்முடிமாலை வயிரமேகன் தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சியட்ட புயகரத்து * பல்லவன் வில்லவனென்றுலகிற் பலராய்ப் பல வேந்தர்வணங்கு கழற் பல்லவன் மல்லையர் கோன்பணிந்த பரமேச்சுர விண்ணகரம் *செம்பியன் கோச் செங்கணன் சேர்ந்தகோயில் திருநறையூர்மணி மாடம் * என்னுமிவை திருமங்கை யாழ்வாரருளிச் செயல்கள்.

உள்ளுறை பொருளில், அங்கண்மாஞாலமென்றது பாஞ்ச பௌதிக பிண்ட மான சரீரம்; அதில் அரசன்—ஜீவாத்மா; அதன் அவிவேகத்தினால் அஹங்கார மமகாரங் கொண்டிருந்த வளவிலே "ஸத்ஸங்காத் பவநிஸ்ஸ்ப்ருஹோ குருமுகாத் ஸ்ரீசம் ப்ரபத்யாத்மவாந்" என்று நடாதூரம்மாளருளிச் செய்தபடியே யாத்ருச்சிக ஸத்ஸங்கத்தாலே அவ்வஹங்காரமமகாரங்கள் தொலையப் பெற்று ஸதாசார்ய ஸகாசத்திலே வந்து சேரப் பெறுகிறானென்று கொள்க. [சங்கமிருப்பார் போல்] சங்குபோல் ஸர்வஜ்ஞத்வம் பெறுவதற்காக வென்று கருத்து. த்ருவனுக்குக் காட்சிதந்த பெருமான் அவனைத் தன்னுடைய சங்கினால் ஸ்பர்சித்தவளவிலே அவன் ஸர்வஜ்ஞனாய்விட்டதாகப் புராணம் கூறும். [தலைப் பெய்தோம்] கிட்டினோமென்கிற பொருளில் இது முழுச்சொல். தலை—தலையை, பெய்தோம்—கொடுத்தோம் என்கிற பொருளை ஸ்வாபதேசத்தில் கொள்ளலாம். * தலையல்லால் கைம்மாறிலேனே * என்னும்படியாகப் பெறுகை.

இனி, தங்களுக்கு அபேக்ஷிதமானது இன்னதென்கிறது மேல் கிண்கிணி வாய்ச் செய்த வென்று தொடங்கி. சிறுகுழந்தைகளுக்கு அரையிலணியும்படி செய்யப் படுகிற ஆபரணத்திற்குக் கிண்கிணி என்று பெயர்; அது மாதுளம் பூப்போலே பாதி மூடியும் பாதிமலர்ந்துமிருக்கும். எம்பெருமான் செய்தருளவேண்டிய கடாக்ஷத்திற்கு அதனை உவமை கூறுவதனால்=முதலிலேயே பரிபூர்ண கடாக்ஷத்தைத் தாங்கமாட்டா மையினாலே சிறிது சிறிதாகக் கடாக்ஷிக்க வேணுமென்பது பெறப்படும். "செங்கண் சிறுச்சிறிதே" என்று வ்யக்தமாகவும் அது சொல்லப்பட்டது. இதற்குச் சார்பாகவே *திங்களுமாதித்தியனு மெழுந்தாற்போல் * என்றும் கூறப்படுகிறது. இது அபூதோபமை [இல் பொருளுவமை]; ஏககாலத்திலே சந்திரஸூரியர்கள் உதிப்பது அஸம்பாவிதம். தாமரை ஸூர்யனைக் கண்டால் மலரும்; சந்திரனைக் கண்டால் மூடிக் கொள்ளும். இங்கு *ஆங்கு மலருங் குவியும் மாலுந்திவாய் ஒங்கு கமலத்தி னொண்போது, ஆங்கைத் திகிரிசுடரென்றும் வெண்சங்கம் வானிற்பகருமதியென்றும் பார்த்து* என்கிறபேயார் பாசுரம் நினைக்கத்தகும். நம்முடைய குற்றங்களை நினைத்த வாறே திருக்கண்கள் மூடிக்கொள்ளும்; தனது ஸஹஜகருணையை நினைத்தவாறே மலர்ந்துகொள்ளும்.

ஆசாரியர் சிஷ்யனுக்குப் பெருப்பெருத்த அர்த்த விசேஷங்களை முதலிலேயே கொட்டிவிட முடியாதே. பெரிய திருமொழியில் (5-1-2) *புள்ளுப் பிள்ளைக்கு இரை தேடும்* என்றவிடத்து பட்டரருளிச் செய்யுமது நினைக்கத்தக்கது. சிறு சிறு விஷயங்களாகக் கொள்ளும்படி செய்வது ஆசார்யக்ருத்யம். அதைத் தெரிவிக்கிறபடி. [திங்களும் ஆதித்தியனுமெழுந்தாற்போல்] பகவத் விஷய ரஹஸ்யக்ரந்தப் பொருள்களை

யுபதேசிக்கும் போது ஆசார்யர் சந்திரனைப்போலே குளிர்ந்திருப்பர். ஸ்ரீபாஷ்ய சத தூஷண்யாதிகளை விவரிக்கும்போது ஸூரியனைப்போல் தபிப்பர். இத்தால் உபய வேதாந்தப்பொருள்களையும் எங்களுக்கு உபதேசிக்க வேணுமென்று பிரார்த்திக்கிற படி. [அங்கணிரண்டுங்கொண்டு] இரண்டு கண்களாவது (ஆசார்யனுடைய) வெளிக் கண்ணும் உட்கண்ணும். *யம் யம் ஸ்ப்ருசதி பாணிப்யாம் யம் யம் பச்யதி சக்ஷுஷா* என்றபடி ஸதாசார்யர் வெளிக்கண்ணாலே கடாக்ஷித்தாலும் போலும்; ஆளவந்தார் எம்பெருமானாரை "ஆம்முதல்வனிவன்" என்று உட்கண்ணாலேஅநுக்ரஹித்ததுபோல அநுக்ரஹித்தாலும்அமையும். இரண்டு கடாக்ஷமும் சேர்ந்துவிட்டால் கிம்புந:? இங்கு *ஏகயைவகுரோர்த்ருஷ்ட்யா த்வாப்யாம்வாபி லபேதயத், ந தத் திஸ்ருபிரஷ்டாபிஸ் ஸஹஸ்ரேணாபிகஸ்யசித்* என்ற ஸுபாஷித நீவீச்லோகரத்நம் அநுஸந்தேயம். இதன் பொருளாவது,ஆசார்யன் வெளிக்கண்ணால் மட்டுமோ உட்கண்ணையும் சேர்த்து இருகண்களாலுமோ கடாக்ஷித்தருள அதனாலுண்டாகும்பேறு முக்கட்பிரானுடைய மூன்றுகண்களாலும் எண்கண்ணனை நான்முகனுடைய எட்டுக்கண்களாலும்* தாமரை மலர்க்கண்களாயிரத்தாய் !* என்றும் *ஸஹஸ்ரசீர்ஷா புருஷஸ் ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரபாத்* என்றும் ஸஹஸ்ராக்ஷனாக ஓதப்பட்ட ஸ்ரீமந்நாராயணனுடைய ஆயிரங்கண்களாலும் உண்டாகமாட்டாதென்கை.நோக்க வேணுமென்னாமல் 'நோக்கு தியேல்' என்கையாலே அவனுடைய இயற்கையின்னருள் மூலமான கடாக்ஷமே சிறந்ததென்றும், நம்முடைய நிர்ப்பந்தமடியாக வருகிற கடாக்ஷம் விரஸமான தென்றும் காட்டிற்றாகிறது.

இப்பாட்டில் ஐந்தாமடியில் 'எம்மேல்' என்றும், ஏழாமடியில் 'எங்கள் மேல்' என்றும், எட்டாமடியில் மறுபடியும் 'எங்கள் மேல்' என்றும் ஆக மூன்று முறை பிர யோகித்திருப்பது தங்களுடைய தயநீயதசையை அடிக்கடி யெடுத்துக் காட்டுகிறபடி. பெரியாழ்வார் திருமொழியில் (3·7-1.) *ஐயபுழுதி பாசுரத்தில் 'இவள் இவள் இவள்' என்று மும்முறை வருவதொக்குமிது. [எங்கள்மேல் சாபம் இழிந்து] இழிந்து என்பது வினையெச்சம்போல் தோன்ற நின்றாலும் 'இழிந்திடும்' என்றதன் குறையென்று கொள்ளத்தகும். இந்தரீதி முன்னும் பின்னும் சில பாசுரங்களிலும் காணக் கிடக்கும். ஆய்ச்சிகள் *எங்கள் மேல் சாபமென்கிறார்களே, இவர்களுக்கு எவ்வித மான சாபம். யார் கொடுத்த சாபம்? எப்போது கிடைத்த சாபம்? என்று கேட்க வேண்டா ; அவசியம் அநுபவித்தே தீரவேண்டியதான பாபமே சாபமென்பது. எம் பெருமானைவிட்டுப் பிரிந்திருப்பதானது பிரபல பாபத்தின் பலனாதலால் இதுவே சாப மெனப்படுகிறது. இது அவன்றன்னுடைய திருக்கண்ணோக்கம் பட்டவாறே தொலையுமென்க. இங்கு "ச்ரமணீ விதுர ரிஷிபத்னிகளைப் பூதராக்கின புண்டரீ காக்ஷன்னெடுநோக்கு சாபமிழிந்தென்னப் பண்ணுமிறே" என்கிற ஆசார்ய ஹ்ருதய சூர்ணை வியாக்கியானத்துடன் அநுஸந்திக்கத் தக்கது. எம்பெருமானுடைய ஒவ்வோரவயவமும் ஒவ்வொருத்தருடைய சாபம் தீர்த்தது. திருவடித்தாள் அஹல் யையின் சாபம் தீர்த்தது. திருமுழந்தாள் குபேர புத்திரர்களான நளகூபர மணிக்ரீ வர்களின் சாபம் தீர்த்தது. [யமளார்ஜுநபங்க கதையை நினைப்பது.] திருத்துடை கள் மதுகைடபர்களின் சாபம் தீர்த்தன. [*பிஷ்ட துஷ்ட மதுகைடப கீடௌ* இத் யாதி ஸுந்தரபாஹு ஸ்தவஸூக்தியை ஸ்மரிப்பது.] ருத்ரசாபம் மார்வில் ஸ்வேதத் தாலே தீர்ந்தது. துர்வாஸச்சாபம் மார்பிலிருப்பாளாலே தீர்ந்தது. இப்போது திருக்கண்களாலே ஒரு சாபம் தீர்கிறது.

எம்பெருமானுடைய திருமேனியில் மூன்று திவ்யாவயவங்கள் பக்தர்களுக்கு முக்கியமானவை. அவற்றுள் முதல் அவயவம் திருக்கண் ; *ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேத் மதுஸூதந:, ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேயஸ் ஸ வை மோக்ஷார்த்த சிந்தக:* என்றபடியே ஜாயமாந காலத்திலேயே கடாக்ஷித்து ஸாத்விகத்வத்தை யுண்டாக்க வல்லதன்றோவிது. அப்படி கடாக்ஷிக்கப் பெற்றவர்களுக்குத் திருவடியே

தஞ்சமாகிறபடியால் அது இரண்டாவதான அவயவம். அப்படி திருவடிகளிலே விழுந்தவர்கள் *அஞ்சேலென்று கைகவியாய்* என்று அபயப்ரதானத்தையே விரும்பிக்கொண்டிருப்பர்களாதலால் அபய முத்ராஞ்சிதமான ஹஸ்தம் மூன்ருவதான அவயவம். .... ... ... .... ... 22

**23.** **மாரி மலைமுழஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்***
**சீரிய சிங்க மறிவுற்றுத் தீவிழித்து***
**வேரி மயிர்பொங்க வெப்பாடும் பேர்ந்துதறி***
**மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு***
**போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணு*உன்**
**கோயில்நின் றிங்ஙனே போந்தருளி*கோப்புடைய**
**சீரிய சிங்கா சனத்திருந்து*யாம் வந்த**
**காரிய மாராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.**

கண்ணபிரான் திருப்பள்ளியறையில் நின்று மெழுந்து சிங்கக் குட்டிபோல் புறப்பட்டெழுந்தருளி நடையழகுகாட்டி நடந்தருளிச் சிங்காசனத்தின்மீது வீற்றிருந்து, கோபிமார் தாங்கள் வந்த காரியத்தை ஆராய்ந்தருளவேணுமென்று கோருவதாக அமைக்கப்பட்டுள்ளது இப்பாசுரம்.

கண்ணபிரானுக்கு ராமாநுஜனென்கிறவொரு திருநாமமுமுண்டே; ராமனென்று பலராமனைச் சொல்லும்; அவனுடைய தம்பி கண்ணபிரானென்கிற காரணத்தினல் ராமாநுஜன் கண்ணனகிருன். ஆனதுபற்றியே முகுந்தமாலையில் "ஹே கோபாலக" என்னும் சுலோகத்தில் "ஹே ராமாநுஜ!" என்றும் ஸ்ரீ க்ருஷ்ண பகவான் விளிக்கப் பட்டுள்ளான். ஆகவே ராமாநுஜனை கண்ணபிரானை நோக்கின இங்குள்ள பிரார்த்தனையானது ராமாநுஜரான எம்பெருமானுரையும் நோக்கியதென்று கொள்ளத் தகுதியுண்டு. பாசுரத்திலுள்ள சொற்களெல்லாம் எம்பெருமானுர் பரமானபொருளிலும் நன்கு பொருந்தும்படியை விளக்குவோம்.

இப்பாட்டில் பூவைப்பூவண்ணு வென்பதுவிளி. காயாம்பூவண்ணங்கொண்ட கண்ணபிரானே! என்று அங்யாபதேசத்தில் பொருள். ஸ்வாபதேசத்தில், 'பூவைப்பூ அண்ணு' என்று பிரித்து, புஷ்பம் போன்ற திருத்தமையனரே! என்பதாகப் பொருள் கொள்வது. எம்பெருமானர் ஆண்டாளுக்கு அண்ணராகையாலே அண்ணு! என்றழைக்கத் தகும். அவர் புஷ்பம்போன்றிருத்தலாவது—புஷ்பமானது தன்னைச் சுற்றிப் பல்லாயிரம் வண்டுகள் மொய்க்கும்படி யிருப்பதுபோல ஸ்வாமிதாமும் ரஸிகர்களான பலசிஷ்யர்கள் நெருங்கிச் சூழப் பெற்றிருப்பதேயாம். * போந்ததென்னெஞ்சென்னும் பொன்வண்டு உனதடிப் போதிலொண்சீராந் தெளிதேனுண்டமர்ந்திட வேண்டி * என்று இராமானுச நூற்றந்தாதியிலருளிச்செய்தபடி திருவரங்கத்தமுதனர்போன்ற பலபல வண்டுகள் மொய்க்கப்பெற்ற பூ எம்பெருமானுரென்க. பூவைப்பூவென்று விசேஷித்தொரு புஷ்பத்தைச் சொன்னது புஷ்பஸாமான்ய விவக்ஷையினலென்க. பூவைப்பூவென்கிற காயாம்பூவையே கொண்டாலும் குற்றமில்லை. ஸ்வாமி எம்பெருமானுர் காயாம்பூ வண்ணங்கொண்ட கண்ணனைத் திருவுள்ளத்தில் நிரந்தரமாகக் கொண்டிருக்கையாலே அக்கண்ணனது திருமேனியின் நிழலீட்டாலே ஸ்வாமியின் திருமேனியும் பூவைப்பூப்போலவே அந்தரங்கபக்தர்களுக்குக் காட்சி தருமென்க. இவ்விடத்தில் * அபி பணிபதி பாவாத் * என்கிற [ஸ்ரீ ரங்கராஜஸ்தவம் 1-45.] பட்டர் ஸ்ரீ ஸூக்தியை அநுஸந்திப்பது.

எம்பெருமானுரைச் சீரியசிங்கம்போல் எழுந்தருள வேணுமென்று அபேக்ஷித்திருப்பது மிகப்பொருத்தமானது; தாடீ பஞ்சகத்தில் முதல் ச்லோகத்தில் * ஜைநேப கண்டீரவ:* என்று ஸ்வாமி ஸிம்ஹமாகச் சொல்லப்பட்டார். நூற்றந்தாதியிலும் * கலி மிக்க செந்நெல் கழனிக் குறையல் கலைப்பெருமானெலி மிக்கபாடலையுண்டு தன்னுள்ளம் தடித்து அதனால் வலி மிக்க சீயமிராமானுசன் * என்று சீரிய சிங்கமாகச் சொல்லப்பட்டார் ஸ்வாமி.

இனி, பாட்டினடி தொடங்கி ஒவ்வொரு சொல்லாக எடுத்துக் கொண்டு விவரணங் காட்டுவோம். மாரி—மழைகாலத்தில் என்றபடி. சிங்கமானது மழைகாலத்தில் மலை முழஞ்சில் [பர்வதகுஹையில்] மன்னிக்கிடந்துறங்குமாம். எம்பெருமானாரகிய சிங்கத்திற்கு எது மலை? எது முழஞ்சு? என்பதைப் பற்றிப் பிறகு விவரணம் காட்டுவோம். மழை காலம் என்றதைப் பற்றி முன்னம் கேண்மின், உலகில், விரும்பத்தக்க மழையுமுண்டு, வெறுக்கத்தக்க மழையுமுண்டன்றே. அப்படியே யிங்குமுண்டு. விரும்பத்தக்க மழையைத் திருக்கச்சி நம்பிகளும் ஆழ்வானும் அருளிச் செய்தார்கள்; வெறுக்கத்தக்க மழையை ஆளவந்தார் அருளிச் செய்தார். எங்ஙனேயென்னில்; தேவராஜாஷ்டகத்தில் * தேவராஜதயாஸிந்தோ! தேவதேவ ஜகத்பதே. த்வதீக்ஷண ஸுதாஸிந்து வீசி விக்ஷேப சீகரை:, காருண்ய மாருதா நீதைச் சீதலைரபிஷிஞ்சமாம்* என்று நம்பிகள் அருளிச் செய்தமழை விரும்பத்தக்கமழை. பகவானுடைய திவ்ய கடாக்ஷாம்ருதவர்ஷமே இங்குச் சொல்லப்பட்ட மழை. கூரத்தாழ்வானும் வரதராஜஸ்தவத்தில் * ஹஸ்நீச! த்ருஷ்ட்யம்ருத வ்ருஷ்டிபிராபஜேத:* என்று இந்த மழையையே அருளிச் செய்தார். இனி, வெறுக்கத்தக்க மழையை ஆளவந்தாரருளிச் செய்தபடி யென்னென்னில்; ஸ்தோத்ர ரத்நத்தில் * அவிவேக கநாந்த திங்முகே பஹுதா ஸந்தத துக்கவர்ஷிணி, பகவந்! பவதுர்திநே * என்றது காண்க. அவிவேகமாகிற மப்புமூடப்பெற்று வழிதிகைத்து அலமரும்படியாய்ப் பலவகைத் துன்பங்கள் சொட்டுச் சொட்டென்று துளிக்க நிற்பதாய் இருப்பதாம் ஸம்ஸாரதுர்திநம். (மழைகாலத்து நாளுக்கு துர்தினமென்று பெயர்.) ஆக உத்தேச்யமான மழையை உண்டாக்குவதற்கும் த்யாஜ்யமான மழையைத் தவிர்ப்பதற்கும் கடவர் எம்பெருமானர் என்றதாகக் கொள்க.

[மலைமுழஞ்சில்] வேதத்தில் காடக மென்கிறவொரு ப்ராஹ்மண பாகத்தில் * பரத்வாஜோ ஹ த்ரிபிராயுர்ப்பிர் ப்ரஹ்ம சர்யமுவாஸ * என்று தொடங்கி ஓர் உபாக்க்யானம் ஓதப்பட்டுள்ளது. பரத்வாஜ மஹர்ஷியானவர் முந்நூறு பிராயம் வாழ்ந்திருக்கும்படியான வரம்பெற்று அந்த வாழ்நாள் முழுவதும் வேதங்களையே ஓதினராம். ஆயுள் முடிவடையுந் தருவாயில் தேவேந்திரன் வந்து காட்சி தந்து 'முனிவரே! இன்னமும் ஒரு நூறு பிராயம் தருகிறேன்; பெற்றுக்கொள்ளுகிறீரா? அவ்வாயுளில் என்னசெய்வதாக உத்தேசிக்கிறீர்?' என்று கேட்க, அதிலும் வேதமேயோதி சதுர்வேத பாரங்கதனவேன் என்று முனிவர் கூற, இதுவரை இம்முனிவர் ஓதின வேதத்தின் அளவை இவர்க்குக் காட்ட வேணுமென்று கருதிய இந்திரன் எங்குக் கண்டறியாத மூன்று பெரிய மலைகளை முன்னே காட்டி அம்மூன்று மலைகளிலிருந்து மூன்று பிடி மண்ணெடுத்து 'பரத்வாஜமுனிவரே! முந்நூறு வருடங்களாக நீர் ஓதிய வேதம் இம் மூன்று பிடி மண்ணளவானதே; அதோ காண்கிற மூன்று மலையளவான வேதங்கள் நீர் ஓதாத பாகமாகும்' என்று கூறினதாக அவ்வுபாக்கியான முள்ளது. இதன்படி வேதமே இப்பாசுரத்தில் மலையாகக் கூறப்பட்டது. வேதமனைத்துக்கும் வித்தாகுமே கோதைதமிழ்.

மஹா பாரதத்தில் யக்ஷப்ரச்னத்திற்கு விடை கூறுநின்ற தருமபுத்திரர்— " ச்ருதிர் விபிந்நா ஸ்ம்ருதயோ விபிந்நா: நைகோ முநிர் யஸ்ய மதம் ப்ரமாணம், தர்மஸ்ய

தத்வம் நிஹிதம் குஹாயாம் மஹாஜநோ யேந கதஸ் ஸ பந்தா: * என்றுரைத்த ச்லோகம் ப்ரஸித்தமானது. இதன்படி தர்மஸூக்ஷ்மம் பதிந்து கிடக்குமிடமே அந்த வேத மலையின் குஹையாகும். "தத்வம் நிஹிதம் குஹாயாம்" என்றன்றோ சொல்லப் பட்டுள்ளது. ஸ்ரீராமாயணத்தில் வாலியை நோக்கிப் பெருமாள் கூறுமிடத்து * ஸூக்ஷ்ம: பரமதுர்ஜ்ஞேயஸ் ஸதாம் தர்ம: ப்லவங்கம ! * என்றதும் இதற்குச் சார் பாகும். ஆக, வேதங்களில் தர்ம ஸூக்ஷ்மம் பொதிந்துள்ள விடங்களே மலைமுழஞ்சு என்னப்பட்டது. அதில் மன்னிக்கிடந்துறங்கும் சீரியசிங்கம் எம்பெருமானர். மன்னிக்கிடந்துறங்குகையாவது * அஸ்தமிதாந்யபாவம் * என்றபடியே வேறிடங்களில் சிறிதும் நெஞ்சு செல்லுதலின்றி அவ்விடத்தே நெஞ்சைப் பொருந்தவைத்து அங்குள்ள நுட்பமான அர்த்த விசேஷங்களைக் கண்டறிந்து ஆனந்தப்படுகை. உறங்குங்காலத்தில் துக்க லேசமும் தோன்றாமல் * ஸுகமஹமஸ்வாப்ஸம் * என்னும் படி ஆனந்தாநுபவமாயே யிருப்பதால் உறங்குகையும் ஆனந்திக்கையும் பர்யாய மாகக் கொள்ளத்தக்கது. * வேதோத்தம்ஸ குஹாவிஹார படுநா ஸ்ரீசைலச்ருங்கோல்லஸந் மாயா கேஸரி மாநிதேந கஹநந்யாயாடவீசாரிணு, கம்பீரேண பராத்ம பேதந மஹாநாதேந நாதேந மே குப்தோஹம் யதிஸார்வபௌமஹரிணு வர்த்தே ப்ருசம் நிர்ப்பய: * என்ற ச்லோகரத்நத்தை இங்கு நினைப்பது.

அறிவுற்று — மாயாவாதிமத்தகண்டீரவமான ஸ்வாமி தாம் அவதரித்ததன் ப்ரயோஜனத்தைத் தெரிந்துகொண்டு; (அதாவது) துர்மத நிரஸநத்திற்காகவும் ஸன் மதஸ்தாபனத்திற்காகவுமன்றோ நாம் இங்கு வந்து பிறந்திருக்கிறோமென்பதை நினைத் துக்கொண்டு என்றபடி. சிஷ்யோஜ்ஜீவனமே நமக்குப்பணியென்று தெரிந்து கொண்டு என்னவுமாம். தீவிழித்து—*புத்திர் மனீஷா திஷண தீ: ப்ரஜ்ஞா சேமுஷீ மதி:* என்ற அமரகோசத்தின் படியே புத்திவாசகமான (धी) என்கிற சொல்லே இங்கு தீயென்று திரிந்துள்ளது. ஆகவே, தீவிழித்தென்றது — புத்தி விகஸிக்கப்பெற்று என்றபடி. ஸ்வாமியினுடைய புத்தியில் ஸங்கோசாவஸ்தை இறைப்பொழுதுமில்லா மல் ஸர்வதா விகாஸா வஸ்தையே உள்ளமை கூறினபடி. [வேரிமயிர்பொங்க] இதர மதஸ்தர்கள் ஸந்ந்யாஸாச்ரமம் ஸ்வீகரிக்கும்போது தலையில் மயிர் கூடாதென்று முண்டனம் பண்ணிக்கொள்வர்கள் ; ஸ்வாமி அப்படியல்லாமல் "கமநீயசிகாநிவேசம்" "சிகயா சேகரிணம் பதிம் யதீநாம்" "கனநற்சிகைமுடியும்" என்கிறபடியே சிகா பந்தம் பொங்கியிருக்கிறபடியைச் சொல்லுகிறது.

[எப்பாடும் பேர்ந்து] * ஸ்ரீரங்கம் கரிசைல மஞ்ஜநகிரிம் தார்க்ஷ்யாத்ரி ஸிம்ஹாசலௌ ஸ்ரீ கூர்மம் புருஷோத்தமஞ்ச பதரீநாராயணம் நைமிசம், ஸ்ரீமத் த்வாரவதீ ப்ரயாக மதுராயோத்யா கயா புஷ்கரம் ஸாலக்ராமகிரிம் நிஷேவ்ய ரமதே ராமாநுஜோயம் முநி:* என்றபடியே தென்னாடும் வடநாடுமுள்ள திவ்யதேச திவ்ய தீர்த்தங்களேற யாத்திரை செய்தருளினபடியைச் சொல்லுகிறது. [உதறி] * சாறு வாகமத நீறுசெய்து சமணச் செடிக் கனல் கொளுத்தியே சாக்கியக்கடலை வற்று வித்து மிகு சாங்கியக்கிறிமுறித்திட, மாறுசெய்திடு கணுதவாதியர்கள் வாய்தகர்த்து அறமிகுத்து மேல்வந்த பாசுபதர் சிந்தியோடும்வகை வாது செய்த வெதிராசனர், கூறுமாகுரு மதத்தொடோங்கிய குமாரிலன் மதமவற்றின்மேல் கொடியதற்கசரம் விட்டபின் குறுகி மாயவாதியரை வென்றிட, மீறிவாதில் வரு பாற்கரன் மதவிலக் கடிக் கொடியெறிந்துபோய் மிக்கயாதவமதத்தை மாய்த்தபெருவீரர் நாளும் மிக வாழியே.* என்று ஆர்த்திப்ரபந்தத்தில் மணவாளமாமுனிகள் அருளிச்செய்தபடியும். * காதா தாதாகதாநாம் களதி கமநிகா காபிலீ க்வாபி லீநா* என்று யதிராஜஸப்ததியில் தேசிகனருளிச் செய்தபடியும், *தற்கச்சமணரும் சாக்கியப் பேய்களும் தாழ்சடை யோன் சொற்கற்ற சோம்பரும் சூனிய வாதரும் நான்மறையும் நிற்கக் குறும்புசெய் நீசரும் மாண்டனர்* என்று நூற்றந்தாதியில் அமுதனாருளிச் செய்தபடியும் அறு

சமயச் செடியதனை யடியறுத்தபடியை 'உதறி' என்பதனால் தெரிவித்தவாறு. வாலி இராவணனை வாலில் கட்டிக்கொணர்ந்து கிஷ்கிந்தையிலே உதறினாப் போலே பரசமயிகளை அவலீலையாக உதறினபடி.

[மூரி நிமிர்ந்து] மூரியென்று சோம்பலுக்குப் பெயர்; சோம்பல் தீர நிமிர்ந்து என்றது—சோம்பல் அடியோடு தலைகாட்டாதபடி அதைப் போக்கினமை சொன்ன வாறு. நித்ய நைமித்திக கர்மானுஷ்டானங்களைச் சோம்பலாலே அறவே விட்டிடுவதும் கௌணபக்ஷாவலம்பனத்தாலே ஸங்குசிதமாக அனுட்டிப்பது மின்றிக்கே முக்கிய கல்பமாகவே யனுஷ்டிப்பவர்களில் ஸ்வாமி தலைவர் என்க. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில் சரமச்லோகாதிகாரத்திலே—"பாஷ்யகாரர் அந்திமதசையிலும் வருந்தியெழுந்திருந்து ஸந்த்யாகாலத்திலே ஜலாஞ்ஜலி ப்ரக்ஷேபம் பண்ணியருளினர்" என்று பணித்துள்ள வாக்கியம் இங்கே அநுஸந்தேயம்.

[முழங்கிப் புறப்பட்டுப் போதரும்] எம்பெருமானாருடைய திக்விஜய யாத்ரையில் எங்கும் ஸிம்ஹகர்ஜனையாகவே யிருந்தபடியைச் சொன்னவாறு. யதிராஜஸப்ததியில்—*கார்ய: கதாஹவகுதூஹலிபி: பரேஷாம் கர்ணே ஸ ஏஷ கவிதார்க்கிகஸிம்ஹநாத:* என்று பணிக்கப்பட்டது. எம்பெருமானாரடி பணிந்தவர்கள் பண்ணுமதுவே ஸிம்ஹகர்ஜனையாயிருந்தால் எம்பெருமானாரைப் பற்றிச் சொல்லவேணுமோ? அது கிம்புநர்ந்யாய ஸித்தமன்றோ. 'போதருமாபோலே' என்று இங்கு உவமையாகக் கூறியிருந்தாலும் உபமாநார்த்தங்களுக்கு உபமேயந்தன்னிலேயே உபஸம்ஹாரமென்று கொள்ளக்கடவது. *இந்துரிந்துரிவ ஸ்ரீமான்* *ககநம் ககநாகாரம் ஸாகரஸ் ஸாகரோபம:, ராமராவணயோர் யுத்தம் ராமராவணயோரிவ* என்றவையுங் காண்க. அநந்வயாலங்கார ப்ரக்ரியை.

[உன்கோயில்நின்று இங்ஙனே போந்தருளி] உன் கோயிலென்று ஸ்வாமியின் திருவவதாரஸ்தலமான ஸ்ரீ பெரும்பூதூரை விவக்ஷிக்கிறது. அங்கு நின்றும் பெருமாள்கோயிலாகிய காஞ்சீபுரிக் கெழுந்தருளியும் திருமலைக்கெழுந்தருளியும் திருவரங்கம் பெரியகோயிலுக் கெழுந்தருளியும் திருநாராயண புரமெழுந்தருளியும்.... இங்ஙனே போந்தருளின படியைச் சொல்லுகிறது.

[கோப்புடைய சீரிய சிங்காசனத்திருந்து] சிங்காசனம், சீரிய சிங்காசனம், கோப்புடைய சீரியசிங்காசனம் என்று மூன்று வகைப்பட்ட ஆஸனமாகக் கொள்ளவேணும். யதிராஜஸப்ததியில் (காதா தாதாகதாநாம் கலதி) என்ற ச்லோகத்தின் முடிவில்—*பஜதி யதிபதௌ பத்ரவேதீம் த்ரிவேதீம்* என்று எம்பெருமானார் த்ரிவேதியாகிற சிங்காசனத்திலே யெழுந்தருளியிருப்பதாகச் சொல்லிற்று. இதன் பொருளை ஒரு வ்யாக்யானகர்த்தாவும் உள்ளபடி உரைத்திலர்;=த்ரயாணாம் வேதாநாம் ஸமாஹார: த்ரிவேதீ; மூன்று வேதங்கள் என்றபடி. ரிக்வேதம் யஜுர்வேதம் ஸாமவேதம் ஆகிற மூன்று வேதங்களும் எம்பெருமானார்க்குச் சிங்காசனமாயிருந்தனவாக உரைப்பது சிறப்புடைத்தன்று. பேதச்ருதி, அபேதச்ருதி, கடகச்ருதி என்று மூன்றாக வகுக்கப்பட்ட ச்ருதிகளே த்ரிவேதியாக வேதாந்த தேசிகனுக்கு விவக்ஷிதம். அத்வைதிகளுக்கு அத்வைத ச்ருதியொன்றே ஆஸனமாயிற்று; த்வைதிகளுக்கு த்வைதச்ருதி யொன்றே ஆஸனமாயிற்று. நம் ஸ்வாமிக்கோ வென்னில் அந்த வுபயச்ருதிகளோடுகூட கடக ச்ருதியும் ஆஸனமாயின. அதாவது, ஸ்வாமி ஒரு ச்ருதியையும் தள்ளாமல் மூன்று ச்ருதிகளையும் முக்கியார்த்தமாகவே கொண்டருளி விசிஷ்டாத்வைத தர்சன நிர்வாஹம் செய்தருளினபடியால் இவர்க்கு அம்மூன்று வேதபாகங்களும் சீரிய சிங்காசனமாயிருந்தன வென்கை. இப்படிப்பட்ட ஆசார்ய ஸார்வபௌமரிடத்தே வந்து சேர்ந்த சிஷ்யர்கள் யாம்வந்த காரியமாராய்ந்தருளவேணுமென்று பிரார்த்தித்தவாறு. .... .... .... 23

**24.** **அன்றிவ் வுலக மளந்தா யடிபோற்றி *
சென்றங்குத் தென்னிலங்கை செற்ருய் திறல்போற்றி *
பொன்றச் சகட முதைத்தாய் புகழ் போற்றி *
கன்று குணிலா வெறிந்தாய் கழல்போற்றி *
குன்று குடையா வெடுத்தாய் குணம் போற்றி *
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி *
என்றென்றுன் சேவகமே யேத்திப் பறைகொள்வான் *
இன்றியாம் வந்தோ மிரங்கேலோ ரெம்பாவாய்.**

கீழ்ப்பாட்டில் *உன் கோயில் நின்றிங்ஙனே போந்தருளிக் கோப்புடைய சீரிய சிங்காசனத்திருந்து* என்று கண்ணபிரானுக்குக் கட்டளையிட்டார்கள் கோபிகள். அவனை ஸர்வநியாமகனுகத் தெரிந்து கொண்டிருக்குமவர்கள் அவனை நோக்கி இப்படி செய்யவேணுமென்று நியமிப்பது பொருந்துமோவெனின் பொருந்தும். அவன் தன்னுடைய ஸ்வரூபத்தை ஸர்வ நியாமகத்வ ரூபமாகக் காட்டினது போலவே பக்த நியாம்யத்வ ரூபமாகவும் காட்டியிருக்கிருனன்றே. ஸஹஸ்ரநாமத்தில் *விஜிதாத்மாவிதேயாத்மா* என்றவிடத்தில் 'அவிதேயாத்மா' என்று பிறர் பதம் பிரித்தாலும் 'விதேயாத்மா' என்று தானே பட்டர் விவரித்தருளினது. *இமௌ ஸ்ம முநிசார்தூல! கிங்கரௌ ஸமுபஸ்திதௌ, ஆஜ்ஞாபய யதேஷ்டம் வை சாஸநம் கரவாவ கிம்* என்று ராமாவதாரத்தில் வார்த்தை. *ஸேநயோருபயோர் மத்யே ரதம் ஸ்தாபய மே அச்யுத* என்று அர்ஜுநன் இரண்டு ஸேனைகளின் நடுவே தேரைக் கொண்டுபோய் நிறுத்து என்று கட்டளையிட அங்ஙனமே செய்த கண்ண பிரான் பெண்களின் வேண்டுகோளை மறுக்க மாட்டானுதலால் அவர்களின் பிரார்த்தனைக்கு இசைந்து 'பெண்காள்! இதோ புறப்பட்டு வருகிறேன்' என்று சொல்லித் திருப்பள்ளியறையில் நின்றும் திவ்யஸிம்ஹாஸனத்தளவும் வரத் தொடங்க, அதனைக் கண்ட ஆய்ச்சிகள், பண்டு தண்டகாரண்ய வாஸிகளான முனிவர்கள் "இராம பிரானைக் கண்டவுடனே ராக்ஷஸர்களால் நமக்கு நேர்ந்த பரிபவங்களைச் சொல்லி முறையிட வேணும்" என்று பாரித்திருந்தவர்கள் *ரூப ஸம்ஹநநம் லக்ஷ்மீம் ஸௌகுமார்யம் ஸுவேஷதாம், தத்ருசுர் விஸ்மிதாகாராः* என்னும்படி இராமபிரானைக் கண்டவாறே ராக்ஷஸர்களாலான பரிபவங்களைமறந்து *தே தம் ஸோமமிவோத்யந்தம் த்ருஷ்ட்வா வை தர்ம சாரிணः, மங்களாநி ப்ரயுஞ்ஜாநாः* என்கிறபடியே மங்களா சாஸனம் பண்ணத் தொடங்கினுப்போலே இவர்களும் தங்கள் மநோரதங்களை யெல்லாம் மறந்து "பரமஸுகுமாரமான திருவடிகளைக் கொண்டோ இவனை நாம் நடக்கச் சொல்லுவது!' என வருந்தி அத்திருவடிகளை யெடுத்து முடிமேற் புனைந்து கண்களில் ஒற்றிக்கொண்டு, பண்டு உலகளந்தருளினவாற்றையும் சகட முதைத்த வாற்றையும் நினைந்து வயிறெரிந்து இத்திருவடிகளுக்கு ஒரு தீங்கும் நேராதொழிய வேணுமென்று மங்களா சாஸனம் செய்கிருர்களிப்பாட்டினுல்.

[அன்று இவ்வுலகமளந்தாய் அடிபோற்றி.] உலகளந்த பெருமானும் தென்னிலங்கை செற்ற பெருமானும் கண்ணபிரானும் வெவ்வேறு மூர்த்திகளல்லர்; ஒரு திருமூர்த்தியே யென்கிற அத்யவஸாயத்தை இப்பாட்டில் நன்கு வெளியிடுகின்றனர் கோபிகள். முதலில் த்ரிவிக்ரமனு யவதரித்து, பிறகு ஸ்ரீராமனுயவதரித்து, இப்போது கண்ணபிரானுகத் திருவவதரித்திருக்கின்ருனென்பதை முறையே காட்டுகின்றனர். உலகமளந் தருளின காலத்திலே மஹாபலி இழவோடே போனுன்; தேவர்கள் தங்கள் பிரயோஜனம் பெறப்பட்டதென்று களித்துப் போனுர்கள்; சுக்கிரன் கண்ணிழந்து தொலைந்தான்; நமுசி வானில் சுழற்றப்பட்டொழிந்தான்; இப்படி

தங்கள் பேறு மிழவுமாயொழிந்தார்கள் அவரவர்கள். 'இம் மெல்லடிகளைக் கொண்டு காடு மோடையுமளப்பதே!' என்று வயிறெரிந்து அத்திருவடிகட்குக் காப்பிட்டார் ஆருமிலர். அக்குறை தீர இப்போது இவ்வாயர் மாதர் மங்களா சாஸனம் பண்ணுகின்றனர். இவ்வுலகம் என்ற சொல்லாற்றலால்-பரமஸுகுமாரமான திருக்கைகளையுடைய பிராட்டிமாரும் பிடிக்கக் கூசும்படி புஷ்ப ஹாஸ ஸுகுமார தரமான திருவடி எங்கே! உடையுங் கடியன வூன்று வெம்பரற்களுடைக் கடிய வெங்கானிடங்கள் எங்கே! என்று பரிதபிக்கிறபடி தோன்றும். போற்றி, வாழி, பல்லாண்டு இவை பரியாயச் சொற்கள்.

இதற்கு ஆசார்யபரமான ஸ்வாபதேசார்த்தமாவது, எம்பெருமான் தனது பெருமைகளையெல்லாம் மறைத்துச் சிறுமையை பேறிட்டுக் கொண்டு ஓர் அஸுரனிடத்தே வந்து மூவடி கேட்டு மூவுலகளந்து *கங்கை போதரக் கால் நிமிர்த்தருளிய கண்ணன்* என்கிறபடியே ஸ்ரீபாத தீர்த்தத்தையும் பெருக்கினனென்பது திரிவிக்கிரமனுடைய இதிஹாஸம். ஆசார்யரும் தம்மிடத்துள்ள நித்ய ஸூரித்வை காந்திகமான பெருமைகளை யெல்லாம் மறைத்துக்கொண்டு அஸ்மதாதிகளைப் போலே சிறியவர்களென்னும்படியாகச் சிறுமையை யேறிட்டுக்கொண்டுவந்து அவதரிக்கிறார். எம்பெருமான் அஸுரனிடத்திலே சென்றது போல ஆசாரியர் *அரக்கரசுரர் பிறந்திருள்வீரேல்* என்னும்படியான ஆஸுரப்ரக்ருதிகளான நம்போல்வாரிடத்தே வருகிறார். அவன் மூவடிவேண்டினைப் போலே ஆசார்யர் 'ரஹஸ்யத்ரயம் கேட்க மாட்டீர்களா? தத்வத்ரயம் கேட்கமாட்டீர்களா? ஷட்கத்ரயம் (கீதை) கேட்க மாட்டீர்களா? தத்வஹித புருஷார்த்தங்கள் கேட்க மாட்டீர்களா? என்று பல்லைக் காட்டுகிறார். அவன் திசைகளெல்லாம் திருவடியால் தாவியது போல இவரும் லோக ஸம்ரக்ஷணார்த்தமாக ஸகல க்ஷேத்ர தீர்த்தங்களிலும் ஸஞ்சரிப்பர். அவன் தன்னுடைய ஸ்ரீபாத தீர்த்தத்தை ஒரு தாமஸ தேவதைக்குக் கொடுத்தான்; இவர் தம்முடைய ஸ்ரீபாத தீர்த்தத்தைப் பரமஸாத்விகர்களுக்கு அளிப்பர். இப்படிகளாலே உலகளந்த பெருமாளும் ஆசார்யருமொப்பர்; இவருடைய திருவடிக்குக் காப்பிட்ட தாயிற்று.

[சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்.] ராமாவதாரத்திலே மங்களாசாஸனங்கள் விசேஷமாக வுண்டாகிலும் தென்னிலங்கை செற்ற பிறகு [ராவணவதஸமநந்தரம்] மங்களா சாஸனம் செய்தாரில்லை யென்கிற குறைதீர இவர்கள் அவ்வபதானத்திற்குக் காப்பிடுகிறார்கள். இங்கு ஆசார்ய பரமான ஸ்வாபதேசார்த்தம் விசேஷமாகக் காணலாம். இராமன் *வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி* என்கிறபடியே ஸூர்ய வம்சத்திலவதரித்தான். ஆசார்யர் *தஸ்மை நமோ வகுள பூஷண பாஸ்கராய* என்றும், *கலயாமி கலித்வம்ஸம் கவிம் லோகதிவாகரம்* என்றும் *ஸ்ரீமாநாவிரபூத் பூமௌ ராமாநுஜதிவாகர:* என்றும் சொல்லுகிறபடியே ஸ்வயம் ஸூர்யராகவே யவதரித்து நம்மை யெல்லாம் ஸூர்யவம்ச்யராக்கினர். இராமன் பித்ருவாக்ய பரிபாலனார்த்தமாக அரண்யத்திற்கு எழுந்தருளினது போல ஆசார்யரும் ஸர்வலோக பிதாவான எம்பெருமானுடைய நியமனத்தினால் *ஸம்ஸார மருகாந்தாரே* என்னும் படியான இவ்வரண்யத்திற்கெழுந்தருளினர். இராமன் விராத கபந்தவாலி ப்ரப்ருதிகளை நிரஸித்து குஹ சபரீ மாருதி ஸுக்ரீவ விபீஷணாதிகளை வாழ்வித்ததுபோல ஆசார்யரும் சங்கர பாக்கர யாதவ பாட்ட ப்ரபாகராதி மதங்களை நிரஸித்து, சதுமறைகளையும் சதுமறை வல்லவர்களையும் வாழ்வித்தார். இராமன் ஜ்ஞான வைராக்ய நிதியான திருவடியை [அனுமானை]த் துணைகொண்டு ஸ்வகார்யங்களை நிறைவேற்றினதுபோல ஆசார்ய சிகாமணியும் ஜ்ஞான பக்தி விரக்திஸம்பந்நர்களான ஆழ்வானண்டான் எம்பார் பிள்ளான் போல்வாரைத் துணைகொண்டு தம்முடைய உத்தேச்யங்களை யெல்லாம் நிறைவேற்றிக் கொண்டார், இராமன் *ஸாகரம் சோஷயிஷ்யாமி* என்று கடலை வற்றச் செய்வதாக வாக்கினால் மட்டும்

மொழிந்தான். ஆசார்யர் *பிறவி யென்னுங் கடலும் வற்றிப் பெரும்பதமாகின்ற தால்* என்னும்படி ஸம்ஸார ஸாகரத்தை சோஷிக்கவே செய்தார். இராமன் *ந நமேயம் து கஸ்யசித்* என்று வணங்காமுடி மன்னனுயிருந்த இராவணனை யொழித் ததுபோல ஆசார்யர் அஹங்கார மமகார பரிபூர்ணர்களை யெல்லாம் செருக்கடக்கினர். இராமன் மீண்டும் அயோத்தி சென்று சேர்ந்ததுபோல, ஆசார்யரும் *தேவாநாம் பூர யோத்யா* என்கிற ஆரண்யக ச்ருதியை யநுஸரித்து *யாயோத்யேதி அபராஜிதேதி விதிதா நாகம் பரேண ஸ்திதா* என்று பட்டரருளிச்செய்தபடியே அயோத்யையான திருநாட்டிலே சென்று சேர்ந்திருப்பர்.

[பொன்றச் சகடமுதைத்தாய் புகழ்போற்றி.] *தளர்ந்தும் முறிந்தும் சகடவசுர ருடல் வேறுப்பிளந்து வீயத் திருக்காலாண்ட பெருமானே! * [திருவாய்மொழி 6—9—4.] என்கிறபடியே, காவலாகவைத்த சகடந்தானே அஸுராவேசத்தாலே கண்ணனுக்குத் தீங்கு விளைக்கப்புக, கண்ணபிரான் பாலுக்கழுகிற பாவனையில் நிமிர்த்தப்பட்ட தனது திருவடிகளினால் உதைத்துத்தள்ளி முடித்தபடியை யநுஸந் தித்து, அப்போது மங்களாசாஸனம் செய்தாரில்லை யென்கிற குறைதீர இப்போது மங்களாசாஸனம் செய்கிறார்கள். பொன்ற—பொடி பொடியாம்படி என்றபடி. *புகழ் போற்றி யென்னப்படுகிற புகழ்யாதெனில்; பெற்ற தாயுங்கூட உதவப் பெறாத்ஸமயத் தில் தன்வலியையே கொண்டு தன்னை ரக்ஷித்துக் கொண்டதனாலுண்டான புகழ். அஸ்மதாதிகளுக்கு ரக்ஷகமான திருவடிதானே அவன் தனக்கும் ரக்ஷகமாயிற் றென்று பரவின புகழ். ஸ்வாபதேசத்தில் ஆசாரியரும் சகட பங்கம் செய்தவரென் பது நிரூபிக்கப்படுகிறது. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்தில் கொண்டு சேர்ப்பது சகடம். இவ்வுடலில் நின்றும் உத்க்ரமணம் பெற்றவர்களை ஒவ்வோரிடத்திலே கொண்டு சேர்க்கிற மார்க்கத்தைச் சகடமாகக்கொள்க; *சுக்லக்ருஷ்ணே கதீ ஹ்யேதே ஜகதச் சாச்வதே மதே, ஏகயா யாத்யநாவ்ருத்திம் அந்யயா ஆவர்த்ததே புந: * என்றான் கீதாசார்யன், எந்த வழியிற் சென்றால் மீட்சியில்லையோ அந்தவழி சுக்லகதீ யெனப்படும். மீட்சிக்கு உறுப்பான வழியானது க்ருஷ்ணகதி யெனப்படும். கண்ணன் உதைத்தொழித்தது கள்ளச்சகடமாகையாலே அதற்குப் பொருத்தமாகவே இங்குப் பொருள் கொள்ளவேணும். கர்ப்பகதியாம்யகதி தூமகதிகளைத் தவிர்த்து அர்ச்சிராதி கதியிலே சேர்விக்கு மாசார்யனுடைய புகழைப் போற்றுகிறபடி.

[கன்றுகுணிலா வெறிந்தாய்!] வத்ஸாஸுரனைக் கொண்டு கபித்தாஸுரனைக் கண்ணபிரான் முடித்ததானது முள்ளைக்கொண்டே முள்ளைக் களைவது போன்றது. ஆசாரியர்கள் ப்ரதிபக்ஷிபக்ஷப்ரதி க்ஷேபம் பண்ணும்போது அவர்களின் பரஸ்பரவ் யாஹத பாஷணங்களைக் கொண்டே அவ்வோ மதநிரஸனங்கள் செய்தருளும்படிக்கு இது உவமையாகும். [குன்றுகுடையா வெடுத்தாய்] கோவர்த்தன மென்னும் கொற்றக் குடையைக் கண்ணபிரான் தாங்கிநின்ற சரிதையில் மிகச் சிறந்ததொரு மஹாகுணம் விளங்குகின்றது. இந்திரன் மேகங்களை ஏவி ஏழுநாள் விடாமழை பெய்வித்துத் திரு வாய்ப்பாடிக்குப் பெருந்தீங்கிழைத்த காலத்தில் இந்த அஸஹ்யாப சாரத்திற்காகக் கண்ணபிரான் அவனைத் தலையறுத்துப் பொகடலாமாயிருந்தும் 'இவனுணவைக் கொள்ளைகொண்ட நாம் உயிரையும் கொள்ளை கொள்ளலாகாது; கை சலித்தவாறே தானே ஓய்ந்து நிற்கிறான்' என்று திருவுள்ளம்பற்றி ஸ்வக்ருத்யமான ரக்ஷணத்தை மட்டும் செய்து போந்ததுண்டே, அதுதான் மஹத்தான குணம்; இதுபோலவே ஆசார்ய சிகாமணிகளும் தங்களுக்குப் பிறர் எவ்வளவு தீங்கிழைத்தாலும் அதனைப் பொருள் படுத்தாமலும். அதற்காக அவர்களை நிக்ரஹியாமலும் "நான் பெற்றபேறு நாலூரான்பெறவேணும்" என்று ஆசாஸித்த கூரத்தாழ்வானைப் போலே அநுக் ரஹமே பணியாக நிற்பர்களென்பது இங்கு உள்ளுறை பொருள். [வென்றுபகை கெடுக்கும் நின்கையில்வேல் போற்றி.] இங்கு வேலென்றது திருவாழியாழ்வானை; [கொல்வது கோல் ; வெல்வது வேல்] திருவாழியைச் சொன்னது திருச்சங்குக்கு

உபலக்ஷணம். ஆசாரியர் திருவாழி திருச்சங்குகளினுல் திருவிலச்சினை செய்து நம் போல்வாருடைய சேஷத்வவிரோதிகளை யெல்லாம் நிரஸித்து * தீயிற்பொலிகின்ற செஞ்சுடராழி திகழ்திருச் சக்கரத்தின் கோயிற் பொறியாலே யொற்றுண்டு நின்று குடிகுடியாட் செய்கின்றேம்* என்று நம்வாயாற் சொல்லும்படி செய்துவைப்பர். இனி, வேல் என்பதற்குத் திருவாழியாழ்வானென்று பொருள் கொள்ளாமல் *கூர் வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் * என்ற விடத்திற்போல இடைச்சாதிக்குரிய ஒருகோல் என்று பொருள் கொள்ளுமளவில், ஆசார்யபரமான பொருளில்* சாரித் ரோத்தாரதண்டம்....வஜ்ரதண்டம் த்ரிதண்டம்* என்கிற தாடீபஞ்சக ச்லோகத்தை யநுஸந்தித்துக் கொள்வது. .... ... .... .... 24

**25.** ஒருத்தி மகனுய்ப் பிறந்து * ஓரிரவில்
ஒருத்தி மகனு யொளித்து வளர *
தரிக்கிலா ஞகித்தான் தீங்கு நினைந்த *
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில் *
நெருப்பென்ன நின்ற நெடுமாலே * உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில் *
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி *
வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

கீழ்ப்பாட்டில் செய்த மங்களாசாஸனத்தைக் கேட்ட கண்ணபிரான் ஆய்ச்சி காள்! என்ன காரியமாக நீங்கள் என்னிடம் வந்தீர்கள்?' என்று நான் கேட்டதற்கு, படுக்கையறையிலிருந்து சீரியசிங்காசனத்திலேவந்து வீற்றிருந்தால் நாங்கள் வந்த காரியத்தை விண்ணப்பம் செய்கிறேம் என்று சொன்னீர்கள்; அப்படியே நான் சிங்காசனத்திலே வந்து அமர்ந்தேன்; இப்போதும் வந்தகாரியத்தைச் சொல்லாமல், அடிபோற்றி, திறல்போற்றி, புகழ்போற்றி, குணம்போற்றி என்கிறீர்கள். அத் தோடும் நிற்காமல் *பறை கொள்வான் இன்று யாம்வந்தோம்* என்கிறீர்கள். நீங்கள் நிஷ்ப்ரயோஜனமாக வந்தவர்களல்லீர்; ஏதோ வொன்று கொள்வதற்காக வந்தீர்களென்று ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது; அதைச்சொல்லுங்கள் என்றான்; மேலும், சிறுப்பெண்களான நீங்கள் இந்தக்குளிரிலே யெழுந்து இவ்விருளிலே எப்படிவந்தீர்கள்? அதையும் சொல்லுங்கள் என்றான். அதற்கு விடைதரும் பாசுர மிது. உன்னிடத்திலே ஒன்றை வேண்டிக் கொண்டுபோக வந்தோமல்லோம்; உன்னையே பரம புருஷார்த்தமாக வேண்டிவந்தோம் என்று [உன்னையருத்தித்து வந்தோமென்பதனுல்] தெரிவிக்கிறார்கள். உன் திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடிக்கொண்டே வந்தோமாகையால் ஒரு வருத்தமுமின்றியே பரமானந்தமாக வந்தோமென்றும் தெரிவிக்கிறார்கள். "தேவகி மகனுய்ப் பிறந்து யசோதைமகனுய் வளர" என்னுமல் 'ஒருத்தி மகனுய்ப் பிறந்து ஒருத்தி மகனுய்வளர' என்றது தேவகிக் கும் யசோதைக்குமுள்ள ஒப்புயர்வற்ற சிறப்பைக்காட்டும். மிகச்சிறந்த பெரியார் களைப் பெயரிட்டுச் சொல்லலாகாதென்று ஒரு ஸம்பிரதாயமுண்டே; அந்நீதியிலே சொல்லிற்று. பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் *ஆகண்டவாரிபரமந்தரமேகதேச்யம் பீதாம்பரம் கமலலோசநபஞ்சஹேதி; ப்ரஹ்ம ஸ்தநந்தய மயாசத தேவகீ த்வாம் ஸ்ரீரங்ககாந்த! ஸுதகாம்யதி கா பரைவம்* என்கிற ச்லோகத்தினுல் தேவகிப் பிராட் டியை ஒப்பற்றவளென்றார்; பரப்ரஹ்மமே தனக்குப் பிள்ளையாக வந்து பிறக்கவேணு மென்று கோலினவளன்றே தேவகி; இவளுக்கு ஒப்புண்டோ? என்றார். ஆகவே இவளை ஒருத்தியென்றது. இப்படிப்பட்ட தேவகியும் *திருவிலேனென்றும் பெற்றி லேன் எல்லாம் தெய்வநங்கை யசோதை பெற்றுளே* என்று கூறநின்ற மஹாபாக்ய வதி யசோதைப் பிராட்டியாகையாலே அவளையும் ஒருத்தியென்றது. இரண்டிடத்தி

லும் அத்விதீயையென்பது பொருள். [ஒளித்துவளர.] கம்ஸனிடத்தில் அச்சத்தாலே ஒளித்து வளர்ந்ததாக வெளியில் ப்ரவாதமத்தனே; கூரத்தாழ்வான் அதிமாநுஷஸ் தவத்திலே * ஸா பூதநா சகடம் அர்ஜுநயோச்ச யுக்மம் பால்யோசி தாங்யபர சேஷ்டிதவிஷ் புலிங்கே யஸ்யாலபந்த சலபத்வமஹோ நிகூடஸ் ஸ த்வம் வ்ரஜே வவ்ருதி ஷேகில கம்ஸபீத்யா * என்றருளிச் செய்தார். தொட்டிற் பிராயத்திலே பூதநாசகடயமளார்ஜுந பங்கங்களை அவலீலையாகச் செய்து முடித்த பெருமிடுக்கன் கம்ஸனிடத்திலே அஞ்சி வளர்ந்தானென்னப் போமோ? ஆகவே ஒளித்தென்றது— தன்னுடைய பெருமைகளை யெல்லாம் மறைத்துக்கொண்டு என்றபடி.

இவ்வளவுக்கு ஸ்வாபதேசார்த்தம் கேண்மின்;—கண்ணன் தேவகி மகனாய்ப் பிறந்து யசோதைமகனாய் வளர்ந்ததுபோல: ஆசாரியர் காயத்திரியிற் பிறந்து அஷ்டாக்ஷரியில் வளர்வர். அன்றியே, "திருமந்த்ரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து" என்கிற முன்னோர் முதுமொழியின்படியுங் கொள்ளலாம். "ஓரிரவில் ஒளித்துவளர" என்ற சொற்போக்கில் — யாதவப்ரகாசரோடு கங்காயாத்திரை சென்ற ஸ்ரீ ராமாநுஜர் யாத்திரையின் கள்ளமான மருமத்தை வழியிலே யுணர்ந்து கொண்டு விந்தியாடவியிலிருந்து தம்மையொளித்து ஓரிரவில் ஸத்யவ்ரதக்ஷேத்ரம் வந்து சேர்ந்தவரலாறு ஸூசிதமாகின்றது. [தரிக்கிலானாகித்தான் தீங்குநினைந்த] ஸ்ரீ ராமாநுஜர் யாதவப்ரகாசரிடம் வேதாந்தச்ரவணம் பண்ணும்போது இவர் மஹா மேதாவியாயிருப்பதைக்கண்ட அவர் ஸஹித்திருக்கமாட்டாதவராய் இவரைக் கங்கையிலே தள்ளி மாய்க்கவேணுமென்று தீங்கு நினைந்தார். [பிழைப்பித்து] இதற்கு இரண்டுபொருள்—(1) தப்பிப் போம்படி செய்து; (2) உஜ்ஜீவிக்கச் செய்து. ஸ்ரீ ராமாநுஜர் விஷயத்திலே இவ்விரண்டு பொருளும் ஸங்கதமாகிறது; (1) தம்மை மாய்க்கவேணுமென்று கொண்டிருந்த யாதவப்ரகாசர் கருத்தைத் தப்பிப்போம்படி செய்தாரென்பது ப்ரஸித்தம். (2) * ஸ்வபலாதுத்த்ருத யாதவப்ரகாசః * என்கிற யதிராஜஸப்ததி ஸூக்தியின்படியே அந்த யாதவப்ரகாசரையும் திருவடிகளிலே சேர்த்துக்கொண்டு பிழைப்பித்தார்—உஜ்ஜீவிப்பித்தார் என்பதும் ப்ரஸித்தம். [நெருப்பென்ன நின்ற நெடுமாலே] * உல்லங்க்ய ஸிந்தோஸ் ஸலிலம் ஸலீலம் யச் சோகவஹ்நிம் ஜநகாத்மஜாயாః, ஆதாய தேநைவ ததாஹ லங்காம் * என்று மாருதியின் ப்ரபாவ கீர்த்தனமான ச்லோகத்தில் பிராட்டியின் திருவயிற்றிலிருந்த சோகாக்நியைப் பெயர்த்துக்கொண்டுபோய் அந்த நெருப்பினாலேயே திருவடியானவர் இலங்கையைக் கொளுத்தினதாகச் சொல்லிற்று. அவ்வண்ணமாகவே, திருவாய்ப்பாடியில் ஆயர்களுடையவும் ஆய்ச்சிகளுடையவும் வயிற்றிலிருந்த பயாக்நியைக் கொண்டுபோய்க் கண்ணபிரான் கம்ஸனுடைய வயிற்றில் சேர்த்தானாயிற்று. கண்ணன்தானே கம்ஸன் வயிற்றில் நெருப்பாய் நின்றதாகச் சொல்லுவதன் கருத்து இதுவே. கம்ஸனுடைய ஸ்தானத்திலே கலிபுருஷனைக் கொள்வது. கம்ஸன் கண்ணபிரானுடைய திருவவதாரத்திற்கு வெகுகாலம் முந்தியே அசரீரிவாக்கைக் கேட்டு ம்ருதப்ராயனானான். அப்படியே கலிபுருஷனும் எம்பெருமானார் திருவவதரிப்பதற்கு வெகுகாலம் முந்தியே * கலியுங்கெடுங்கண்டு கொண்மின் * என்கிற நம்மாழ்வார் திருவாக்கைக் கேட்டு ம்ருதப்ராயனானான்; கம்ஸன் கண்ணன் அவதரித்தபின்பு மரணமடைந்ததுபோல, கலிபுருஷனும் * இராமாநுசனித்தலத்துதித்து—இறந்தது வெங்கலி * என்று அமுதனார் அருளிச்செய்தபடியே ஸ்வாமியவதரித்தபின் மாண்டொழிந்தான்.

[நெருப்பென்ன நின்ற நெடுமாலே] * பாஷண்ட த்ருமஷண்ட தாவதஹந: * என்றும் * பாஷண்ட ஸாகர மஹாபடபா முகாக்நி: * என்றும் ஸ்ரீராமாநுஜரும் நெருப்பாகச் சொல்லப்பட்டிருப்பது (தாடீபஞ்சகே) காண்க. [நெடுமாலே!] * மாலாய்ப் பிறந்த நம்பியாய் மாலே செய்யும் மணாளனை கண்ணபிரான் அடியார் பக்கல் வியாமோஹமே வடிவெடுத்திருப்பன்; ஸ்வாமி யெம்பெருமானாரும் * பொன்

னரங்கமென்னில் மயலே பெருகுமிராமானுசன் * என்றும் * யோ நித்யம் அச்யுத பதாம்புஜயுக்மருக்ம வ்யாமோஹத:* என்றும் சொல்லுகிறபடியே பகவத் விஷயத்தில் வியாமோஹமே வடிவெடுத்திருப்பர். [உன்னை யருத்தித்து வந்தோம்.] அருத்தித்து என்றது, அர்த்தித்து - ப்ரார்த்தித்து என்றபடி. * கையில் கனியென்னக் கண்ணனைக் காட்டித்தரிலும், உன்றன் மெய்யில் பிறங்கிய சீரன்றி வேண்டிலன்யான் * என்கிற அத்யவஸாயத்தோடே வந்திருக்கிறோமென்றபடி. [திருந்தக்க செல்வம்.] * துல்ய சீலவயோ வ்ருத்தாம் துல்யாபிஜந லக்ஷணம், ராகவோர் ஹதி வைதேஹீம் தஞ்சேய மஸிதேக்ஷணு * என்று திருவடி சொன்னபடியே பிராட்டிக்குத் தக்க பெருமாளும், பெருமாளுக்குத் தக்க பிராட்டியுமாக அமைந்த தகுதியான செல்வத்தைப் பாடிக்கொண்டே வந்தோமென்பது அந்யாப தேசத்தில். ஸ்வாபதேசத்திலோ வென்னில்; பெரிய பிராட்டியாரோடொத்த செல்வ முடையவர் ஸ்வாமி யெம்பெருமானுர். நம்போல்வார்க்குப் புருஷகார க்ருத்யம் பண்ணி எம்பெருமானடி சேர்ப்பிக்கையே பிராட்டிக்குச் செல்வம். இதுவேதான் எம்பெருமானுர்க்கும் செல்வமாகும். அவருடைய திருவடிஸம்பந்த மில்லாதார்க்கு மோக்ஷமில்லை யென்பது ஸம்ப்ரதாயம். [சேவகமும் யாம்பாடி.] இரட்டுற மொழிதலால் சேவகமென்கிற சொல் பரத்வ ஸௌலப்யங்களைச் சொல்லும். தமிழில் சேவகமென்று வீரத்திற்குப் பெயராதலால் பரத்வம் தெரிவிக்கப்பட்டதாகும்; வடமொழிவிகார மென்று கொண்டால் ஸேவகவ்ருத்தி செய்வதென்று பொருள்பட்டு ஸௌலப்யம் தெரிவிக்கப்பட்டதாகும்.

[வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து.] வருத்தம் தீரவேணு மென்றாலே போதுமே; தனிப்பட மகிழ்ச்சியும் சொல்லுவானென்? என்னில்; பிறருடைய மதத்தில் 'ஆத்யந்திகதுக்கத்வம்ஸ ஏவ மோக்ஷ:' என்று வருத்தங்கள் தீருகைமட்டுமே மோக்ஷமாகச் சொல்லப்படுகிறது. எம்பெருமானர் ஸித்தாந்தத்தில் அங்ஙனன்றிக்கே, துக்கத்வம்ஸம் தவிர * உற்றேனுகந்துபணிசெய்து உன்பாதம் பெற்றேன் * என்னுமாழ்வார் ஸ்ரீ ஸூக்தியின்படியே கைங்கரியத்தினுலுண்டாகும் ஆனந்தாநுபவமும் சேர்ந்துதான் மோக்ஷ மெனப்படுகிறது. இதுவும் இங்கு ஸூசிதமாகிற தென்க. ... 25

**26.** **மாலே மணிவண்ணு மார்கழி நீராடுவான் *
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல் *
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன *
பாலன்ன வண்ணத்துன் பாஞ்சசன்னியமே *
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே *
சாலப் பெரும்பறையே பல்லாண்டிசைப்பாரே *
கோல விளக்கே கொடியே விதானமே *
ஆலி னிலையா யருளேலோ ரெம்பாவாய்.**

கீழ் ஒருத்திமகனுய் பாசுரத்தைக் கேட்ட கண்ணபிரான் கோபிகளை நோக்கிச் சில வார்த்தைகள் கூறினன்; ஆயர் சிறுமியர்காள்! இப்போது நீங்கள் சொன்ன வார்த்தையிலிருந்து என் மனத்தில் தோன்றியவற்றைச் சொல்லுகின்றேன் கேளுங்கள். வியாஸர் சாரீர கமீமாம்ஸையென்று ஒரு பெரிய சாஸ்த்ரமியற்றினர்; அதுதான் ப்ரஹ்மஸூத்ர மென்பது. அதில் ஒருஸூத்ரத்தில்கூட நான் பிறக்கிறேனென்பதைப் பேசினரல்லர். நான் காரண பூதன் என்பதையே இரண்டு அத்யாயங்களினுல் பேசினரேயல்லது, நான் எவ்வளவோ ஆசைப்பட்டு இந்நிலத்தில் வந்து பிறக்கிறேனே. அதை ஓரிடத்திலும் பேசிற்றிலர். புராண மெழுதின மஹர்ஷியும் * ததோகில ஜகத்பத்ம போதாய அச்யுதபாநுநா, தேவகீ பூர்வஸந்த்யாயாம் ஆவிர்ப்பூதம் மஹாத்மநா * என்று ஏதோ சொல்லிப்போனுர். * நைஷ கர்ப்பத்வமாபேதே ந யோந்யாமவஸத் ப்ரபு: * என்று என்மானம் புண்படும் படியும் சொல்லி

வைத்தார்கள். இப்படிப்பட்ட என்குறைதீர, நம்மாழ்வாரொருவரே பாசுரம் பேசத் தொடங்கும் போதே * உபிரளிப்பான் எங்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா * என்று என் செவிகுளிர என்னுடைய பிறப்பைப்பற்றிப் பேசினர். அவருடைய குடிமக்களான நீங்கள் இதுவரையில் என் பிறப்பைப்பற்றிப் பேசவில்லையே யென்று மிகவும் குறையுற்றிருந்தேன். * நந்த கோபன் குமரன் * என்றும் * வள்ளல் பெரும் பசுக்களாற்றப் படைத்தான் மகனே * என்றும் பேசியிருந்தீர்களே யொழிய * ஜந்ம கர்மச மே திவ்யம் * என்று என்னெஞ்சுமுளுக்கும்படியான என் பிறப்பை நீங்கள் வாய்விட்டுப் பேசினது 'ஒருத்தி மகனாய்ப் பிறந்து' என்ற இப்போதுதானே ; இதனால் எனக்குண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை ; இதற்குமேலே ஒளித்துவளர என்றீர்கள். ஏதோ நான் கம்ஸபயத்தினால் ஒளித்து வளருவதாக நினைக்கிறீர்கள் போலும். இது மிகத் தவறான நினைவு. என் தாயான யசோதைக்கு இப்படி யொரு மருள் உண்டு ; அதனால் அவள் அடிக்கடி * பொருதிறல் கஞ்சன் கடியன், காப்பாருமில்லை கடல்வண்ணாவுன்னைத் தனியேபோய் எங்கும் திரிதி * என்றும் * அஞ்சுவன் நீயங்கு நிற்க ஆழியங்கையனே வாராய் * என்றும் சொல்லுவதுண்டு. நீங்களும் அப்படி நினைப்பது பிசகு. * கஞ்சன் வலை வைத்தவன்று காரிருளெல்லில் பிழைத்து, நெஞ்சு துக்கம் செய்யப் போந்தாய் நின்றவிக் கன்னியரோமை * என்று நீங்களே சொல்லுவதுண்டே ; உங்களோடு போது போக்குவதற்காகவே நான் இங்கு வந்தவனே யல்லது ஒளித்து வளர வந்தேனல்லேன். இதற்கு மேல் * தரிக்கிலானாகித்தான் தீங்கு நினைந்த கருத்தைப் பிழைப்பித்து * என்றீர்கள் ; இது மிகச் சிறந்த வார்த்தை ; அவன் பலபல தீங்குகளைச் செய்துகொண்டிருக்கச் செய்தேயும் நீங்கள் "தீங்கு செய்த கஞ்சன்" என்னாமல் "தீங்கு நினைந்த கஞ்சன்" என்றீர்களே, இது மருமமறிந்து சொன்ன வார்த்தையன்றோ. என்னுடைய நிக்ரஹாநுக்ரஹங்களை நான் எப்படி நடத்தி வருகிறேனென்றால், ஒருவன் நல்லகாரியத்தைச் செய்தால்தான் அவனை அநுக்ரஹிப்பேனென்பதில்லை ; நல்லகாரியம் செய்யவேணுமென்று நெஞ்சால் நினைக்காமல் வாயால் சொன்னாலுங்கூட அவ்வளவுக்கே அநுக்ரஹம் செய்துவிடுவேன். இதுபோல, தீங்கு செய்பவர்கள் வாயினால் அபராதப்பட்டாலும் கருமத்தினால் அபராதப்பட்டாலும் அவ்வளவே கொண்டு நான் நிக்ரஹிப்பதில்லை ; இந்தத் தீங்கு இவர்களுடைய ஹிருதயத்திலும் நினைக்கப்பட்டதுண்டாவென்று வெகுதூரம் ஆராய்ந்து பார்த்து, கருத்திலுமுண்டென்று தெரிந்த பிறகே நிக்ரஹிப்பேன். இத்தத்துவத்தை நீங்கள் தெரிந்துகொண்டு "தீங்கு நினைந்த கருத்தை" என்று சொன்னீர்களே இது மிக விலையுயர்ந்த வார்த்தை. இதற்குமேல் "உன்னையருத்தித்து வந்தோம்" என்றீர்களே அதுவும் இதுவரை நான் கேட்டறியாத அரிய பெரிய வார்த்தையே ; அவரவர்கள் என்னிடத்தில் வேறொன்றை அர்த்திக்க வருகிறார்களே யொழிய என்னையே அர்த்திக்க வருவாரில்லை. இப்படிச் சொன்னவுங்களை உத்தமாதிகாரிகளாக ப்ரதிபத்தி பண்ணுகிறேன். உங்களுக்கு நான் ஸர்வஸ்வதானம் செய்யக் கடமைப்பட்டேயிருக்கிறேன் ; ஆனாலும் நீங்கள் "பறை தருதியாகில்" என்று மற்றொரு வார்த்தையும் சொன்னீர்கள் ; இதுதான் இன்னதென்று எனக்கு விளங்கவில்லை. இதை நீங்கள் இன்று விசதமாக எனக்குச் சொல்லியே யாகவேணும்—என்றான் கண்ணபிரான். இதற்கு விடைகூறுவது இப்பாட்டு.

மார்கழி நீராட்டமென்று ஒரு விரதமனுட்டிப்பதுண்டு ; இது சிஷ்டாசாரஸித்தம். இதையே நாங்கள் இப்போது மேற்கொண்டிருக்கின்றோம். இதற்கு வேண்டிய உபகரணங்களை விஜ்ஞாபிக்கிறோம் ; கேட்டு உவந்து கொடுத்தருளவேணுமென்கிறார்கள். [மாலே.] * மாலெனக் கருமை பெருமை மையலுமாம் * என்பது நிகண்டு. கரியவன், பெரியவன், வியாமோஹங்கொண்டவன் என முப்பொருள்களை யுடையது மாலென்னுஞ் சொல். கண்ணனென்னுங் கருந்தெய்வமே!, யாங்கடவுளென்றிருக்கு

மெவ்வுலகிற் கடவுளர்க்கு மாங்கடவுளானவனே !, அடியார் பக்கலில் வியாமோஹங் கொண்டவனே ! என்று விளித்தபடி. [மணிவண்ணு !] மணியாவது ரத்னம்; அது எவ்வளவு விலேயுயர்ந்ததாயினும் முன்தானேயிலே முடிந்தாளலாம்படி யிருக்கும்; அதுபோல் எம்பெருமான் எவ்வளவு பராத்பரனுயிருந்தாலும் அடியார்கட்குக் கையாளாயிருப்பன். ரத்னம் ஸாமான்யமாக எல்லாராலும் பெறமுடியாது; பாக்ய வான்களுக்கே அது கிடைக்கும். எம்பெருமானுமப்படியே. ரத்னத்தை வைத்துக் கொண்டிருப்பவனுக்குக் கண்ணுறக்கம் வாராது; பகவானேப் பெற்றவர்களும் * உண்டோ கண்கள் துஞ்சுதலே * என்னும்படி உறக்கமற்றிருப்பர்கள். பதினுயிரம் ரூபாய் விலேயுள்ள வொரு ரத்னமானது கடலிலே வலேவீசும் செம்படவன் கையிலே கிடைத்தால் அது ஒரு வணிகன் கையிலே அற்பவிலேக்கு மாறும்; அதை வணிகன் அரசனுக்கு உயர்ந்த விலேக்கே விற்றிடுவன். அதை வாங்கின அரசன் செம்பட வனேப்போலே அற்பவிலேக்கும் விற்காமல் வணிகனேப் போலே உயர்ந்த விலேக்கும் விற்காமல் ஸ்வயம் போக்யமாக அணிந்து கொள்வன். பகவான் விஷயத்திலும் இங்ஙனே காணலாம்; பகவானிடத்தே சிலர் அற்ப பலன்களே விரும்புவர்; சிலர் மோக்ஷரூபமான உயர்ந்த பலனே விரும்புவர்; சிலர் * எனக்குத் தேனே பாலே கன்னலேயமுதே* என்று சொல்லிப் பரமபோக்யமாக அநுபவித்துக்கொண்டிருப்பர். இங்ஙனே மற்றும் பல உவமைப் பொருத்தங்களுங் காணலாம்.

இங்ஙனே சொன்ன ஆய்ச்சிகளே நோக்கிக் கண்ணபிரான் 'என்னேத் துதிப் பது இருக்கட்டும்; செய்தியைச் சொல்லுங்கள்' என்ன; மார்கழி நீராடுவான் என்னத் தொடங்கினர். இது கேட்டவுடனே கண்ணபிரான் 'இதென்ன ? அபூர்வ, ச்ரவண மாயிருக்கிறதே; நான் கேட்டதேயில்லேயே; ஒரு சாஸ்திரத்திலும் பார்த்ததுமில்லேயே' என்ருன்; அதற்கு ஆய்ச்சிகள் 'மேலேயார் செய்வனகள்' என்ருர்கள். பிரானே! "தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம்" என்றதை மறந்தாயோ? நீதானே கீதையிலே * யத் யதாசரதி ச்ரேஷ்டஸ் தத் ததேவேதரோஜநః* என்றதையும் மறந்தாயோ? சாஸ்த் ரங்களிற் காட்டிலும் சிஷ்டாசாரம் பரம ப்ரமாணமென்பதைப் பேதையர்களான நாங்கள் சொல்லியோ நிறைஞானத்தொரு மூர்த்தியான நீயறிய வேண்டும்? என்ருர்கள்.

அதற்குக் கண்ணபிரான், நல்லது; இதற்காக என்ன வேண்டும்? என்ன; ஞாலத்தையெல்லாம் நடுங்க முரல்வன வென்று தொடங்கிச் சங்கு, பறை, பல்லாண் டிசைப்பார், கோலவிளக்கு, கொடி, விதானம் ஆகிய இவை வேண்டுமென்கிருர்கள். கீழே சயனத்திலிருந்து சீரிய சிங்காசனத்தளவும் புறப்பாடு காணவேண்டினுர்கள். இப்போது திருவீதிப்புறப்பாடு காணவேண்டி இங்ஙனம் பிரார்த்திக்கின்றனர். புறப் பாட்டுக்குப் பூர்வாங்கமாகத் திருச்சங்கொலி [திருச்சின்னவொலி] செய்யவேண்டும். புறப்பட்டருளும்போது உபயோகப்படும் பறை; புறப்பட்டவுடனே * மெய்ந்நின்று கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே * என்று சொல்லிப் பல்லாண் டிசைப்பாரான அத்யாபகர்கள் வேண்டும். அவர்களின் கோஷ்டிக்கு வெளிச்சம் தருவதற்குக் கோலவிளக்கு [கரதீபிகை] வேண்டும். பக்தர்கள் வெகுதூரத்தி லிருந்தும் கண்டு களிப்பதற்காக நிசான் சுருட்டிகள் முன்னே போகவேண்டும். [கொடியென்பதனுல் இவையேவிவக்ஷிதம்.] பனித்தலே வீழாதபடி காப்பதற்கு விதானம் [மேற்கட்டி] வேண்டும்.

இவ்வளவுங் கேட்ட கண்ணபிரான் "கோபிகளே! உங்கள் சாதுரியமே சாதுரியம்; உன்னே யருத்தித்து வந்தோமென்று என்னேயே கோரி வந்ததாகச் சொன்ன நீங்கள் இத்தனே பொருள்கள் வேண்டினீர்களே; இவையெல்லாம் என்னுல் ஸம்பாதித்துக் கொடுக்க முடியுமோ?" அதற்கு விடையாக [ஆலினிலே யாய்! அருள்] என்கிருர்கள். மஞ்சாடு வரையேழுங் கடல்களேழும் வானகமும்

மண்ணகமும் மற்றுமெல்லாம் எஞ்சாமல் வயிற்றடக்கி ஆலின் மேலோரிளந் தளிரில் கண்வளர்ந்த அகடிதகடநாஸமர்த்தனை உனக்கும் அரியதுண்டோ? திருவுள்ளம்பற்றிக் கிருபை செய்தருளவேணுமென்று தலைக்கட்டினார்கள்.

இனி ஆசார்யபரமான அர்த்தம் கேளீர். மாலே!—சிஷ்யர்கள் மீது வியாமோஹமே வடிவெடுத்தவரே!, எம்பெருமானிற் காட்டிலும் பெரியவரே!. [மணிவண்ணா!] * ஆக்ராதம் பரிசும்பிதம் பரிமுஹுர் லீடம் புநச் சர்விதம் த்யக்தம் வா புவி நீரஸேந மநஸா....ஹே ஸத்ரத்ந!* என்றார் ஒரு மஹாகவி. ஒரு குரங்கின் கையில் ரத்னமொன்று கிடைத்ததாம்; அது அதனை இன்னதென்று தெரிந்து கொள்ள மாட்டாமல் முதலில் மோர்ந்து பார்த்ததாம்; பிறகு முத்தமிட்டுப் பார்த்ததாம்; அதன் பிறகு நக்கிப் பார்த்ததாம்; வாயினுள்ளே யிட்டுக் கடித்தும் பார்த்ததாம்; கடைசியாக இது நீரஸமென்று நிலத்திலே விட்டெறிந்ததாம். மஹாஜ்ஞானிகளின் பெருமை பாமரர்களுக்கு லவலேசமும் தெரியாதென்பதே இதன் உள்ளுறை பொருள். ஆக, மணிவண்ணா என்றது பாமரர்களுக்கு அகோசரமான ஞானவொளி மிக்கவரே! என்றபடி.

[மார்கழி நீராடுவான் மேலையார் செய்வனகள்.] மார்கழி நீராடுகையாவது மார்க்க சீர்ஷா வகாஹனமென்றும், அதாவது [மார்க்க-சீர்ஷ-அவகாஹனம்] பகவத் ப்ராப்தி மார்க்கங்களில் தலையான ஆசார்யபிமானத்திலே யொதுங்குகையென்றும் முன்னமே விவரிக்கப்பட்டுள்ளது. இது சிஷ்டாசாரஸித்தம் என்று இங்கே தெரிவிக்கப்படுகிறது. இவ்விடத்தில் "அந்தோ நந்தக்ரஹண வசக:" என்கிற ந்யாஸ திலக திவ்யஸூக்தியை நினைப்பது. "தத்தே ரங்கீ நிஜமபி பதம் தேசிகாதேச காங்க்ஷீ" என்கிற (அவ்விடத்து) ஸ்ரீஸூக்தியும் நினைக்கத்தகும். சங்கு முதலான வற்றை வேண்டுவதன் கருத்தாவது, பாவப்ரதாந நிர்தேசந்யாயத்தாலே தாங்களே சங்காகவும் பறையாகவும் பல்லாண்டிசைப்பாராகவும் விளக்காகவும் கொடியாகவும் விதானமாகவும் ஆகப்பெற வேணுமென்று ப்ரார்த்திக்கிறபடி. சங்குபோலே சுத்த ஸாத்விகர்களாகக் கடவோம்; உன்றன் கைத்தலத்தைவிட்டு அகலாதிருக்கக் கடவோம். [குருகுலவாஸமே கதியாக இருக்கக்கடவோமென்கை.] பறைபோலே ஆசார்யப்ராசார்ய பரமாசார்யர்களின் புகழ்களை எண்டிசையு மறிய வியம்பக் கடவோம். எம்பெருமானுக்குப் பெரியாழ்வார் போலே ஸதாசார்யரான தேவரீருக்கு நாங்கள் பல்லாண்டு பாடுமவர்களாக ஆகக்கடவோம். விளக்கு எப்படி ஸ்வஸ்மை ஸ்வயம் ப்ரகாசமாயும் பரப்ரகாசகமாயு மிருக்கின்றதோ அப்படி நாங்களும் ஸ்வபர ப்ரகாசகர்களாகக் கடவோம். கொடியாவது த்வஜம்; ஸ்ரீமல்லக்ஷ்மண யோகீந்த்ர ஸித்தாந்த விஜயத்வஜ மென்று விருதுபெறக்கடவோ மென்கை. *தாஸஸ்ஸகா வாஹநமாஸநம் த்வஜோ யஸ் தே விதாநம் வ்யஜநம் த்ரயீமய:* என்கிற ஸ்தோத்ர ரத்ந ஸூக்தியிலே பெரிய திருவடி விதானமாகச் சொல்லப்பட்டார்; *தொடுத்து மேல் விதானமாய பௌவநீரராவணை* என்கிற திருமழிசையாழ்வார் பாசுரத்திலே திருவனந்தாழ்வான் விதானமாகச் சொல்லப்படடார். ஆக, பெரிய திருவடியைப் போலவும் திருவனந்தாழ்வானைப் போலவும் ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசித அசேஷகைங்கர்ய துரந்தரர்களாகக் கடவோ மென்றதாயிற்று.

[ஆலினிலையாய்.] ஆலின் இலையாய்! என்று முன்னம் கொள்ளப்பட்டது; இப்போது 'ஆலின் நிலையாய்!' என்று கொள்ளக்கடவது. பனைமரத்தின் நிழலிற் போலன்றிக்கே ஆலமரத்தின் நிழலிலே அனேகர் ஒதுங்கி ஸுகிக்கலாமாகையாலே ஆலமரத்தின் நிலைமையை யுடையவரென்கிறது ஆசார்யரை.

இப்பாட்டில் "மேலையார் செய்வனகள் வேண்டுவன" என்பது உயிரான சொல் தொடையாயிருக்கும். "யத் யதாசரதி ச்ரேஷ்டஸ் தத்ததேவேதரோ ஜந:" என்று கீதாசார்யனும் "தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம்" என்று மஹர்ஷிகளும் கூறி வைத்

தார்கள். இந்த ப்ரமாணங்கள் சிஷ்டா சாரத்தின் சிறப்பைத் தெரிவிப்பன. இதை யடியொற்றியே ஆண்டாள் இப்பாட்டை யருளிச்செய்தாள். மேலே யுதாஹரித்த *யத்யதாசரதி யென்கிற ச்லோகம் கீதையில் (3—21.) உள்ளது. இந்த ச்லோகத் திற்குப் பொருள் ஸம்ஸ்க்ருதஜ்ஞர்களுக்கு அநாயாஸமாகத் தெரியக்கூடியது. * ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ் ததநுவர்த்ததே * என்ற உத்தரார்த்தத்திற்கு பாஷ்யமிட்ட ஆதிசங்கராசார்ய ஸ்வாமிகள் "ஸ:-ச்ரேஷ்ட:- யத் ப்ரமாணம் குருதே— லௌகிகம் வைதிகம் வா; லோக: தத் அநுவர்த்ததே-ததேவ ப்ரமாணீகரோ தீத்யர்த்த:" என்று உரைத்தார், ச்ரேஷ்டராயிருப்பார் யாதொன்றை ப்ரமாணமாகக் கொள்ளுகிறுர்களோ; அதுதன்னேயே லோகமும் ப்ரமாணமாகக் கொள்ளுகிறது என்பதாகப் பொருள் காட்டப்பட்டது. மத்வாசார்யரான ஆனந்த தீர்த்த ஸ்வாமி களும் இவ்வண்ணமாகவே பொருளுரைத்தார். ஆக இவற்றுல் 'யத் ப்ரமாணம்' என்ற விடத்தில் பதச்சேதம் இவர்களுக்கு விவக்ஷிதமென்று தேறிற்று. நம் பாஷ்ய காரர் இங்கு பதச்சேதம் திருவுள்ளம் பற்றுமல் (யத்ப்ரமாணம்) என்று, பஹுவ்ரீஹி ஸமாஸங் கொண்ட ஒரே பதமாகத் திருவுள்ளம்பற்றி பாஷ்யமிட்டருளி யுள்ளார். பூர்வார்த்தத்தில் 'ச்ரேஷ்ட: யத்யத் ஆசரதி' என்றதற்கு—ச்ரேஷ்டராயிருப்பார் எந்தெந்த கருமத்தை யநுஷ்டிக்கிறுரோ, என்பதாகப் பொருளாதலால் அந்த கருமத்தைப்பற்றியே உத்தரார்த்தமும் சொல்லுகிற தென்று கொள்ளுவதுதான் உசிதம் என்று ஸ்வாமியின் திருவுள்ளம். சிஷ்டர்கள் தாங்களநுஷ்டிக்கிற கருமத் திற்கு எவ்வளவு அவதிவைத்துக் கொள்ளுகிறுர்களோ அவ்வளவு அவதியையே பிறரும் வைத்துக் கொள்ளுகிறுர்களென்றபடி. இதை தாத்பர்ய சந்த்ரிகையில் தேசிகன் விவரித்துள்ளார், கண்டுகொள்க. பெரியோர்கள் அநுஷ்டிக்கிற கருமத் தையே பிறரும் அநுஷ்டிக்கிறுர்களென்று இது மட்டும் சொன்னுல் போதாது, அவர்கள் அக்கருமத்தை எந்த அளவில் அநுஷ்டிக்கிறுர்களோ அந்த அளவிலே பிறரும் அநுஷ்டிக்கிறுர்களென்றும் சொல்லவேண்டியது இங்கு ஆவச்யகமாதலால் அதற்குச் சேர ஸ்வாமியின் பாஷ்யம் மிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது. பெரியார் எதை ப்ரமாணமாகக் கொள்ளுகிறுரோ; அதையே பிறரும் ப்ரமாணமாகக் கொள்ளுகிறுரென்பது ப்ரக்ருதத்தில் அநபேக்ஷிதமாதலால் இதர பாஷ்யகாரர்களே நம்ஸ்வாமி பின்செல்லவில்லே. இதர பாஷ்யகாரர்களுக்குத் தோன்றுத அர்த்தம் நம் ஸ்வாமிக்குத் தோன்றியது எதனுலென்னில்; திருப்பாவை ஜீயரென்று ப்ரஸித்தி பெற்றிருந்ததனுலேயே யென்று திண்ணமாக வெண்ணலாம். இப்பாசுரத்தில் "மேலேயார் செய்வனகள் கேட்டியேல்" என்னுமளவே போதுமாயிருக்க இடையில் 'வேண்டுவன' என்றென்று பிரயோகித்திருப்பது குறிக்கொள்ளத்தக்கது. இதை நோக்கியே ஸ்வாமி 'யத்ப்ரமாணம்' என்றதை ஸமஸ்தமாகக் கொண்டு பாஷ்ய மிட்டருளினர். சாஸ்த்ரங்களில் எவ்வளவோ கருமங்கள் அநுஷ்டேயங்களாகச் சொல்லப்பட்டிருக்கும்; அவற்றை யெல்லாம் சிஷ்டர்கள் அநுஷ்டிக்கமாட்டார்கள். "க்ரியமாணம் ந கஸ்மைசித் யதர்த்தாய ப்ரகல்பதே, அக்ரியாவதநர்த்தாய தத் து கர்ம ஸமாசரேத்" என்கிற வசனத்தை மேலேயார் நன்கு அறிந்தவர்களாகையாலே எந்த கருமங்களுக்கு ஒரு பலனுமிராதோ, அகரணே ப்ரத்யவாய மிருக்குமோ; அந்த கருமங்களே மட்டும் அவஹிதர்களாய்ச் செய்து போருவர்கள். அதையே லோகமும் அநுவர்த்திக்கும். வேண்டாதவற்றை விட்டு வேண்டுவன செய்வர் மேலேயார்-என்னு மிக்கருத்தில் ஆண்டாளுடைய இப்பாசுர மவதரித்தது. இதற்குச் சேர பாஷ்யமிட வேணுமென்றே * சூடிக்கொடுத்தவள் தொல்லருளால் வாழ்கின்ற வள்ளலிராமானு சன் கீதா ச்லோகத்திற்குப் பெரியாழ்வார் திருவடிகளில் ஆண்டாள் கேட்ட பொருள் இதுவே யென்றறுதியிட்டு ஆண்டாள் காட்டிக்கொடுத்த பொருளேயே தமது பாஷ்யத்திலிட்டருளினர். இவ்விஷயத்தை இப்பாசுரத்திற்குச் சேமநிதியாக அநுஸந்திப்பது. .... .... ... .... 26

27. கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தா* உன்றன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்*
நாடு புகழும் பரிசினால் நன்றாக*
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே*
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்*
ஆடையுடுப்போ மதன்பின்னே பாற்சோறு*
மூடநெய் பெய்து முழங்கை வழிவார*
கூடியிருந்து குளிர்ந்தேலோரெம்பாவாய்.

கீழ்ப்பாட்டில் ஆய்ச்சிகள் நோன்புக் குறுப்பாகச் சங்குகளும் பறைகளும் பல்லாண்டிசைப்பாரும் கோலவிளக்கும் கொடியும் விதானமும் அபேக்ஷித மென்றார்கள். அது கேட்ட கண்ணபிரான் "உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணன்" என்றிருக்கு மிவ்வாய்ச்சிகள் நம்மைத் தவிர்த்து வேறொன்றை விரும்ப ப்ரஸக்தியில்லாமையாலே பரியாயமாக நம்மையே ஸபரிவாரமாக விரும்பினார்கள் போலும்; நாம் பாஞ்ச ஜந்யத்தோடு கூடவும், குடக்கூத்தாடினபோது அரையில் கட்டிக்கொண்ட பறையோடு கூடவும், பல்லாண்டிசைப்பாரோடு கூடவும், கோலவிளக்கான நப்பின்னைப்பிராட்டியோடு கூடவும், கொடியான பெரிய திருவடியோடு கூடவும், நாம் மதுரையில் நின்றும் திருவாய்ப்பாடிக்கு வரும்போது நமக்கு விதானமாயிருந்த திருவனந்தாழ்வானோடு கூடவும் வரவேணுமென்கிற விருப்பத்தையே இவர்கள் வெளியிட்டார்களா யிருக்கவேண்டும் என்றெண்ணினான் கண்ணபிரான். ஆனாலும் ஆய்ச்சிகளோடே இன்சுவைமிகப் பேச வெண்ணி "கோபிகளே! * உன் பாஞ்ச சன்னியமே போல்வன சங்கங்கள் தரவேணு மென்றீர்கள்; என்னைப்போன்ற வேறொருவன் இருந்தாலன்றோ என் பாஞ்சசன்னியம் போன்ற வேறொரு சங்கமிருக்கக்கூடும். அத்தகைய பல சங்கங்கள் வேணுமென்றீர்கள்; பார்ப்போம். அதற்குமேல் சாலப்பெரும்பறை வேணுமென்றீர்கள்: இது கோபாலர்களிடத்தே எளிதாகக் கிடைக்கக் கூடியதே; இதில் விசாரமில்லை. பல்லாண்டிசைப்பார் வேணு மென்றீர்கள்; உங்களுக்கு மேற்படவும் பல்லாண்டிசைப் பாருளரோ? அதற்கு நீங்களே போதும். இதற்குமேல் கோலவிளக்கும் கொடியும் விதானமும் விரும்பினீர்கள்; இவை அரியன வல்லவே; இவற்றை என்னிடமே கேட்டுப் பெற வேணுமென்கிற நிர்ப்பந்த மில்லையே; ஆயினும் என்னிடம் வந்து விரும்புகின்ற உங்களுக்கு இவையெல்லாம் அழகிதாகக் கொடுப்போம். இவற்றால் உங்களுக்குப் பரிபூர்ண த்ருப்தி யுண்டாய் விடுமா? நடுநிசியிலெழுந்து பலரையு மெழுப்பி யழைத்துக்கொண்டு சிற்றஞ் சிறுகாலையில் வந்து சேர்ந்த வுங்களுக்கு நாம் எதுவும் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்; இத்தனையே கொடுக்குமளவால் நீங்கள் மகிழ்ச்சி யடைந்திடுவீர்களா? சொல்லுங்கள் என்றான். அதற்குக் கோபிகள் விடுத்த விடை இப்பாட்டால் வெளி வருகின்றது. பிரானே! கீழே நாங்கள் கேட்டபொருள்கள் மார்கழி நோன்புக்கு உறுப்பாக வேண்டியவை; நோன்பு தலைக்கட்டினால் உன்னிடமிருந்து நாங்கள் பெறவேண்டிய ஸன்மானங்கள் மிகுந்துள்ளனவன்றோ; அவற்றையும் விண்ணப்பஞ் செய்கிறோம்; திருச்செவி சாய்க்க வேணுமென்கிறார்கள் ஆயர்மட மங்கையர்.

கீழ்ப்பாட்டில் விரும்பிய சங்கம், பறை, பல்லாண்டிசைப்பார், விளக்கு, கொடி, விதானம் என்பவற்றால் திருநாட்டில் கிடைக்கக் கூடியவைகளே தெரிவிக்கப்பட்டன. திருவாய்மொழியில் * சூழ்விசும் பணிமுகில் * என்னும் பதிகத்திலே இவையெல்லாம் பரமபதத்திலே கிடைப்பனவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன. எங்ஙனே யென்னில்: * காளங்கள் வலம்புரி கலந்தெங்குமிசைத்தன * என்பதனால் திருச்சங்கு பரி

மாறுகை சொல்லிற்று. "தூரியம் முழக்கின" என்பதனால் பறைகள் [பேரிகள்] முழக்கியது சொல்லிற்று. "தொடர்ந்தெங்கும் தோத்திரம் சொல்லினர்" "வாழ்த்தினர் மகிழ்ந்தே" என்பவற்றால் பல்லாண்டிசைத்தபடி சொல்லிற்று. "நிறை குட விளக்கமும் மதிமுக மடந்தையர் ஏந்தினர் வந்தே" என்பதனால் கோலவிளக்கேற்றினமை சொல்லிற்று. "கொடியணி நெடுமதிள்" என்பதனால் கொடி கட்டினமை சொல்லிற்று. விதானமாவது மேலிடம் தெரியாதபடி மறைக்குமது; "மாமணி மண்டபத்து" என்றதுதான் அது.

இனி இப்பாட்டிலும் உபநிஷத் ஸித்தங்களான முக்தபோகாவளிகளே விரும்பப்படுகின்றன.

[கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தா!] இதனால் விமுகர்களையும் வசப்படுத்திக் கொள்ளவல்ல திருக்குணமுடையவன் கண்ணபிரான் என்பது கூறப்படுகிறது. உலகிலுள்ள ஜனங்களை அபிமுகர்களென்றும் விமுகர்களென்றும் உதாஸீநர்களென்றும் மூன்றுவகுப்பிலடக்கலாம். அபிமுகர்களென்பது அன்பர்களை; விமுகர்களென்பது பகைவர்களை; அன்புமின்றிக்கே பகையுமின்றிக்கேயிருக்கிற வழிப்போக்கர்கள் உதாஸீநரெனப்படுவார். மூலத்திலுள்ள (கூடார்) என்னுஞ் சொல்லானது இந்த மூன்று வகுப்பினரையும் காட்டும். கூடார் என்பதற்குக் கூடாதவர்களென்று பொருள்; விமுகர்களும் உதாஸீநர்களும் கூடாதவர்களாயிருப்பர்களே யொழிய, அபிமுகர்களெனப்படுகிற அன்பர்களும் கூடாதவர்களோவென்று சங்கை பிறக்கும். கேண்மின்; நம்மாழ்வார் * வளவேழுலகின் முதலாய * என்னும் பதிகத்தில் "வளமிக்க மால் பெருமை மன்னுயிரின் தண்மை, உளமுற்று அங் கூடுருவவோர்ந்து, தளர்வுற்று நீங்கநினை மாறனை" என்கிற திருவாய்மொழி நூற்றந்தாதிப் பாசுரத்தின்படியே எம்பெருமானுடைய ஒப்புயர்வற்ற பெருமையையும் தம்முடைய தாழ்வையும் நினைத்தவராகி எம்பெருமானோடே தாம் கூட மாட்டாமையைத் தெரிவித்தார்; அவர்தாமே * மின்னிடை மடவார்கள் * என்னும் பதிகத்திலே "உன்னுடனே கூடேனென்றூடுங் குருகையர்கோன்" என்கிற நூற்றந்தாதிப் பாசுரத்தின்படியே ப்ரணயரோஷம் தலையெடுத்து அவனைக் கதவடைத்துத் தள்ளும் கோபிகளின் ஸமாதியாலே அவனோடு தாம் கூடமாட்டாமையைத் தெரிவித்தார். ஆகவே கூடார் என்கிற சொல்லிலே அபிமுகர்களோடு விமுகர்களோடு உதாஸீநர்களோடு வாசியற எல்லாரையும் கூட்டிக் கொள்ளத்தட்டில்லை.

இவர்களை வெல்லுவதாவது அவரவர்களின் அபிப்ராயத்தை மாற்றி ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளுகை. அஃது எப்படி ஸாத்யமாகிறதென்றால், [வெல்லும் சீர்] ஒவ்வொரு குணத்தாலே ஒவ்வொன்று ஸாத்யமாகிறது. "மஹதோ மந்தைஸ் ஸஹ நீரந்த்ரேண ஸம்ச்லேஷ: சீலம்" என்கிறபடியே அறப்பெரியவன் தாழ்ந்தவர்களோடும் புரையறக் கலப்பதற்கு உறுப்பு சீல குணமாகையாலே அக்குணத்தைக் காட்டி, நைச்யாநுஸந்தானத்தாலே கூடோமென்பாரை வசப்படுத்திக் கொள்வன். ப்ரணயரோஷத்தாலே கூடோமென்பாரை ச்ருங்கார சேஷ்டித சாதுரியத்தைக் காட்டி அற்றுத் தீர்ந்தவர்களாக்குவன். மாச்சரியத்தினால் கூடாதவர்களான பகைவர்களையோ வென்னில் சௌர்ய வீர்ய பராக்ரமாதி குணங்களைக் காட்டி வணக்குவன். உதாஸீனர்களை ஏதேனுமொருபடியாலே தன்னருகே வரச்செய்து "போதரேயென்று சொல்லிப் புந்தியிற் புகுந்து தன்பால் ஆதரம் பெருகவைத்தவழகன்" என்கிறபடியே ஸௌந்தர்ய லாவண்யங்களைக் காட்டி ஆகர்ஷிப்பன். கோவிந்தா! என்ற விளியினால் * அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்திலே பிறந்திருக்கச் செய்தேயும் உனக்கு இத்தனை ஸாமர்த்திய முண்டாவதே! என்கிற வியப்பு விளங்கும்.

திருப்பாவைக்கு உயிர்நாடியா யிருப்பது ஆசார்ய பரமான பொருளேயாதலால் அதனையும் இந்த விளியில் விவரிப்போம். கூடார் என்பதனாலே மாத்ஸர்யத்தினால்

கூடாதவர்களும் ஔதாஸீந்யத்தினுல் கூடாதவர்களும் கொள்ளப்படுவர். அப்படிப் பட்டவர்களையும் நம்முடைய பூர்வாசாரியர்கள் தங்களுடைய பாண்டித்ய விசேஷத்தைக் காட்டியும் ஆத்ம குண பூர்த்தியைக் காட்டியும் அடிமைப்படுத்திக் கொள்வர்கள். எம்பெருமானர் யஜ்ஞமூர்த்தி யாதவ ப்ரகாசாதிகளையும், பட்டர் நஞ்சீயரான மேல் நாட்டு வேதாந்திகளையும், நம்பிள்ளை துன்னுபுகழ்க் கந்தாடைத் தோழப்பர், நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர் போல்வாரையும் அடிமைகொண்ட சரிதைகள் இங்கு அநுஸந்திக்கத்தக்கன. கோவிந்தா! என்கிற விளியும் ஆசார்யரிடத்திற் பொருந்தும். பல பொருளதான கோ சப்தம் பசுக்களைப்போலே ஸ்ரீஸூக்திகளையும் சொல்லக்கடவதாகையாலே சிறந்த ஸ்ரீஸூக்திகளைத் திருவாக்கிலுடையவரே என்றதாம்.

[உன்றன்னைப் பாடிப் பறைகொண்டு] பாடுகை வேறு, அதன் பிறகு பறைகொள்ளுகை வேறு என்று நினைக்க வேண்டா; பாடுகையாகிற பரம புருஷார்த்தத்தை லபித்து என்று பொருள். உண்டு பசிதீர்ந்தானென்றால் உண்டபிறகு பசி தீர்ந்தானென்று பொருளன்றே. உண்ணப் புக்கபோதே பசி தீருமாகையாலே உண்கையும் பசிதீருகையும் ஒன்றேயாகும்; அது போலவே இங்குங் கொள்க. இதனுல்—நோன்பு நோற்பதென்பது வெறும் வியாஜம்; கோபாலக் கிழவர்களின் இசைவு பெற்று உலகமறிய உன்னைப் பாடுகைதான் எங்களுக்குப் பரம புருஷார்த்தம் என்றவாறு. "குரோர் நாம ஸதா ஜபேத்" என்றபடி ஆசார்ய நாம ஸங்கீர்த்தனமும் பரம புருஷார்த்தமென்க.

இதற்குமேல் யாம்பெறு சம்மானமென்று தொடங்கிச் சில ஸன்மான விசேஷங்களை வேண்டுகிறுர்கள். இந்த ஸன்மானங்கள் ஸாமான்யமாகக் கிடைக்கக் கூடாது, நாடுபுகழும்படி நன்ருகக்கிடைக்க வேணுமென்று முந்துறமுன்னம் கூறுகின்றனர். க்யாதியிலோ லாபத்திலோ பூஜையிலோ அபேக்ஷையற்றவர்களான பரமைகாந்திகள் நாடு புகழவேணுமென்பதை நெஞ்சாலும் நினைக்க இடமில்லை. சக்ரவர்த்தி திருமகனுர் மகுடாபிஷேகம் கண்டருளும் ஸமயத்திலே ஸுக்ரீவ அங்கதாதி பக்தவர்க்கங்களுக்குப் பரிசளித்தது ஸாமான்யமான விதம்; திருவடிக்குப் பரிசளித்தவிதம் நாடு புகழும் பரிசினுல் நன்ருகவமைந்தது. அந்த ப்ரகரணத்தில் * அவமுச்ய ஆத்மந: கண்டாத் ஹாரம் ஜநகநந்திநீ; அவைக்ஷத ஹரீந் ஸர்வாந் பர்த்தாரஞ்ச முஹுர்முஹு:* என்று சொல்லிவருகையில் "ததௌ ஸா வாயுபுத்ராய தம் ஹாரமஸி தேக்ஷணு" என்கையாலே பெருமாளும் பிராட்டியுமாக இருவருங் கூடி அனுமனுக்குப் பரிசளித்தமை சொல்லிற்று. அந்தப் பரிசளிப்புதான் நாடுபுகழ நின்றது. இங்குமப்படியே நப்பின்னைப் பிராட்டியும் கண்ணபிரானுமாகக் கூடியிருந்து சம்மானம் பெறுவிக்க வேணுமென்றதாயிற்று.

ஸன்மானப்பொருள்களை யடுக்குகிறுர்கள்மேலே [சூடகமே தோள் வளையே தோடே செவிப்பூவே பாடகமே] என்று பூஷணப் பரிசுகளைப் பேசுகின்றுர்கள். சூடகமென்பது கைவளை; தோள்வளை - புஜபூஷணம். தோடும் செவிப்பூவும் கர்ணபரண விசேஷங்கள். பாடகமென்பது பாத கடகம். ஆக ஐந்து பூஷணங்கள் விரும்பப்பட்டன. இதற்குமேல் *ஆடையுடுப்போம்* என்று வஸ்த்ராலங்காரமும், *பால்சோறு* இத்யாதியால் ம்ருஷ்டாந்நபோஜனமும் விரும்பப்பட்டுள்ளன. இவையெல்லாம் திருநாட்டிலே முக்தர்களுக்குக் கிடைக்கும் சன்மானங்கள். உபநிஷத்தில் முக்தர்களுக்குப் பெறுவிக்கும் ஸன்மானங்களைச் சொல்லுமளவில் * தம் பஞ்ச சதாநி அப்ஸரஸாம் ப்ரதிதாவந்தி; சதம் மாலாஹஸ்தா:, சதம் அஞ்ஜந ஹஸ்தா:, சதம் சூர்ண ஹஸ்தா:, சதம் வாஸோ ஹஸ்தா:, சதம் பூஷண ஹஸ்தா: * என்றும் * தம் ப்ரஹ்மாலங்காரேண அலங்குர்வந்தி * என்றும் ஓதிற்று. ஐந்நூறு அப்ஸரஸ்ஸுக்கள் முக்தர்களை எதிர்கொள்ள வருவதாகவும், அவர்களில் நூற்றுவர் புஷ்பமாலைகளையும், நூற்றுவர் அஞ்ஜனத்தையும், நூற்றுவர் ஸுகந்த சூர்ணத்தையும்,

நூற்றுவர் திவ்ய பீதாம்பரங்களையும், நூற்றுவர் திவ்ய பூஷணங்களையும் கைகளில் ஏந்திக்கொண்டு வருவதாகவும், முக்தாத்மாவை ப்ரஹ்மாலங்காரத்தாலே அலங்கரிப்பதாகவும் சொல்லி வைத்தது. அந்தப்பேறுதான் இங்குப் பெறவிரும்பப்படுவது. கணக்காக ஐந்துபூஷணங்கள் சொல்லப்பட்டிருக்கையாலே இந்நிலத்தில் ஆசார்ய ஸந்நிதானத்தில் பெறப்படும் பஞ்ச ஸம்ஸ்காரங்களாகிற ஐந்து ஆபரணங்களும் ஸூசிப்பிக்கப்படுகின்றன. * தாப: புண்ட்ரஸ் ததா நாம மந்த்ரோ யாகச்ச பஞ்சம:, அமீ பரமஸம்ஸ்காரா: பாரமைகாந்த்ய ஹேதவ: * என்கிற வசனத்தினால் அந்த பஞ்ச ஸம்ஸ்காரங்களாகிற பஞ்ச பூஷணங்கள் அறியத்தக்கன.

சூடகமே இத்யாதிக்கு மற்றொரு வகையான விவரணமும் காணலாம். ஆசார்ய ஹ்ருதயத்தில் "பட்டஞ் சூடகமாவன பராவர குருக்கள் பூட்டும் ஆத்ம பூஷணங்கள்" என்றருளிச் செய்திருப்பதற்குச் சேருமதான விவரணம் கேளீர்; சூடகமாகிற கரபூஷணம் எதுவென்னில் அஞ்ஜலி பந்தமேயாம். "நின் தலையைத் தாழ்த்து இருகை கூப்பென்றால் கூப்பாத பாழ்த்த விதி" (பெரிய திருவந்தாதி-84) என்று கர்ஹிக்க வேண்டாதபடி கைகூப்பியிருக்குமது கரபூஷணம். * யேபாஹு மூல பரிசிஹ்நித சங்க சக்ரா: * என்கிறபடியே சக்கரத்தின் கோயிற் பொறியாலே பொற்றுண்டு நிற்கை புஜ பூஷணம். ப்ரதமோபதேச காலத்தில் தெரிந்தும் தெரியாததுமாக மந்த்ரத்தைக் காதில் புகவிடுவது தோடு; பிறகு அர்த்த விசேஷங்களைப் பரக்கக் கேட்பிப்பது செவிப்பூ. * உலகமேத்துங் கண்டியூ ரரங்கம் மெய்யம் கச்சி பேர் மல்லையென்று மண்டினாருய்யலல்லால் மற்றையார்க்கு உய்யலாமே * என்ற திருமங்கையாழ்வார் ஸ்ரீஸூக்தியைப் பேணி * பதியே பரவித்தொழும் தொண்டராமவர்கள் திருவடிகளால் நடந்து திவ்ய தேசங்களில் யாத்திரை செய்யுமது பாடகமாகிய பாதபூஷணம். இங்ஙனே மற்றுமுள்ள அவயவங்களுக்கும் உசிதமான அலங்காரங்கள் ப்ராப்தமாகையாலே "என்று அனைய பல்கலனும் யாமணிவோம்" என்றது.

[ஆடையுடுப்போம்.] இதுகாறும் ஆடையுடாமலா இருக்கிறார்கள்? இப்போது ஆடையுடுப்போமென்றதன் கருத்தைக் கேண்மின். அரையில் ஆடை யுடுப்பதென்பது பசுக்களுக்கும் பறவைகளுக்குமில்லை. மானிடர்களுக்கே யாகிறது. * ஜ்ஞாநேந ஹீந: பசுபிஸ் ஸமாந: * என்கிறபடியே பசுப்ராயர்களாய் ஆடையுடுக்க யோக்யதை யற்றிருந்த நாங்கள், ஆசார்யரே! தேவரீருடைய திருவருளால் ஞான விளக்கம் பெற்று * வ்ருத்த்யா பசுர் நரவபு:* என்கிற அபக்க்யாதியொழிந்து 'நாம் ஆடையுடுப்பது ஏற்கும்' என்று நினைக்கப் பெறுவோமாக என்றபடி.

அதன்பின்னே பால்சோறு என்றதில் *ஸோச்நுதே ஸர்வாந் காமாந்ஸஹ; ப்ரஹ்மணா விபச்சிதேதி* என்று உபநிஷத்தில் சொல்லப்பட்ட அசனமே விவக்ஷிதம். வெறுமனே சோறு என்னாமல் பால் சோறு என்கையாலே உத்தமமான அன்னம் கூறப்பட்டதாகி பகவதநுபவத்திற் காட்டிலும் உத்துங்கமான பாகவதாநுபவம் தெரிவிக்கப்பட்டதாகிறது. அதற்குமேலும் நெய்பெய்து என்று விசேஷித்து அன்னத்தில் அதிகமான அதிசயம் சொல்லுகையாலே மிக மேம்பட்டதான ஆசார்ய குணாநுபவமும் தெரிவிக்கப்படுகிறது. ஆக, பகவத்பாகவத ஆசார்ய குணாநுபவத்திலூன்றியிருக்கவேணு மென்றதாயிற்று.

முழங்கைவழிவார என்றதில் உயர்ந்தகருத்து அடங்கியுள்ளது; பெருவிடாயர்க்குத் தண்ணீர்ப்பந்தலில் கரகத்தினால் தீர்த்தம்விட ஒருவர் இருகை யேந்திக் குடிக்கு மிடத்து அவருடைய பின்னே நிற்கிற விடாயர்கள் தங்கள் விடாயின் மிகுதியினால் தாமதம் பொறுத்திருக்கமாட்டாமல் முன்னே குடிப்பாருடைய முழங்கைகளின் வழியாகப் பெருகும் தண்ணீரைக் குடிப்பர்கள். இங்ஙனே பரம்பரையாக அநுபவிக்கப் பெறவேணு மென்பது ஸூசிதம். கீழே * பல்கலனும் யாமணிவோம் *

என்றும் *ஆடையுடுப்போம்* என்றும் வினைமுற்றை யிட்டுச் சொன்னது போல் இங்கும் *பால்சோறு உண்போம்* என்று கூறியிருக்க வேண்டுமே; அப்படி கூறாதது உண்கையிலே முக்கியமான விருப்பமில்லையென்று காட்டுதற்காக. கூடியிருந்து குளிர்வதுதான் முக்கியமான உத்தேச்யமென்க.

[கூடியிருந்து குளிர்ந்து] நம்மாழ்வார் *அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்று கொலோ* என்று முன்னே பாரித்தபடியே முடிவில் *வந்தவரெதிர்கொள்ள மாமணி மண்டபத்து, அந்தமில்பேரின்பத்தடியரோடிருந்தமை* என்று பெற்றுத் தலைக்கட்டினமையை யருளிச் செய்தார். இதனால் அடியார்கள் குழாங்களுடன் கூடியிருந்து குளிர்வதுதான் பரம புருஷார்த்த மென்பது தெரிவிக்கப்பட்டதாகிறது. அதுவே யிங்கு முரைத்ததாயிற்று. ... .... ... 27

28. கறவைகள் பின்சென்று கானஞ்சேர்ந் துண்போம்*
அறிவொன்று மில்லாத வாய்க்குலத்து * உன்றன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்*
குறைவொன்று மில்லாத கோவிந்தா* உன்றன்னோ
டுறவேல் நமக்கிங் கொழிக்க வொழியாது*
அறியாத பிள்ளைகளோ மன்பினால் * உன்றன்னைச்
சிறுபே ரழைத்தனவுஞ் சீறியருளாதே*
இறைவாநீ தாராய் பறையேலோ ரெம்பாவாய்.

* * *—"மார்கழி நீராடுவான்" என்று நோன்பை ப்ரஸ்தாவித்து அந்நோன்புக்கு உபகரணங்களான சங்கு முதலியவற்றையும், நோன்பு தலைக்கட்டின பின்னர் அலங்கரித்துக்கொள்ளுதற்கு உபகரணமான ஆடை ஆபரணங்களையும், ப்ரீதி பரீவாஹமாகக் கூடிக்குளிர்ந்து பாற்சோறுண்கையையும் கீழிரண்டு பாட்டாலும் அபேக்ஷித்த ஆய்ச்சிகளை நோக்கிக் கண்ணபிரான், 'பெண்காள்! உங்களுடைய கருத்து இவ்வளவேயென்று எனக்குத் தோன்றவில்லை; நீங்கள் இப்போது அபேக்ஷித்தவற்றையும், இன்னுஞ் சில அபேக்ஷித்தால் அவற்றையும் நான் தரவேண்டில் உங்களுடைய நிலைமையை அறிந்து தரவேண்டியிராநின்றது; பேறு உங்களதானபின்பு நீங்களும் சிறிது முயற்சியுடையீர்களா யிருக்கவேண்டும்; அதுக்குடலாக நீங்கள் அநுஷ்டித்த உபாய மேதேனுமுண்டோ?' என்று கேட்டருள, அதுகேட்ட ஆய்ச்சிகள், 'பிரானே! எங்கள் நிலைமையை நீ தான் நேரே கண்ணால் காண்கிறிலையோ? அறிவிலிகளான நாங்கள் எடுத்துக் கூறவேண்டும்படி நீ உணராததொன்றுண்டோ? எங்கள் நிலைமையை நன்கு உணரா நின்ற நீ "நீங்களனுட்டித்த உபாய மேதேனு முண்டோ?" என வினவியது மிக அற்புதமா யிருந்ததே!' என்று தங்கள் ஸ்வரூபமிருக்கும்படியை அறிவித்து, "இவ்விடைப்பெண்கள் கேவலம் தயாவிஷயமென்று திருவுள்ளம் பற்றி நீ எங்கள் காரியம் செய்தருளவேணும்" என்று விண்ணப்பஞ்செய்யும் பாசுரம், இது.

கீழ், "போற்றி யாம் வந்தோம்" "செங்கண் சிறுச் சிறிதே எம்மேல் விழியாவோ?" "உன்னை அருத்தித்து வந்தோம்" என்றிவை முதலான பாசுரங்களினால் ஆய்ச்சிகள் தங்களுக்குள்ள ப்ராப்யருசியை வெளியிட்டனர்; அந்த ப்ராப்யத்தைப் பெறுகைக்கு உடலாகத் தங்களுடைய ஆகிஞ்சந்யத்தையும் அவனுடைய உபாயத்வத்தையும் வெளியிடுகின்றனர், இப்பாட்டில்.

இவர்கள்—கீழ் "யாம்வந்த காரிய மாராய்ந்தருள்" என்றவாறே அவன் அதனை ஆராயாமல் 'இவர்கள் நெஞ்சில் ஸாதநாம்சமாய்க் கிடப்பன ஏதேனுஞ் சில

உண்டோ ?' என்று ஆராயத் தொடங்க அதை யறிந்த ஆய்ச்சிகள் 'நாயனே ! நின்னருளே புரிந்திருக்கிற எங்கள் பக்கலில் எடுத்துக் கழிக்கலாம் படியும் சில உபாயங்களுள வென்றிருந்தாயோ ? 'இரங்கு' என்றும், 'அருள்' என்றும் நாங்கள் அபேக்ஷித்த அருளுக்கு ப்ரதிபந்தகமாக எங்கள் திறத்தில் ஸாதநாம்சமொன்றுமில்லை யென்று ஸர்வஜ்ஞனறிய அறிவிக்கிறார்கள்.

ஸாத்யோபாயங்களை ஒழித்து ஸித்தோபாயத்தை ஸ்வீகரிக்கு மதிகாரிகளுக்குப் பேற்றுக்குக் கைம்முதலாயிருப்பதொரு நற்கருமமில்லை யென்கையும், மேலும் செய்ய யோக்யதை இல்லையென்கைக்காகத் தங்களுடைய அபகர்ஷத்தை அநுஷந்திக்கையும், மூலஸுக்ருதமான ஈச்வரனுடைய குணபூர்த்தியை அநுஸந்திக்கையும், ஸம்பந்தத்தை உணருகையும், பூர்வாபராதங்களுக்கு க்ஷாமணம் பண்ணுகையும், உபாயபூதனை ஈச்வரன் பக்கலிலே உபேயத்தை அபேக்ஷிக்கையுமாகிற இவை ஆறும் அதிகார அங்கங்களாதலால் இப்பாட்டில் இவ்வாறும் வெளியிடப் படுகின்றன ;

(1) முதலடியில்—பசுக்களின் பின்னே போய்த்திரிந்து சரீரபோஷணம் பண்ணுமவர்களா யிராநின்றோ மென்கையாலே தங்களிடத்தில் நற்கருமமொன்றுமில்லாமையும், (2) இரண்டாமடியில்—" அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்து " என்கையாலே, மேலும் யோக்யதையில்லை யென்கைக்காகத் தங்களுடைய அபகர்ஷாநுஸந்தாநமும், (3) நான்காமடியில்—" குறையொன்றுமில்லாத கோவிந்தா !" என்கையாலே மூலஸுக்ருதமான ஈச்வரனுடைய குணபூர்த்தியின் அநுஸந்தாநமும், (4) ஐந்தாமடியில்—" உறவேல் நமக்கிங்கொழிக்க வொழியாது " என்கையாலே ஸம்பந்தவுணர்ச்சியும், (5) ஏழாமடியில் "சீறியருளாதே" என்கையாலே பூர்வாபராதங்களுக்கு க்ஷாமணமும், (6) எட்டாமடியில் " இறைவா நீ தாராய் பறை " என்கையாலே உபேயாபேக்ஷையும் விளங்காநின்றமை காண்க.

" குறை வொன்றுமில்லாத கோவிந்தா ! " என்றது—உனக்கொரு குறையுண்டாகிலன்றோ எங்களுக்கொரு குறையுண்டாவது என்ற கருத்தைக் காட்டும். கோவிந்தா—நித்யஸூரிகளுடைய ஓலக்கத்திலே அவாப்த ஸமஸ்த காமனாயிருக்குமிருப்பைத் தவிர்த்து இடைச்சேரியிற் பசுமேய்க்கப் பிறந்தது குறைவாளரான எங்களை நிறைவாளராக்க வன்றோ வென்கை. "குணதுங்கதயா தவ ரங்கபதே !" இத்யாதி பட்டர் ஸ்ரீஸூக்தியை இங்கே அநுஸந்திப்பது.

இங்குச் சிறுபேர் என்றது நாராயணநாமத்தை யாகும். இந்திரன் வந்து கண்ணபிரானுக்குக் கோவிந்தாபிஷேகம் பண்ணின பின்பு, அவனை நாராயணனென்கை குற்றமன்றோ. ஒருவன் முடிசூடப் பெற்ற பின்னர், அவனை முன்னைப் பெயரிட்டழைக்கைக்கு மேற்பட்ட குற்றமுண்டோ ? [அழைத்தன]—'நாராயணன்' என்று ஒருகாற் சொல்லி நில்லாமல், " நாராயணனே நமக்கே பறைதருவான் " என்றும், " நாற்றத்துழாய் முடி நாராயணன் " என்றும், " நாராயணன் மூர்த்தி " என்றும் பலகாற் சொன்னமையால், ' அழைத்தன ' என்று பன்மையாகக் கூறப்பட்டது. " உன்றன்னை—அழைத்தனவும் " என்ற உம்மைக்குக் கருத்து—நாங்கள் எங்களுக்குள்ளே ஸ்நேஹ பாரவச்யத்தாலே " பேய்ப்பெண்ணே !, ஊமையோ ?, செவிடோ?, நாணாதாய், பண்டே யுன்வாயறிதும் " என்று பலவாறாகச் சொல்லிக் கொண்டவைகளையும் பொறுத்தருள வேணுமென்பதாம்.

இங்ஙன் ' பொறுத்தருளவேணும் ' என்று ப்ரார்த்தித்த பெண்டிரை நோக்கிக் கண்ணபிரான், ' நம்மாலே பேறும்படியான உறவு நம்மோடு உண்டாகிலும், குற்றத்தைப் பொறுக்கவேணு மென்றாலும் பலனை அநுபவிக்குமவர்கள் நீங்களான பின்பு, நீங்களும் ஏதாவதொன்று செய்ததாக வேண்டாவோ ? வ்யாஜமாத்ரமாகிலும்

வேணுமே; இவர்கள் இன்னது செய்தார்கள், இவன் இன்னது செய்தான்' என்று நாட்டார்க்குச் சொல்லுகைக்கு ஒரு ஆலம்பநம் வேண்டுமே!' என்ன; அது கேட்ட ஆய்ச்சிகள், 'எதிர்த்தலையில் ஒன்றையும் எதிர்பாராமல் நீ காரியஞ் செய்தால் உன்னை விலக்குகைக்கு உரியாருண்டோ?' என்னுங் கருத்துப்பட 'இறைவா' என்று விளிக்கிறார்கள்.

இப்பாட்டில் *உன்றன்னைச் சிறு பேரழைத்தனவும் சீறியருளாதே* என்பது உயிரான வார்த்தையாகும். விச்வரூபங்கண்ட அர்ஜுநன் "ஸகேதி மத்வா ப்ரஸபம் யதுக்தம் ஹேக்ருஷ்ண ஹேயாதவ ஹேஸகேதி, அஜாநதா மஹிமாநம் தவேமம்தத் க்ஷாமயே த்வாமஹமப்ரமேயம்." என்று மிகப் பெரிய நாமங்களான நாராயணாதி நாமங்களையிட்டு அழையாமல் யாதவ! கோபால! என்று சிறிய நாமங்களையிட்டு அழைத்துவிட்டேனே; இது உன் பெருமை தெரியாமையினால் செய்த குற்றம்; இதைப் பொறுத்தருள வேணும் என்று க்ஷாமணம் கொண்டான். கோபிகள் கண்ணனுடைய ஸௌலப்ய ஸௌசீல்யப் பெருமைகளிலே மிக மிக ஈடுபட்டுவிட்டதனால் இவர்களுடைய கொள்கைப்படி அவனுடைய பரத்வம் பயனற்றதாயிற்று. ஆகவே பரத்வத்திற்கு ஏகாந்தமான நாராயண நாமத்தைச் சொன்னது அபசாரமாய்த் தோற்றிற்று இவர்களுக்கு. கோபாலன் கோவிந்தன் தாமோதரன் நவநீத சோரன் என்பன போன்ற திருநாமங்களே பெரிய பெயர்களாகவும், நாராயண நாமம் சிறு பேராகவும் தோன்றிற்று. ஐயோ! என் செய்தோ மென்செய்தோம்!! *நாராயணனே நமக்கே பறைதருவா னென்றும் *நாற்றத்துழாய்முடி நாராயணனென்றும் சிறு பேர்களை யிட்டுவ்யவஹரித்தோமே! இவ்வபசாரத்திற்குச் சீற்றங் கொள்ளாமல் பொறுத்தருளவேணும்—என்று வேண்டிக்கொண்டபடி. நாராயண நாமத்தைச் சிறு பேரென்று சொன்னால் இது மஹாபசாரமன்றோ வென்று நினைப்பர்கள் அரஸிகர்கள். பகவானைப் பராத்பரன் என்று துதிப்பது அவனுக்கு உகப்பா? ஸுலபன் ஸுசீலன் என்று துதிப்பது உகப்பா? என்று கேள்வி பிறந்தால், பராத்பரனாயிருந்த விருப்பிலே மிக வெறுப்பு உண்டாகித் தாழவிழிந்த விடத்திலும் பரத்வத்தையே பேசினால் உகப்பு எங்ஙனே யுண்டாகும்; சீற்றந்தான் பிறக்கும். சீறவேண்டாவென்று பிரார்த்திக்கவேண்டியது கடமையாயிற்று. இப்பாட்டில் *உன்றன்னோடுறவேல் நமக்கு இங்கொழிக்க வொழியாது* என்ற வாக்கியமும் உயிராகக் கொள்ளத் தக்கது. எம்பெருமானுக்கும் நமக்குமுள்ள ஸம்பந்தத்தைத் தெரிந்துகொள்வதற்கு மேற்பட நமக்குக் கர்த்தவ்யம் எதுவுமில்லை யென்பது நூற்கொள்கை.

இனி ஆசார்ய பரமாகச் சொல்லுகிறோம். [குறைவொன்றுமில்லாத கோவிந்தா!] ஞானத்திலோ அனுட்டானத்திலோ எதிலும் ஒரு குறையுமில்லாத வித்வங்மணியே! என்றபடி. [கறவைகள் பின்சென்று கானஞ் சேர்ந்து உண்போம்.] இந்தச் சொல்தொடர் இரட்டுறமொழிதலால் இதுவரை இருந்த நிலைமையையும், இனிமேல் இருக்க விரும்புகிற நிலைமையையும் காட்டும். பசுப்ராயர்களான பாமர ஜனங்களின் பின்னே சென்றுகொண்டு ஸம்ஸாரமருகாந்தாரத்திலே படிந்து உணபது முறங்குவதுமே போதுபோக்காகவிருக்கின்றோம். (இனியிருக்க வேண்டும்படி யென்னென்னில்;) காமதேநுக்களான ஆசாரியர்களை யநுவர்த்தித்து *ஏதத் ஸாம காயந்நாஸ்தே* என்னும்படி ஸாமகானம் பண்ணுமிடத்தே சேர்ந்து *அஹமந்நாத: அஹமந்நாத:* என்று பரப்ரஹ்மமாகிற அன்னத்தை யநுபவித்துக் களித்திருக்கக்கடவோம். [அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்து யாம்] அறிவில்லாத, அறிவொன்றில்லாத, அறிவொன்றுமில்லாத=தத்வ ஹித புருஷார்த்தங்களுள் ஒன்றிலும் உணர்ச்சியற்ற குடும்பத்திலே பிறந்திருக்கின்ற நாங்கள். [உன்றன்னைப் பிறவிபெறுந்தனை புண்ணியமுடையோம்.] உன்றன்னை என்றது உன்தன்னால் என்றபடி. *ஸஹி வித்யாதஸ்தம் ஜநயதி தத் ச்ரேஷ்டம் ஜந்ம* என்கிறபடியே தேவரீராலே ஜ்ஞான ஜன்மம்

பெறும்படியான பாக்யம் பெற்றோம். [உன்றன்னோடு உறவேல் நமக்கு இங்கொழிக்க வொழியாது.] ஆசார்ய ஸம்பந்தம் இந்த விபூதியோடு ஒழிக்க வொழியுமதன்று. *அத்ர பரத்ரசாபி*என்று ஆளவந்தாரருளிச்செய்தபடியே யாவதாத்மபாவியுள்ளதொன்று. இங்கு என்றது இவ்விடத்தோடே யென்றபடி. [அறியாத பிள்ளைகளோம் இத்யாதி.] ஆசார்ய வைபவ மறியகில்லாத நாங்கள் பட்ட அபசாரங்களை யெல்லாம் க்ஷமித்தருள வேணுமென்கை. 'அழைத்தனவும்' என்கிற உம்மையினால் பகவதபசார அஸஹ்யாப சாரங்களையும் ஸமுச்சயிக்கிறபடி. [இறைவா!] எங்களுக்கு ஸர்வேச்வர ஸ்தானத்தி லிருப்பவரே! என்கை. .... .... .... ... 28

29. சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து* உன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்*
பெற்றம்மேய்த் துண்ணுங் குலத்திற் பிறந்து* நீ
குற்றேவ லெங்களைக் கொள்ளாமற் போகாது*
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா*
எற்றைக்கு மேழேழ் பிறவிக்கும்* உன்றன்னோடு
உற்றோமே யாவோ முனக்கேநா மாட்செய்வோம்*
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

* * * — கீழெல்லாம் "பறை, பறை" என்று சொல்லி வந்த ஆய்ச்சிகள் அப்பறையின் பொருளை நிஷ்கர்ஷித்து விண்ணப்பஞ் செய்யும் பாசுரம் இது. நாட்டார் இசைகைக்காக 'நோன்பு' என்று ஒன்றை வியாஜமாகக் கொண்டு வந்து புகுந்தோ மத்தனை யொழிய,எங்களுக்கு உத்தேச்யம் உன் திருவடிகளில் நித்திய கைங்கரியம் பண்ணுகைதான்; இனி ஒரு நொடிப்பொழுதும் உன்னைவிட்டு நாங்கள் பிரிந்தோமாக வொண்ணாது; வேறு ஒருவகையான விருப்பமும் எமக்குப் பிறவாவண்ணம் நீயே அருள் புரியவேணும்' என்று காலைக் கட்டுகிறார்கள்.

சிற்றஞ்சிறுகாலே—அருணோதய காலத்தைக் கூறியவாறு. சின்னஞ்சிறுப் பையன், 'செக்கச் சிவந்த தலை' என்னும் பிரயோகங்களை யொக்கும் இப்பிரயோகம். "காலைவந்து" என்னாமல், 'சிறுகாலை வந்து' என்னாமல், "சிற்றஞ்சிறு காலே வந்து" என்றதற்குக் கருத்து எங்கள் பருவத்தை ஆராய்ந்தால் பொழுது விடிந்து பதினைந்து நாழிகையானாலும் குளிருக்கு அஞ்சிக் குடிலைவிட்டுக் கிளம்பமாட்டாதாரென்று தோற்ற நிற்க, குளிரை ஒரு பொருளாக நினையாமல் நாங்கள் இத்தனை சிறு காலை யில்வந்தது எவ்வளவு ஆற்றாமையின் கனத்தினாலாகக் கூடுமென்பதை ஸர்வஜ்ஞனான நீயே ஆய்ந்தறிந்துகொள் என்றவாறு.

"உன் பொற்றாமரை யடியே போற்றும் பொருள் கேளாய்" என்றது—நாங் கள் எதை உத்தேசித்து உன்னிடம் வந்தோமோ அந்த உத்தேசத்தை வெளியிடு கின்றோம், கேட்டருள் என்றபடி. அந்த உத்தேசத்தை வெளியிடுகின்றன மற்ற அடிகள். [பெற்றம் மேய்த்து இத்தியாதி.] நித்ய ஸூரிகளின் நடுவே ஏழுலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருக்கு மிருப்பைத் தவிர்ந்து இவ்விடைக்குலத்தில் நீ வந்து பிறந்ததற்கு ஒரு பயன் வேண்டாவோ? எங்களிடத்தில் நீ கைங்கரியம் கொள்ளா தொழிவாயாகில் உன்னுடைய இப்பிறவி பயனற்றதாமன்றோ? என்கிறார்கள். "குற்றேவலெங்களைக் கொள்ளாமற் போகாது" என்றவிடத்தில், "கொம்மை முலைக ளிடர்தீரக் கோவிந்தற்கோர் குற்றேவல், இம்மைப் பிறவி செய்யாதே இனிப்போய்ச் செய்யும் தவந்தானென்" என்ற நாச்சியார் திருமொழியை நினைப்பது.

இப்படி, 'எங்களிடத்திற் குற்றேவல் கொள்ளவேணும்' என்று வேண்டின ஆய்ச்சிகளை நோக்கிக் கண்ணபிரான், 'பெண்காள்! அது அப்படியே ஆகிறது; அந் தரங்கமாக ஏவிக்கொள்ளுகிறேன்; நீங்கள் மார்கழி நீராட்டத்திற்கு உபகரணமாகக் கேட்டவற்றைத் தருகிறேன், கொண்டுபோங்கள் என்று ஒரு பறையை எடுத்துவரப் புக்கான்; அது கண்ட ஆய்ச்சிகள், அப்பா! கருத்தறியாமற் செய்கிறாயே; நாங்கள் 'பறை' என்று சொன்னதற்குக் கருத்துரைக்கின்றோம் கேளாய்' என்று உரைக்கத் தொடங்குகின்றனர் இற்றைப்பறை இத்யாதியால். இன்று+பறை, இற்றைப்பறை. இப்போது நீ எடுத்துக்கொடுக்கும் பறை என்றபடி. கொள்வானன்று—கொள்வதற் காகவன்று; நாங்கள் வந்தது என்று சேஷ பூரணம் செய்க.

எற்றைக்கும்—என்றைக்கு மென்றபடி. "ஏழேழ் பிறவிக்கும்"—"தேவத்வே தேவதேஹோயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ" என்றபடி எம்பெருமானுடைய பிறவி தோறும் ஒக்கப் பிறக்கும் பிராட்டியைப்போல தாங்களும் ஒக்கப்பிறந்து ஆட்செய்ய நினைக்கிறார்கள். ஆழ்வார்களெல்லாரும் பெரும்பாலும் பகவான் பக்கலிலே வேண்டி னது பிறப்பறுக்க வேணுமென்று. *இனிப்பிறவி யான்வேண்டேன்* என்றும் *ஆதலால் பிறவிவேண்டேன்* என்று மிப்புடைகளிலேயன்றோ ஆழ்வார்களின் பாசுரம். ஆண்டாள் அங்ஙனம் பேசாமல் "எற்றைக்கு மேழேழ் பிறவிக்கும்" என்றமையாலே அவனுடைய அவதாரங்கள்தோறும் கூடவே வந்து பிறக்கிற நாச்சி மார்களிலே இவளொருத்தி என்னுமிடம் தெரிவிக்கப்பட்டதாகிறது. "எற்றைக்கு மென்றது தோன்றப் பிறந்து" இத்யாதியான ஆசார்ய ஹ்ருதய சூர்ணையை இங்கே அநுஸந்திப்பது.

இப்பாட்டில் *மற்றை நங்காமங்கள் மாற்று* என்னும் வாக்கியம் மிகவும் ஸாரமா கக் கொள்ளத்தக்கது; திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரத்தில் மத்யமபதமான நமஸ்ஸா னது காகாக்ஷிந்யாயத்தாலே முன்னேயுள்ள ப்ரணவத்திலே அந்வயித்தும், பின்னே யுள்ள *நாராயணாயவில் அந்வயித்தும், தன்னோடேயந்வயித்தும் மூன்று விரோதி களைக் கழிக்கிறதென்பர். இதனை பட்டர் அஷ்ட ச்லோகியில் *மந்த்ரப்ரஹ்மணி மத் யமேந நமஸா* என்கிற இரண்டாம் ச்லோகத்திலே விவரித்தருளுகிறார். முமுக்ஷுப் படியில் "நமஸ்ஸாலே விரோதியைக் கழிக்கிறது" என்றருளிச் செய்து, "விரோதி தான் மூன்று; ஸ்வரூப விரோதியும் உபாய விரோதியும் ப்ராப்ய விரோதியும்" என்றுமருளிச்செய்து, இந்த விரோதிகள் கழியப்பெற்ற நிலைமையில் பேச்சு எங்ஙனே யிருக்குமென்பதைக் காட்டுமளவில் "ஸ்வரூப விரோதி கழிகையாவது, *யானே நீ யென்னுடைமையும் நீயே யென்றிருக்கை; உபாய விரோதி கழிகையாவது *களை வாய் துன்பம் களையா தொழிவாய் களைகண் மற்றிலேனென்றிருக்கை; ப்ராப்ய விரோதி கழிகையாவது *மற்றை நங்காமங்கள் மாற்றென்றிருக்கை." என்றருளிச் செய்திருப்பது ப்ரஸித்தம். ப்ராப்ய விரோதி கழிந்த நிலைமையிற் பாசுரம் இது வென்று காட்டப்பட்டதாயிற்று. இதைச் சிறிது விவரிப்போம். ப்ராப்யமாவது பலன்; பலனை யநுபவிக்கும்போது நேருகிற விரோதமென்னவென்று தெரிந்து கொள்ள வேணும். பலனை யநுபவிக்கும்போது ஆனந்தம் அவச்யமுண்டாகியே தீரும். அந்த ஆனந்தத்தைத் தன்னுடையதாக நினைத்தல் பெரிய விரோதி. நிலாத் தென்றல் சந்தன புஷ்பம் முதலானவை தமக்கு ஒரு உபயோகமின்றிக்கே பிறர்க்கே உபயோகப்பட்டுப் பிறரையே ஆனந்தப்படுத்துகின்றன. தாம் சிறிதும் ஆனந்தம் கொள்வதில்லை. அதுபோலவே பகவானுக்கு நாம் உபயோகப்படுமளவில் அதனால் ஆனந்தப்படுகிறவன் பகவான்தானே யாகவேணும். சேதந லாபம் ஈச்வரனுக்கே பேறு ஆகையாலே பேறு பெற்றவன்தானே ஆனந்திக்க ப்ராப்தியுண்டு. ஆனால் நிலாத்தென்றல் சந்தனம் புஷ்பமென்று த்ருஷ்டாந்தமாகக் காட்டப்பட்ட பொருள் கள் அசேதநமாகையாலே அவற்றுக்கு ஆனந்தமுண்டாக ப்ராப்தியில்லை. நாம் சேதநராகையாலே சைதந்யப்ரயுக்தமாக நேரக்கூடிய ஆனந்தம் எங்ஙனே தவிர்க்க

முடியும்? என்று கேள்வி பிறக்கும். நம்முடைய கைங்கர்யத்தினுல் எம்பெருமான் ஆனந்திக்க, அது கண்டு நாம் ஆனந்திக்கக் குறையில்லை. நாம் செய்யும் கைங்கர்யம் ஸாக்ஷாத்தாக நம்முடைய ஆனந்தத்திற்கு ஹேதுவாகக் கூடாதென்பதே விஷயம். ஆளவந்தார் தமது ஸ்தோத்ர ரத்நத்தில் "கதாஹமைகாந்திக நித்யகிங்கரः ப்ரஹர்ஷயிஷ்யாமி" என்கிற ச்லோக ரத்நத்தினுல் இந்த தத்வார்த்தத்தை யநுஸந்தித்தருளினர். இந்த ச்லோகத்தில் *ப்ரஹர்ஷயிஷ்யாமி* என்பது ஜீவநாடி. இதில் பகவானே! உனக்கு நான் கைங்கரியம் செய்து எப்போது நான் ஆனந்தப்படப் போகிறேன் என்று கூறுமல் 'உன்னை எப்போது ஆனந்தப்படுத்தப் போகிறேன்' என்று சொல்லியிருப்பதானது *மற்றை நங்காமங்கள் மாற்று* என்கிற இப்பாசுரத்தின் பொருளையே [வடிக்கட்டின ஸத்ஸம்ப்ரதாயார்த்தத்தையே] அருளிச்செய்தபடி. .... .... .... .... ... ... 29

**30. வங்கக் கடல்கடைந்த மாதவனைக்கேவசனை ***
**திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி ***
**அங்கப்பறைகொண்ட வாற்றை * அணிபுதுவைப்**
**பைங்கமலத் தண்டெரியற் பட்டர்பிரான் கோதை சொன்ன ***
**சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே ***
**இங்கிப் பரிசுரைப்பா ரீரிரண்டு மால்வரைத்தோள் ***
**செங்கன் திருமுகத்துச் செல்வத் திருமாலால் ***
**எங்குந் திருவருள் பெற்றின்புறுவ ரெம்பாவாய்.**

* * * — முதற்பாட்டில், காலத்யையும், அதிகாரிகளையும், காரியத்தைத் தலைக்கட்டுவிக்கும் கிருஷ்ணனையுங் கொண்டாடிக்கொண்டு நோன்பைப் பிரஸ்தாவித்து, இரண்டாம்பாட்டில், நோன்புக்கு அங்கமாகச் செய்யவேண்டியவற்றையும் தவிர வேண்டியவற்றையும் விவேகித்து, மூன்றும்பாட்டில், நாம் நமக்கு இனிதாக நோன்புநோற்க இதற்கநுமதி பண்ணின நாட்டார்க்கு ஆநுஷங்கிகமாக வர்ஷரூபமான பலன் ஸித்திக்குமென்று சொல்லி, நான்காம்பாட்டில், வர்ஷ தேவதையான பர்ஜந்யனை அழைத்து நாடெங்கும் மழை பெய்ய நியமித்து, ஐந்தாம் பாட்டில், தாங்கள் தொடங்குகிற நோன்புக்கு ப்ரதி பந்தகமான பாவங்கள் எம்பெருமானை நாம் வாயினுற்பாடி மனத்தினுற் சிந்திக்கில் தன்னடையே கழியும் என்றறுதியிட்டு, தாங்கள் உத்தேசித்த காரியத்தில் பாகவத ஸமுதாய மனைத்தையும் அந்வயிப்பிக்க விரும்பி ஆறுவது பாட்டுத்தொடங்கிப் பதினைந்தாம் பாட்டளவுமுள்ள பத்துப்பாசுரங்களாலே தங்களோடொத்த பருவத்தினரான பெண்களனைவரையு முணர்த்தி, பின்பு எல்லாருமாகத் திரண்டு நந்தகோபர் திருமாளிகையேறப் புகுந்து, பதினும் பாட்டில், திருவாசல் காக்கும் முதலியைஎழுப்பி, பதினேழாம் பாட்டில், ஸ்ரீநந்த கோபர், யசோதைப் பிராட்டி, கண்ணபிரான், நம்பிமூத்தபிரான் இவர்களைச் சொல்லும் முறைகள் வழுவாமற் சொல்லி எழுப்பி, பதினெட்டாம்பாட்டில், நப்பின்னைப் பிராட்டியைப் பலவாறுகப் புகழ்ந்து எழுப்பி, பத்தொன்பதாம் பாட்டிலும், இருபதாம் பாட்டிலும், கண்ணபிரானையும் நப்பின்னைப் பிராட்டியையுஞ் சேரவுணர்த்தி, இருபத்தோராம் பாட்டிலும் இருபத்திரண்டாம் பாட்டிலும், தாங்கள் குணங்களுக்குத் தோற்று வந்தபடியையும், அபிமாநங் குலைந்து வந்தபடியையும், கடாக்ஷமே தாரகமாக வந்தபடியையும் கண்ணபிரான் ஸந்நிதியில் விண்ணப்பஞ் செய்து, இருபத்து மூன்றும் பாட்டில், எங்களுக்காகப் புறப்பட்டுச் சீரிய சிங்காசனத்தில் ஆஸ்தாநங் கொண்டருள வேணுமென்று பிரார்த்தித்து, இருபத்துநான்காம் பாட்டில், அவ்வாஸ்தாநத்திற்கு மங்களா சாஸநம் பண்ணி, இருபத்தைந்தாம் பாட்டில், தாங்கள் அர்த்திகளாய் வந்தமையை விண்ணப்பஞ் செய்து, இருபத்தாறும்

பாட்டில், நோன்புக்குரிய உபகரணங்கள் இன்னவை இன்னவை யென்று சொல்லி அபேக்ஷித்து, இருபத்தேழாம் பாட்டில், நோன்பு நோற்றுத் தலைக் கட்டியபின் பெறவேண்டும் ஸம்மானங்களை அபேக்ஷித்து, இருபத்தெட்டாம் பாட்டில், தங்கள் நினைவிலுள்ளவையும் பலிக்கும்படி தங்கள் சிறுமையையும் அவன் பெருமையையும் அவனோடுள்ள உறவையுஞ் சொல்லிக்கொண்டு பிழைகளைப் பொறுத்தருளவேண்டி, இருபத்தொன்பதாம் பாட்டில், தங்களுடைய உத்வேச்யத்தை வெளிப்படையாகக் கூறி இக்கருத்தை நீ நிறைவேற்றுதொழிய வொண்ணாதென்று நிர்ப்பந்தித்துப் பிரார்த்திக்க, அவனும் ‘அப்படியே செய்கிறோம்’ என்று தலைதுலுக்கப் பெற்று மனோரதம் தலைக்கட்டப் பெற்றபடியைப் பிற்காலத்திலே அக்கருத்து நிலைமை யோடே ஆண்டாள் அருளிச் செய்த இப்பிரபந்தத்தை ஓதுவார் எம்பெருமானுடைய திருவருட்கு இலக்காகி மகிழப்பெறுவர் என்று நிகமிக்கின்றவாறாகச் செல்லும் பாசுரம், இது.

ஆறாயிரப்படி :— “ஸமகாலத்திலே அநுஷ்டித்தாரோபாதியும், அநந்தர காலத்தில அநுகரித்தாளோபாதியும் பிற்பட்ட காலத்தில் கற்றார்க்குப் பலிக்குமென்கை. ‘கன்றிழந்த தலைநாகு, தோல்கன்றை படுக்க அதுக்கிரங்குமாபோலே, ஸ்நேஹிகள் சொன்ன இப்பாசுரங் கொண்டு புகவே அதில்லாத நமக்கும் பலிக்கும்’ என்று பட்டர்.”

இப்பாசுரத்தில் இத் திவ்வியப்பிரபந்தம் கற்பார்க்குப் பலனுரைத்துத் தலைக் கட்டுகிறது. கீழ் ஓங்கியுலகளந்த பாசுரத்தில் * தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து....நீங்காத செல்வம் நிறைந்திடுமென்று பலன் சொல்லி யிருப்பதானது கோபிகள் தாங்கள் அனுட்டிக்கும் நோன்பினால் விளையக் கூடிய பலனைச் சொன்னவாறு; இப்பாசுரம் இத்திருப்பாவை கற்றார்க்குப் பலன் சொல்லுகிறது. கீதாசார்யன் * கர்மண்யேவாதிகாரஸ் தே மா பலேஷு கதாசந * என்று ஒரு பலனை யும் விரும்பத்தகாதென்று சொல்லியிருக்க, இங்குப் பலனுரைப்பது கூடுமோ வென்று சங்கிக்க வேண்டா. பலனை விரும்பக்கூடாதென்று சொன்ன பகவானுக்கு-செய்கிற கார்யம் நிஷ்ப்பலமாய்விடுமென்று திருவுள்ளமன்றே. நாமாக ஒரு பலனை விரும்பினால் க்ஷுத்ர பலனைத்தான் விரும்புவோம்; உயர்ந்த பலனை விரும்ப நமக்குத் தெரியாது; ஆனதுபற்றியே பலனை நீ விரும்பாதே யென்று தெரிவித்தபடி. இங்கு அருளிச் செய்யப்படுகிற பலன் எப்படிப் பட்டதென்று பார்க்க வேணும்; “செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால் எங்குந் திருவருள் பெற்று இன்புறுவர்” என்று திவ்ய தம்பதிகளினுடைய திவ்ய க்ருபா லாபமேயன்றோ பலனாகச் சொல்லப்பட்டது. இது ஸாக்ஷாத் பிராட்டிதானே யருளிச்செய்த பாசுரமாகையாலே, திருப்பாவை யநுஸந்தானத்தினால் உபய விபூதியிலும் நமக்கு இன்பம் நிஸ்ஸந்தேஹமென்று தேறியிருக்க ப்ராப்தம். நிகமனப பாசுரங்களில் தங்கள் திருநாமத்தைப் பொறித்து வைத்தவர்கள் நம்மாழ்வார் மதுரகவிகள் குலசேகராழ்வார் பெரியாழ்வார் ஆண்டாள் தொண்டரடிப்பொடியாழ்வார் திருமங்கையாழ்வார் ஆகிய இவர்களே. பொய்கையார் பூதத்தார் பேயார் மழிசையர்கோன் நற்பாணன் ஆகிய இவ்வைவரும் தங்கள் திரு நாமத்தைப் பொறித்து வைத்திலர், பொறித்துவைத்த ஆழ்வார்கள் தங்கள் திரு நாமத்தை மட்டுமே இட்டு வைத்திருக்கக் காண்கிறோம். “குருகூர்ச் சடகோபன் சொன்ன * மதுரகவிசொன்னசொல் * குலசேகரன்சொன்ன * விட்டு சித்தன் விரித்த * தொண்டரடிப்பொடிசொல்” என்று தானேயுள்ளது. ஆண்டாள் தன்னைப் பற்றிப் பேசும்போது நியமேந “பட்டர்பிரான் கோதை” என்றே பேசிப் போரு கிறாள்; இது திருப்பாவையில் மட்டுமன்று; மேல் நாச்சியார் திருமொழியிலும் பதிகந் தோறும் இது காணலாம். இப்படிப்பட்ட நிர்ப்பந்தத்தை ஆண்டாள் எதற்காக வைத்துக்கொண்டாளென்னில்; * கொல்லை யரக்கியை மூக்கரிந்திட்ட குமரனார் சொல்லும் பொய்யானால், நானும் பிறந்தமை பொய்யன்றே * என்றும், * வில்லி

புதுவை விட்டு சித்தர் தங்கள் தேவரை, வல்லபரிசு வருவிப்பரேல் அது காண்டுமே * என்றும் இவள் தானே யருளிச்செய்தபடியால் 'ஆசார்யனாலேயே பேறு' என்று உறுதி கொண்டவள் இவள் என்றுநன்கு விளங்காநின்றது. இவ்வுறுதியை உலக மறியக் காட்டுதற்காகவே 'பட்டர்பிரான் கோதை*விட்டுத்தன் கோதை*புதுவையர் கோன் கோதை' என்றிப்படியே ஆசார்யபுரஸ்காரேண தன்னை நிர்தேசிக்கிறாளென்று உணரக்கடவது. இது பற்றியே அடியேன் திருப்பாவையின் ஸ்வாப தேசத்தை ஆசார்யபரமாகவே நிர்வஹித்துப் போருவது. கரைகட்டாக் காவேரி போலே மஹாப்ரவாஹமான அந்த ஸ்வாப தேசார்த்தங்களை மிக நுட்பமாகத் தெரிவித்தவத்தனை.

இப்போது இவ்வாய்ச்சிகள் கடல்கடைந்த விருத்தாந்தத்தைக் கூறியதற்குக் கருத்து யாதெனில்; தங்களுக்கு ஆச்ரயணீயன் க்ருஷ்ணனாகையாலும், அந்த ஆச்ரயணம் பலபர்யந்தமாவது பிராட்டி ஸம்பந்தத்தாலாகையாலும், அப்பிராட்டியைப் பெறுகைக்கு அவன் பண்ணின வ்யாபாரம் அம்ருத மதநமாகையாலும் அத்தைச் சொல்லுகிறார்கள். அன்றி, ப்ரயோஜநாந்தர பரரான தேவர்கட்காகத் தன் உடம்பு நோவக் காரியஞ் செய்தவன் அநந்யப்ரயோஜநைகளான நம்முடைய மநோரதத்தைத் தலைக்கட்டுவியா தொழியான் என்பதைப் புலப்படுத்துவதற்காகவுமாம்.

ஆச்ரயித்த அதிகாரிகளின் வைலக்ஷண்யஞ் சொல்லுகிறது—இரண்டாமடியில் "திங்கள் திருமுகத்து" என்று அவர்களுடைய ஸகல கலாபூர்த்தியும் "சேயிழையார்" என்று ஞான விரக்தி பூஷணமுடைமையுங் கூறியவாறு.

"அப்பறைகொண்டவாற்றை"—பறைகொண்ட அவ்வாற்றை; பறைக்கு முன்புள்ள அகரச்சுட்டு—ஆற்றை என்பதனோடு கூட்டி யுரைக்கப்பட்டது. அன்றியே, [அப்பறை]—நாட்டார்க்காகச்சொன்ன பறையைக் கழித்து, "எற்றைக்கும் ஏழேழ்பிறவிக்கு முன்றன்னோடுற்றோமேயாவோம்" என்று சொன்னபழையை என்றுமுரைப்ப.

பொன்னும் முத்தும் மாணிக்கமுமிட்டுச் செய்த ஆபரணம் போலே நாய்ச்சியாரும் பெரியாழ்வாரும் வடபெருங் கோயிலுடையானுமான தேசமாதலால் "அணி புதுவை" எனப்பட்டது. பைங்கமலத்தண்தெரியல்—அந்தணர்கட்குத் தாமரைமாலை அணியுமாறு கூறப்பட்டுள்ளவை உணர்க. பட்டர்பிரான்—ப்ராஹ்மணர்க்கு உபகாரகர்; பெரியாழ்வார் வேதார்த்தங்களை ராஜகோஷ்டியில் உபந்யஸித்துப் பரதத்வ நிர்ணயம் செய்தருளினராதலால், வேதத்தையே செல்வமாகவுடைய அந்தணர் கட்கு உபகாரகராயினர். அன்றியே, "மறை நான்கு முன்னோதிய பட்டனை" என்று திருமங்கையாழ்வார் எம்பெருமானைப்பட்டனாக அருளிச்செய்துள்ளமையாலும், பெரியாழ்வார் தம்முடைய பெண்ணான கோதையை எம்பெருமானுக்கு மணம் புணர்வித்து உபகரித்தமையாலும், இக்காரணம்பற்றிப் பட்டர்பிரா னெனப்பட்டாரெனக் கொள்ளுதலும் ஏற்கும். எம்பெருமானுக்கு உபகாரகர் என்றவாறு.

கோதை—கோதா என்னும் வடசொல்விகாரம்; ஸ்ரீ ஸூக்திகளைத் தந்தவள் என்று அதன் பொருள். சொன்ன—கோபிமாருடைய அவஸ்தையை அடைந்து சொன்ன என்றபடி.

[சங்கத் தமிழ்மாலை.] சங்கம்—ஸங்கமென்ற வடசொற்றிரிபு; கூட்டமென்று பொருள். "சங்கமிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்" என்றபடியே பஞ்சலக்ஷங் குடிப்பெண்கள் திரண்டு அநுபவித்தாப்போலே திரள் திரளாக அநுபவிக்க வேண்டும் ப்ரபந்தமென்று தாற்பரியம்.

[தப்பாமே]—முப்பது பாட்டில் ஒரு பாட்டும் நழுவாமல் என்கை. விலையில்லா மணிகளினாற் செய்த ஏகாவளியில் ஒரு மணி நழுவினாலும் நெடும்பாழாமன்றோ?

[இப்பரிசுரைப்பார்.] திருவாய்ப்பாடியிற் பெண்களுக்குக் கிருஷ்ண ஸமகாலமாகையாலே க்ருஷ்ண ஸாக்ஷாத்காரங்கிடைத்தது; அந்த ஸாக்ஷாத்காரத்தைப்

பிற்காலத்தில் ஆண்டாள் அநுகரித்துப் பெற்றாள்; அவளிலும் பிற்பட்டவர்கள் அப்பேறு பெறவேண்டில் இப்பாசுரங்களின் உக்திமாத்திரமே போருமென்க.

இப்பாட்டில் முன்னிரண்டு அடிகளுக்கு மட்டுமே ஸ்வாபதேசார்த்தம் அபேக்ஷிதம்; அது கேண்மின். [வங்கக் கடல் கடைந்த] ச்ருதிஸாகரமும் த்ராவிட வேத ஸாகரமுமாகிற கடல்களைக் கடைந்தவர் ஆசாரியர். இங்கே *மறைப்பாற் கடலைத் திருநாவின் மந்தரத்தால் கடைந்து, துறைப்பால்படுத்தித் தமிழாயிரத்தின் சுவையமிழ்தம், கறைப் பாம்பணைப் பள்ளியானன்பரீட்டங் களித்தருந்த நிறைப்பான் கழலன்றிச் சன்மவிடாய்க்கு நிழலில்லையே* என்ற பிள்ளைப்பெருமாள் பாசுரமுணரத்தக்கது. [மாதவனை] மஹாதபஸ்வி யென்றபடி. [கேசவனை] ஜிதேந்த்ரியரென்கை. இப்படிப்பட்ட ஆசார்யரைப் பணிந்தவர்கள். யாரென்னில்; [திங்கள் திருமுகத்துச் சேயிழையார்.] ஆசார்ய ஸந்நிதானத்திலிருந்து க்ரஹிக்கப்பட்ட தாபஹரங்களான அர்த்தங்களினால் ஸௌம்யமான திருமுகமண்டலத்தை யுடையவர்களாய் ஆத்ம குணங்களாகிற பூஷணங்களாலே பூஷிதராகப் பெற்றவர்கள். கோபிகள் கண்ணனிடத்திலே பேறு பெற்றாற் போலே சிஷ்யர்கள் ஆசார்ய ஸந்நிதியிலே பேறு பெற்றார்களென்க.

"விடிவோறே எழுந்திருந்து முப்பது பாட்டையும் அநுஸந்தித்தல், மாட்டிற்றிலனாகில் 'சிற்றஞ்சிறுகாலை' என்கிறபாட்டை அநுஸந்தித்தல், அதுவும் மாட்டிற்றிலனாகில் நாம் இருந்த விருப்பை நினைப்பது" என்று பட்டர் அருளிச்செய்வர். "நாம் இருந்த விருப்பை" என்றது—நாம் [பட்டர்] இப்பிரபந்தத்தை அநுஸந்தித்து ஈடுபட்டிருந்த விருப்பை என்றபடி.

ஆக, இப்பாட்டில் இப்பிரபந்தங் கற்றார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டிற்றாயிற்று. இப்பிரபந்தத்தின் பயனைச்சொன்ன இந்தப் பாசுரம்—திருநாமப்பாட்டென்றும், பலச்ருதி யென்றுஞ் சொல்லப்பெறும். இது ஆண்டாள் தன்னைப் பிறன்போலக் கூறியது: இது ஒருவகைக் கவிசமயமாதலால் தற்புகழ்ச்சியாகாது; தற்சிறப்புப்பாயிரமெனப்படும்.

இத்திருப்பாவை முப்பது பாட்டும்—வெண்டளையால் வந்த எட்டடி நாற்சீரொரு விகற்பக் கொச்சகக்கலிப்பா. .... .... .... .... 30

ஆண்டாள் திருவடிகளே சரணம்.
எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர் இயற்றிய
**திருப்பாவை ஆழ்பொருள்விளக்கு**
முற்றிற்று.

பாதகங்கள் தீர்க்கும் பரமனடிகாட்டும்
வேதமனைத்துக்கும் வித்தாகும்—கோதைதமிழ்
ஐயைந்து மைந்து மறியாத மானிடரை
வையஞ்சுமப்பதும் வம்பு.

22 : 4172 1, 13 : 9

8A
6-98